சக்தி — மே-1944

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

# ஹரிச்சந்திரா வில்



என்.எஸ். கிருஷ்ணன்
டி.ஏ. மதுரம் . . . . . } நடிக்கும் நகைச்சித்திரம்
N 18226.

## ிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

காலம் உபயோகிக்கக் கூடிய "எச்.எம்.வி." ஹை பிடெலிடி ஊசிகள்



ஒரு ஊசியினல் பல ரிகார்டுகளை பாடி வைக்கலாம். 10 ஊசிகள் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ. 2/4



# அசோகா

பாக்குத்தூள்

சென்னை-600 008.

சிறு வித்திலிருந்து தோன்றியது ஆலமரம், ஆனால், அது எண்ணற்றவர்களுக்கு நிழலைக் கொடுக்கிறது. அதைப் போல, ஏழை, எளியவர்கள் முதல் பணக்காரர் வரை எல்லோரும் வாங்கி ஆனந்திக்கும் முறையில் 'அசோகா' குறைந்த விலையில் கிடைக்கிறது.

## எம். கே. கிருஷ்ண செட்ட

அசோகா பாக்டரி :: கோயமுத்தூ

மதருஸ் விற்பனையாளர்கள் :

**வி. கனகய்ய செட்டி & கம்பெ**

நைனியப்ப நாயக்கன் தெ

APALAL'S FOR QUALITY DIAMONDS

GUARANTEED SOVERIGN GOLD JEWELLERY

உயர்ந்த வைரங்களும் நகைகளும்
நம்பிக்கையுடன் வாங்கும் இடம்

பாபாலலால் & கம்பெனி

ராமகோடி பில்டிங்

ரட்டான் பஜார் - சென்னை

தந்தி "நெக்லேஸ்" போன் 2696

SILVER WARES

RAMAKOTI BUILDINGS, RATTAN BAZAAR, MADRAS

சிந்தாமணி
மதுரை

ராஜா & டைம
கோயமுத்தூர்

சிவாஜி
பெங்களூர்

# 3வது வாரம்

கெயிட்டி
திருச்சி

ராயல்
திருநெல்வேலி

அசோகா
நாகர்கோயில்

# 2வது வாரம்

விக்டோரியா சென்ட்ரல்
சேலம்

கலைவாணி பிலிம்ஸ் & M.U.A.C. தயாரித்த

# பர்த்ருஹரி

டைரக்ஷன் :

K. சுப்ரமண்யம் &
C. S. V. அய்யர்

S.I.
ரிலீ

சாமா - ஜெயம்மா - கிருஷ்ணன் - மது

# INDO - COMMERCIAL BANK LTD.

Registered Office:
MAYAVARAM

Central Office:
MADRAS

| | |
|---|---|
| Authorised Capital - - | Rs. 25,00,000 |
| ssued and Subscribed Capital - | Rs. 21,25,000 |
| aid-up Capital - - | Rs. 18,75,000 |
| eserves - - | Rs. 2,50,000 |
| otal Resources exceed - - | Rs. 2·25 Crores |

## BOARD OF DIRECTORS:

Sri. T. R. Venkatarama Sastri, C. I. E. (Chairman).
Sri. V. Venkatarama Iyer, M. A., B. L.
Sri. R. S. A. Sankara Aiyer.
Sri. R. Viswanatha Aiyer, B. A., B. L.
Sri. K. Sivaswami Aiyer.
Sri. S. N. N. Sankaralinga Iyer (Managing Director).

IXED DEPOSITS received for one year at 2¾ per cent. per annum and for two years at 3 per cent. per annum.

AVINGS BANK ACCOUNTS opened and interest allowed at 2½ per cent. up to Rs. 5,000, withdrawals by cheques Rs. 250 per week.

RRENT ACCOUNTS opened and interest allowed at ½ per cent. per annum.

ANS AND ADVANCES against Bullion, Government Pronotes, approved shares, securities and merchandise.

BANKING BUSINESS OF EVERY DESCRIPTION TRANSACTED

# கொலம்பியாவின்

## சமீபத்திய சிறந்த வெளியீடு

**சித்தூர் சுப்ரமணிய பிள்ளை** — உன்னைச்சரண் ஹர ஹர — GE.6124

**D.K. பட்டம்மாள்** — கண்ணன் வரக்காணேனே ஆயர்குலச்சிறுவன் — GE.6128

**அரியக்குடி ராமானுஜ அய்யங்கார்** — கொண்டாடுவோம் சீர்பெருந்தும் — GE.6123

**துறையூர் ராஜகோபால சர்மா** — உன்னைப்போல் பாகம் 1&2 — GE.6081

**V.V. சடகோபன் BA.** — ராம பஜனே பாகம் 1&2 — GE.6125

**மதுரை மணி அய்யர்** — காணக்கண்கோடி பாகம் 1&2 — GE 6090

**ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்**

தாரண
மலர் 10

# சக்தி

சித்திரை
இதழ் 1

**அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!**

## தெளியாத பித்தம்

இன்று முழு உலகத்தையும் நிலை கலக்கும் ஒரு நாச பயங்கர யுத்தம் ஏன் நடக்கிறதென்றால், அதற்கு முதல் காரணம் பிரிட்டனின் ஏகாதிபத்திய வெறிதான். ஏகாதிபத்திய வெறி, முதலாளிகளின் நோய். ஒரு நாட்டிலே சக்தியும் செல்வாக்கும் நிறைந்த பல முதலாளிகள், அந்நிய நாடுகளில் தங்கள் சாமான்களைத் தங்குதடையின்றி ஏகபோகமாய் விற்கவும், அவைகளில் விளையும் மூலப் பொருள்களைச் சுரண்டிக்கொண்டு போகவும் போட்டியிடுகிறார்கள். அந்தப் போட்டிக்குச் சௌகரியமாக, ஏகாதிபத்தியத்தைச் சமைத்துக் கொள்ளுகிறார்கள். இந்த ஏகாதிபத்தியத்தினால் கிடைக்கும் லாபங்களை அடைவதற்காக, அந்த முதலாளிகள், தங்கள் ஜனங்களை யுத்தத்துக்கு அனுப்புகிறார்கள். ஏகாதிபத்தியத்தின் ரகசியம் இதுதான் என்கிறார் லெனின். இந்தக் காலத்தில் உலகத்திலே மிகப் பெரிய ஏகாதிபத்தியமாயிருப்பது பிரிட்டன்தான். ஆகையால், நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இந்த மகா யுத்தத்துக்குப் பெரிதும் பொறுப்பு அதுதான் யுத்தத்துக்கு அது முதலில் செல்லவில்லை. ஆனால், அதன் வாழ்வும் போக்கும் தான், யுத்தத்தைக் கிளப்பி விட்டிருக்கின்றன. இவ்விதமிருக்க, பிரிட்டனுக்குத் துளியாவது, அதன் ஏகாதிபத்தியப் பித்தம் தணிந் திருக்கிறதா? இல்லவேயில்லை.

சில தினங்களுக்கு முன், பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில், ஏகாதிபத்திய வாதம் ஒன்று நடந்தது. அதை 'ஏகாதிபத்தியத் திருவிழா' என்று தான் சொல்லவேண்டும். எதற்காக அந்த வாதம் நடந்தது? என்ன விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட்டன? இன்னும் சில நாட்களில், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் பிரதம மந்திரிகளெல்லாம் லண்டனில் ஒரு மகாநாடு கூட ஏற்பாடாகி யிருக்கிறது. இந்த மகாநாட்டைக் கூட்ட, யுத்தம் ஆரம்பித்தபின், சர்ச்சில் பலமுறை முயன்றும், கைகூடவில்லையாம். இப்போது தான் சாத்தியப் பட்டிருக்கிறதாம். அந்த மகாநாட்டில், என்னென்ன விஷயங்களை முடிவு செய்யவேண்டும் என்பதற்குப் பூர்வாங்கமாகவே, காமன்ஸ் சபை விவாதம் நடந்திருக்கிறது.

'யுத்த காலத்தில் இருப்பதுபோலவே சமாதான காலத்திலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக் குட்பட்ட பல நாடுகளும், ஒத்துழைப்போடும் பரஸ்பர மதிப்போடும் நடந்துகொள்ள, பிரிட்டன் பூரண முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்' என்ற ஒரு பிரேரணையின் மூலம், தொழிற்கட்சி மெம்பர் ஷின்வெல், விவாதத்தை ஆரம்பித்துவைத்தார். வாதம் வெகு விரிவாக நடந்தது. ஆளுக்கொன்று பேசினார்கள். சர்க்கார் தரப்பில் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது. கடைசியிலே சர்ச்சிலும் பரம குதூகலத்துடன், பரிபூர்ண ஏகாதிபத்திய வெறியோடு, பதில் அளித்து முடித்தார்: 'நான் சின்னப் பையனாக இருந்தபோது, சில பெரிய ராஜதந்திரிகள், காலனிகள்

நமக்கு வெறும் சுமையாகும் என்றும், குடியேற்ற நாடுகள் கனிந்த பழமானதும் விழுந்து ஓடிவிடுமென்றும் சொன்னார்கள். ஒரு கலக்குக் கலக்கினால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தலைகுப்புற விழுமென்று எண்ணியே, போன யுத்தத்தை ஜெர்மனி தொடுத்தது. நமது ஏகாதிபத்தியம் அழிந்ததா? இந்த யுத்தம் வந்திருக்கிறது. அழியுமா? இல்லவே யில்லை. உள்ளே ஏதோ ஒரு சக்தி யிருக்கிறது. அது நமது ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றிவிடும்' என்றெல்லாம் கும்மாளமாய்ப் பேசியிருக்கிறார் சர்ச்சில். இந்த ஏகாதிபத்திய வெறி நியாயமாகுமா?

கூர்ந்து கவனித்தால், காமன்ஸ் சபையின் இந்த விவாதம், அடுத்த உலக மகாயுத்தத்துக்கு விதை தெளிப்பதுபோல்தான் தோன்றுகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் பேசப் புகும்போது, இரண்டு மிக முக்கியமான பிரச்னைகள் எழுகின்றன: (1) உலக முழுவதிலும் சமாதானத்தை நிலைநாட்ட வலிமை கொண்ட ஒரு சர்வதேச ஸ்தாபனம் வேண்டும் என்கிறபோது, பல நாடுகளைத் தனக்குள்ளே கட்டுப்படுத்திக் கொள்ளும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒன்றிருப்பது முரண் அல்லவா? (2) பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளேயே சர்வ சுதந்தரக் குடியேற்ற நாடுகள் ஒரு புறமும், அடிமைப்பட்ட இந்தியாவும் காலனிகளும் மறு புறமும் இருப்பதால், அவை இவற்றைச் சுரண்டாமல் சகோதர முறையில் ஒற்றுமையும் உறுதியும் கொண்டதாக அந்தச் சாம்ராஜ்யம் இருக்க முடியுமா? இந்த இரண்டு கேள்விகளுக்கும் காமன்ஸ் விவாதத்தில் சரியான பதில் கிடையாது.

“நம்முடைய மார்க்கட்டிலே, அமெரிக்கா வந்து மார்க்கட் பிடித்துக் கொள்ளவாவது?” என்று கர்ஜித்தார் ஷின்வெல். “இல்லையே, ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளே இருந்துவரும் தீர்வைச் சலுகையை நான் அப்படியே காப்பாற்றி வந்திருக்கிறேனே? நாம் அமெரிக்காவின் தடைத் தீர்வைகளை எடுக்கச் சொல்கிறோமா? அதுபோல்தான் இதுவும். அட்லாண்டிக் சாசனத்திலேயே வெகு ஜாக்கிரதையாய் இதற்கு ஒரு ஷரத்துப் போட்டு வைத்திருக்கிறேனே?” என்று பதிலளிக்கிறார் சர்ச்சில்.

விஷயம் இதுதான்: யுத்தம் முடிந்த பின்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எப்படிக் காப்பாற்றுவது? பிரிட்டனும் குடியேற்ற நாடுகளும் ஒற்றுமையாய், காலனிகளையும் இந்தியாவையும் சுரண்ட வேண்டியது; அதிலே அந்நியர் எவரும் வந்து நுழையாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது; சுரண்டிய பொருள்களை, குடியேற்ற நாடுகளும் பிரிட்டனும் சேர்ந்து வெளி மார்க்கட்டில் விற்று நல்ல லாபம் சம்பாதிக்க வேண்டியது— இதற்குத்தான் இப்போதிருந்தே முயற்சி நடக்கிறது. பிறவியிலேயே ஏகாதிபத்திய வெறி பிடித்த சர்ச்சில் கூடக் கொஞ்சம் தேவலை. யுத்தம் முடிந்தபின் ஒரு மகாநாட்டில் கூடும் குடியேற்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்றாயிருக்கும் என்று தாம் நம்புவதாக வேனும் அவர் சொன்னார். தொழிற் கட்சி அங்கத்தினர் ஷின்வெல்லோ, இந்தியப் பிரச்னை அரசியல் பிரச்னையே அல்ல என்று ஒரே அடியாய்ச் சாதித்து விட்டார். இந்திய ஜனங்களின் பொருளாதார அந்தஸ்தை உயர்த்திவிட்டால் தங்கள் சாமான்களையெல்லாம் நிறைய நிறைய அவர்கள் தலையிலே கட்டியடிக்கலாம் என்பதுதான் அவர் ஆசை. இந்த மனோரதம் நிறைவேறுமா? அமெரிக்கா பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மார்க்கட்டுக்குள்ளே நுழையக்கூடாதாம்! இந்தச் சாம்ராஜ்யத்துக்குள்ளே ருஷ்யாவின் கருத்துக்கள் பரவிவிடக் கூடாதாம்! பிரிட்டனின் இந்தப் பயங்கள்தான் காமன்ஸ் விவாதத்தால் தெளிவாகின்றன. இந்த விவாதத்தைக் கண்ட பின்பு, அமெரிக்காவும் ருஷ்யாவும் சும்மா இருக்குமா? பிரிட்டனின் ஏகாதிபத்தியப் பித்தம் என்றென்றும் தெளியாமல் உச்சநிலையில் ஒரே கதியிலேயே இருக்கத்தான் போகிறதா?

*

# காலச்சுழல்

**ராஜாஜியின் புதிய புத்தகம்:** எந்தக் கடுமையான பிரச்னையையும் நன்றாய் அலசி ஆராய்ந்து மிகத் தெளிவான முறையில்; மகா எளிய பொருள் போல, எடுத்துச் சொல்வதில் வல்லவர் ராஜாஜி. அவருடைய முடிவுகளையும் பெரும்பாலும் நாம் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்; மிகச் சில சமயம்தான் அவருடன், மாறுபட நேரும். உலகத்தின் பல்வேறு தேசங்களின் பொருளாதார நிலைமைகளையும் அரசியல் நிலைமைகளையும், திட்டமான ஆதாரவுகளுடனும், புள்ளி விவரங்களோடும் விளக்கி, 'உலக நிலை' என்றொரு புதிய புத்தகம், ராஜாஜி எழுதி வருகிறார். அதைப் படித்தாலே, யுத்தத்துக்குப் பின் உலகமும் நம் நாடும் எப்படி மாறும் என்பதை ஓரளவு நாம் ஊகித்துவிடலாம். 'சக்தி' பிரசுரமாக அது கூடிய சீக்கிரம் வெளிவரும் என்ற செய்தி நண்பர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

**ஜின்னா தோல்வி:** வகுப்புவாதமற்ற ஒரு மந்திரிசபை பஞ்சாபிலே இருக்கிறது. யூனியனிஸ்ட் என்று அந்த மந்திரிகளின் கட்சிக்குப் பெயர். சீக்கியர், ஹிந்துக்கள், முஸ்லீம் லீக்காரர் எல்லாரும் அதிலே இருக்கிறார்கள். அந்த மந்திரிசபையை, தம் ஆதிக்கத்துக்குட்பட்ட முஸ்லீம் லீக் கூட்டு மந்திரி சபையாக மாற்றிவிட, ஜனாப் ஜின்னா, ஜகஜ்ஜாலங்கள் செய்து பார்த்தார். பலிக்கவில்லை. இதே சமயத்தில், ஓர் ஆச்சர்யம் நடந்திருக்கிறது. மராமத்து மந்திரி ஸர்தார் ஹயத்கானை, கவர்னர் டிஸ்மிஸ் செய்துவிட்டார். இவர்மீது மகா கடுமையான குற்றம் சாட்டப்படுகிறது. லாகூர்க் கார்ப்பொரேஷன் கல்வி சூப்பரின்டெண்டு ஸ்ரீமதி தூர்க்காதாஸை அநியாயமாக இவர் நீக்கியதுதான் அந்தக் குற்றம் என்று ஊகிக்கிறார்கள். ஸர்தார் ஹயத்கான் லீக் காரர். ஜின்னாவின் முயற்சிகளில் பக்கத் துணை நின்றவர். அவர் டிஸ்மிஸ் ஆனது, ஜின்னாவின் கை ஒடிந்ததுபோலாகும். பஞ்சாபிலே பொது மந்திரியைக் கலைக்க ஜின்னா செய்த முயற்சிகளின் தோல்விகளுக்கெல்லாம் முத்தாய்ப்புப்போல இது நிகழ்ந்திருக்கிறது. லீக்கின் பெயருக்கே இது ஒரு களங்கமாகும். பாவம்! ஜின்னா சாஹேப், இந்தப் 'பாகிஸ்தான்' சூதாட்டத்தை இனியாவது கைவிடுவாரா? ஏனெனில்; அதுதானே இத்தனைக்கும் காரணம்?

**கம்பன் விழாக் கலகம்:** கோகலே ஹாலில் நடந்த கூட்டத்தில் சிலர் புகுந்து, குழப்பம் விளைவித்து, ஓரளவு பொருள் சேதமும் உண்டாக்கினார்களாம். இவர்கள் என்ன நோக்கத்தோடு கூட்டத்தைக் கலைக்க முயற்சித்தார்களோ தெரியவில்லை. தமிழர்களையும் தமிழ் மொழியையும் காப்பாற்றும் நோக்கத்தோடு அந்தக் காரியத்தைச் செய்தார்கள் என்றால், அதற்காக அவர்கள் வெட்கப்பட வேண்டும். கலவரங்கள் செய்வோர் வந்து தமிழ் மொழியைக் காப்பாற்றும் முறையில், தமிழ் அவ்வளவு மோசமாகிவிடவில்லை. அத்தகைய கலகங்கள் செய்வதும் அதற்கு ஜனங்கள் மயங்கக் கூடியதுமான காலம் மலையேறி விட்டது என்பதை, அவர்கள் உணர வேண்டும். தங்களுடைய செய்கையால் தங்களுக்கும் தமிழுக்குமேதான் இவர்கள் களங்கம் தேடுகிறார்கள். உன்னத இலக்கியங்களையும் கூட வகுப்புவாதக் கண்கொண்டு பார்ப்பது, அறிவுடைமையாகாது. கம்பராமாயணம் தமிழனின் ஓர் இலக்கியச் செல்வம். கம்பன் தலை சிறந்த தமிழன். அவனை — அவனுடைய மகா காவியத்தை — இழிவு செய்யத் துணியும் தமிழனும் இருக்கமுடியுமா?

**மூவர் பிரிவு:** இம்மாதம் மூன்று சிறந்த தமிழ்ப் பெரியார்கள் காலமானது, வருந்துதற்குரிய விஷயமாகும். தேசியப் புகழ்பெற்ற தொண்டு கிழவர் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார், தமது 94-ஆவது வயதில் சேலத்தில் காலமானார். ஸ்ரீ ஆச்சாரியார் காங்

கிரஸ் ஸ்தாபகர்களுள் ஒருவர். ஆரம்ப காலத்திலே, காங்கிரஸ் நடவடிக்கைகளில் தீவிரமாகக் கலந்து தேசத்துக்குப் பல தொண்டுகள் புரிந்தவர். காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராய் அமர்ந்து, தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் பெருமை சம்பாதித்த தமிழர்களுள் அவரும் ஒருவர், காலஞ்சென்ற திருப்பனந்தாள் மடாலயத் தலைவராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் அவர்களோ தமிழ்க் கல்வி பரவுவதற்காகச் செய்த தொண்டுகள் பல. தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சிக்காகவும் சைவ சித்தாந்தப் பயிற்சிக்காகவும் அவர் பெருநிதியை வழங்கி யிருக்கிறார். காலமான மற்றுமொருவர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார். இவர் தமிழில் ஆழ்ந்த அறிவும் ஆராய்ச்சித் திறமும் மிக்கவர். சிறந்த உரையாசிரியர். அநுபவமிக்க அறிஞர். மறைந்த இந்த மூன்று பெரியார்களுடைய குடும்பத்தார்க்கும் எண்ணிறந்த நண்பர்களுக்கும் நமது மனப்பூர்வமான அனுதாபம் உரியதாகும்.

**நெருக்கடியில் கதர்:** சென்ற வருஷம் கதருக்கிருந்த கிராக்கியைப் போல என்றுமே இருந்ததில்லை. தமிழ் நாட்டுச் சர்க்கா சங்க அறிக்கையினின்றும் இது தெளிவாய்ப் புலனாகிறது. யுத்த விபரீதத்தால் மில் துணி மிதமிஞ்சிவிலே ஏறியது. வழக்கமாய்க் கதர் உடுத்ாதவர்களெல்லாம் கதர் தரிக்க ஆரம்பித்தார்கள். தேவை அதிகமாகவே, சர்க்கா சங்கத்தார் மிகுந்த சிரமம் எடுத்து உற்பத்தியைப் பெருக்கினார்கள். ஆனால், செப்டம்பரில், மில்துணி விலைக் கட்டுப்பாடு வந்ததும், 'பழைய குருடி கதவைத் திறடி' என்று, பலர் கதரை விட்டு விட்டு, அங்கே திரும்பிவிட்டார்கள். இருந்தாலும், காந்தி ஜயந்தியில், கதர் நன்றாய் விற்றிருக்கிறது. 1940-ஆம் வருஷம் 9,00,206 ரூபாய் மதிப்புள்ள 15,15,830 கஜம் கதர்தான் தமிழ் நாட்டுக் கிளையின் மூலம் உற்பத்தியாயிற்று. 1943-ஆம் வருஷத்திலோ 33,52,043 ரூபாய் மதிப்புள்ள 32,14,129 கஜம் கதர் உற்பத்தியாகியிருக்கிறது. தமிழ் நாட்டிலேயே 28,81,511 ரூபாய்க்கும், ஏற்றுமதியிலே 4,03,553 ரூபாய்க்கும், சென்ற வருஷம் கதர் விற்றிருக்கிறது. 70,286 நூற்பவருக்கும் 2,831 நெசவர் குடும்பங்களுக்குமாக, சென்ற வருஷம் 20,88,316 ரூபாய் சம்பளம் அளித்திருக்கிறார்கள். நெருக்கடியான காலத்தில், காமதேனுவைப்போல் உதவிய கதரை, நெருக்கடி தீர்ந்ததென்று எண்ணி, நாம் நலியச் செய்வது மூடத்தன மாகும். கதரை நாம் போற்றி வளர்க்கவேண்டும் என்பதற்கு இந்த ஒரு வருஷ அனுபவமே நமக்குப் போதும். கடுமையான நெருக்கடியின் போது, உற்பத்தியில் பூரண முயற்சி எடுத்து, ஜனங்களுக்கு உதவிய சர்க்கா சங்கத்தாரை இந்தச் சமயத்தில் நாம் பாராட்ட விரும்புகிறோம். அவர்கள் கொண்ட ஊக்கத்தைத் தளரச் செய்ய, கதரை அதிகமதிகமாய் உடுத்தி ஆதரிக்க வேண்டியது, தமிழ்மக்களின் கடமையாகும்.

**பம்பாய் விபத்து:** நாச யுத்தத்தால் ஒவ்வொரு நாடுகள் ஒவ்வொரு விதமாய், கண் தெரிந்து, மனமறிந்து, துன்புறுகின்றன. துர்ப்பாக்கிய இந்தியாவின் துயரங்களோ, எங்கும் அறியாதவையா யிருக்கின்றன. வங்கப் பஞ்சம் பலரைக் கொன்றது. சமீபத்தில் நிகழ்ந்த பம்பாய் வெடிவிபத்தோ, மகா கோரமா யிருக்கிறது. 330 பேருக்குமேல் மாண்டு விட்டார்கள். எண்ணற்றோர், வீடு வாசலிழந்து, பசியால் நலிந்தார்கள். 100 கோடி ரூபாய் வரையில் சொத்து நஷ்டம் என்று அஞ்சப்படுகிறது. இந்த விபத்தில் துன்பமும் நஷ்டம் அடைந்தோருக்கு, உடனே பரிகாரம் தேடிக் கொடுப்பது அதிகாரிகளின் கடமையாகும். ஆனால், அதுமட்டிலும் போதாது. விபத்தின் மூலகாரணங்களைத் தீர ஆராய்ந்து, இம்மாதிரி விபத்துக்கள் இனி ஒருபோதும் நடவாதபடி ஏற்பாடுகள் செய்வதும் அவர்கள் பொறுப்பாகும்.

*



# ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

ஸரஸி

சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஓர் அபூர்வ புருஷர்; அவதார புருஷர். தெய்வம் இருக்கிறது என்ற உண்மையை நிலை நாட்ட, வேறு சாட்சியம் வேண்டியதில்லை; அவருடைய வாழ்க்கையும் உபதேசங்களுமே போதும்.

வங்காளத்தில் ஹுக்ளி ஜில்லாவிலுள்ள காமார் புகூர் என்னும் சிறு கிராமத்தில், 1836-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி சந்திரமணி, க்ஷுதிராம் சட்டோபாத்யாயா என்ற பெற்றோரின் திருமகனாய், ஸ்ரீராமகிருஷ்ணர் ஜனித்தார். சிறு பிராயத்திலே, ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு, கதாதரர் என்று பெயர்.

சின்னஞ் சிறு வயதிலேயே, அவருக்கு 'ஞானப் பைத்தியம்' பிடித்துவிட்டது. ஏழு வயதுப் பாலகனா யிருக்கையில், பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டார். தாம் போகாதது மாத்திரமல்ல; பிற பையன்களையும் அழைத்துக் கொண்டு, ஒரு மாஞ்சோலையில், ராமாயண, பாரத, பாகவதக் கதைகளை நாடகம் நடிக்கத் தொடங்கிவிடுவார். அதிலேதான் அவருக்குப் பரமானந்தம். முக்கியமாய்க் கிருஷ்ண சரித்திரத்திலே, அவர் உள்ளம் பரவசமடையும். மெய்மறந்து, உண்மையில் தாம் ஒரு கோபி யென்றே, அவர் பாவனை செய்துகொண்டு விடுவதுண்டு. பல சமயம் பெண்ணைப்போல் ஆடை புனைந்து, அலங்கரித்து, ஒரு குடத்தை இடுப்பிலே வைத்துக் கொண்டு, வெளியிலே கண்ணனைத் தேடி உலவவும் ஆரம்பித்துவிடுவார்! இவரை நன்றாய் அறிந்தவர்கள்கூட, அப்போதெல்லாம் இவர் வேஷத்தைக் கண்டு பிடிக்க முடியாமல், யாரோ பெண் என்றே மயங்குவார்கள்.

'தெய்வத்தின் கோட்டையைப் பிடிக்க, அதைப் படையெடுக்க வேண்டும்; முற்றுகையிட்வேண்டும்' என்று திரமாக உபதேசித்த மகான் சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர். தாமே அவ்வாறு அந்தக் கோட்டையைப் பிடித்து விட்டவரும் அவர். அவருடைய வாழ்க்கை பூராவுமே, இயற்கையின் ஓர் அதிசயமாகும்.

படிப்பிலேதான் மனம் செல்லுவதில்லை. அருமையாய், தெய்வ சித்திரங்கள் எழுதுவார்; பதுமைகள் செய்வார்; பழுதான விக்கிரகங்களையும் செப்பனிட்டு விடுவார். வசீகரமான மேனி. ஊரிலேயுள்ள அனைவருக்கும் அவரிடம் பேரன்பு. அந்தச் சிறு வயதிலேயே அவருடைய பக்தியைக் கண்டு, முதியவர்களெல்லாம் கூட, அவரைத் தெய்வாம்சம் பெற்றவர் என்றே மதித்தார்கள்.

ஒன்பது வயதில் அவருக்கு உபநயனம் நடந்தது. கிராமத்தில் கொல்லர் ஜாதியைச் சேர்ந்த தானி என்ற ஒரு பெண், "பூணூல் போடும் போது, முதலில் என்னிடம் பிட்சை வாங்கவேண்டும்"

என்று இவரைக் கேட்டுக்கொண்டிருந்தாள். சரி என்று சொல்லியிருந்தார் ராமகிருஷ்ணர். முகூர்த்தம் நடந்தபோது, இவர் அந்த வாக்கை நிறைவேற்ற விரும்பினார். "இதென்ன விபரீதமாயிருக்கிறதே! பிராமணப் பெண்களிடம்தானே பிட்சை வாங்க வேண்டும்?'' என்று குடும்பத்தார் ஆட்சேபித்தார்கள். "தானியிடம்தான் வாங்குவேன்'' என்று பிடிவாதம் பிடித்தார் ராமகிருஷ்ணர். கடைசியில், மற்றவர்தான் அவருக்கு இணங்க வேண்டியதாயிற்று. அந்தச் சிறு வயதிலேயே அவருக்கு அவ்வளவு சமதிருஷ்டி ஏற்பட்டிருந்தது.

கல்கத்தாவுக்கு வடக்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள தட்சிணேசுவரம் என்னுமிடத்தில் ராணி ராஸ்மணி என்ற சீமாட்டி வெகு பொருள் செலவிட்டு ஒரு காளி கோவில் கட்டியிருந்தாள். அதற்கு இரண்டு லட்ச ரூபாய் சொத்தும் எழுதி வைத்தாள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அந்தக் கோயிலில் அர்ச்சகராக அமர்த்தப்பட்டார். அவர் அர்ச்சனை செய்யும் தோரணையே புதுமையாயிருக்கும். சாஸ்திரத்தையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, காளிதேவியை உயிருள்ள அன்னை போலவே மதித்து, கொஞ்சுவார்; குலவுவார். அன்னத்தை விக்ரகத்துக்கு ஊட்டச் செல்வார். "ஆ! என்னையா சாப்பிடச் சொல்கிறாய்'' என்று தம் வாயிலேயும் போட்டுக் கொண்டு விடுவார். வில்வ தளங்களை எடுத்து, முதலிலே தம் தலை, மார்பு, பாதம் ஆகிய இடங்களிலெல்லாம் தொட்டுவிட்டு, காளிதேவியின் பாதங்களில் சேர்ப்பார். கோயில் அதிகாரிகளுக்கு, இதெல்லாம் ஒரு பித்தனின் செயலாய்த் தோன்றியது. ராணி ராஸ்மணியின் மருமகன் மாதுர் பாபுவுக்கு, அவர்கள் புகார் செய்தார்கள். மாதுர் பாபு நேரே வந்து பார்த்தார். அவர்களின் புகார் உண்மைதான். ஆயினும், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மெய் மறந்த பக்தியைக் கண்டு, பாபுவின் உள்ளம் உருகியது. "அவர் இஷ்டப்படி பூஜை செய்யட்டும். யாரும் அவர் விஷயத்தில் குறுக்கிடக் கூடாது'' என்று உத்தரவு போட்டுவிட்டு, அவர் போய்விட்டார்.

மற்றொரு சமயம் ராணி ராஸ்மணியே, தேவி தரிசனத்துக்காக வந்தாள். "சங்கீர்த்தனம் கொஞ்சம் நடக்கட்டும்'' என்று, ராமகிருஷ்ணரை அவள் கேட்டுக் கொண்டாள். தம்மையே மறந்து பரவசத்தோடு பாடினார் ராமகிருஷ்ணர். அப்போது, ராணி எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். யாரும் எதிர்பாராதபடி, ராமகிருஷ்ணர் ராணியின் அருகே சென்று, "இங்கேயுமா அந்தக் கவலை!'' என்று சொல்லி, அவள் கன்னத்தில் பளீர் என்று ஓர் அறை விட்டார். பார்த்திருந்த ஊழியரெல்லாம் பதைத்தார்கள். ராணி அவர்களைக் கையமர்த்தி, "அவர் செய்தது நியாயம். நான் ஒரு வியாஜ்யத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். தெய்வ வணக்கத்தின் போது மனதை அலையவிடுவது தப்பிதம் தானே. அவர் எனக்குப் புத்தி கற்பித்தார். இதை யாரிடமும் நீங்கள் சொல்லக் கூடாது. அவரிடமே கூட, சுய ஞாபகம் வந்தபின், சொல்லாதீர்கள். சொன்னால், வருந்துவார்'' என்று எச்சரித்தாள்.

தேவி பராசக்தியிடம், அவர் அவ்வளவு தூரம் உள்ளத்தைப் பறி கொடுத்திருந்தார்.

காளிதேவியை, நேருக்கு நேரே பிரத்யட்சமாய்த் தரிசிக்க வேண்டுமென்று அவருக்கு அளவுகடந்த ஆர்வம். பஞ்சவடி என்ற காட்டுக்குள் போய்த் தியானம் செய்வார். கோயில் சிலே முன்னே உட்கார்ந்து, கண்ணீர் விடுவார்; கதறுவார். திடீரென்று ஒரு நாள் அவர் மெய் மறந்திருந்த நிலையில், தேவி அவருக்குத் தரிசனம் அளித்துவிட்டாள். ஆனல், ஊராரெல்லாம் அவரை உன்மத்தரென்றே நினைத்தார்கள். ஒரு சிலர்தான், அவருடைய உண்மை மனோ நிலையை அறிந்தார்கள். அவர்களுக்கும் கூடச் சில சமயம் சந்தேகம் வந்து விடும்.

இவருக்குக் கல்யாணம் செய்து வைத்தால், இவருடைய சித்தப் பிரமை தீரும் என்று தாய் சந்திரமணி எண்ணினள். சாரதாமணியென்னும் ஐந்து வயதுப் பெண்ணை இவருக்கு விவாகம் செய்தும் வைத்தாள். ஆயினும், ராமகிருஷ்ணர் பழையபடியே தான் இருந்தார். அவருடைய அன்பும் பக்தியும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தன. தேவி தர்சனம் கிடைத்தபின், நிர்விகல்ப சமாதியை அடைவதற்காகப் பனிரண்டு வருஷம் கடும் தவம் புரிந்தார். அந்தக் காலத்தில், சில சமயம் தாழ்ந்த ஜாதியாரின் வீடுகளுக் கெல்லாம் சென்று, "தாயே! நான் பெரியவனென்றும் பிராம்மணனென்றும், இவர்கள் ஈன ஜாதியாரென்றும் எண்ணுகிற மனோபாவம் எனக்கு இருக்க வேண்டாம். இவர்கள் அனைவரும் பிரம்ம சொரூபம் என்னும் எண்ணம் எனக்கு உண்டாகும்படி அருள்புரி" என்று பிரார்த்திப்பார். செல்வத்தை, அவர் ஒரு போதும் மதித்ததில்லை. ஒரு நாள், கங்கைக் கரையில் போய், ஒரு கையில் பணத்தையும் மறு கையில் கொஞ்சம் மண்ணையும் வைத்து உட்கார்ந்து கொண்டு, "பணம் மண்; மண் பணம்" என்று, சிறிது நேரம் மாறி மாறிப் பார்த்துச் சொல்லிக் கொண்டேயிருந்து, கடைசியில் இரண்டையும் கங்கையில் எறிந்து விட்டார்.

இப்படி மனோபக்குவம் ஏற்பட்டுவிட்ட நிலையில், பைரவிப் பிராம்மணி என்ற சந்யாசினி வந்து, இவருக்கு யோகாப்பியாச ரகஸ்யங்களைப் போதித்தாள். பின்னல், தோதாபுரி என்ற மகான் வந்து, சகல வேதாந்த ரகஸ்யங்களையும் இவருக்கு உபதேசித்தார். அவருடைய உபதேசப்படி ராமகிருஷ்ணர் அப்பியாசம் செய்து, மூன்றே நாளில் நிர்விகல்ப சமாதி சித்தியடையப் பெற்றார்.

சகல மதங்களும் ஒரே ஈசுவரனை அடைவதற்கான வெவ்வேறு பாதைகளே என்ற தத்துவத்தை, தம் ஆத்மீக வாழ்க்கையிலே சாதிப்பதற்காக, வெவ்வேறு சாதனைகளை அவர் அனுஷ்டித்தார். தம்மை ராதையாகப் பாவித்து, கிருஷ்ணனைத் தம் நாயகனுய்க் கருதி, அவரைத் தரிசித்தார். முஸ்லீமாயும், கிருஸ்தவராயும், பௌத்தராயும், ஜைனராயும் இன்னும் வெவ்வேறு மதத்தாராயும் தம்மைப் பாவித்து, அந்தந்தப் பக்தர்களின் ஆசாரப்படி உடையும் உணவும் கூடக் கொண்டு ஒவ்வொரு காலம் பக்தி செய்து, அந்தந்தத் தெய்வங்கள் பிரத்யட்சமாகப் பெற்றார். ராம பக்தி செய்யும்போது, தம்மை ஹனுமானுகப் பாவித்துக்கொண்டாராம். அச்சமயம், ஒரு துணியைக் கிழித்து வாலாகக் கட்டிக்

கொண்டு, வானரம்போல் விழித்துக்கொண்டு, தாண்டித் தாண்டிச்செல்வாராம். இந் நாட்களில் முதுகெலும்பு நீண்டு, நிஜ வால் கூட ஓரங்குலம் இவருக்கு முளைத்துவிட்டதாம்! அதி தீவிர பக்தியும், தம்மை மறந்த கடுஞ் சாதனையுமே, அவருக்கு, இந்த அற்புத அனுபவங்களிலேவெற்றி தந்தன.

இன்னும் சித்தப் பிரமை என்றே பலர் கருதினர்கள். சாரதாமணி தேவியாருக்கு அச்சமயம் பதினெட்டு வயது ஆகியிருந்தது. தம் புருஷன் சித்த ஸ்வாதீன மில்லா திருப்பதாகக் கேட்டு, அவள் வருத்த மடைந்தாள். கிராமத்திலிருந்து, கால் நடையாய் நடந்துவந்து, புருஷனை நேரில் தரிசித்து, உண்மை அறிய விரும்பினள். அவளை அன்போடு தான் ராமகிருஷ்ணர் வரவேற்ருர். என்ருலும், "உன்னை முன் மணந்த கதாதான் இறந்து விட்டான். இப்போதிருக்கும் புதிய கதாதரன் எந்தப் பெண்ணையும் மனைவியாய் ஏற்பதில்லை. உன்னிடம் ஜகன்மாதாவான காளியின் சொரூபத்தைத் தவிர வேறே எதும் நான் காணவில்லை" என்று கூறினர். அப்படியே, அவளை ஒரு நாள் வணங்கிப் பூஜையும் செய்து விட்டார். உத்தமியான சாரதாமணியும், அவர் அருகேயிருந்து, அவருக்கே பணிவிடை புரிந்துகொண்டு, ஆசிரமவாசிகளுக்கெல்லாம் அன்னையாய் விளங்கி, அவரைப் போலவே ஞானச்செல்வம் பெற்று, பரம பக்தையாய் வாழ்ந்து, சில வருஷங்களுக்கு முன்புதான் காலமானள்.

வர வர ராமகிருஷ்ணரின் கீர்த்தி ஓங்கியது. படித்த வாலிபரும், பண்டிதர்களும், பிரபுக்களும் அவரிடம் வந்து உரையாடினர்கள். சுவாமி விவேகானந்தர் போன்ற சிஷ்யர்களும் ஏற்பட்டார்கள். யாவரும் அவரைத் தெய்வ அவதாரமென்றே மதிக்கத் தொடங்கினர்கள்.

மகா சூட்சுமமான தத்துவங்களை யெல்லாம், பூர்வகால ரிஷிகளைப்போல, கல்பன சக்தி நிறைந்த உபமானங்களோடு, தெளிவாய், ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளக்கி யுள்ளார். அவருடைய வாக்கு, பண்டிதர்க ளெல்லாம் வியந்து பரவசமடையும்படியிருந்தது. ஆத்மானுபவப் பெருக்கிலே பொங்கி வழிந்தது அந்த வாக்கு என்பது, அதைக் கேட்கும் போதே நமக்குத் தோன்றி விடும்.

தம்மைப் பார்க்க வருவோருடன், உதயம் முதல் அஸ்தமனம் வரையில் சலியாமல், ஓய்வின்றி அவர் வேதாந்த விசாரம் செய்து, உபதேசம் புரிவார். 1885-ஆம் ௵ அவருக்குத் தொண்டைப் புண் வந்தது. தொண்டை கட்டி, பாயஸம் முதலிய திரவ பதார்த்தம்கூட உட்செல்லாத நிலைமை ஏற்பட்டது. அப்போதும், கும்பல் கூடித் தரிசிக்கவரும் ஜனங்களுக்கு ஏதாவது உபதேசம் செய்துகொண்டேயிருப்பார். நோய்முற்றி, 1886-ஆம் ௵ ஆகஸ்டு௴ 16-ஆம் ௳ இரவு, அவர் மகா சமாதி யடைந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், இன்று எண்ணற்ற பக்தர்களுக்கு ஒரு தெய்வமாய் விளங்குகிருர். களைத்துச் சோர்ந்த ஆத்மாக்களுக்கு, அவருடைய உபதேசங்கள், ஆறுதலும் நம்பிக்கையும் தருகின்றன. அவருடைய வாழ்க்கை, தெய்வ ஒளிபெற்றது; அவர் வாக்கு அருட்பிரவாக மாகும்.

✻

## காலம் மாறிவிட்டது



கி. பி. முதல் நூற்றாண்டு

கடியாரங்கள்



# TIMES HAVE CHANGED

## 20வது நூற்றாண்டு

ஆதிகாலத்தில் காலத்தினைக் காட்ட ஜலமானிகளை உபயோகித்து வந்தார்கள். அதைவிட சரியான காலங் காட்டக்கூடிய மணல்மானிகளை ரோமர்கள் காலத்திலும் அதற்கு முன்னாலும் உபயோகித்து வந்தார்கள். 20-ம் நூற்றாண்டிலோ சாஸ்திரீயமான, அடக்கமான, நம்பகமான வசீகரமான ஒரு கடியாரம் அவசியம், இந்த அவசியத்தை பல ரகங்களில் விற்கப்படும் 'வெஸ்ட் எண்ட்' கடியாரங்கள் சரிவர பூர்த்தி செய்கின்றன. இலவச காட்லாக்கிற்கு எழுதவும்.

**வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.**

பம்பாய் :: கல்கத்தா



**பிஜோ ஸெமி தின்—11 சைஸ்**

| | |
|---|---|
| பேடன்ட் எவர்பிரைட் ஸ்டீல் | ரூ. 150 |
| 18 காரட் முழுத் தங்கம் | ரூ. 365 |



பிஜோ ஸெலக்ட்: பேடன்ட் எவர் பிரைட் ஸ்டீல் ரூ. 175. 18 காரட் முழுத் தங்கம் ரூ. 475

சாமான்கள் சரிவர வராததினால் விளம்பரப்படுத்திய மாடல்களை சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம்.

# WEST END WATCH Co.

*Bombay - Calcutta*





# கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய
வெண்மையாக்குவதில்
நிகரற்றது.

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர் : டி. எஸ். ஆர். & கோ
கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட் : புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி, மதராஸ்

# பாஸிஸத்தின் தன்மைகள்

வெ. சாமிநாத சர்மா

பாசிஸமானது அமைதியான வாழ்க்கையை அடியோடு நிராகரிக்கிறது; போரைப் புகழ்ந்து பாடுகிறது. பலவீனப் பட்டுவருகிற அல்லது உட்பிணக்குகளால் சீர்கெட்டுப்போகிற ஒரு ராஜ்யம், பழைய மாதிரி சிறப் படையவேண்டுமானால் அதற்கு யுத்தமே தக்க மருந்து என்பது பாசிஸ்டுகளின் வாதம். அமைதி, செழுமை, சுகம் முதலியன, ஒரு ராஜ்யத்தில் அளவுக்கு மிஞ்சி விடுமானால் அந்த ராஜ்யத்திற்கு அழிவு ஏற்படுவது நிச்சயம் என்று பாசிஸ்டுகள் நம்புகிறார்கள். இதனாலேயே சமுதாய வாழ்க்கையில் கட்டுப்பாடு, வைராக்கியம் முதலியன தேவையென்று வற்புறுத்துகிறார்கள்.

போர்க் குணத்தைப் புகழ்ந்து பாடுகிற பாசிஸ்டுகள், அதிகார பலத்தை லட்சியமாகக் கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை. பணம் படைத்தவனோ புத்திசாலியோ, பொருளுற்பத்தி செய்கிறவனோ பாசிஸ்ட் ராஜ்யத்தில் முக்கியஸ்தனல்ல; அதிகாரம் யாரிடத்தில் இருக்கிறதோ அவன்தான் முக்கியஸ்தன். ஆனால் எல்லோருமே அதிகாரிகளாக இருக்க முடியுமா? முடியாது. ஒருசிலர்தான் இருக்கமுடியும். அந்த ஒருசிலரே ஆளுஞ்சாதியினர்; மற்றவர் எல்லோரும் ஆளப்படும் கூட்டத்தினர். இத்தகைய கருத்துக்கள் பாசிஸத்தின் அடிப்படையில் இருப்பதனாலேயே, பாசிஸ்ட்டுகள் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் பரிகசித்துப் பேசுகிறார்கள். இதனைச் சிறிது விளக்குவோம்.

பாசிஸம் தனி மனிதனுடைய சுதந்தரத்தைப் பறிப்பதாக ஜனநாயகவாதிகள் சொல்லுகிறார்கள். ஆனால், அது தனி மனிதனுக்கு அளவற்ற சுதந்தரம் கொடுப்பதாக பாசிஸ்டுகள் சொல்லுகிறார்கள். எது உண்மை? பாசிஸ்டுகள் சொல்லுவது உண்மையானால் ஜனங்கள் ஏன் அதை வெறுக்கிறார்கள்? அதனுடைய லட்சியந்தான் என்ன?

பாசிஸத்தின் கொள்கைப்படி எண்ணிக்கை முக்கியமல்ல. அதாவது ஒரு ராஜ்யத்தின் அதிகார பலம் முழுவதும் பெரும்பாலோரான ஜனங்களிடத்தில் இருக்கிறது அல்லது இருக்க வேண்டுமென்ற ஜனநாயக சித்தாந்தத்தை பாசிஸம் அடியோடு நிராகரிக்கிறது. முஸோலினி ஓர் இடத்தில் கூறியிருக்கிறான்: "மெஜாரிட்டியினாலேயே, அது மெஜாரிட்டியாக இருக்கிறதென்ற ஒரு காரணத்தைக் கொண்டே மானிட சமுதாயத்தை நடத்திக்கொண்டு செல்ல முடியுமென்பதைப் பாசிஸம் மறுக்கிறது. பலர் அவ்வப்பொழுது கூடி ஆலோசித்து விட்டதன் மூலமாகவே ராஜ்யத்தை ஆளமுடியும் என்பதை அது மறுக்கிறது. மானிட சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதை மாற்ற முடியாது. அதுதான் நல்லது; பலன் தரத்தக்கது. எல்லோருக்கும் வாக்குரிமை யென்கிற ஒருமுறை

யினல் இந்த ஏற்றத் தாழ்வுகளை ஒழுங்குபடுத்த முடியாது.''

எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுத்துவிடுவதென்பது, எல்லோரும் பொறுப்பற்ற தன்மையில் நடந்துகொள்ளலாம் என்று உரிமை கொடுத்துவிட்டமாதிரி என்பது பாசிஸ்டுகள் கருத்து. எல்லோருக்கும் உரிமை கொடுத்துவிடுவதனலேயே, எல்லோரும் கடமையைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாதல்லவா? செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவும் முடியாது. வற்புறுத்தினல் ஆளப்படுவோரின் சம்மதத்தைப் பெற்று ஆட்சி நடைபெறுகிறதென்ற அடிப்படையே தகர்ந்துவிடுகிறது. ஆகவே, ஜனநாயகத்தினல், அதாவது பெரும்பாலோர் ஆட்சியினல் ஒழுக்கஹீனங்களும் ஒழுங்குத் தவறுகளுமே அதிகப்படுமென்று பாசிஸ்டுகள் கூறுகிருர்கள்.

பாசிஸத்தின்படி ஜன சக்தியென்பது, ஜனங்களுடைய தூய எண்ணத்தைப் பொறுத்திருக்கிறதே தவிர எண்ணிக்கையைப் பொறுத்திருக்கவில்லை. ஒருசிலர் மட்டுமே, ராஜ்யத்தின் க்ஷேமத்திற்காகவும், மற்றவர்களுடைய நன்மைக்காகவும் உழைக்க முடியுமென்றும் அவர்களுடைய சக்திதான் ஜனசக்தி யென்றும் பாசிஸ்டுகள் சாதிக்கிருர்கள். குறித்த ஒரு பிரச்னையை எடுத்துக்கொண்டு அது நியாயமா அல்லது நல்லதா என்று தீர்மானிக்கவேண்டுமானல், அதற்குப் பெரும்பாலோருடைய ஓட்டு பலம் மட்டும் இருந்தால் போதுமா? அப்படிப் பெரும்பாலோருடைய ஓட்டு பலம் இருக்கிறதென்ற ஒரு காரணத்தினலேயே அந்தப் பிரச்னை நியாயமாகிவிடுமா? நல்லதாகிவிடுமா? ஆகிவிடாது. எனவே, அதிகார பலம் யார் கையில் இருக்கிறதோ அவர்கள் நியாயமென்றும் நல்லதென்றும் எதைச் சொல்லுகிருர்களோ அதுதான் நியாயம், அதுவே நல்லது என்கிருர்கள் பாசிஸ்டுகள். "ஹிட்லர், எது சரியென்று தீர்மானிக்கிருரே அதுதான் சரி; சாசுவதமாக அதுவே சரியாயிருக்கும்'' என்பது ஒரு ஜெர்மானிய அரசியல் வாதியின் வாக்கு.

ராஜ்யத்தின் எல்லாப் பிரஜைகளும் சம உரிமை உடையவர்களென்ற ஜனநாயகத்தின் மற்ருேர் அடிப்படையையும் பாசிஸம் தகர்த்தெறிகிறது. சட்டத்தின் முன் எல்லாரும் சமம் என்ற கோட்பாடுகூட பாசிஸ நாடுகளில் எள்ளி நகையாடப்படுகிறது. உதாரணமாக ஜெர்மனியில் யூதர்கள் எப்படி நடத்தப்படுகிருர்கள் என்பதைக் கொண்டே பாசிஸத்தின் போக்கை நாம் தெரிந்துகொள்ளலாம்.

பாசிஸமானது, தனி மனிதனுடைய வளர்ச்சிக்கோ, உரிமைக்கோ முக்கியத்வம் கொடுப்பதில்லை. ராஜ்யத்தின் க்ஷேமத்திற்கும் வளர்ச்சிக்குந்தான், அந்த ராஜ்யத்திலுள்ள பிரஜை இருக்கிருனே தவிர, அந்தப் பிரஜையின் க்ஷேமத்திற்கோ, உரிமைக்கோ வளர்ச்சிக்கோ பங்கம் வராமல் பாதுகாப்பது ராஜ்யத்தின் கடமை என்பதை பாசிஸம் அடியோடு மறந்துவிடுகிறது. சுருக்கமாகச் சொல்கிறபோது, ராஜ்யத்திற்காகத்தான் பிரஜை இருக்கிருனே தவிர, பிரஜைக்காக ராஜ்யம் இல்லை. இதனல், ராஜ்யத்தின் க்ஷேமத்தை முன்னிட்டு எந்த அளவுக்குப் பிரஜை

களுக்கு உரிமைகள் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குத் தான், அளிக்கவேண்டுமென்று பாசிஸம் கூறுகிறது. இதனை முஸோலினி பின் வருமாறு விளக்குகிறுன்: "பாசிஸ்ட் ராஜ்யத்திலுள்ள பிரஜைகளுக்கு பயனற்றதும் தீமை பயப்பது மான எல்லா உரிமைகளும் மறுக்கப்படுகின்றன; எவை அவசியமோ, முக்கியமோ அவைமட்டுமே வைத்துக்கொள்ளப்படுகின்றன. ஆனால் எது அவசியம், எது முக்கியம் என்று தீர்மானிப்பது, பிரஜையல்ல ராஜ்யந்தான்." இந்தத் தீர்மானிக்கும் உரிமை ராஜ்யத்தினிடம் ஏன் இருக்க வேண்டுமென்றால், ராஜ்யத்தின் தேவைகள், ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு விதமாக மாறுபடுகின்றன. அந்தத் தேவைகளுக்குத் தகுந்தாற்போலவே பிரஜைகளின் உரிமைகளும் மாற வேண்டியிருக்கின்றன. அப்படி மாருவிட்டால், அதாவது பிரஜைகளுக்குச் சில உரிமைகளைச் சாசுவதமாக அளித்துவிட்டால், ராஜ்யத்தின் க்ஷேமமல்லவோ பாதிக்கப்பட்டுவிடும்? உதாரணமாக ஜனங்களுக்கு, யுத்த காலத்தில் ஒருவிதமான உரிமை, சமாதான காலத்தில் இன்னொரு விதமான உரிமை, புரட்சிக் காலத்தில் வேருெரு விதமான உரிமை, பொருளாதாரச் செழுமையுள்ள காலத்தில் மற்றொரு விதமான உரிமை, வெள்ளத்தினுலோ, பஞ்சத்தினுலோ ராஜ்யம் வறுமையுற்றுத் தவிக்கிறபோது, பிறிதொரு விதமான உரிமை என்று இப்படிப் பலவிதமாக காலத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் தகுந்தாற்போல், உரிமைகள் மாறுவதை, எல்லோருக்கும் சாசுவதமான உரிமை வழங்கியுள்ளோம் என்று பெருமையடித்துக்கொள்கிற ஜனநாயக நாடுகளில் காண்கிறுேமில்லையா என்று பாசிஸ்ட்டுகள் கேட்கிறுர்கள்.

> **மணி ஓசை போல**
>
> "மணியை அடிக்கும்போது, அடுத்தடுத்து வரும் அதன் ஒவ்வோர் ஓசையும் தனித்தனி உருவத்தை யுடையதுபோலத் தோன்றும். ஆனால், அடிப்பதை நிறுத்தினால், சிறிதுநேரம் வரையில் கேட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக நின்றெழியும் தெளிவற்ற சப்தமோ உருவமில்லாதது போலத் தோன்றுகிறது. மணியின் ஓசையைப்போல, கடவுள் உருவமுள்ளவனையும் உருவமில்லாதவனையுமிருக்கிறுன்."
>
> —ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

சுருக்கமாக, பாசிஸமானது, தனி மனிதனுடைய வாழ்க்கை, இன்னபடிதான் இயங்குதல் வேண்டுமென்று நிர்ணயிக்கிறது. இது தனி மனிதனுடைய வளர்ச்சியையும், உரிமையையும் தகைகிறதென்று ஜனநாயகவாதிகள் சொல்கிறுர்கள். ஆனல் பாசிஸ்ட்டுகளோ, தனி மனிதனுடைய உரிமையை ஒழுங்குபடுத்திவிடுகிறுேமென்று சொல்கிறுர்கள்.

தனி மனிதர்களுடைய உரிமைகளை ஒழுங்குபடுத்தி விடுகிறுேமென்பதை அனுசரித்தே, பாசிஸமானது, வேறு அபிப்பிராயங்களுக்கு, மாறுபட்ட அரசியல் கொள்கைகளுக்கு இடங்கொடுப்பதில்லை. பாசிஸ்ட்டுகள், அரசாங்க ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற நாடுகளில் வேறு அரசியல் கட்சிகளுக்கு இடங்கொடாமலிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறுேம்.

பாசிஸத்தின் பிரகாரம், தனிப்பட்டவர்கள் முக்கியஸ்தர்கள் அல்ல; தனிப்பட்டவர் சிலர்

அடங்கிய ஸ்தாபனங்கள் அல்லது சங்கங்கள்தான் முக்கியம். அதாவது தனிப்பட்ட ஒரு பிரஜை, நேராக ஓட்டுரிமை பெற்று ராஜ்ய நிருவாகத்தில் கலந்துகொள்ள முடியாது. மேற்படி ஸ்தாபனத்தின் அல்லது சங்கத்தின் அங்கத்தினன் என்ற முறையில்தான் அவன் அரசியலில் கலந்துகொள்ள முடியும்.

இந்த ஸ்தாபனங்கள் தொழில் வாரியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் முதலாளி—தொழிலாளி வேற்றுமை கிடையாது. ஒரே தொழிலில் சம்பந்தப்பட்ட எல்லோரும் ஒரு ஸ்தாபனமாகச் சேர்க்கப்படுகிறார்கள். இந்த ஸ்தாபனந்தான் தொழிலை எப்படி நடத்த வேண்டும் என்பதையும், கூலி விகிதம், வேலை நேரம் முதலியவைகளையும் நிர்ணயிக்கிறது. இதுவே சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்கு அங்கத்தினர்களை நியமிக்கிறது. அதாவது, ராஜ்யத்தின் வாழ்வு, இந்த ஸ்தாபனங்களின் மூலமாக நடைபெறுகிறதென்று சுருக்கமாகச் சொல்லலாம். ராஜ்ய சக்தியானது, தேசமெங்கணும் பாய்வதற்கு இந்த ஸ்தாபனங்கள் கால்வாய்கள் மாதிரி இருக்கின்றன என்று பாசிஸ்டுகள் கூறுகிறார்கள்.

இறுதியாக, பாசிஸமானது, பேச்சுத் தத்துவமல்ல; செயல் தத்துவம். அதில் சிந்தனையைவிட செயலுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாசிஸ தத்துவமானது, சிந்தனுவுலகத்தில் மட்டும் சஞ்சரித்துக்கொண்டிருந்தால் போதாதென்றும், அது செயலாகப் பரிணமிக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான், பாசிஸம், அதன் லட்சணத்தோடு அமைந்திருப்பதாகச் சொல்ல முடியுமென்றும் பாசிஸ்ட்டுகள் கூறுகிறார்கள்.

✲

## யானை ஆராய்ச்சி

வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த ஐந்து பேர், யானையைப் பற்றிப் புத்தகம் எழுதிய ரசமான விவரத்தை, ஜான் கந்தர் என்ற அமெரிக்கர் கூறுகிறார்:

ஆங்கிலேயன் இந்தியாவுக்குப் போய் ஒரு யானையை வேட்டையாடிவிட்டு வந்து, 'நான் கொன்ற முதல் யானை' என்றபெயரில் ஓர் அழகான புத்தகம் எழுதுகிறான். பிரெஞ்சுக்காரன் இந்திய மிருகக்காட்சிச் சாலைக்குப் போய் அங்கிருக்கும் ஒரு யானையைப் பார்த்துவிட்டு வந்து, 'யானையின் பெருமை' என்ற பெயரில் ஒரு புத்தகம் எழுதுகிறான். ஜெர்மானியனோ, ஊகமும் கற்பனையுமான ஆராய்ச்சியிலிறங்கி, பல நாளாக இரவும் பகலும் யோசித்த பிறகு, 'யானை ஆராய்ச்சிக்கு முகவுரை' என்ற பெயரில் ஐந்து புத்தகங்கள் எழுதுகிறான். ரஷ்யனோ, நன்றாகக் குடித்துவிட்டு, 'யானையா? அப்படியும் ஒரு மிருகம் இருக்கிறதா, என்ன?' என்ற பெயரில் வேதாந்தக் கட்டுரை எழுதுகிறான். போலந்துக்காரன் வாசகசாலையில் உட்கார்ந்து பெரிய பெரிய புத்தகங்களை எல்லாம் புரட்டிப் பார்த்துவிட்டு, நெருப்புப் பொறி பறக்கும் முறையில் 'யானையும் போலந்துப் பிரச்னையும்' என்ற பெயரில் துண்டுப் பிரசுரம் வெளியிடுகிறான்.

# தெய்வ சாபம்

பி. வி. சுப்பிரமணியன்

கதவை மூடிக்கொண்டு டாக்டர்கள் உள்ளே சென்றதும், ஜகதீசனுக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. கதவின் மீது காதை வைத்து உற்றுக் கேட்டான். ஜீவனற்று, மிகவும் மெல்லிய குரலில் வந்துகொண்டிருந்த அழுகைச் சத்தமும் சிறிது சிறிதாகக் குறைந்து நின்று போயிற்று. ஆப்பரேஷனுக்காக உள்ளே எடுத்துக் கொண்டு போன அவனுடைய குழந்தைக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டார்கள் என்று ஜகதீசன் தெரிந்துகொண்டான். உடனே தன்னை மறந்த ஓர் உணர்ச்சி அவன் உள்ளத்திலே பொங்கி எழுந்தது: "ஏன்? இந்தக் கதவை உடைத்துக் கொண்டு நான் உள்ளே போனால் என்ன?'' என்று எண்ணினன்.

சட்டென்று அடுத்த கணத்தில் "சீ! என்ன அசட்டுத்தனம்!'' என்று, அந்த யோசனை மாறி விட்டது. எவ்வளவு சீக்கிரத்தில், எதிர்பாராத விதமாக இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது என்பதை நினைக்கும்பொழுது, சம்பவங்களின் வேகத்தை அவனுடைய மனம்கூட ஒடிப்பிடிக்க முடியாமல் திகைத்தது. எட்டு மாதங்களுக்கு முன்பு குழந்தை பிறந்தபோதே, அதன் முகத்தில்

அம்மாவின் குருட்டு நம்பிக்கையை அவன் கேலி செய்தான். அதில் தெய்வத்துக்கென்ன வந்தது? அப்படித்தான் கோபம் வந்தாலும், குற்றம் ஒருவர் புரிய மற்றொருவரை வதைப்பது என்ன நியாயம்? குழந்தை பிழைக்குமா? அவனுடைய மாளாத யோசனையின் முடிவு என்ன? அதுதான் முக்கியம் குழந்தையைப் பற்றி இனிக் கவலை இல்லை.

சின்னஞ் சிறு சதை வளர்ச்சியொன்றும் காணப்பட்டது. அது கடுகளவில் கண்களுக்குக் கீழே, கன்னத்தின் நடுவில் இருந்தது. அதைப் பார்க்கும்போது அந்தக் குழந்தையின் தளிர் முகத்தில் சிவப்புக்கல் வைத்து இழைத்து அழகு செய்ததைப்போல் இருந்தது.

அது அப்படியே இருந்திருந்தால், அழகாகவே இருந்திருக்கும். ஆனல், அது அப்படியே இல்லை. குழந்தையைவிட அது மிகவும் வேகமாக வளர்ந்து வந்ததைக் கண்டதும், எல்லோர் மனத்திலும் கவலை குடிகொண்டது. "வைத்தீச்வரனுக்கு வெள்ளி மிளகு செய்து போடுவதாக வேண்டிக்கொள், அம்மா! மிளகு உதிர்வதைப் போல் அது அப்படியே உதிர்ந்து போகும்'' என்று பாட்டி கூறினள்.

"அப்படியே செய்கிறேன். குழந்தை முகத்துக்கு ஒன்றும் செய்யாமல் சீக்கிரம் உதிர்ந்து போகட்டும்'' என்று குழந்தையின் தாயார் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

ஈசுவர பக்தியினல் மட்டும் வியாதிகள் தீரும் யுகம் போய் விட்டது என்று ஜகதீசனுக்குத் தோன்றியது. இதைப் போல் பிரார்த்தனை செய்து கொள்வதைவிட, ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வது நல்லது; ஏனென்றல் கடவுள் டாக்டருடைய உருவத்தில் வந்து உதவி செய்யலாமென்பது அவனுடைய எண்ணம். அதை அப்படிச் சொல்லாமல், வேறு விதமாகக் கூறினன்: "வெள்ளியில் தலைசெய்து போடு

கிறதாகப் பிரார்த்தனை செய்து கொண்டால், தலைகூடத் தானாக உதிர்ந்து விடுமோ?'' என்று பாட்டியிடம் அவன் கேட்டான்.

பாட்டிக்குத் திகீரென்றது. ''அசட்டுப் பிசட்டென்று ஏதாவது உளருதே'' என்று அவள் கோபித்துக் கொண்டாள்.

எல்லாருடைய மனோதிடத்தையும் பரிசோதனை செய்வதற்காகவோ என்னவோ, மறுநாள் திடீரென்று குழந்தையின் முகத்தில் இருந்த சதை வளர்ச்சியில் இருந்து, ரத்தம் கசிய ஆரம்பித்தது. ஒரு வேளை குழந்தையினுடைய கைநகமே பட்டு ரத்தம் வருகிறதோ என்று ஜகதீசன் எண்ணினான். அவன் மனதிலும் திகில் தலையெடுத்தது. ''என்னவோ சொன்னாயே? நேற்றுச் செய்து கொண்ட பிரார்த்தனையின் பலனைப் பார்த்தாயா?'' என்று பாட்டி சொன்னாள். மேலும், தொடர்ந்து ''அநாதைகளுக்குத்தெய்வம்தான் ஆதரவு'' என்று கூறினாள். ''தெய்வ நிந்தனை கூடாது'' என்றும் சொன்னாள்.

ஜகதீசனின் தெய்வ நிந்தனையினாலா இது வந்தது? எட்டு நாட்களாகக் குழந்தையின் முகத்திலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டே இருந்ததும், பலவிதப் பிரயத்தனங்கள் செய்தும் ரத்தம் நிற்காமலிருந்ததும் அவனுக்கு ஞாபகம் வந்தன. டாக்டர்களிடம் அவனும் ஏழெட்டுத் தடவை போய்ப் பார்த்தான். அவர்கள் போடும் மருந்தினால் அந்த நிமிஷத்துக்கு ரத்தம் நின்றதே யொழிய, சிறிது நேரம் சென்றதும் மறுபடியும் கசியத் தொடங்கியது. கடைசியில் அதை அடியிலிருந்தே ஆப்பரேஷன் செய்து எடுத்துவிட வேண்டுமென்று டாக்டர்கள் அபிப்பிராயப் பட்டார்கள்.

அவனுடைய தெய்வநிந்தனைக்கு அது தண்டனையானால், பாட்டியின் பிரார்த்தனைக்கு தெய்வம் ஏன் செவிசாய்க்கவில்லை? குழந்தையின் தாயாருடைய வேண்டுகோளுக்காகவாவது பகவான் ஏன் மனமிரங்கவில்லை? தான் செய்த நிந்தனைக்கு, நிரபராதியான குழந்தைமீது பழிதீர்த்துக் கொள்வதுதான் அழகாகுமா?

### பதிலுக்குப் பதில்

வெண்டல் பிலிப்ஸ் என்னும் அமெரிக்கப் பிரமுகரின் கொள்கைகளைப் பிடிக்காத ஒரு பாதிரியார், ரயிலில் அவரை ஒரு சமயம் சந்தித்தார்.

''நீர்தானே பிலிப்ஸ்?'' என்று கேட்டார் பாதிரியார்.

''ஆம்'' என்றார் பிலிப்ஸ்.

''நீக்ரோக்களுக்குச் சுதந்தரமளிக்கவேண்டுமென்று சொல்லுபவர் நீர்தானே?''

''ஆம்''.

''அப்படியானால், இங்கே ஏன் பிரசாரம் செய்கிறீர்? நீக்ரோக்கள் இருக்கும் ஊருக்குப் போய், அங்கே பிரசாரம் செய்வதுதானே!''

பிலிப்ஸ் கொஞ்சநேரம் பேசாமலிருந்தார். பிறகு, அவரை நோக்கி, ''நீங்கள் பாதிரிதானே?'' என்றார்.

''ஆம்'' என்றார் பாதிரியார்.

''நரகத்தில் வேதனைப் பட்டுக்கொண்டிருப்பவர்களைக் கரையேற்றுவதுதானே உங்கள் வேலை?''

''ஆம்.''

''அப்படியானால், இங்கே ஏன் இருக்கிறீர்கள்? அங்கே போகிறதுதானே!''

ஜகதீசனுக்கு இதெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. கடவுள் எல்லாவற்றிற்கும் அதீதமானவரானால், நிச்சயமாக சிந்தனைக்கும் மேம்பட்டவராகத்தான் இருக்க வேண்டும். அவர் மன்னிப்பின் உருவம் என்று சொல்லுகிறார்கள், அது உண்மையானால், அவருடைய சக்தியில் சந்தேகம் கொண்டதற்காக, கடவுள் இவ்வளவு கொடூரமான தண்டனையைக் குழந்தைக்கு அளித்திருக்க முடியாது. கடவுள் அவ்வளவு அல்பத்தனமாகவா நடந்து கொள்வார்?

சமுத்திர அலைகளிலிருந்து தெறித்து விழும் நீர்த் துளிகள் போல், ஜகதீசன் மனத்தில் நினைவுகள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. மறுபடியும் கதவின் மீது காதை வைத்துப்பார்த்தான். உள்ளே இருந்து சப்தம் வருகிறதா இல்லையா என்று தெரிவதற்கு முன்னமே, கதவைத் திறந்து கொண்டு நர்ஸ் ஒருத்தி வெளியில் சென்றாள். குழந்தைக்கு எப்படி இருக்கிறதென்று கேட்பதற்கு, ஜகதீசன் வாயெடுத்தான். அதற்குள் நர்ஸ் வெகு தூரம் சென்று விட்டாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி இல்லை; கவலையுமில்லை. அவள் உணர்ச்சிகளுக்கே புறம்பானவளாகத் தோன்றினாள். சுற்றிலும் நடைபெறும் காரியங்களுக்கும் அவளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையல்லவா?

ஆமாம்; அப்படியானால் ஜகதீசனுக்கும் இப்போது உயிருக்காக மன்றாடிக் கொண்டிருக்கும் சின்னஞ் சிறு குழந்தைக்கும் என்ன சம்பந்தம்? இப்போது அது அவனுடைய குழந்தை என்பது உண்மைதான். ஆனால், எப்படி அது அவனுடையது? அவனுடைய உரிமைகளின் எல்லை என்ன? இயற்கை அல்லது ஏதோ தெய்விக சக்தியின் நியதியால், அது அவனிடம் வந்து சேர்ந்திருக்கிறது. அதே சக்தியால் அது வேறோர் இடத்திலும் போய்ப் பிறந்திருக்கலாம் அல்லவா? அப்படி இருந்திருந்தால், இந்தக் குழந்தையைப் பொறுத்த வரையில் அவனுக்குப் பொறுப்பும் கிடையாது; உரிமைகளும் கிடையாது. எனவே, தப்பித்தவறி எவ்வாறோ தன்னிடம் வந்து சேர்ந்தவைகளின் மீது மனிதன் எப்படி அளவற்ற பிரேமை வைத்து விடுகிறான்! அவனுடைய ஆசைக்கோ நிராசைக்கோ சம்பந்தமில்லாத கதியில் போய்க் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சியில், அவனுக்குச் சந்தோஷப் படுவதற்கு இடமில்லை; கவலைப் படவும் இடமில்லை.

ஜகதீசனுக்கு அந்த முடிவு மிகவும் ஆறுதலளித்தது. அதற்குப் பிறகு, எரிமலையைப்போல் எல்லையற்ற துக்கம் உள்ளே புகைந்து கொண்டிருக்க, துயரமே உருவமாய் அவன் ஏன் அங்கே நின்று கொண்டிருந்தான்? இது என்ன தண்டனை?

தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார் என்னும் கர்மபோதனை அவனுக்கு நினைவு வந்தது. அடுத்த நிமிஷம் அவன் முன்பு செய்த சிந்தனைகள், முடிவுகள் எல்லாம் அடியிலிருந்தே ஆட்டம் கொடுத்தன. அவனுடைய முன் வினைப் பயனை அனுபவிப்பதற்காக அவனங்கே நின்று கொண்டிருப்பதைப் போலவே, குழந்தையின் துயரமும் அதனுடைய கர்மானுபவம் தான்.

சரி; அந்த நிலையில் குழந்தையின் கஷ்டத்தைத் தீர்க்கும்படி கடவுளிடம் பிரார்த்தனை செய்

தது எவ்வளவு முட்டாள்தனம்! மனித சமூகத்தின் துயரங்கள் காரிய காரணத்தைப்போல் பூர்வ கர்மானுபவத்தால் வருபவையானால், அதைப் போன்ற நீதி முறையில் தலையிடும்படி தெய்வத்தினிடம் சிபாரிசுக்குச் செல்வது எவ்வளவு தவறானது! எனவே மனிதனைக் காப்பாற்றுவது என்பது கடவுளால் முடியாத காரியம். மனிதன் தன்னைத்தானே, தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்-அனுபவத்தால். அப்பொழுது தான் அவன் பரிசுத்தமடைய முடியும்.

மறுபடியும் கதவுக்கு அருகில் சப்தம் கேட்டது. ஜகதீசன் எழுந்து நின்றான். அவன் முகத்தில் தீர்மானம் ஒன்றும் தெரியாவிட்டாலும், அதை மூடியிருந்த சோகத் திரை காணப்படவில்லை. "பயமில்லை. குழந்தைக்கு ஒன்றும் செய்யாது" என்று பேசிக் கொண்டே, டாக்டர்கள் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார்கள்.

"நல்லது" என்ற பாவனையில், ஜகதீசன் தலையை ஆட்டினான். அவனுக்கு விசேஷ ஆனந்தமோ வியப்போ உண்டாகவில்லை. அவன் மனதிலே புயலடித்து ஓய்ந்து அமைதி ஏற்பட்டு விட்டது.

✲

## நல்ல பாடம்!

ஈச்வர சந்திர வித்யா சாகரர் கல்கத்தா சம்ஸ்கிருதக் கல்லூரியில் உதவிக் காரியதரிசியாய் இருந்து வந்தார். அவர் ஒருமுறை ஹிந்துக் கல்லூரித் தலைமையாசிரியரைப் பார்க்கப் போயிருந்தார். தலைமையாசிரியர் ஓர் ஆங்கிலேயர். பெயர், கார் என்பதாகும். வித்தியாசாகரர் அவருடைய அறைக்குள் நுழைந்தபோது, அவர் காலைத் தூக்கி மேஜை மேல் போட்டுக் கொண்டு, ஈஸிச்சேரில் ஒய்யாரமாகச் சாய்ந்திருந்தார்; வித்தியாசாகரரை உபசரிக்கவில்லை. உட்காரும்படி கூடச் சொல்லவில்லை. வித்தியாசாகரர் வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு மௌனமாகத் திரும்பிவிட்டார்.

சில நாட்கள் கழிந்தன. ஏதோ ஒரு காரியமாய் அதே ஆங்கிலேயர், வித்தியாசாகரரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் வரப்போவதை அறிந்ததும் வித்தியாசாகரர் அங்கிருந்த நாற்காலிகளை எல்லாம் வேறோரிடத்துக்கு அனுப்பிவிட்டார். ஆங்கிலேயர், வித்தியாசாகரருடைய அறைக்குள் நுழைந்தார். வித்தியாசாகரர் மேஜை மேல் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஈஸிச்சேரில் சாய்ந்திருந்தார். அவரை வரவேற்கவுமில்லை, உட்காரும்படி சொல்லவுமில்லை. அந்த ஆங்கிலேயருக்குக் கோபம் பொங்கியது. ஆனால், அங்கே ஒன்றும் செய்யமுடியவில்லை. வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கப் போனார்.

விஷயம் கல்லூரிக் காரியதரிசியிடம் எட்டி, அவர் சமாதானம் கேட்டபோது, தாம் அந்த ஆங்கிலேயரிடமே கற்ற பாடத்தைத் தான் அவரிடம் திருப்பிப் படித்ததாக, வித்யாசாகரர் பதிலளித்தார். காரியதரிசி ஒரு நடவடிக்கையையும் எடுக்காமல் விட்டதோடு, வித்யாசாகரரின் சுய மதிப்பையும் மிகப் பாராட்டினார்.

# பேழைகள் செய்ய

# உளியும் சுத்தியும் போதுமா?

உண்மையான பாதுகாப்பளிக்கக் கூடிய பேழைகள் செய்வதற்கு, தக்க வசதிகளும், நீண்ட அனுபவமும் இன்றியமையாதவை. ஏதோ உலோகத்தினால் பெட்டிகளைச் செய்து, அவற்றிற்கு 'பேழைகள்' என்று பேரிட, வசதியும் வேண்டாம், அனுபவமும் வேண்டாம். சகல யந்திரங்கள் படைத்த தொழிற்சாலை, 'பேடன்ட்' செய்யப்பட்ட நிர்மாண முறைகள், திறமை வாய்ந்த தொழிலாளர்கள் — கீழ் நாடுகளில் வேறு யாரிடத்துமில்லாத இவ்வசதிகளும், பாதுகாப்பளிக்கும் பொருட்களைத் தயாரிப்பதில் 50 வருட அனுபவமும் படைத்தவர் கோத்ரெஜார். பல சமயங்களில் கோத்ரெஜ் பேழைகள் விலையுயர்ந்த பொருட்களை பெருந்தீக்களினின்றும், கைதேர்ந்த முரட்டுக் கொள்ளைக்காரர்களினின்றும் காப்பாற்றி, தங்கள் சிறப்பு பேரில் மாத்திர மல்லவென்பதை நிரூபித்திருக்கின்றன.

**Godrej**

**கோத்ரெஜ்**

'பேடன்ட்' 16-வளைவு

இணையில்லாத

## பேழை



தீ, விழ்ச்சி, கொள்ளைக்காரர் - இவற்றினின்றும் பாதுகாப்பு

**கோத்ரெஜ் & பாய்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிடெட்.**

பம்பாய்-கல்கத்தா-மதருஸ்-டில்லி-கான்பூர்-ஹைதராபாத் (டெக்கான்)

---

Godrej

கோத்ரெஜ்
சாவி மார்க்

சோப்புகள்

| | |
|---|---|
| ந. 1 & ந. 2: | தாவர எண்ணைகளால் செய்யும் சோப்புகளில் தலை சிறந்தவை |
| ஸ்நாநவத்னி: | ஒப்புயர்வற்ற சுதேசி சோப் |
| ஸாண்டல்: | மிருகக் கொழுப்பற்ற சந்தன சோப் |

# வெயில் அதிகமாகி வருகிறது

## ஆனால், எரிச்சலைத் தடுக்கலாம்!

கோடைகாலத்திற்கு முன்பும் கோடைகாலத்தின் போதும் தினந்தோறும் கார்டில் பவுடரை உபயோகித்து வந்தால் நிச்சயமாக எரிச்சலைத் தடுக்கலாம். கார்டில் பவுடர் சென்ற முப்பது வருஷமாக ஜனங்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது. இன்றும், எரிச்சலைத் தடுக்க அதுவே சிறந்த மருந்து. பவுடர் தூவுவதற்கு வசதியான மேல் மூடியுடன் கூடிய தகரத்தில் கிடைக்கிறது.




தினசரி கார்டில் உபயோகியுங்கள்
அது தலை சிறந்தது!

**குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது**

கார்டில் பவுடர் உபயோகித்தால் வேறொரு பவுடர் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் சுபாவமான வாசனை கலப்பற்ற அந்தப் பவுடரில் குழந்தையின் மெல்லிய தேகத்திற்கு எரிச்சல் தரும் பொருள் ஒன்றும் கிடையாது. குழந்தை பராமரிப்பில் கார்டில் பவுடர் தலை சிறந்தது. வெயில் கொடுமையையும் போக்கி சொரசொரப்பான சருமத்தை மழ மழப்பாக்குகிறது.

பெரிய சைஸ் டின் ரூ. 2

## ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்

சென்னை

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

SPENCER & CO., LTD., MADRAS.




நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

மன்னவன் என்ற மனிதனில்லை — அங்கே
மந்திரி தந்திரி யாருமில்லை.
சின்னவர் என்று எவருமில்லை — பட்டம்
தேடி யலைந்திடும் மக்களில்லை.

ஊருக்குப் பத்துப்பேர் நல்லவர்கள் — பொது
யோசனை செய்திட வல்லவர்கள்.
யாருக்கும் ஏதிலும் ஓரங்கள் — செய்யாமல்
அப்பப்போ தீர்ப்புகள் செப்பிடுவார்.

நல்லவர் கெட்டவர் என்பதெல்லாம் — அங்கே
ராஜாங்கப் பட்டம் பதவியல்ல;
சொல்லில் நடத்தையில் சூரத்தில் தீரத்தில்
சுத்தரென்று பலர் நத்துவதே.

கச்சேரி என்றொரு கட்டிடமாம் — அதைக்
கண்டு நடுங்குதல் அங்கில்லையே;
அச்சமில்லாமலே யாரும் பொறுப்புடன்
அங்கங்கே நீதி நடத்திடுவார்.

வீதிக்கு வீதியோர் நீதிஸ்தலம் — பத்து
வீட்டுக்கு வீடொரு பள்ளிக்கூடம்.
நீதிக்கே ஓடியலைந்து செலவிட்டு
நிலைகெட் டழியும் நிந்தையில்லை.

பள்ளிப் படிப்புக்குச் சம்பளம் — இன்னும்
பரிட்சைக்குக் கட்டப் பணமெனவும்
பிள்ளைகள் பந்தாடப் பின்னும் பணமென்று
பிச்சுப் பிடுங்குதல் அங்கில்லையே.

வேலையில்லாதவர் யாருமில்லை — முற்றும்
விணருக் கங்கே வேலையில்லை.
கூலியில்லாதவர் யாருமில்லை — சும்மாக்
கும்பிட்டுத் நின்கிற கும்பலில்லை.

கூனும் குருடரும் மொண்டி முடங்களும்
கொஞ்சம்; அவருக்கும் பஞ்சமில்லை.
தானங்கொடுப்ப தொன்றில்லாமல் — பொதுத்
தர்மமென்றே வைத்துத் தாங்கிடுவார்.

ஒப்பி மனங்களித் தெல்லோரும் — அங்கே
உண்டு உடுத்துக் களித்திடுவார்.
தப்பிதம் செய்திடத் தோன்ருது — அதன்
தண்டனை தந்திட வேண்டாது.

வாது வழக்குக்கு நேரமில்லை — அங்கே
வஞ்சித்து வாழ முடியாது.
சூதுசெய் பந்தயம் ஏதுமில்லை — முற்றும்
சோம்பிச் சுகிக்க வழியுமில்லை.

கள்ளைக் குடிப்பது கூடாது — அங்கே
காமக் கலகங்கள் கண்டதில்லை;
கொள்ளை யடித்திடத் தேவையில்லை — என்றும்
கொஞ்சமும் நாட்டினில் பஞ்சமில்லை.

காவிரி நீர்வற்றிப் போவதில்லை — ஒரு
கால்வாய் மேஸ்திரி எங்குமில்லை.
காவலும் கட்டுகள் ஏதுக்கு? எப்போதும்
கள்ளர் பயமென்ற சள்ளையில்லை.

பண்ணையக் காரர்கள் எல்லாரும் — எங்கும்
பட்டினி என்கிற சொல்லேது?
கண்ணியம் அற்றவர் யாருமில்லை — ஒரு
காலித்தனம் பண்ண ஏலாது.

கண்டதும் கேட்டதும் எப்படிப் — போனாலும்
கச்சேரி வந்துபொய் சொன்னது மெய்
கண்டவர் உண்மையைச் சொல்லவும் வாய்பொத்திக்
கைகட்டி நின்றிடும் கஷ்டமில்லை.

கொடுத்த பணத்தை வாங்குதற்கு நித்தம்
கோர்ட்டு வாசலில் காத்திருந்தும்,
அடுத்த பிறவி போகுமட்டும் நொந்து
அல்லல் அடைகிற தொல்லையில்லை.

துக்கத்தைச் சொல்லி அழுவதற்கும் — வெகு
தூரம் நடந்து பிராது சொல்லி,
பக்கத்தில் நின்றவர் ஏனென்று கேட்கவும்
பற்றற்றுப் போவதும் சற்றுமில்லை.

திண்டப் படாதென்று சொன்னாலும் — அங்கே
தீண்டுதல் வேண்டித் திரிவதில்லை.
வேண்டிய சுகங்கள் யாவும் பிறரைப்போல்
வேணமட்டும் உண்டு வேறெதற்கு?

கோவில் குளங்களும் வேணதுண்டு — ஆனால்
கும்பிடப் போவதில் சண்டையில்லை.
வாயில் ஜபதபம், வஞ்சனை நெஞ்சத்தில்
வைத்துப் பிழைத்திடத் தேவையில்லை.

வட்டிக்குப் போடப் பணமும் இல்லை — அங்கே
வட்டிக்கு வட்டிசெய் சட்டமில்லை.
பெட்டிக்குச் சாவியும் இல்லாமல் — வெறும்
பேச்சில் புரண்டிடும் நாணயங்கள்.

தானியம் தவசம் அல்லாமல் — அங்கே
தங்கமும் வெள்ளியும் செல்வமல்ல.
நாணய மாற்றென்ற நாடக ஜாலங்கள்
நாகரிகப் பித்த லாட்டமில்லை.

சின்னக் குழந்தைக்குத் தாலிகட்டி — வெகு
சீக்கிரம் தாலி அறுத்தாலும்,
வன்னம் கெடுத்தவள் வாழ்வைக் குலைத்திடும்
வண்ட வழக்கங்கள் கண்டதில்லை.

நாட்டுக்குப் பகைவர் யாருமில்லை — பிறர்
நாட்டின்மேல் ஆசையில் லாததனால்;
சூட்டுக்குச் சூடும் கொடுத்திடுவார் — பகை
துஷ்டர் வந்தாலும் துரத்திடுவார்.



# மைதிலி

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

புடை பதைக்கும் வெயிலில், ஒரு வாரத்துக்கு மேலாக அலைந்தாயிற்று. சில வீடுகளில், நன்றாய் உடுத்து நிற்பார்கள்; சில வீடுகளில், அரையும் குறையுமான உடுப்போடு வந்து பதில் சொல்லுவார்கள் — இப்படி எத்தனையோ குடும்பங்களைப் பார்த்துப் பார்த்துக் கண்ணும் மனமும் கூடச் சலித்துவிட்டது. கடைசியாக, வீடு என்ற பெயர் கொண்ட ஒரு வளையை — அல்ல, இரண்டு எலி வளைகள் கொண்ட ஒரு பெரிய வளையை — வாடகைக்கு அமர்த்தினேன். நவாப் காலத்தில் நிர்மாணமான ஒரு பழைய கட்டிடத்தின் கொல்லைக் கட்டு அது.

கொசு உபத்திரவமும், நடுத்தர வகுப்பாரின் ஜம்பமும் நிறைந்தது திருவல்லிக்கேணி; என்றாலும், அதனிடத்திலே எனக்கோர் அலாதி அபிமானம். ஏனென்றால், ஐம்பது வருஷங்களுக்கு முன், என் தகப்பனார் வழியைச் சேர்ந்த உறவினர் ஒருவர், கிராமத்தை விட்டு, திருவல்லிக்கேணியில்தான் வந்து குடியேறினார். பின்னால் வேறு சிலரும் அவரைப் பின்பற்றி வந்து, அங்கங்கே இடம் பிடித்துக் கொண்டார்கள். என்றாலும், அவர்கள் சம்பாதித்த பூஸ்திதிகளையும் பணங்காசுகளையும் சேமித்து, ஸ்தாபிதம் செய்து கொள்ளவில்லை; செய்திருந்தார்களானால், பல்லவராஜ பரம்பரையைவிட, அவர்கள் வம்சம் நீடித்திருந்திருக்கும். பணங்காசு சேர்ப்பதிலேதான் மட்டம்; பூர்ணாயுளாவது உண்டா? முப்பது வயதுக்குள்ளே, அத்தனை பேரும் மாண்டு விட்டார்கள். ஆனால், நான் மட்டும் அந்தக் குடும்ப கண்டத்திலிருந்து, சொற்பக் காய்ச்சலோடு தப்பித்துக் கொண்டேன். அது டிங்கி ஜுரமுமல்ல; இன்புளுயன்ஸாவும் அல்ல — இரண்டும் சேர்ந்த ஒரு கதம்பம். என் வைத்திய நண்பர், 'பாரா-டைபாயிட்' என்று அதற்குப் பிடிவாதமாய்ப் பெயர் சூட்டினார். "என்னவோ மண்ணாங்கட்டி?" என்று நான் எரிச்சலோடு சொல்லிவிட்டு, காய்ச்சலுடன் போராடினேன். படுக்கையண்டை விட்டு அகலாமல், என் மனைவி பணிவிடை செய்தாள். நான் அந்தப் பூட்டுக்குப் பிழைத்தேன்.

அந்த ரகசியத்தை இனி மறைப்பானேன்; சொல்லி விடுகிறேன். நாகரிகம் முற்றிக் கலியாணம் என்ற சம்பிரதாயமே அடிபட்டுச் சீர்குலைந்து வரும் இந்தக் காலத்தில், கிரகஸ்தன் என்றால் ஆச்சரியமாய்த்தான் இருக்கும். என்றாலும், நான் ஓர் எளிய கிரகஸ்தன்தான். கிரகஸ்தனுக்கு இந்த நாட்டில் — ஏன், அநேகமாய் உலகம் பூராவிலும்

ஒரு கான்-கெஜட்ட்-ஆபீஸர் (அதாவது குமாஸ்தா) ஜாகை மாறும் திருக்கோலமே ஓர் ஆனந்தக் காட்சிதான். அதைக் கண்டு யாரும் சிரிக்கக்கூடாதென்றால் அதெப்படி முடியும்?

தான் — இருக்கும் இன்பங்களும் துன்பங்களும் எனக்கும் இருந்தன.

வீட்டைப் பற்றி அல்லவா சொல்ல வந்தேன். வர்ணனையாகவோ அலங்காரமாகவோ சொல்வதானல், அதை வங்கு, வளை, குச்சு என்றெல்லாம் சொல்லலாம். ஆனல், பிச்சைக்காரனுக்கு இச்சைபோல் கிடைக்குமா? அதேபோல்தான், ஓர் என். ஜி. ஓ. (நான் கெஜடட்-ஆபீஸர்) ஆகிய என் நிலைமையும். கெட்ட கழுதைக்குப் பட்டுக் குஞ்சலமா என்று கேட்காதீர்கள். ஒரு குமாஸ்தா, தன்னை ஒரு நான் - கெஜடட் - ஆபீஸர் என்று திவ்யமாய்ச் சொல்லிக் கொள்ள உரிமை உண்டு. அதாவது, விள்ளாமல் விரியாமல் மாதம் முப்பது ரூபாய் தாராளமான சம்பளத்தில் ஆரம்பித்து, இருபது வருஷத்துக்குப் பிறகு ஐம்பத்தைந்து ரூபாய்ச் சிகரத்தை எட்டிப் பிடிக்கும் உத்தியோகம். ஹைஸ்கூல் பையன்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் கிராப் (graph) கணக்கில், இது ஓர் அழகான அப்பியாசமாக இருக்கலாம். ஆனல், இங்கே காலம் போகிற போக்கில், காலத்துக்கும் சம்பளத்துக்கும் கிராப் போட்டால், காலம் திணறிப் போகும். நமது அரசாங்கத்தின் பொருளாதார நிபுணர் எவரோ தான், இந்த அற்புதமான சம்பளத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். கடுமையான ரேஷ



னிங் (பங்கீடு) முறையை, யுத்த காலத்தில்தான் அனுஷ்டிக்கிறார்கள். யுத்தமில்லாத சாதாரண காலத்திலேயே, குமாஸ்தாக்களின் விஷயத்தில் அந்த நிபுணர் இதைச் செய்து காண்பித்து விட்டார். அந்த மகானுபாவரின் ஏற்பாட்டினுல்தானே, இரண்டே அறைகளுள்ள ஜாகையில் பனிரண்டு ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு இன்னும் நான் வசித்து வருகிறேன். வருங்காலத்திலாவது எனக்கு ஏதேனும் விமோசனம் உண்டா? எப்போதுமே நிரந்தரமாய் இந்த அல்பச் சம்பளத்திலேதான் வாழ வேண்டும். அப்படி வாழ்பவனுக்கு, நல்லது கெட்டதே தெரியாமல் அறிவு மழுங்கித்தான் போகும்; வாழ்க்கையே சலிப்புத்தான் தட்டும். அதை, பெரிய வேதாந்தம் போல் வேஷம் வேண்டுமானுல் போடலாம். விஷயம் இதுதான்: சதா சர்க்காரைச் சபிப்பது என் தொழிலாய்ப் போய்விட்டது. ரகஸ்யமாய்த் தான் அப்படிச் ச்பிப்பேன். இல்லையானுல், இந்தப் படியளக்கிறார்களே, இதற்கும் அல்லவா ஆபத்து வந்துவிடும்!

உத்தியோகம் என்ற நாடக மேடையில் கூட அவ்வளவு இல்லை; குடும்பம் என்ற அந்த ரங்க அறைக்குள்தான், ஒரு குமாஸ்தா வாழ்க்கையின் காட்சிகள் மகா உருக்கமாயிருக்கும்.

சம்பந்தமில்லாமல் மனசுபோன போக்கில் என்னென்னவோ சொல்லி விட்டேன்? ஆமாம்; அதிலும் ஓர் இன்பம் இருக்கத்தான் இருக்கிறது. தனிப்பட்ட முறையில் பேசும்போது தானே, இந்த இன்பத்தை நான் அனுபவிக்க முடியும்? கச்சேரிக் காகிதக் கட்டுகளிலே இப்படிக் கனவிலாவது நான் எழுத முடியுமா?

என் மனைவி அவ்வளவு கெட்டிக்காரியல்ல. கெட்டிக்காரத்தனம் அதிகமாய் இருப்பவளிடம், பெண்மையின் கவர்ச்சி போய் விடுகிறது. கெட்டிக்காரப் பெண், தான் செய்வதே சரியென்று எப்போதும் சாதிப்பாள்; பெண் இல்லாவிட்டால் புருஷன் வாழவே முடியாது என்பது போல் நடப்பாள். இந்தத் துர்க்குணத்தை நம்மால் சகிக்க முடியாது. ஆனுல், என் மைதிலியை அசடு என்றும் சொல்லிவிட முடியாது. ஏதோ கொஞ்சம் கெட்டிக்காரத்தனம் அவளுக்கு இருக்கத்தான் இருந்தது. தலைச்சன் பிறந்த பிறகுதான், அது போய் விட்டது. 'சிறிசுகளை அவர்களின் இஷ்டம்போல் விட்டுவிட வேண்டும்' என்ற கொள்கை கொண்டவர்கள் என் பெற்றோர். ஆகையால், என் விருப்பப்படி குடித்தனம் நடத்த, எனக்கு அவர்கள் அனுமதி கொடுத்துவிட்டார்கள். என் வேட்டகத்திலிருந்தும், எந்த வித உபத்திரவமுமில்லை. என் மனைவியின் தாயார் மாத்திரம் உயிரோ டிருந்தாள். பூகம்பம் ஏற்பட்டால் கூட, அந்தக் கிழவி, கிராமத்திலேயிருந்த தங்கள் பிதிரார்ஜித வீட்டைவிட்டு நகரமாட்டாள். கிழவிக்கு மூன்று பசுமாடும் ஒன்பது ஏக்கரா நிலமும் இருந்தது. எனவே, கூட்டுக் குடும்பம் என்ற பன்றித் தொழுவத்தில் நாங்கள் உழலவில்லை. ஆனுல், என் உறவினர்களோ அல்லது மனைவியின் தூரபந்துக்களோ யாராவது எப்போதேனும் வந்து, கொஞ்சம் புழுதி கிளப்பிவிட்டுப் போக வேண்டும் என்று சில சமயம் நான் ஆசைப்படுவதுண்டு.

நான் வீடு திரும்பியவுடனே, மைதிலி, "வீடு எப்படி இருக்கு? வெள்ளை அடிச்சிருக்கா? குழா

யிலே தண்ணி வரதா?'' என்று மூச்சு விடாமல் பல கேள்விகள் கேட்டாள்.

"எல்லாம் இருக்கவேண்டிய படி இருக்கு'' என்று மைய மாகப் பதிலளித்துவிட்டு, "வீட்டுக்காரன், நல்லவனுய்த் தோண றுன். நாம்ப ஜாகை போரத்துக்கு முன்னலே, எல்லா ரிப்பேரும் செய்துடறதாச் சொல்றுன்'' என்று முடித்தேன்.

"இடம் விஸ்தாரமா இருக்கோல்லியோ?''

"ஆஹா! நிறைய இருக்கு'' என்று அவளுக்குச் சொன்னேன், ஆனல், நாலு கைக் குட்டைகளை விரித்தால் என்ன விஸ்தீர்ணம் இருக்கும் என்று தான், மனதுக்குள்ளே கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன்.

பஞ்சாங்கத்தைப் பார்த்து, புது வீட்டுக்குக் குடிபோக, நல்ல நாளாய் ஒன்று கண்டுபிடித்தோம்.

குடிபோவதற்கு வேண்டிய திட்டமெல்லாம்போட்டாயிற்று. ஒரு கை வண்டி இரண்டு நடை போய் வரவேண்டியது. முதல் நடையில் என் புஸ்தகங்களும் மரச் சாமான்களும் உடுப்புப் பெட்டிகளும் பின் தொடர, என் மனைவியும் குழந்தையும் முன்னல் ஒரு ரிக்ஷாவில் ஊர்வலம். புது வீட்டுக்குப் போய், சமையல் செய்வதற்குமுன், சுபமாக என் மனைவி பால் காய்ச்சவேண்டும். அந்தச் சமயத்தில், இரண்டாவது நடையில், எங்கள் சொத்தில் மிச்சம் மீதியுள்ள சகல சாமான்களையும் ஒரு துளியும் விடாமல் எடுத்துக் கொண்டு, நான் கிளம்ப வேண்டியது.

அவ்விதமே, இரண்டாவது நடையில் கைவண்டியுடன் நான் கடைசியாக வந்து கொண்டிருக்கிறேன். வீடு மாற்றும் பரபரப்பிலும் அவசரத்திலும், வண்டியில் எந்தச் சாமானை எப்படிப் போட்டு நிரப்பினேன் என்றே எனக்கு ஞாபகமில்லை. ஆனல், நடு வழியிலே அதைத் தெரிந்து கொள்ள நேரிட்டது.

காலை எட்டுமணி இருக்கும். தெருவெல்லாம் தேனீக்களைப் போல் ஜனங்களின் நடமாட்டம் மிகுந்திருந்தது. கால் நடை வேகத்தில், கைவண்டி நகர்ந்து கொண்டிருந்தது. நான் அதற்குப் பின்னே நடந்து கொண்டிருக்கிறேன். திடீரென்று, யாரோ பக பக என்று சிரிக்கும் ஒலி கேட்டது. ஒரு வீட்டு வாசல் நிலைப்படி யண்டையில் என் கை வண்டியைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்த ஒரு மனிதன்தான், அப்படிச் சிரித்தான் என்று கண்டேன். அவன் பக்கத்தில் ஒரு ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். முப்பத்திரண்டு பல்லும் தெரியும்படி அவளும் சிரித்துக் கொண்டிருந்தாள். அவன் சொல்லிய எதையோ கேட்டுத் தான் அவள் சிரிக்கிருள் என்று தோன்றியது. வண்டியில் அலங்கோலமாய்க் குவித்திருந்த சாமான்களை, அவன் தன் கையை நீட்டி அவளுக்குச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தான். மீண்டும் அவன் உரக்கச் சிரித்தான். அல்பப் பயல்! உடனே எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. முதலில் கோபத்தால் என் முகம் சிவந்தது; பிறகு வெட்கத்தால் வெளுத்தது.

குவித்திருந்த சாமான்களைப் பார்த்தேன். அவைகளின் நடுவே புகைபிடித்த மண்அடுப்பு, சாக்கடைவாய் மாதிரி வாயைப் பிளந்துகொண் டிருந்தது. அதிலிருந்து இரண்டு துடைப்பங்கள்

துருத்திக்கொண்டு வெளியே நீட்டியிருந்தன. அதன் பக்கத்திலே, கட்டவிழ்ந்த ஒரு விறகுக் கட்டு, கொடிக் கம்பியில் மாட்டிக் கொண்டிருந்தது. ஒட்டடையடிக்கும் குச்சியொன்று, தலைவிரிகோலமாய்க் கிடந்தது. பார்ப்போர் அருவருக்கும்படி, கரி டின் நசுங்கியிருந்தது. தகர டப்பாக்கள் நிறைந்த ஒரு கந்தல் சாக்கு, ஒட்டுகள் போட்டு, தலை போன முண்டம் மாதிரி ஆடிக்கொண்டிருந்தது. வாளிகள் ஒன்றோடொன்று மோதி லொடலொட என்று சப்தமிட்டுக் கொண்டிருந்தன. பிரப்பம் தொட்டில், குப்பைக் கூடைபோல் ஒரு பக்கத்தில் முடங்கியிருந்தது. ஓரங்கள் நைந்துபிய்ந்த பாய்களின் சுருள் ஒருபுறம். இவையெல்லாம் போதாதென்று, அழுக்குப் புடவை மூட்டைகள் வேறே! சீ! என்ன ஆபாசம்! அதுவும் பட்டப் பகல் வெளிச்சத்தில், அவைகளின் ஆபாசம் பல மடங்கு அதிகரித்துக் காட்டியது. அவை எவ்வளவு அருவருப்பாயிருந்தன! இவைகளைப் பார்த்துத்தான், அந்த அல்பன்கூட எளனம் செய்யும்படியாகிவிட்டது. என் குடும்ப வாழ்வின் அந்தரங்கமே அல்லவா அங்கே அம்பலமாகிவிட்டது! இது என் கிரகஸ்தாசிரம கௌரவத்துக்கே, ஹானி! அவமானம்!

என் முகம் கோபத்தால் சிவந்தது; வெட்கத்தால் வெளுத்தது. இப்படிக் கோபமும் வெட்கமும் முகத்திலே போராடிக் கொண்டிருக்க, வண்டியை வண்டிக்காரன் இழுத்து வருகிறபோது வரட்டுமென்று பின்னால் விட்டுவிட்டு, நான் வேகமாய் முன்னே போனேன்.

பாதி திறந்திருந்த கதவைக் கடந்து உள்ளே பாய்ந்தேன். அடுப்பிலே கொதித்துக்கொண்டிருக்கும் பாலைக் கிளறிவிட்டுக் கொண்டு குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள் மனைவி.

“மூடம், அசடு, வடிக்கட்டின மூடம்!” என்று, என் மானம் போய்விட்டதற்குக் காரணமான அவளைப் பார்த்து இரைந்தேன்.

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

“சமத்தே! உன் புத்தியைக் காட்டிலும் கழுதைக்குக்கூட...” என்று நான் கர்ஜித்தேன்.

முதலில் அவள் கண்களில் பெருத்த ஆச்சரியம் தோன்றியது; பின்பு ஒரு திகில். இன்னும் ஒரு நிமிஷம் அப்படியே சென்றிருந்தால், அவள் அசந்து கீழே விழுந்திருப்பாள்.

என்ன மூர்க்கத்தனமாய் நடந்து விட்டோம் என்று, அப்போதுதான் என் மனதை உறுத்தியது. அகாரணமாய்க் கோபித்துக்கொண்டு விட்டேனே! அவளைப் பிடித்து இழுத்து அணைத்துக் கொண்டு, வெட்கத்தோடு அவள் கண்களை நோக்கினேன். என் மனது இளகிய குறிப்பை, அந்த என் பார்வையிலே அவள் கண்டு கொண்டாள். என் முகத்தையே விழுங்கி விடுவதுபோல் ஆவலோடு பார்த்து, ஒரு புன்முறுவல் பூத்தாள்; அவளுக்கே உரிய அந்த மோகனப் புன்முறுவல், என்னை அடிமைகொண்டு விட்டது. நான் புனர்ஜன்மம் எடுத்தேன்.

பால் தீய்ந்துபோன வாசனை வந்தது. அதை மோப்பம் பிடித்த ஒரு பூனை ஆவலோடு நாற்புறமும் முகர்ந்துகொண்டும் தன் மீசையை நக்கிக்கொண்டும், உள்ளே தோன்றியது.

"அடடா! கவனமில்லாதே போச்சே! பால் பொங்கி வழிஞ்சுடுத்தே!" என்று சொல்லி, என் அணைப்பிலிருந்தும் மனைவி விலக முயன்றாள்.

"பொங்கினால் பொங்கட்டும். அதுதான் நல்ல சகுனம்" என்று சொல்லி, அவளை இறுகப் பிடித்துக் கொண்டேன்.

சற்று நேரத்துக்கு முன்னே ஒரே அலங்கோலமாய் எனக்குத் தோன்றிய சமயலறை, இப்போது ஏதோ ஓர் ஆனந்த மாளிகைபோல் காட்சியளித்தது. அடுப்பு ஒரு கனவைப்போல் தள தள என்று ஜொலித்தது; அதிலிருந்து நீல ஜ்வாலை கொழுந்து விட்டு நின்றது.

குழந்தை, ஏதோ ஆனந்தம் தாங்காமல் கூச்சலிட்டுக் கொண்டு, தன் குழிந்த கைகளைப் பரப்பிய வண்ணம், பக்கத்திலிருந்த பாயிலே விழுந்து உருண்டது. நாங்கள் இருவரும் அதைப் பார்த்தோம்; உடனே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

கைவண்டி, சரசர என்று சத்தமிட்டுக்கொண்டு வாசலிலே வந்து நின்றது. வண்டிக்காரன் கூப்பிட்டான்.

நாங்கள் பிரிந்து விலகி நின்றோம்.

வீடு மாற்றின தினத்தன்று, நான் ஏன் அப்படி வெறிபிடித்ததுபோல் சீறினேன் என்று, பின்னால் மைதிலி என்னை ஒரு போதும் கேட்கவேயில்லை. நல்லவேளையாக, அவள் கெட்டிக்காரியல்ல. அவளுடைய உள்ளன்பே எனக்கு அளவில்லாச் செல்வமாகும்.

*

## மாஜி கணவர்கள் சங்கம்

இந்தியாவுக்கு வந்த அமெரிக்க சிப்பாய்கள், 'மாஜி கணவர்கள் சங்கம்' ஒன்று ஏற்படுத்தினார்கள். அது இப்பொழுது உலகமுழுவதும் பரவிவிடுவது போல் வளர்ந்து வருகிறது. சொந்த மனைவி மற்றொருவனைக் கல்யாணம் செய்து கொண்டதால் மாஜி கணவராகி விட்டவர்களே இந்தச் சங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள். அமெரிக்கத் துருப்புகள் போகும் இடங்களிலெல்லாம் இந்தச் சங்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்வதற்கு, பின் கண்ட நாலு யோக்கியதாம்சங்களில் ஏதாவது ஒன்று போதும்: (1) தன் மனைவி மற்றொருவனைக் கல்யாணம் செய்து கொண்டிருக்க வேண்டும்; (2) அவள் மற்றொருவனுடன் தொடர்பு வைத்திருக்கவேண்டும்; (3) அவள் கடிதம் எழுதும்போது, 'அன்பு மிக்க காதலா' என்று குறிப்பிடாமல் வெறுந் தேதியை மட்டும் எழுதியிருக்க வேண்டும்; (4) அவள் மற்றவர்களோடு சேர்ந்து போவதாக, சொந்தக்காரர்களிடமிருந்து தகவல் வந்திருக்கவேண்டும்.

இந்தச் சங்கத்தில் புதிதாகச் சேர்ந்த ஓர் அங்கத்தினர், தமது யோக்கியதாம்சத்துக்கு அறிகுறியாக, தம்முடைய மனைவி எழுதிய ஓர் ஆறு பக்கக் கடிதத்தைச் சங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறார். அந்தக் கடிதத்தின் கடைசியில் மனைவி பின்வருமாறு எழுதியிருக்கிறாள்: "நான் மறு கல்யாணம் செய்துகொண்டு ஒரு வாரமாகிறது. ஆனால், அவ்வப்போது நீங்கள் எனக்குக் கடிதம் எழுதலாம். அதைப்பற்றி என் கணவர் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டார். அவர் மாலுமி. அவர் மனது ரொம்பத் தாராளமானது."

# சூரியகுடும்பம்

வெ. ராமஸ்வாமி

'எங்கள் குடும்பம் பெரிசு' என்று யாரோ ஒரு பெண் முன்னே ஒரு பாட்டுப் பாடுவதுண்டு. அது அல்ப மானிடக் குடும்பத்தைப்பற்றி. இந்தச் சூரிய குடும்பமோ ஓர் அற்புதக் குடும்பமாகும். மனித கற்பனைக் கெட்டா அளவு பெரியதுமாகும். அதைப் பற்றி நாம் கொஞ்சம் அறிந்து கொள்ள வேண்டாமா?

உலகத்தில் எத்தனையோ குடும்பங்கள் தோன்றின. சாசுவதமாக நிற்கப் போவதாகப் பெருமை யடித்துக் கொண்ட ராஜாக்கள், சக்கரவர்த்திகள் குடும்பங்கள் எண்ணில் அடங்கா. இவை யாவும் மறைந்து மண்ணோடு மண்ணாயின. இவற்றின் வாழ்வெல்லாம் சில நூறு வருஷங்கள்தான். இவை ஒரு காலத்தில் இருந்தன என்பதையே இப்போது நாம் மறந்து விட்டோம். ஆனால், ஒரு குடும்பம் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்கிறது. இது தோன்றி சுமார் 200 கோடி வருஷங்களாகின்றன. இது இன்னும் எத்தனையோ கோடி வருஷங்களுக்கு இருக்கப் போகிறது. இதென்ன பெரிய புதிராக இருக்கிறது! இந்த மாதிரி ஒரு குடும்பம் இருப்பதாகப் பத்திரிகைகளில் கூடப் படித்ததில்லையே என்று உங்களுக்குத் தோன்றுகிறது. ஆமாம், பூலோகப் பத்திரிகைகளில் இந்தக் குடும்பத்தைப்பற்றிப் படித்திருக்க முடியாதுதான். பரந்து விரிந்து கிடக்கும் வானவெளியாகிய பத்திரிகையைப் படித்துப் பார்த்தால், இதன் பெருமை ஒருவாறு தெரியும். இதற்குப் பெயர்தான் சூரிய குடும்பம்.

சூரியன் ஒரு காலத்தில் குடும்ப பாரம் எதுவும் இன்றித் தனியாகவே வாழ்ந்து வந்தான். இந்தச் சூரிய பிரமசாரி யாதொரு கவலையுமின்றி வானவெளியில் தன் மனம் போனபடி சுற்றிக்கொண்டிருந்த சமயத்தில், எக்கச்சக்கமாக ஒரு பெரிய நட்சத்திரத்திற்கு அருகில் அகப்பட்டுக் கொண்டான். அந்த ஆபத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட போதிலும், சூரியனுடைய ஒருபகுதி சிதறிச் சின்னபின்னப் பட்டு விட்டது. சிதறுண்ட இந்தப் பாகமே ஒன்பது கிரகங்களாகவும், அவைகளை விடச் சிறிய வஸ்துக்களாகவும் உருக் கொண்டு சூரியனை அல்லும் பகலும் சுற்றி வருகின்றன.

சூரியனை நடுவில் வைத்து, சர்க்கஸ் குதிரைகளைப் போலச் சுற்றிவரும் இந்தக் கிரகங்களின் வேகம் சொல்லி முடியாது. இந்த ஓட்டப் பந்தயத்தில் மத்திய பாகத்திலுள்ள கிரகங்களுக்குத்தான் முதல் பரிசு வழங்க வேண்டும். மேலே செல்லச் செல்ல வேகம் குறைகிறது. கடைசியிலுள்ள கிரகங்கள் விநாடிக்குச் சுமார் மூன்று மைல்தான் செல்லுகின்றன. அதாவது பங்களூர் எக்ஸ்பிரஸின் வேகத்தைப் போல 200 மடங்கு. 'அடேயப்பா, இவ்வளவு வேகமா!' என்று பூலோகவாசிகளாகிய நமக்குத் தோன்றும். ஆனால் வான சாஸ்திர அளவில் வைத்துப் பார்க்கும் போது, இது கேவலம் நத்தை ஊர்ந்து போகிற வேகம்தான்.

சென்னையில் சமீபத்தில் கண்காட்சி நடந்ததல்லவா? அந்தப் பெரிய மைதானத்தை எடுத்துக் கொள்ளுவோம். அதன் நடு

வில் ஒரு கடலையை வைப்போம். அதற்குக் கொஞ்சதூரத்தில் ஒரு மணலை வைப்போம். இன்னும் கொஞ்ச தூரத்திற்கு அப்பால் இன்னொரு மணலை வைப்போம். அதற்குக் கொஞ்சதூரம் அப்பால் ஒரு கீரை விதையை வைப்போம். இப்படியாக இடையே இடம் விட்டு கீரை விதைகளும் மணலுமாக ஒன்பது உருப்படிகளை வைத்தோமென்றால், சூரிய மண்டலமும், சூரியனும், நவக்கிரகங்களும் எப்படி அமைந்திருக்கின்றன என்பது ஒருவாறு புலனாகும். ஒன்பதாவது கிரகமாகிய புளூட்டோவின் வட்டத்திற்குத்தான் சூரிய மண்டலம் போதுமானதாயிருக்கிறது. ஒரு கிரகத்துக்கு ஒரு கிரகம் அவ்வளவு இடம் விட்டு இருக்கிறது. நாம் மேலே சொன்ன மைதானத்தில் கீரை விதைகளும் மணல்களும் இருப்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகத்தானே இருக்கும். அதே காரணத்தினல்தான் வானத்தில் இந்தக் கிரகங்களைக் கண்டு பிடிப்பதும் கஷ்டமாக இருக்கிறது.

நமது மைதானத்தில் ஒரு கடலையும், ஒன்பது கீரை விதைகளும் மணலும் எவ்வளவு இடத்தை அடைக்குமோ, அவ்வளவு இடத்தைத்தான் சூரிய மண்டலத்தில் சூரியனும் நவக்கிரகங்களும் அடைக்கின்றன. அப்படியென்றால், சூரியமண்டலம் வெறும் வெட்ட வெளிதானே என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனல் வானவெளியில் சூரியமண்டலம் தான் ரொம்ப நெருக்கமான பகுதி. சூரிய மண்டலத்துக்கு ரொம்பச் சமீபத்திலுள்ள நட்சத்திரம் எவ்வளவு தூரம் இருக்குமென்று பார்ப்போம். நமது மைதானத்தைத் திரும்பவும் சூரிய மண்டலமாக வைத்தால், ரொம்பச் சமீபத்திலுள்ள நட்சத்திரம் செங்கற்பட்டிலிருக்கும். இதிலிருந்து சூரிய மண்டலம் வானவெளியில் எவ்வளவு தன்னந் தனியாக நிற்கிறது என்பது ஒருவாறு புலனாகும்.

சூரியனுக்கு ரொம்பச் சமீபத்திலுள்ள கிரகம் புதன். ஆகாயத்தில் சூரியனுடனேயே இதை எப்போதும் பார்க்கிறோம். சூரியனுக்கு இவ்வளவு சமீபத்திலிருப்பதால், இந்தக் கிரகம் சூரியனுடைய உயிர் நண்பன் என்று கிரேக்கர் புராணக் கதைகளை ஜோடித்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மனிதனோடு நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதென்றால் இலேசா? அதனலேதான் இரவு நேரத்தில் வானில் புதனை நாம் பார்க்க முடிகிறதேயில்லை. சூரியனது அபாரமான பிரகாசத்தில் இந்தக் குட்டிக் கிரகம் ஒளி மங்கி மறைந்து போகிறது. இதைத் தூரதிருஷ்டிக் கண்ணுடியின் உதவி கொண்டுதான் பார்க்க முடியும். தூரதிருஷ்டிக் கண்ணுடி இல்லாதபோது, சூரியாஸ்தமன சமயத்தில் மேற்கு வானிலும் அருணோதயத்திற்குச் சற்று முன்பு கிழக்கு வானிலும் கொஞ்சம் கஷ்டத்தோடு இதைப் பார்க்கலாம். மேகங்கள் மூடியிருந்தால் பார்ப்பது அரிதாகிவிடும்.

புதன் சூரியனைச் சுற்றி வரும்போது, சிலசமயம் சூரியனுக்கும் நமக்கும் மத்தியிலும், சில சமயம் சூரியனுக்குப் பின்புறத்திலும் காணப்படுகிறது. சூரியனுக்கும் நமக்கும் மத்தியில் அது வரும்போது, சூரியனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பக்கத்தில் ஒளி வருவதால், நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கும் பக்கம் இருண்டு காணப்படுகிறது. ஆத

லால் அதன் முகத்தை நாம் சரியாகப் பார்க்க முடியாமல் போகிறது. வேறு நிலைகளில் அதைப் பார்க்கும்போது, அதன் ஒரு பகுதி சூரிய ஒளியில் நமக்குத் தெரிகிறது. சூரியனுக்கும் நமக்கும் மத்தியிலிருந்து அது விலகிச் செல்லச் செல்ல, சூரிய ஒளியில் நமக்குத் தெரியும் பகுதி அதிகமாகிக் கொண்டு வருகிறது. சரியாகச் சூரியனது பின்புறத்தில் அது இருக்கும்போது, பூரணச் சந்திரனைப்போல அது நமக்குக் காட்சியளிக்கிறது. வாஸ்தவத்தில், சந்திரனைப்போல இந்தக் கிரகத்திற்கும் தேய்வும் வளர்ச்சியும் உண்டு. சூரியனுக்கும் நமக்கும் மத்தியில் அது வரும்போது, நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கும் அதன் பாகம் இருண்டிருக்கிறதென்று சொன்னோம். இதிலிருந்து அதற்குச் சொந்தமான பிரகாசம் இல்லையென்று முடிவு கட்டலாம். இதைப் போலவே, மற்ற கிரகங்களுக்கும் சொந்தமான பிரகாசம் என்பது இல்லை. சூரியனது ஒளியைத்தான் இவைகள் யாவும் பிரதிபலிக்கின்றன.

இந்த கிரகத்தை விட்டுப் பூமியை நோக்கி வருவோமானால், இடையில் சுக்கிரனது உலகத்தைக் காண்போம். இது புதனை விட, சூரியனுக்கு இரண்டு மடங்கு தூரத்தில் இருக்கிறது. இருந்தாலும், சூரியனது பிரகாசம் இதையும் மறைத்து விடுகிறது. இது காரணமாகவே, இரவு வானில் இந்தக் கிரகத்தைப் பார்ப்பதும் அரிதாக இருக்கிறது. புதனைப் போலவே, இதையும் அந்தியிலும் அருணோதயத்திலுமே பார்க்க முடிகிறது. இந்தக் கிரகத்தைத்தான் நாம் வெள்ளி பூத்துவிட்டது என்கிறோம். "வெள்ளி முளைச்சுப் போச்சு, விடியக்காலம் ஆயிப் போச்சு" என்கிற நாட்டுப் பாடலும் இதை யொட்டி வந்ததே. சூரியனுக்கும் சந்திரனுக்கும் அடுத்ததாக வானில் ரொம்பப் பிரகாசமாகத் தோன்றுவது சுக்கிரன்தான்.

சந்திரனையும், புதனையும் போல, சுக்கிரனுக்கும் பல கலைகள் உண்டு. சூரியனுக்கும் நமக்கும் மத்தியில் வரும்போது, மூன்றாம் பிறைச் சந்திரனைப்போல இது தோன்றுகிறது. இதன் எஞ்சிய பகுதி இருளில் இருப்பதால் நமக்குத் தெரிவதில்லை. இந்த நிலையில் இது ரொம்பப் பெரிதாகத் தோன்றுகிறது. இது சூரியனுக்கு நேர் பின்புறத்தில் இருக்கும்போது முன் தெரிந்ததை விட ஆறு மடங்குச் சிறிதாகத் தோற்றமளிக்கிறது; பிரகாசமும் ஆறில் ஒரு பங்காகிவிடுகிறது. இந்த நிலையில் இது பூரணச் சந்திரனைப் போலவே இருக்கிறது. இது ரொம்பப் பிரகாசமாய்த் தோன்றும் காலம், ஐந்தாம் பிறைச் சந்திரனது வடிவில் காணும்போதுதான். இதன் பிரகாசம் 'சிரியஸ்' நட்சத்திரத்தின் பிரகாசத்தைப்போல 12 மடங்கு அதிகமாக இருக்கிறது. சூரியனுக்குப் பக்கத்தில் மட்டும் இது இல்லாமலிருந்தால், இதன் ஒளி நமது கண்ணைக் கூசவைத்து விடும். இதன் பிரகாசத்தைச் சூரியனது பிரகாசம்கூட முற்றிலும் மறைக்க முடியவில்லை. இது காரணமாகவே, பகல்வேளையிலும் சூரியனுக்குப் பக்கத்தில் இதை அடிக்கடி பார்க்க முடிகிறது.

சுக்கிரனது உலகத்தையும் தாண்டி மேலே செல்லுவோமானால், பூமி வருகிறது. புதனையும் சுக்கிரனையும் விடப் பூமி பெரியது என்றாலும், சுக்கிரனை

விட ரொம்பப் பெரியது என்று சொல்ல முடியாது. சூரியனை விட்டு விலகிச் செல்லச் செல்ல, கிரகங்களும் பெரிதாகிக் கொண்டு போகின்றன. புதனை விடச் சுக்கிரன் பெரிது; சுக்கிரனை விடப் பூமி பெரிது.

சந்திர உலகத்தில் ஆகர்ஷண சக்தி குறைவாயிருப்பதால் சூழ்நிலை என்கிற காரியம் எப்படி இல்லர்து போய்விட்டதோ, அதே போல புதனுடைய உலகத்திலும் சூழ்நிலை என்பது இல்லை. ஆனால் சுக்கிரனும் பூமியும் இந்தக் கஷ்டத்திற்கு உள்ளாகவில்லை. இவையிரண்டும் உருவத்தில் அநேகமாக ஒத்திருக்கின்றன. இவற்றின் வாழ்க்கைச் சரித்திரமும் பெரும்பாலும் ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆதலால் இவை இரண்டின் சூழ்நிலையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும்? உண்மை அப்படியல்ல. இவையிரண்டின் சூழ்நிலைகளும் ஒன்றுக்கொன்று பெரிதும் மாறுபடுகின்றன. பூமியின் சூழ்நிலையில் அபரிமிதமாகக் காணப்படும் பிராணவாயு, சுக்கிரனது சூழ்நிலையில் காணப்படவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், பூமியில் ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு புல்லும் பிராணவாயுவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இருக்கின்றன. பூமியின் தாவர வர்க்கம் பிராணவாயுவை உற்பத்தி செய்து கொண்டேயிருக்கிறது. சுக்கிரனது உலகில் பிராணவாயுவைக் காண முடியாதபடியால், அங்கே தாவர வர்க்கம் இல்லை. அநேகமாக உயிர்த் தத்துவமே இல்லையென்று முடிவு கட்டலாம்.

பூமிக்கும் அப்பால் ஆறு கிரகங்கள் இருக்கின்றன. இவை சூரியனைச் சுற்றுவதோடு நம்மையும் பிரதட்சணமாக வருகின்றன. சூரியனுக்கு வெகு தூரத்தில் இருப்பதால், இவைகளை இரவில் வானில் ஓரளவு பார்க்க முடிகிறது. இவைகளில் செவ்வாயும் வியாழனும் மிகுந்த பிரகாசத்தோடு விளங்குகின்றன. சுக்கிரனது பிரகாசத்தில் பத்தில் ஒரு பங்குதான் இருக்கிறது. என்றாலும், சுக்கிரன் வெயிலில் வைத்த விளக்கைப் போல ஒளியிழந்த நிலையில் இருக்கிறது. செவ்வாயும் வியாழனுமோ வென்றால், இரவில் எரியும் மெழுகுவர்த்திக்கு ஒப்பாயிருக்கின்றன; சுக்கிரனைப் போல, சூரியனுடைய பிரகாசத்தோடு போட்டி போட வேண்டிய நிர்ப்பந்தம் இவைகளுக்கு இல்லை. எஞ்சிய நான்கு கிரகங்களும் மிகமிக மங்கலான பிரகாசமுடையவை. இவற்றில் மிகப் பிரகாசம் பொருந்திய சனி சாமானிய நட்சத்திரத்தைப் போலத்தான் பிரகாசிக்கிறது. யுரேனஸ் என்ற கிரகத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின்றி ஓரளவு கஷ்டத்தோடு கண்டு பிடிக்கலாம். ஆனால், நெப்சூன், புளூடோ என்கிற கிரகங்களை, தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம்தான் காண முடியும். அதிலும், புளூடோவைப் பார்க்க, மிகுந்த சக்தி வாய்ந்த தூரக் கண்ணாடி வேண்டும்.

சூரியனிலிருந்து விலகிச் செல்லச் செல்ல, கிரகங்களும் பெரிதாகிக் கொண்டு போகின்றன என்ற நியதிக்கு, செவ்வாய் விதிவிலக்காக இருக்கிறது. இது பூமியில் பாதிதான் இருக்கிறது. ஆனால், இதற்கு அடுத்த கிரகமாகிய வியாழன் இதற்கும் சேர்த்துப் பெரிதாக இருக்கிறது. பூமியின் குறுக்களவைப் போல வியாழனது குறுக்களவு பதி

ஜெரு மடங்கு அதிகம்; கனம் 317 மடங்கு அதிகம். மற்ற எட்டுக் கிரகங்களை ஒரு தட்டிலும் வியாழனை ஒரு தட்டிலும் வைத்தால், வியாழனிருக்கும் தட்டு, தாழுவதைக் காணலாம். வியாழன் இவைகளைப் போல இரண்டு மடங்கு கனமாக இருக்கிறது. சூரியனி லிருந்து வெளியான வஸ்து மத்தியபாகம் பெருத்தும், நுனிப்பக்கங்கள் சிறுத்தும் இருக்கிறது என்று முன்பு சொன்னேம். அதன் சரியான மத்திய பாகம்தான் வியாழன். வியாழனுக்கு அப்பாலுள்ள கிரகங்கள் உருவத்திலும் கனத்திலும் குறைந்து கொண்டு செல்கின்றன. வியாழனுக்கு அடுத்தது சனி. இது வியாழனது கனத்தில் மூன்றில் ஒரு பங்குதான். மற்ற மூன்று கிரகங்களும் சனியைவிட மிகச் சிறியவை. கடைசியிலுள்ள புளூட்டோ புதனைவிடக் கூடச் சிறியது,

பூமியின் சீதோஷ்ண நிலையைப் பற்றி நமக்குத்தெரியும்.மற்றக் கிரகங்களில் சீதோஷ்ண நிலை எப்படி யிருக்கிறதென்பதை இங்கே பார்க்கலாம். எல்லா கிரகங்களும் சூரியனிடமிருந்து எவ்வளவு உஷ்ணத்தைப் பெறுகின்றனவோ, அவ்வளவு உஷ்ணத்தையே அவைகள் வெளிவிடுகின்றன என்று வான சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதிலிருந்து அவைகளுக்குச் சொந்தமான உஷ்ணம் ஒரு சிறிதுமில்லை என்று ஆகிறது. பிரகாசத்தைப் பொறுத்தவரையிலும் இதே முடிவுக்குத்தான் நாம் வந்தோம். சூரியனது பிரகாசத்தையும் உஷ்ணத்தையும் வாங்கி வெளியிடுகிற அளவுதான் இவைகள் பிரகாசமாயும், உஷ்ணமாயும் இருக்கின்றன. "எங்காத்துக்காரருக்கும் அரண்மனையிலே சேவகம்" என்று சொல்லுவது போல, கடன் வாங்கிய இந்த ஒளியையும், உஷ்ணத்தையும் வைத்துக் கொண்டு, 'எங்களுக்கும் உஷ்ணம் இருக்கிறது, பிரகாசம் இருக்கிறது' என்று இவைகள் பெருமையடித்துக் கொள்ளலாமல்லவா? என்றாலும், இவைகள் தோன்றிய காலத்தில், அபார உஷ்ணமுள்ள ஒளிப் பிழம்புகளாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால், இடைக் காலத்தில் — 200 கோடி வருஷங்களில் — தங்கள் சேமதனமாகிய உஷ்ணத்தையும் ஒளியையும் வீணில் செலவு செய்துவிட்டு, இப்போது சூரியனை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கின்றன. இது காரணமாக, சூரியனுக்கு வெகு தூரத்திலுள்ள கிரகங்கள் ரொம்பக் குளிர்ந்த நிலையில் இருக்கின்றன. கார்த்திகை மாதத்தில் சொக்கப்பனைக் கொளுத்தி விட்டு அதைச் சுற்றிலும் நின்றுகொண்டு குளிர் காய்வது போல, ஒன்பது கிரகங்களும் சூரியனைச் சுற்றி இருந்து கொண்டு குளிர்காய்கின்றன.

இந்த ஒன்பது கிரகங்களில் பூமியைப்போல வசிக்கத்தகுந்த சீதோஷ்ண நிலையுள்ள வேறு கிரகம் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், இல்லையென்றே எண்ண வேண்டியிருக்கிறது. வெளி வட்டங்களிலுள்ள புளூடோ, நெப்ச்சூன், யுரேனஸ், சனி ஆகிய நான்கு கிரகங்களும் எண்ணமுடியாத அளவு குளிர்ந்த நிலையில் இருக்கின்றன. வியாழன் கூடச் சுமார் 270 டிகிரி குளிராயிருக்கிறது. இந்தக் குளிரில் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து விடுவதோடு, சாதாரண வாயுக்களெல்லாம் திரவ ரூபத்திற்கு வந்துவிடுகின்றன. ஆதலால் இந்தச் சூழ்நிலையில் வாயு என்பதே இருக்க முடியாது. ஆயினும் இதைச் செத்த

உலகம் என்று சொல்ல முடியாது. இதனுடைய சூழ்நிலையால் இயற்கையான சில சிருஷ்டிகள் ஏற்படுகின்றன. ஆனால் இந்தச் சிருஷ்டிகள் நீடித்து நிற்க முடியாமல், பூமியில் மழை மேகம் தோன்றி மறைவது போல மறைந்து விடுகின்றன. வியாழனது உலகில் சஞ்சரிக்கும் மேகங்கள் பெரும்பாலும் கரியமில வாயுவால் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை பூமியில் சஞ்சரிக்கும் மேகங்கள்போல் சிறிது குளிர்ந்த காற்றுப்பட்டதும் மழை பெய்துவிடக் கூடியவை அல்ல. இவைகளுக்கு மிக அதிகமான குளிர்வேண்டும்.

வியாழனிலிருந்து செவ்வாய்க்கு வந்தால் நிலைமை அவ்வளவு கடுமையாக இல்லை. ஆயினும், செவ்வாயின் மேல்பரப்பு தண்ணீர் பனிக்கட்டியாக மாறுகிற அளவு குளிர்ந்த நிலையில்தான் இருக்கிறது. சூரிய ஒளி செங்குத்தாக விழும் செவ்வாயின் மத்திய ரேகையில், டிசம்பர் மாதத்தில் உதகமண்டலம் எவ்வளவு சூடாக இருக்குமோ அவ்வளவு சூடாக இருக்கிறது. ஆயினும் இந்த அற்பமான உஷ்ணத்தையும் வாங்கி வைத்துக் கொள்ளுகிற சக்தி செவ்வாயின் சூழ்நிலைக்கு இல்லை. செவ்வாயிலிருந்து வரும் ஒளியைச் சோதித்துப் பார்த்தால், சந்திர உலகத்தைப் போல, செவ்வாயும் பெரும்பாலும் எரிமலையின் சாம்பலால் ஆக்கப்பட்டிருக்கிறதென்பதைக் காண்போம். எரிமலையின் சாம்பலுக்கு உஷ்ணத்தை வாங்கி வைத்துக் கொள்ளும் சக்தி இல்லையென்பது நமக்கு ஏற்கெனவே தெரியும். ஆகையால், மாலையானதும் அங்கே பனிக்கட்டிப் படலங்கள் உருவாக ஆரம்பிக்கின்றன. இரவில் அது வட துருவத்தைப் போலக் குளிர்ந்துவிடுகிறது.

பூமிதான் ஜீவ வர்க்கங்கள் வசிக்கத் தகுந்த சீதோஷ்ண நிலையைப் பெற்றிருக்கிறது. இதைப் படித்தவுடன், 'பஞ்ச்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த கேலிச் சித்திரத்தின் ஞாபகம் வரலாம்: பிராணிகளின் நடத்தையை ஆராயும் விஞ்ஞான நிபுணர்களின் மகாநாடு ஒன்று கூடியிருக்கிறது. அவர்கள் ஆராய்ச்சிக்குள்ள விஷயம் "பன்றிக்குத் தெரியுமா பவுன் மாலையின் அருமை?" என்ற பழமொழியிலடங்கிய உண்மையாகும். பன்றி விஷயங்களைப் பற்றிப் பலமான சர்ச்சை நடக்கிறது. விஞ்ஞான முறையில் இந்த விஷயங்களையெல்லாம் சோதனைசெய்து பார்த்த பிறகு, ஒரு பன்றியின் முன்னர் பவுன் மாலையொன்றைத் தொங்கவிட்டு, அதன் மூக்கில் தெர்மாமீட்டரை வைத்துச் சோதித்துப் பார்க்கிறார்கள். இந்த அரிய சோதனையை நடத்திய பிறகு, பன்றி நகைகளைக் கண்டு ஆசைப்படுவதில்லை (இந்தக் காரியத்தைப் பெண்மணிகள் தான் செய்கிறார்கள்) என்று ஏகமனதாக முடிவு கட்டுகிறார்கள். பூமி வசிக்கத் தகுந்த இடமாயிருக்கிறதென்கிற ஆராய்ச்சியும் இந்த ஆராய்ச்சியைப் போலத்தான் இருக்கிறது என்று உங்களுக்குத் தோன்றலாம். இருந்தாலும், இந்த உண்மையைக் கண்டுபிடித்ததில் விஞ்ஞானிகளுக்கு ஒரு தனி ஆனந்தம் இருக்கத்தான் செய்கிறது.

பூமியைத் தாண்டிச் சுக்கிர உலகத்திற்குப் போனால், அங்கே சூடு தாங்க முடியாத நிலையில் இருக்கிறது. புதனைப் பற்றிக் கேட்கவேண்டாம்: அபாரமான சூடு. புதனுடைய உலகத்திற்கு

நாம் போனுல்—அந்தத் துர்ப்பாக்கியம் நேர வேண்டாம்—நன்ருகக் காய்ந்த இருப்புச் சட்டியில் நம்மைப் போட்டு வதக்கினுல் எவ்வளவு சுகமாக இருக்குமோ அவ்வளவு சுகமாக இருக்கும்.

எல்லாக் கிரகங்களையும் சுற்றி வந்த பிறகுதான், பூமாதேவியின் அருமை நமக்குத் தெரிகிறது. உயிர் என்கிற ஒரு காரியம் பூமியைத் தவிர வேறு கிரகங்களில் இருப்பது சாத்தியமில்லை என்கிற முடிவுக்குத்தான் இறுதியில் நாம் வரவேண்டியவர்களாயிருக்கிருேம். இந்த விஷயத்தில் பூமியோடு போட்டிபோடும் கிரகம் செவ்வாய் ஆகும். செவ்வாயுலகில் சில கோடுகள் தெரிகின்றன என்று பல வானசாஸ்திரிகள் சொல்லுகிருர்கள். இந்தக் கோடுகள் செயற்கையாக வெட்டிவிடப்பட்ட வாய்க்கால் என்றும் அவர்கள் நம்புகிருர்கள். ஆனல் செவ்வாய்க் கிரகத்தைப் படம் பிடித்துப் பார்த்ததில், மேலே சொன்ன கோடுகளை அதில் காண முடியவில்லை. போதிய அளவு வெளிச்சம் இல்லாத குறையால் இல்லாததும் இருப்பது போலத் தோன்றுகிறது நம் கண்களுக்கு. இதைப் போலவேதான் சில வருஷங்களுக்கு முன்னர் புதன், சுக்கிரன் ஆகிய இரண்டு கிரகங்களிலும் கோடுகளைக் கண்டதாக வான சாஸ்திரிகள் சொன்னுர்கள். சுக்கிரனது மேல்பரப்பு முழுதும் வெறும் மேகங்களாலாகியதென்றும், புதனுடைய உலகில் உயிர் இயங்க முடியாதென்றும் நமக்கு இப்போது நன்ருகத் தெரிகிறது. ஆதலால் வெறுங் கண்ணை நம்புவதை விடப் படம் பிடிக்கும் கருவியை நம்புவதுதான் நியாயமாகும்.

செவ்வாய் உயிர்கள் வாழத் தகுதியில்லாத இடம் என்ருலும், அங்கே சில கால மாறுதல்கள் ஏற்படவே செய்கின்றன. இதன் வட துருவத்தைச் சுற்றிலும் குளிர்காலத்தில் ஒரு பனிமலை உருவாகிறது. கோடைகாலத்தில் இந்தப் பனிமலை உருகுகிறது. இது உருகும்போது, தென் பக்கமுள்ள பிரதேசத்தில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. பனி உருகி நீராகப் பாய்வதால், செடி கொடிகள் உண்டாகின்றன. அதுதான் இந்த மாற்றங்களுக்குக் காரணம் என்று சில வான சாஸ்திரிகள் கூறுகிருர்கள். எரிமலையின் சாம்பலால் மூடப்பட்ட பாலைவனத்தில் மழைபெய்து நீர் பாய்வதால் ஏற்படுகிற மாற்றமே அது என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்பது நமக்குத் தெரியவில்லை. ஆயினும், செவ்வாய்க் கிரகத்திலோ, அல்லது வேறு கிரகங்களிலோ உயிர்கள் வாழுகின்றன என்று சொல்லுவதில் நாம் அதிக நம்பிக்கை வைக்க முடியாது. சூரிய குடும்பத்தில் பூமிதான் உயிர் வர்க்கத்திற்குப் பொருத்தமானதென்று நமக்குத் தோன்றுகிறது. சூரியனைப் போல இன்னும் எத்தனையோ நட்சத்திரங்களும் பெரிய குடும்பங்களைப் பெற்றிருக்கலாமல்லவா? அவைகளில் ஒருவேளை உயிர்கள் வாழ்ந்தாலும் வாழலாம்.

பரிவாரங்கள் புடைசூழ ராஜாக்கள் பவனி செல்வதுபோல, கிரகங்களும் பல சந்திரர்கள் புடைசூழப் பவனி செல்கின்றன. கிரகங்களில் எல்லாம் பெரியவையான வியாழனும் சனியும் தலைக்கு ஒன்பது சந்திரர்களைப் பெற்றிருக்கின்றன. உருவத்தில்

அவைகளுக்கு அடுத்திருக்கும் யுரேனசுக்கு நான்கு சந்திரர்கள். சில கிரகங்கள் இரண்டு சந்திரர்களோடு திருப்தியடைகின்றன. பூமிக்கு ஒரு சந்திரன் தான். சந்திரனே இல்லாத கிரகங்களும் இருக்கின்றன. எப்படிச் சூரியனிலிருந்து நவக்கிரகங்கள் தோன்றினவோ, அதே முறையில் நவக்கிரகங்களிலிருந்து சந்திரர்கள் தோன்றியிருக்கிறார்கள். எனவே, இந்தச் சந்திரர்கள் எல்லாம் சூரியனுக்குப் பேரப்பிள்ளைகள் ஆகவேண்டும்.

ஒன்பது சந்திரர்கள் போதாததுபோல, சனிக்கு மூன்று வளையங்கள் வேறு இருக்கின்றன. இவைகளுக்குச் சனி வளையங்கள் என்று பெயர். சனியின் சந்திரர்களில் ஒன்று ஒரு காலத்தில் அதன் வட்டத்திற்கு வெகு சமீபத்தில் வந்த காரணத்தால் சிதறிச் சின்னபின்னப் பட்டிருக்க வேண்டும். இப்படிச் சிதறிய துண்டுகள் சனி வட்டத்திலிருந்து வெளிப்பட முடியாத நிலையில் வளையமாக அதைச் சுற்றியமைந்திருக்க வேண்டும். சந்திரனாக இருந்து வளையமாக உருமாறிய கதையைத்தான் சனி வளையங்கள் நமக்குக் கூறுகின்றன.

ஒன்பது கிரகங்களைத் தவிர, சூரிய குடும்பத்தில் **வால் நட்சத்திரங்கள்** என்ற சிறிய வஸ்துக்களும் இருக்கின்றன. நவக்கிரகங்களைப்போல, இவைகளும் சூரியனைச் சுற்றி வந்தாலும், இவைகள் வளைந்து செல்லாமல் நேராகச் சென்று, சென்று திரும்பும் இயல்புடையன. ஒருசமயம் சூரியனுக்கு வெகு தூரத்தில் வான வெளியில் இவை மறைந்துவிடும்; இன்னொரு சமயம் சூரியனுக்கு வெகு சமீபத்தில் காணப்படும். சூரிய வெளிச்சம் நன்றாகப் படுகிற தூரத்தில் இருக்கும்போது தான் இவைகளை நம்மால் பார்க்க முடிகிறது. சூரியனுக்கும் வியாழன் போன்ற பெரிய கிரகங்களுக்கும் சமீபத்தில் செல்லும் போது இவைகள் சிதறித் துண்டு துண்டாகிவிடுகின்றன. இந்தத் துண்டுகள் கல் மழையாகப் பெய்கின்றன. இதைத்தான் உதிரும் நட்சத்திரம் என்கிறோம். இந்தக் கல் மழையின் மத்தியில் சில சமயம் பூமி செல்வதுண்டு. அப்போது சில கற்கள் பூமியின் சூழ்நிலையில் சிக்கிக் கொள்ளும். பூமியிலடிக்கும் காற்றின் உராய்வினால் இவைகள் அபாரமான சூடேறப் பெற்றவைகளாய், வானத்திலிருந்து நட்சத்திரங்கள் உதிர்வது போன்று உதிர்ந்து விழுகின்றன.

இப்படி விழும் கற்கள் பெரும்பாலும் ஒரு கடலை அளவுதான் இருக்கும். பொதுவாக, இவைகள் தரையில் விழுமுன்னரே காற்றோடு காற்றாகக் கலந்துவிடுகின்றன. அப்போது வானத்தில் ஒளி பாய்ந்து செல்வது போலத் தோன்றும் நமக்கு. சிலசமயம் காற்றோடு கலப்பதற்கு முன்பே வேகமாக வந்து இவைகள் தரையில் விழுவதும் உண்டு. இப்படி விழும்போதுதான் நாம் கல்மாரி பெய்கிறது என்று சொல்லுகிறோம். இப்போது வெடிகுண்டுகள் விழுவதுபோல், இந்தக் கற்கள் பூமியின் எந்தப் பகுதியிலும் விழலாம்.

இந்தக் கற்கள் எப்போதும் சிறிதாகவே இருக்கும் என்பதில்லை. அரிஜோனா என்ற இடத்தில் இன்றும் ஒரு பிரம்மாண்டமான குழி காணப்படுகிறது. எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு மலைபோன்ற

பெரிய கல் ஒன்று விழுந்ததனால் ஏற்பட்ட குழி இது என்று நம்பப்படுகிறது. சமீப காலத்தில் இவ்வளவு பெரிய கல் விழுந்து நாம் பார்த்ததில்லை. ஆயினும் 1908ஆம் வருஷம் சைபீரியாவில் மிகப் பெரிய கல் ஒன்று விழுந்தது. இது விழும்போது உண்டான காற்றின் வேகத்தினால் அந்த இடத்தைச் சுற்றிலும் அடர்ந்து வளர்ந்திருந்த காடு பல மைல் தூரத்திற்கு நாசமாயிற்று. இது நூறு சதுர மைல்வரை ஒரு மரத்தைக்கூட விட்டு வைக்கவில்லை. பண்டைக் காலத்தில் மலைகளுக் கெல்லாம் சிறகுகள் இருந்தன என்றும், அவை பறந்து சென்று திடீரென்று ஒரு நாட்டிலோ நகரத்திலோ இறங்கி அதை நாசம் செய்தன என்றும், இந்திரன் அவற்றின் சிறகுகளை அறுத்துத் தள்ளினான் என்றும் நமது புராணக் கதைகளில் படிக்கிறோம். நாம் மேலே சொன்ன கற்கள் விழுந்ததைப் பார்த்துத் தான், நம் முன்னோர்கள் இந்தக் கதையைச் சிருட்டித்திருப்பார்கள் என்று தோன்றுகிறது.

தசரதர், ராமர் முதலியோர் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று ராமாயணத்தில் நாம் படிக்கிறோம். பண்டைத் தமிழ் மன்னர்களில் சோழ அரசர்கள் சூரிய குலத்தில் உதித்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டார்கள். இன்று இவர்களுக்குச் சரியான போட்டியாக இருப்பவர் ஜப்பானிய சக்கரவர்த்தியாவார். அவர் தம்மைச் சூரியனுக்கு நேர் வாரிசு என்று சொல்லிக் கொள்ளுகிறார். அவர் வீதியில் பவனி செல்லும்போது, ஜனங்கள் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்க்கக் கூடாதென்ற ஓர் ஐதீகம் ஜப்பானில் இன்றும் இருக்கிறது. சூரிய குமாரர்கள் அல்லவா? இவருடைய தேஜஸைத் தாங்க முடியாமல் பஸ்மீகரமாகிவிட்டால் என்ன செய்வது? சூரியகுல திலகர்களாகிய இவர்கள் சொல்லுவதிலும் ஓர் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இவர்கள் மட்டும்தான் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதல்ல; நாமும் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள்தான்; உலகத்தில் தோன்றியிருக்கும் ஜீவராசிகள் அனைத்துமே சூரிய குலத்தைச் சேர்ந்தவைதான் என்று இப்போது நமக்குத் தெரிகிறது.

*

## இலக்கண வேலி!

ஒருமுறை, ஜோஹன் கிறிஸ்தோபர் காட்ஷெட் என்ற பிரபல ஜெர்மன் அறிஞர், பிரிட்டிஷ் ஸ்தானாதிபதியாகிய மிட்ஷெலுடன் ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். "நாடகத்துக்கு அரிஸ்டாட்டில் சொன்னது தான் சட்டம். ஒரு நாடகத்துக்கு ஐந்து அங்கங்கள் இருக்கவேண்டுமென்று அவர் சொல்லியிருக்கிறார். ஷேக்ஸ்பியருக்கு அது தெரியவில்லை; மனம் போன போக்கில் எழுதியிருக்கிறார்" என்றார் அவர்.

மிட்ஷெல் சிரித்துக் கொண்டே, "நல்லது. அரிஸ்டாட்டில் ஒரு வேதாந்தி என்பதை மறந்துவிட்டு, அவரை ஒரு தையல்காரராக வைத்துக் கொள்வோம். சட்டையும் கோட்டும் நிஜாரும் ஐந்து கஜத்துக்குள்ளேயே தைக்கவேண்டும் என்று அவர் சொல்லுகிறார். ஆனால் நீர் சற்று உயரம். பருமனும் கூட; அவர் விதியை மீற உமக்குத் தைரியமில்லையானால், உமக்குக் கோட்டும் சட்டையும் மாத்திரமே கிடைக்கும். அரிஸ்டாட்டில் சொல்லுகிறாரே என்பதற்காக நிஜார் இல்லாமல் திரிவீரா?" என்றார்.

# கடவுளின் பிரதிநிதி

அகிலன்

[என்னிடம் அகப்பட்ட ஒரு பைத்தியத்தின் டைரியில் உள்ள சில ஏடுகள் இவை.]

**ஒரு நாள்:**

கதா காலட்சேபம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது.

"ஈ, எறும்பு முதல் மாடு, மனிதன் வரை, எத்தனையோ கோடி ஜீவராசிகளை உலகத்தில் கடவுள் படைக்கிறார்; காக்கிறார்; அழிக்கிறார். அவராலேதான், உலகம் நடக்கிறது. கல்லினுள் தேரைக்கும், புல்லினுள் புழுவுக்கும், படி அளப்பவர் அவர்தான்..." இந்த மாதிரி என்னவெல்லாமோ பிதற்றிக்கொண்டு போனார் அந்தப் பாகவதர்.

"கல்லினுள் தேரைக்குப் படி அளக்கும் அந்தக் கடவுள், மனிதனைத்தான் மறந்து விட்டார் போல் இருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டு, பேசாமல் நின்றேன்.

ஆனால், அவர் மேலும் மேலும் கடவுளின் புகழை அபாரமாக அடுக்கிக்கொண்டுபோனபோது, என்னால் அதைக் கேட்கச் சகிக்கவில்லை.

"அந்தக் கடவுள் இப்போது உயிருடன் இருக்கிறாரா? அல்லது பஞ்சத்தில் அடிபட்டு உயிரை விட்டு விட்டாரா?" என்று பாகவதரைப் பார்த்து, ஆத்திரத்தோடு கேட்டேன். அப்போது அவர் முகத்தில் அசடு தட்டியதைப் பார்க்க வேண்டுமே! நான் மாத்திரம் அவரால் புகழப்பட்ட அந்தக் கடவுளாக இருக்கும் பட்சத்தில், அவரது நிலைமையைக் கண்டு நிச்சயம் இரக்கப்பட்டிருப்பேன்.

கூட்டத்தில் இருந்த பலர், எங்கள் இருவரையும் பார்த்துக் கொல்லென்று சிரித்தார்கள்.... இந்த ஜனங்களே இப்படித்தான்: நல்லதற்கும் சிரிப்பார்கள்; கெட்டதற்கும் சிரிப்பார்கள்! நல்லது கெட்டதே இவர்களுக்குத் தெரியாது.

நான் கூட்டத்தை விட்டு வெளியே வந்துவிட்டேன்.

* *

**நாள் 2:**

இன்றையப் பத்திரிகையில் வெளியான செய்தி: எவனோ ஒரு மனிதன், வேலையில்லாத் திண்டாட்டத்தால் தன் மனைவி மக்களுக்கு நஞ்சைக் கொடுத்து, தானும் அதைத் தின்று உயிரை விட்டானாம்! பாவி மனிதன்! அவனுக்குப் பிழைக்கத்தான் வழி தெரியவில்லையென்றால், சாகவாவது சரியான வழி தெரிய வேண்டாமா?

தன்னைப் பட்டினி போட்ட சமூகத்துக்குப் பாடம் கற்பித்து, அதன் பலனாக அல்லவா தன் உயிரை அவன் துறந்திருக்க

அவன் 'சாகத் துணிந்தவன்.' தன்னைத் தானே கட்வுளின் பிரதிநிதியாக நியமித்துக் கொண்டான். எதற்கு? தாம் படைத்த உலகத்தைத் தாமே காப்பாற்ற முடியாமல் தவிக்கிறாரல்லவா அவர்? அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு. அவன் செயல்கள் தான் என்ன விசித்திரம்!

வேண்டும்? அவன் கிடக்கிறுன் முட்டாள்; இதோ, நான் இருக்கிறேன் அவனுக்குப் பதிலாக....

நான் சாகத் துணிந்து விட்டேன்!

ஆனால், சாவை நான் விரும்ப வில்லை; பிழைக்கவும் எனக்கு வழி தெரியும். என்னைச் சுற்றியுள்ள சமூகப் பெருச்சாளிகளை நான் உடனுக்குடன் பழி வாங்க வேண்டும் — கடுமையாக, என் இஷ்டப்படி, பழி வாங்க வேண்டும்!

இந்த மாதிரி உலகப்போக்கை என்னல் இனியும் சும்மாப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முடிந்ததைச் செய்கிறேன். நிதானமாகத் தூங்கிக் கொண்டு, மலை போன்ற காரியத்தைச் செய்ய, நான் விரும்ப வில்லை. இதோ கிளம்புகிறேன், சூருவளியைப் போல! — அதன் பயன்? மரணம்! அதற்குத்தான் நான் துணிந்து விட்டேனே!

சரி, நமக்குத் தெரிந்த மனிதர்களில், எவனெவன் ஏழைகளின் ரத்தத்தை இரக்கமின்றி உறிஞ்சுகிறுன்? எவனெவன் ஆடம்பரத்துக்கு ஆசைப்பட்டு, அடிமைத்தனத்தை மாலையிடுகிறுன்? எவனெவன் ஆஷாடபூதி வேஷம் போட்டுப் பகல் கொள்ளை அடிக்கிறுன்?—ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன். ஓ! இன்னுரெல்லாம் தான்.

இவர்களை யெல்லாம் கொல்லக் கூடாது! மரண தண்டனை என்பது மனிதனின் சட்டத்திலேயே இருக்கக் கூடாதென்பது என் தீர்மானம்... தங்கள் தங்களுடைய குற்றத்தை உணர்ந்து அவர்கள் சீர்திருந்த விரும்பினுல், செத்துப்போனதற்கப்புறமா சீர்திருந்துவது?

* *

நாள் 3:

சாவதற்கு நான் பயப்பட வில்லை; ஒரே ஒரு விஷயம்...

என் அறையில் உட்கார்ந்து கொண்டு, திறந்த ஜன்னல் வழியாகப் பார்த்தால், காலையும் மாலையும், இந்தக் காட்சியைக் காணலாம்:

கையில் ஒரு புத்தகக் கட்டுடன், காலையில் அவள் பள்ளிக்கூடத்தை நாடிப் போவாள். சாயங்காலம் திரும்பி வருவாள். அவள் யாரோ, எனக்குத் தெரியாது. அவள் பெயர், ஊர், ஜாதி ...ஊஹூம், இவைகளைப் பற்றியெல்லாம் நான் நினைத்துப் பார்த்தது கூட இல்லை.

அவளது நிலைமையைக் கவனித்தால், மிகவும் ஏழைபோல் காண்கிறது. ஏழை என்பதற்காக அழகு குறையவில்லை! கடவுளுக்குத்தான் யோசனை கிடையாதே. ஏழைக்கு அழகு எதற்கு? அது தொலையட்டும். எனக்கு அழகு பிடிக்கிறது. அந்தப் பெண்! அவள் போகும் போதும் வரும் போதும், என்னைப் பார்க்கிறுள்; நான் அவளைப் பார்க்கிறேன். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுகிறேம்! — கொஞ்ச நாள் கழிந்தது. இப்போது நான் இறந்து விட்டால், அப்புறம் அவளைப் பார்க்க முடியாதே என்ற ஒரு கவலை மாத்திரம் வந்திருக்கிறது.

ஆனால், அவளுக்காக என் தீர்மானத்தை, நான் கைவிடப் போவதில்லை.

வேலை செய்து, கூலி பெருத கூலி ஒருவன், "கடவுள்தான் என் முதலாளிக்குக் கூலி கொடுக்க வேண்டும்!" என்கிறுன். மிராசுதாரைக் கொழுக்க வைத்த ஏழைப் பண்ணைக்கா

ரன், "கடவுளைத்தான், என் கஞ்சிக்கு நம்பியிருக்கிறேன்" என்கிறுன்! இதைப்போலவே, இன்னும் எத்தனேயோ பேர், தங்களால் முடியாத காரியத்துக்குக் கடவுளையே துணை கூப்பிடுகிறுர்கள்.

அந்தக் கடவுளால் ஒன்றுமே செய்யமுடியாதென்று தோன்றுகிறது. ஆதலால், அவருக்குப் பிரதிநிதியாகத் தானே, நான் கிளம்பி யிருக்கிறேன்! அப்படிப்பட்ட முக்கியமான பதவியை வகிக்கப் போகும் நான், கேவலம் ஒரு பெண்ணுக்காக என் லட்சியத்தைக் கைவிடமுடியுமா?

* *

நாள் 4:

இந்தப் பத்திரிகைக்காரர்கள் இருக்கிறுர்களே, இவர்கள் ரொம்ப ரொம்ப நகைச்சுவை உள்ளவர்கள். 'சாகத் துணிந்தவனின் துணிகரமான செயல்' என்று ஒரு தலைப்பைப் போட்டுக்கொண்டு, "பிரபல ஹாலிவுட் இந்திய நடிகருக்குக் காது காணுமல் பேய்விட்டது! — இந்தியாவைப் பற்றிக் கீழ்த்தரமாக எடுக்கப்பட்ட படங்களில் அவர் நடித்ததற்காக, அந்தத் தண்டனையாம்!" என்று எழுதுகிறுர்கள்.

அது மாத்திரமா?

"திலோத்தமா மில்ஸ் முதலாளி, கையைப் பறிகொடுத்தார்!"

"ராவ் சாகிப் ராஜாசாமி வீட்டில் நாற்பதினயிரம் ரூபாய் அபேஸ்!"

"மட்ட ரக சினிமாப் படக் காண்ட்ராக்டர் மூக்குடைக்கப் பட்டார்!" — இப்படி யெல்லாம் எழுதித் தள்ளுகிறுர்கள். இந்த யாவும், சாகத் துணிந்தவனின் — அதாவது என்னுடைய — சாகசம் தான்.

அந்தச் 'சாகத் துணிந்தவன்,' ஏழைகளின் வீட்டில் புகுந்து திடீர் திடீரென்று காசு பணங்களைப் போட்டுவிட்டுப் போவதாக, வதந்தி உலவுகிறதாம். அந்தக் காசை எடுத்துக் கொள்ளக்கூடச் சில ஜனங்கள் அஞ்சுகிறுர்களாம். நல்ல ஜனங்கள் இவர்கள்!

இதெல்லாம் கிடக்கட்டும்: நான் நல்லவனு? கெட்டவனு? — எனக்கே தெரியவில்லை!

போலீசார் புலன் விசாரிக்கிறுர்களாம். விசாரிக்கட்டும்; விசாரிக்கட்டும். விசாரித்து என்னைப் பிடித்துத் தண்டனை கொடுப்பதற்குள், நான் இன்னும் எத்தனேயோ பேருக்குத் தண்டனை கொடுத்து விடுவேன்!

* *

நாள் 5:

இன்றைக்கு ஒரு கூரை வீட்டுக்குள், கையில் பண முடிப்புடன், நான் நுழைந்தேன். கட்டிலில் ஒரு கிழவன் போர்வையுடன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.

"யாரப்பா, அது! எழுந்திரு. 'சாகத்துணிந்தவன்' வந்திருக்கிறேன்; இந்தா பண மூட்டை!" என்றேன். அவன் எழுந்திருக்கவில்லை — பணத்தை வாங்கிக் கொள்ள அவனுக்குப் பயம் போல் இருக்கிறது!

"அவர் சும்மாப் படுத்திருக்கவில்லை" என்று, பக்கத்தி லிருந்த அறைக் கதவின் வழியாக, ஒரு பெண் குரல் கேட்டது.

"பின்னே எப்படிப் படுத்திருக்கிறுர்?"

"செத்துப் போய்ப் படுத்திருக்கிறுர்!"

"செத்துப் போய் விட்டாரா? அப்படியானால், நீ என் அழவில்லை?"

"அழுதாலும் பிழைத்துக் கொள்ள மாட்டார் என்று எனக்குத் தெரியும்!"

ஏதேது! நான்தான் இந்த உலகில் அபூர்வப் பிறவியாக மாறியிருக்கிறேன் என்றால், என்னை முதுகுக்கு மண் காட்டக்கூடிய இன்னொரு லட்சியப் பைத்தியம் இங்கே இருக்கிறாளே!

"சரி; எனக்கு நேரமாகிறது. இந்தா, பணம்; எடுத்துக்கொள்" என்றேன்.

"பணம் இங்கே யாருக்குத் தேவை!"

"பின்னே என்ன வேண்டும்?"

"என் தகப்பனார் செத்துப் போய்விட்டார்; எனக்குத் துணை வேண்டும்!"

என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

"துணையா! யார் துணை?"

"உங்கள் துணைதான்!"

"என்னால் முடியாது. வேண்டுமானால் உன்னை யாரிடமாவது ஒப்படைத்து, வேண்டிய பணமும் கொடுத்து விட்டுப் போகிறேன்."

"அது எனக்குத் தேவையில்லை."

"என் கழுத்தைக் கட்டியிறுக்க எந்த நிமிஷமும் தூக்குக் கயிறு துடித்துக் கொண்டிருக்கிறது. நான் எப்படி உனக்குத் துணையாக இருக்க முடியும்?"

"அது வரையில் துணை இருந்தால் போதும்; அப்புறம் எனக்கு வழி தெரியும்?"

"என்ன வழி?"

"அப்போது கடவுள் காட்டுவார்."

"கடவுளா! அவர்தான் ஒன்றும் செய்ய முடியாதவராயிற்றே?"

பேச்சில்லை.

"இழவு வீட்டிலே திருமணமா?"

"வெயிலுக்குத் தப்ப நிழல் கூடாதா?"

"அட எங்கே! வெளியில் வா. உன் முகத்தைப் பார்க்கலாம்."

கதவிடுக்கில் இருந்த அவள் வெளியே வந்தாள்—அவள் வேறு யாருமில்லை; நான் தினந்தோறும் காலையும் மாலையும் சந்தித்த அதே புத்தகச் சுமைதாங்கி அநாமதேயந்தான்.

அப்புறம்?

அப்புறமென்ன! இனி நான் சாகத் துணியவில்லை. கடவுளின் வேலையை அவரிடமே ஒப்படைத்து விட்டேன். புலன் விசாரித்துவரும் போலீஸ் பூச்சிகளிடமிருந்து கடவுள்தான் இனி என்னைக் காப்பாற்ற வேண்டும். அவர் என்னைக் காப்பாற்றினால் போதும். என் தர்ம பத்னியை நான் காப்பாற்றிக் கொள்வேன்.

[டைரி இங்கே முடிந்து விட்டது.]

✲

'நேற்றைய தினம் செத்துவிட்டது. இன்றைய தினம் தான் உயிரோடிருப்பது. ஆகையால், பழய தீமைகளை அகற்றி, புதிய ஜாதியை நாம் அமைப்போம்.'

— சியாங் கே ஷேக்



# கோதாவரியும் சிரித்தாள்

ஸ்ரீ சிந்தா தீக்ஷிதுலு

மாலை நேரம். சூரியன் சுமங்கலியைப் போல் முகத்தில் சிவந்த குங்குமம் வைத்துக் கொண்டு, கோதாவரி நதியின் புனிதமான நீரில் தீர்த்தமாடச் சென்றுகொண்டிருந்தான். பறவைகள் தங்களுடைய கூடுகளை நோக்கித் திரும்பின. கால்நடைகள் அவைகளின் இருப்பிடங்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. கூலியாட்கள் பகல் முழுதுங் கஷ்டப்பட்டு உழைத்தபின், நகரத்துக் கும்பலிலிருந்தும், கூச்சலிலிருந்தும் தப்பி, இளைப்பாறுவதற்காகத் தங்கள் தங்கள் கிராமங்களை நோக்கி மௌனமாய்ச் சென்றுகொண்டிருந்தார்கள். நகரத்து நாகரிகச் சங்கங்களில், ஈக்களைப் போல் ஜனங்கள் மொய்க்க ஆரம்பித்தார்கள். அவர்களில் ஒருவனாகிய நான், கோதாவரிக் கரையில் உலாவச் சென்றேன்.

வெகு தூரம் வரையில் நகரத்துக் காற்றே வீசிக்கொண்டிருந்தது. வாரந்தோறும் இங்கிலாந்தை நோக்கிப் பிரவகித்துக்கொண்டிருக்கும் ஸ்வர்ணம் பிரவாகத்தைப் பற்றி ஓரிடத்தில் இரண்டு காசுக் கடைக்காரர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பள்ளிக்கூடத்து மாணவர் சிலர், மற்றோரிடத்தில், தங்களுடைய ஜப்பான் சில்க் பைஜாமாக்களின் மீதும் 'போலோ-காலர்' ஷர்ட்டுகளின் மீதும் கொண்ட அளவு கடந்த மோகத்தினால் இதர மாணவர்களின் உடைகளைக் குறித்துக் கேலி செய்துகொண்டிருந்தார்கள்.

சிறிது தூரம் சென்றவுடன், நகரக் காற்று வீசுவது நின்று கிராமக் காற்று வீச ஆரம்பித்தது. கோதாவரி நதியினின்றும் கிளம்பி, கரையோரமிருந்த மரங்

ஆங்கில நாகரிகத்திலே மூழ்கிய ஒருவர், கிராமவாசிகளைக் காண்கிறார். அவர்களின் ஆனந்த வாழ்க்கை அவர் உள்ளத்தைக் கவர்கிறது. அவர்களுக்குச் சேவை புரிந்து, அவர்களது அன்பைப் பெற்று, அவர்களோடு அவர்களாக ஆகிவிட முயல்கிறார். அதிலேதான் என்ன தோல்வி! இந்தத் தெலுங்குக் கதை சு. குருசாமி மொழி பெயர்த்தது.

களின் மீது உராய்ந்து கொண்டு, குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. மரங்களின் பசுமையான இலைகள் அந்திநேரத்தின் மந்தமாருதத்தில் அசைந்தாடி விளையாடிக் கொண் டிருந்தன. நகரத்தின் மோட்டார்கள் கிளப்பும் தூசியால், அவை மாசடைந்திருக்கவில்லை. இரண்டு கரைகளிலும் வெகுவாய் வளர்ந்திருந்த செடி கொடிகளிடையே மூன்று சிறு பெண்கள் உலாவிக் கொண் டிருந்தார்கள். அவர்கள் கால்களில் மிதியடி அணிந்திருந்தார்கள். நகரத்துப் பெண்களைப் போல் வெல்வெட் ஸ்லிப்பர் அணிந் திருக்க வில்லை. பாதத்துக்கு உதவியா யிருக்கக் கூடிய மிதியடிகளையே அவர்கள் அணிந்திருந்தார்கள். அவைகளினால் பாதங்களின் அழகு அதிகரிக்க வில்லை; ஆனால், அவர்களுடைய பாதங்கள் அந்த மிதியடிகளுக்கு அழகு கொடுத்துக் கொண்டிருந்தன. அவர்கள் எளிய கிழிந்த உடைகளை அணிந்திருந்தார்கள். ஆனால், அவை ஜப்பான் துணிகளல்ல. நாகரிக நாரீமணிகளின் அலங்காரங்களைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் பழகிப் போயிருந்தன. அன்று இந்தப் பெண்களின் முரட்டு ஆடைகளிலே அவர்களுடைய உண்மையான அழகைக் கண்டேன். செயற்கைக்கும் இயற்கைக்கும் இதுதான் வித்தியாசம். அவர்களுடைய சௌந்தரியம் நகரத்துப் பெண்களைப்போல், அழகிய சிங்காரமான டப்பாக்களி லிருக்கும் பவுடர்களின் உதவியை நாட வில்லை. அவர்களுடைய அலங்காரத்தில், ஜப்பானோ அல்லது இங்கிலாந்தோ தென்பட வில்லை. கரைகளில் செழித்து வளர்ந்திருக்கும் பலாச மரத்தின் பூக்களைப்போல், அவர்களது லாவண்யம் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந் திருப்பதாய்த் தோன்றியது. அவர்கள் பிறவி அழகுட னிருந்தார்கள். அடர்ந்த மரங்களி னிடையே அவர்கள் என்ன செய்துகொண் டிருந்தார்கள்? மரக் கிளைகளில் பாடிக் கொண் டிருக்கும் பறவைகளைக் கண்டதும், அவர்களும் பாட ஆரம்பித்தார்கள். கோதாவரியில் எழும் சிறுசிறு அலைகளும், அவர்களுடைய சுரத்துக் கேற்றுப் போல் தாளம் போட்டன. ஆனால், நாகரிக மக்களுக்கு அதை ரஸிக்கக்கூடிய காது எங்கே இருக்கிறது?

பாதிச் சூரியன் நதியில் மூழ்கி விட்டது. அடுப்பெரிக்க உபயோகமான காய்ந்த சுள்ளிகள், சருகுகள், கொம்புகள் இவைகளைக் கூடைகளில் நிரப்பிக் கொண்டு, அந்த மூன்று பெண்களும் வீட்டை நோக்கி நடக்கலானார்கள். என்னைக் கண்டவுடன், பாதையி லிருந்து விலகி, வெறித்த காளையைக் கண்டு தப்பி ஓடும் மருண்ட மான்களைப்போல் வேகமாய்ச் செல்ல ஆரம்பித்தார்கள். நகர நாகரிகத்தில் நான் ஊறியிருந்தேனால், அவர்களை மிருகம் என்று ஆங்கிலத்தில் வைது கேலி செய்திருப்பேன். ஆனால், நான் நன்றாய் யோசித்தபின், என்னைத் தான் மிருகமாக மதித்தேன். ஏனென்றால், அவர்கள் அசல் செடிகளில் மலர்ந்த உண்மையான பூக்கள்; நானோ வெறுங் காகிதப் புஷ்பந்தானே?

சிறிது தூரத்தில் நானும் அவர்களைப் பின் தொடர்ந்தேன். அச்சமயம் சங்கராந்திக்குச் சமீபமானதால், அவர்கள் அது சம்பந்தமான பாடல்களைப் பாடிக் கொண்டே நடந்தார்கள். அவை

களைக் கேட்க வேண்டுமென்ற ஆசையினால், நான் அவர்களுக்கு இன்னும் சமீபத்தில் சென்றேன். ஆனால், அவர்கள் பாட்டை நிறுத்திவிட்டு, என் பக்கம் திரும்பிக் கண்களைச் சிமிட்டிக்கொண்டு சென்றுர்கள். நான் சற்றுத் திகிலடைந்து என் வேகத்தைக் குறைத்துக் கொண்டேன்.

இடைச் சிறுவர்கள் மாடுகளையும் எருமைகளையும் ஓட்டிக்கொண்டு, கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். "இந்த எருமைகளெல்லாம் உங்களுடையவைதானு?" என்று நான் அவர்களைக் கேட்டேன். இந்த விநோதமான கேள்வி அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "ஆம் எங்களுடையவை தான்" என்று அவர்கள் தலையாட்டினர்கள். ஆடவரும், பெண்டிரும், நகரத்தில் தாங்கள் வாங்கிய சாமான்களை எல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு, தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்றுகொண் டிருந்தார்கள். அநேகருடைய தோள்களில் வெறுங் கூடைகள் இருந்தன. கிராமத்துப் பொருள்களை யெல்லாம், அந்தக் கூடைகளில் நிரப்பிக் கொண்டு, அவைகளை விற்பதற்குத் தினந்தோறும் அவர்கள் நகரத்துக்கு எடுத்துச் செல்வார்கள். ஒவ்வொருவனும் ஏதாவது ஒரு வேலையாகவே சென்றுகொண் டிருந்தான். அந்தச் சமயத்தில் அந்த நதிக் கரையில், ஒரு ஜோலியுமில்லாமல் இருந்த ஆசாமி, எழுதப்படிக்கத் தெரிந்த கௌரவமுள்ள நாகரிகமான நான் ஒருவன்தான்.

அந்த மூன்று பெண்களும் விதம் விதமாகச் சம்பாஷித்துக்கொண்டே கிராமத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். மௌனமாக நான் அவர்களைப் பின் தொடர்ந்தேன். நன்ருய் உருவாகியிருந்த அவர்களுடைய அழகிய கழுத்தின் மேல், சிற்சில சமயம் எனது பார்வை செல்லும். அஸ்தமன சூரியனால் சிந்தூர வர்ணம் பூசிய வானத்தைச் சில சமயம் பார்ப்பேன். சிறிது நேரத்தில் நாங்கள் அவர்களுடைய கிராமத்தை அடைந்தோம். வீடு தென்பட்டதும் பசுக்கள் 'அம்மா' என்று கத்திக்கொண்டு, தங்களுடைய கன்றுகளிடம் ஓடின. அவைகளின் பின்னால் இடையர்கள் ஓடித் தொழுவத்தில் அவைகளைக் கட்டினர்கள். அந்தப் பெண்களும் தங்கள் தங்கள் வீடுகளை யடைந்தார்கள். அவர்களுடைய தாய் தந்தையரும், நாள் முழுதும் செய்த வேலைக்குக் கூலியை வாங்கிக் கொண்டு, மிகுந்த களைப்புடன் அப்போது தான் வந்துகொண்டிருந்தார்கள். பெண்கள் கொண்டுவந்திருந்த விறகினால், தீ மூட்டிக் குளிர் காய்ந்து கொண்டு, சமயலுஞ் செய்தார்கள். அன்று சம்பாதித்த தானியம்; அன்றே சேகரித்த விறகு! நாளைக்கு மறுபடியும் பெண்கள் விறகு கொண்டு வரவும், தந்தையும் பையன்களும் வேலை தேடியும் வெளியேறுவார்கள். அவர்களுக்கும் வானத்துப் பறவைகளுக்கும் எத்தகைய வித்தியாசமும் எனக்குத் தென்படவில்லை. இருவருக்கும் தங்களைச் சிருஷ்டித்த ஈசுவரனிடம் முழு விசுவாசமிருக்கிறது. ஏதாவது ஒரு குருவியிடம் சென்று, "நீ தினந்தோறும் இறை தேடுவதற்காக ஏன் இத்தனைக் கஷ்டப் படவேண்டும், ஒரே நாளில் அதிக ஆகாரத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு சில நாட்களாவது சுகமாக உட்கார்ந்து

கொண்டு ஏன் சாப்பிடக் கூடாது?'' என்று கேளுங்கள். "இந்த உலகம் முழுவதையும் சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள சக்தி, எல்லா ஜீவராசிகளுக்கும் போதுமான அன்னம் மட்டுந்தான் சேகரித்து வைத்திருக்கிறது; ஆகையினால், நான் எங்கிருந்து அதிகமாகச் சேமித்து வைக்க முடியும்?'' என்றுதான் பதிலளிக்கும். ஆனால், நாகரிகமும் கல்வியறிவும் வாய்ந்த எனக்கு, அதனுடைய உண்மை விளங்குவதில்லை.

சூரியன் அஸ்தமித்தவுடன், இருள் சூழ்ந்தது. கிராம வாசிகள் அன்னபானாதிகளை முடித்துக் கொண்டு, உறங்கச் சென்றார்கள். கோதாவரிக் கரை வழியாக நகரத்தை நோக்கி நடந்தேன். வழி நெடுகிலும் இருந்த மரங்கள் உறங்கின; அவைகளின் மீதுள்ள கூடுகளில் பறவைகளும் உறங்கின. நீரோட்டத்தின் இனிமையான சப்தத்தைக் கேட்டுக் கொண்டே, நான் நகரத்தையடைந்தபோது, ஜனங்கள் வீட்டைப் பற்றி இன்னும் நினைக்கக் கூட இல்லை என்பதைப் பார்த்தேன்.

## 2

நகர வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. அந்தக் கிராமத்தில் சென்று வசிப்பது நலம் என்று தோன்றிற்று. தினந்தோறும் இடையர்களுடன் சென்று பசுக்களை மேய்ப்பதும், காட்டில் ஏதாவது ஒரு மரத்தின் குளிர்ந்த நிழலில் உட்கார்ந்து, இயற்கை யன்னையுடன் மகிழ்ந்திருப்பதும் எவ்வளவு ஆனந்தமான வாழ்க்கையாயிருக்கும்! கோதாவரி நீரைப் பருகி, இயற்கையன்னையின் மிருதுவான மடியில் தூங்குவேன்; அல்லது அந்தப் பெண்களுடன் நானுஞ் சேர்ந்து கூடை யொன்றை எடுத்துக்கொண்டு, நாட்டுச் செருப் பணிந்து, மரஞ் செடி கொடிகளுக்கிடையே விறகு சேகரித்துக்கொண்டு அலைவேன். அவர்களுடன் சேர்ந்து நானும் சந்தோஷமாய்ப் பாடுவேன்; எங்களுடைய பாட்டுடன் பறவைகளின் இனிமையான கீதமும், கோதாவரி நதியின் கலகலப்பும் சேர்ந்து கொள்ளும். ஆனால், இதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், நான் நாகரிக நகரவாசி; செயற்கை மிகுந்த சூழ்நிலையில் வளர்ந்தவன். என்னை அந்தப் பெண்கள் தங்கள் சமீபத்தில் வர விடுவார்களா? மனிதனால் தீண்டப் பெற்ற பறவையும் கூடத் தன் கூட்டத்தினால் பஹிஷ்கரிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். என்னை அவர்கள் தங்களுடன் சேர்த்துக் கொள்வார்களா?

அந்தக் கிராமத்துக்குச் சென்று வசிக்க வேண்டுமென்ற எண்ணமே, என் மனதில் மேலோங்கியிருந்தது. ஆனால், நான் அந்த வாழ்க்கைக்கு லாயக்கில்லாதவன் என்பதும் நிச்சயமாகத் தோன்றியது. என் கைகளுக்கு முரட்டு வேலைகளைச் செய்து பழக்கமில்லை. என் கால்கள் முள்ளும் கல்லும் நிறைந்த பாதைகளில் நடக்காது; சேறுஞ்சகதியும் நிறைந்த வயல்களில் நுழையாது. என் சரீரம் வெப்பத்தையும் தட்பத்தையும் ஒன்றாக மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லை. கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைவதற்கு, நான் என்ன கல்வியறிவில்லாத மூடனா! உலகம் முழுவதையும் ஒருமிக்கச் சேர்த்து என்னுடைய வீட்டில் வைத்துக் கொள்ள விரும்பும் வித்தையை யல்லவா நான் கற்றிருந்தேன்? கஷ்டங்

களினின்றும் தப்பும் வழிகளேயே என் மனம் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. என் கால்கள் பூமியில் பட்டதும், வியாதிக் கிருமிகளே உடனே ஆகர்ஷித்துக் கொள்ளும் பயிற்சியை நன்ருய்ப் பெற்றிருந்தன. என் கைகள் பெரிய பெரிய புத்தகங்களே வேண்டுமானல் தூக்கும்; கல்லேத் தூக்கமாட்டா.

ஆனல், மீண்டும் என் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். அந்தக் கிராமத்து ஜனங்களேப் போல், நான் கல்வியறிவில்லாதவன் அல்லவே! நான் கற்ற கல்வியை யெல்லாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பேன். இவ்விதம் என் ஜீவனத்தை நான் நடத்திக் கொள்வேன். அவர்களுடைய கிராமத்துக்குச் சென்று அங்கு சிலநாள் வசித்து, அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வேன். என் சேவையின் மூலம், அவர்களுக்குப் பலவிதங்களிலும் உதவியாவேன். அதனல் அவர்கள் ஜன்மம் முழுதும் எனக்குக் கடமைப் பட்டவர்களாகி விடுவார்கள். அவர்களுக்கு என்னிடம் ஏற்படும் நன்றியைக் கொண்டு, அநேக நன்மைகளே நான் பெறமுடியும். மீண்டும் யோசிக்கலானேன். இதென்ன யோசனே? அவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து வயிறு வளர்ப்பதில், என்ன சேவை யிருக்கிறது? என் வாழ்க்கைப் பாரத்தைக் கிராமவாசிகள் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? பேஷ்! என் யோசனேயை என்னவென்று சொல்வது! எந்தக் கூலியாளாவது, தன் எஜமான் தன்னிடம் நன்றியுடையவனயிருப்பான் என்று நினேக்கிருன? விறகு சேகரிக்கும் ஒரு பெண் தன்னுடைய தாயிடம் நன்றியை எதிர்பார்க்கிருளா? பசு, எருமை, சூரியன், சந்திரன் ஆகிய எவையும், இந்த மனித சமுகம் தங்களிடம் நன்றியுடனிருக்கவேண்டுமென்று எதிர்பார்க்குமா? பின் ஏன், கல்வி கற்றுக்கொடுக்க விரும்பும் நான் மட்டும், கிராமவாசிகள் எனக்குப் பிரதியுபகாரம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்?

அங்கே சில தினங்கள் வசித்த பின்பு, ஒரு வீடு கட்டிக்கொண்டு விறகு பொறுக்கிய அதே பெண்களில் யாராவது ஒருத்தியை விவாகம் செய்துகொண்டு, அந்தக் கிராமவாசிகளில் நானும் ஒருவனகி விடுவேன் என்று கடைசியில் ஒரு விதமாய்க் கோடித்துக்கொண்டேன்.

## 3

உலாவச் செல்வதைப் போல், நான் தினந்தோறும் அந்தக் கிராமத்துக்குப் போவது வழக்கமாகி விட்டது. கிராமவாசிகளோடு கொஞ்சங் கொஞ்சமாகப் பரிச்சயம் பண்ணிக்கொள்வது, அவர்களுடைய சம்மதத்தின் மேல் அங்கே சென்று வசிப்பது—இதுதான் என்னுடைய நோக்கம். அவர்களுடைய குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்து தெலுங்கு, ஆங்கிலம், கணிதம், பூகோளம் முதலியவை கற்பிப்ப தென்று தீர்மானித்தேன். விஷயம் எவ்வளவு தூரம் முற்றிவிட்ட தென்ருல், அந்த மூன்று பெண்களில் ஒருத்தியைக் காதலிப்பது என்றுகூட எண்ணி விட்டேன்.

ஒரு நாள் சாயங்காலம் நதிக்கரையில் ஓர் உயரமான இடத்தில் நின்று கொண்டிருந்தேன். அந்த மரங்களுக்கும் இலேகளுக்கும், நான் புதியவனல்ல. ஏனென்ருல், என்னேத்தான் அவை தினக்

தோறும் பார்த்திருக்கின்றன அல்லவா? அந்த மரங்களை நோக்கி என் பார்வை சென்று, அங்கே யாரையோ தேட ஆரம்பித்தது. அங்கேயுள்ள பட்சிகளுக்குக்கூட என்னுடன் அதிகப் பரிச்சயம் ஏற்பட்டிருந்தது. அந்தச் சமயம் எனக்கிருந்த ஆத்திரத்தைக் கண்டு, அவைகளும் மெல்ல நகைத்தன. என் முன்னால் நதியானது, சிருஷ்டி கர்த்தாவைப்போல், கண்ணுக்கும் மனதுக்கும் அரிதாகி, அந்த மங்கிய வெளிச்சத்தில் ஓடிக்கொண்டிருந்தது. மேலே இனிமையாய் ஆகாயம் கூடாரமடித்திருந்தது. அங்கேயிருந்து, மதுரமான ராகம் ஒன்று எழுந்து என் காதுகளைப் புளகமுறச் செய்தது. சப்தம் வந்த திக்கை நோக்கிய போது, கரும் பெண்மையழகு ஒன்று அங்கே பிரகாசித்துக் கொண்டிருந்தது. சிரித்த முகத்துடன் விறகு சேகரிக்கும் அதே இள நங்கை, ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டிருந்தாள். அந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் நெல்லடிக்கும் களம் ஒன்றிருந்தது. வாலிபப் பருவமடைந்த இளைஞன் ஒருவன், அதில் வேலை செய்துகொண்டிருந்தான். பெண்ணின் பாட்டைக் கேட்டவுடன், அவன் தலை நிமிர்ந்து, அன்புடன் அவளை நோக்கி, அதற்குப் பதிலளிப்பதுபோல் அவனும் ஒரு பாட்டுப் பாடினன். அவர்கள் இருவருக்கும் மத்தியிலிருந்த ஆகாயமானது, அவர்களுடைய கீதங்களுக்குப் பாதையாக அமைந்தது. அந்தப் பாதையில் சென்று, அவ்விருவருடைய உள்ளங்களும் ஒன்றையொன்று நெருங்கி யணைந்தன. இந்த இன்பக் காட்சியைக் கண்டு, கோதாவரி சிரித்தது. ஆனல், என்னுடைய உள்ளமோ?

**வதைக்கும் கல்வி**

'கழுதையை நன்ருய்ப் புடைத்தால், அது குதிரையாகி விடும் என்று யாரோ சொல்லக் கேட்டு, அவ்விதமே ஒருவன் செய்தானும். நம்முடைய சிறுவர்களுக்கு இந்த மாதிரியான கல்வியே அளிக்கப்பட்டு வருகிறது. இந்த முறை தொலைய வேண்டும்.'

—சுவாமி விவேகானந்தர்.

அந்த இளைஞன் வயலினின்றும் வெளியேறி, அந்தப் பெண்ணை நோக்கி வந்தான்; அவளும் விறகுச் சுமையைத் தலையில் வைத்துக்கொண்டு, அவனை நோக்கிச் சென்ருள். இருவரும் ஒருவருக்கொருவர் சமீபத்தில் வந்தவுடன், கைகோத்துக் கொண்டு நதிக்கரையின் மீது ஏறினர்கள். அந்தப் பெண் பழையதுணி ஒன்றைஉடுத்தியிருந்தாள். அந்தக் கந்தலோடு தான் அவளுடைய யெளவன அழகு பிரகாசித்துக் கொண்டிருந்தது. வாலிபனுடைய கையிலே ஒரு தடி; தலையில் தலைப்பாகை; முழங்கால் வரைக்கும் ஒரு முரட்டு வேஷ்டி; சரீரத்தில் சியாமள வர்ணமான பளபளப்பு; கண்களில் ஒரு பிரகாசம்.

நான் முன்னல் நின்றுகொண்டிருப்பதைப்பார்த்ததும் படக்கென்று கையை எடுத்துக்கொண்டு, இருவரும் தனித்தனியே செல்ல ஆரம்பித்தார்கள். அந்தப் பெண் என்னை எறிட்டுப் பார்க்கத்தான் செய்தாள்; ஆனல், நான் சேகரித்திருந்த விறகை, அன்று வழக்கம்போல் வாங்கிக் கொள்ளவில்லை. அந்த வாலிபனும் எனக்குப் பழக்கமானவனே. என்ருலும், அன்று ஏதும் பேசாமலே போய்விட்

டான். சிறிது நேரம் அசையாமல் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தேன். என் கால்கள் அங்கே வேரூன்றி விட்டன போல் தோன்றியது.

4

கிராமத்திலுள்ள முக்கியமான சில பேர்களுடன், நான் பேசினேன். படிப்பதற்குச் சிறுவர்களுக்கு நேரமில்லை யென்றும், ஜீவனத்துக்கு அவர்கள் யாவருக்கும் கடவுள் ஏதோ ஒரு வழியைக் காட்டியிருக்கிறார் என்றும் சொன்னார்கள். அதாவது படிப்பு வீண் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். "வயிறு வளர்ப்பதற்காக மட்டும் ஒருவன் கல்வி கற்பதில்லை. ஞானத்தின் மூலமாக ஆத்மாவை அறிந்து கொள்ளுவதே அதனுடைய லட்சியம்" என்று விதம் விதமாகச் சொல்லி, அவர்களை என் அபிப்பிராயத்துக்குத் திருப்ப முயன்றேன். நான் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, என் மனச்சாட்சி என்னைக் குறைகூற ஆரம்பித்தது. 'நீ வயிறு பிழைப்பதற்காகத்தானே இந்தக் கல்வியைக் கற்றாய்? மற்றவர்களும் அதே காரணத்துக்காகவே கற்கிறார்கள். இப்போது நீ இந்தக் கிராமத்துப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க விரும்புவதும், அதே நோக்கத்துடன்தானே?'

"நீங்கள் எங்கள் குழந்தைகளுக்கு எம்மாதிரிக் கல்வி கற்பிப்பீர்கள்?" என்று அவர்கள் என்னைக் கேட்டார்கள். நான் அவர்களுக்கு எல்லாப் பெயர்களையுங் கூறினேன். "ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி, கணிதம், பூகோளம், சரித்திரம் முதலியவை. என்னுடைய நீண்ட ஜாபிதாவைக் கேட்டவுடன் அவர்கள், "நீங்கள் சொல்லும் இந்தக் கல்வியைக் கற்பதற்காக எங்கள் கிராமத்திலிருந்து ஒரு பெண் பட்டணத்துக்குப் போனாள், அவளுக்குத் தாய் தந்தையர் இல்லை. ஆகையால், அங்கேயிருந்து யாரோ வந்து, அவளைக் கூட்டிச் சென்றார்கள். கடைசியில் அவள் படித்தது என்ன? தன்னைச் சிங்காரித்துக் கொள்வதில் அளவு கடந்த மோகம், தெய்வங்களைப் பரிகசிப்பது, தன் உற்றார் உறவினர் மீது வெறுப்பு, எல்லாவற்றிற்கும் மேலாக, கலியாணம் செய்து கொள்ள மறுப்பது இவைகளே யாகும். கன்னியாயிருப்பது அவள் குற்றம் அல்ல. அவளை மணஞ் செய்துகொள்ள ஒருவரும் விரும்பவில்லை" என்று சொன்னார்கள். சொந்தத் தெய்வங்களையும் கொள்கைகளையும் மதத்தையும் மறக்க வைக்கத் தக்கதும், சிங்கார அலங்காரங்களில் மோகம் உண்டாக்கத்தக்கதும், விவாகத்தின் புனிதத்தைப் போதிக்காததுமான கல்வி தங்களுக்குத் தேவையில்லை என்று அவர்கள் மேலுங் கூறினார்கள். கடைசியில், இதற்கு மட்டும் இசைந்தார்கள். அதாவது, நான் இஷ்டப்பட்டால் இரவுதோறும் இராமாயணம், மஹாபாரதம், பாகவதம் முதலியவைகளைப் படித்து அவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம் என்று தெரிவித்தார்கள். ஆனால், அது முடிகிற காரியமா? நான் ஆங்கிலக் கவிதை தான் படித்திருக்கிறேன். தெலுங்கில் நான் ஒருபோதும் நூற்றுக்கு முப்பத்து மூன்று மார்க்குகளுக்கு மேல் வாங்கியதே கிடையாது. நான் அவர்களுக்கு எப்படி இராமாயணப் பிரசங்கம் செய்ய முடியும்? ஆகையால், பதில் ஏதும் பேசாமல் அந்த இடத்தைவிட்டு நழுவினேன்.

அதே மாலைவேளை. கோதாவரி நதிக்கரையின்மீது செல்லும்

அதே பாதை. கிராமத்துக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கும் ஆண்பெண்களின் அதேகூட்டம். தற்செயலாக என் கண்கள் அதே மரங்களுக்கிடையில் சென்றன. அந்த மரங்களெல்லாம் என்னைக் கண்டு சிரிப்பதுபோல் தோன்றின. அவைகளுக்கிடையில் வனதேவதையைப் போல் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் அவளை ஒருமுறை பார்ப்பதற்காக, என் கண்கள் அந்த நதிக் கரை முழுதும் தேட ஆரம்பித்தன. அவள் ஓரிடத்தில் உயர்ந்த ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்து உலர்ந்த கொம்புகளை ஒடித்து ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தாள். அந்த யுவனும், தன் எருதுகளை வீட்டை நோக்கி ஓட்டிக்கொண்டு வந்தவன், அதே மரத்தடியில் வந்தவுடன் நின்று அவள் ஒடித்துக் கீழே போட்டிருந்த விறகுகளை எல்லாம் சேகரித்துக் கட்ட ஆரம்பித்தான். மரக்கிளையினின்றும் அவள் கீழே குதித்தாள். கிளை விட்டுக் கிளை தாவும் பறவைகளையும், மரங்களைச் சுற்றிப் பின்னிக் கொண்டு படரும் கொடிகளையும் பார்த்திருப்பீர்கள். ஆம், அதே மாதிரிதான், கீழேவந்து சேர்ந்ததும், அவள் கண்கள் அவன் உள்ளத்தில் என்ன கூறினவோ, விறகுகளைக் கட்டிக் கொண்டிருந்த வாலிபன், சிறிதுநேரம் அவளை நோக்கினான். மேலே வரிந்து கட்டப்பட்ட அவன் வேஷ்டி, முதுகில் விழுந்து ஆடிக் கொண்டிருந்த கரிய கேசம், கால்களிலிருந்த செருப்புகள், உதடுகளிலிருந்த புன்னகை, கண்களின் ஒளி இவைகளெல்லாம் அவன் உள்ளத்தில் மறைந்திருந்த ஏதோ ஒரு விஷயத்தை அவளிடம் தெரிவிப்பதுபோல் தோன்றின.

விறகுக் கட்டை அவள் தலையின் மீது தூக்கிவைத்தான். இருவரும் இனிமையான குரலில் பாடிக் கொண்டு வந்தார்கள். மரங்களெல்லாம் அவர்கள்மீது ஒவ்வொன்றாய்ப் பூக்களைச் சொரிய ஆரம்பித்தன. அவைகளில் இரண்டு பூக்களைக் கொய்து வாலிபன் தன் காதுகளில் செருகிக் கொண்டான். பறவைகளெல்லாம் தங்களுடைய சந்தோஷத்தைத் தெரிவிப்பனபோல் கூவின. சூரியன் தன் நீண்ட கிரணங்களினால் நதிக்கரைக்குப் பொன்முலாம் பூசியது. அவர்களுடைய முகங்கள், மாலை வெயிலில் பிரகாசித்தன. குளிர்ந்த காற்றின்மூலம் கோதாவரி தன் ஆசீர்வாதங்களை அனுப்பியது. அவர்கள் இருவரும் என் சமீபத்தில் வந்தபோது, கடைசி முறையாக அவர்களைப் பார்த்து நான் விடை பெற்றுக் கொண்டேன். "எங்களை ஒருபோதும் மறந்துவிட மாட்டீர்களே, ஐயா" என்று கூறிக் கொண்டே சென்றான் வாலிபன். "அண்ணா, மீண்டும் எங்கள் கிராமத்துக்கு எப்போது வருவீர்கள்?" என்று தலை குனிந்து கேட்டாள் பெண்.

அந்த பெண்ணின் உடம்பு முழுவதுமே என்னை நோக்கிச் சிரிக்கும் ஒரு மலர்போல் எனக்குத் தோன்றியது. அவர்கள் இருவரும் வெகுதூரம் போய்விட்டார்கள். அந்தி வேளையின் மங்கிய இருளைத் தவிர, வேறு ஒன்றும் என் கண்களுக்குப் புலப்படவில்லை. அப்போது நான் கோதாவரியின் பக்கம் திரும்பினேன். அன்னை கோதாவரியும் என்னை நோக்கிச் சிரித்துக்கொண்டிருப்பது நன்றாய்த் தெரிந்தது.

*

# பூனைக்குட்டி

வ. ச. சிவசுவாமி

என் தங்கைதான் அதை முதல் முதலாகப் பார்த்தாள். பார்த்தவுடன், சின்னஞ் சிறு சிட்டுக் குருவியைப்போல் சமையலறைப் பக்கம் பறந்தோடினாள். கறிகாய் நறுக்குவதில் ஈடுபட்டிருந்த தாயாரிடம் வந்து, "அம்மா, அம்மா! நம்ம வீட்டிலே பூனை குட்டி போட்டிருக்கு" என்று இரைக்க இரைக்கக் கூச்சலிட்டாள்.

பாதி நறுக்கிய கத்தரிக்காயை அப்படியே வைத்துவிட்டு, "எங்கேடி, எங்கே?" என்று கேட்டாள் அம்மா.

"அப்பாவோட கண்ணாடிப் பீரோவிலேதாம்மா" என்று சொன்னாள் தங்கை.

"நாசமாப் போச்சு, போ" என்று சீறி எழுந்திருந்து, தகப்பனாரின் ஆபீஸ் அறையை அடைந்தாள் அம்மா.

அப்பாவின் பீரோவிலே ஏதோ ஒரு பூனை வந்து குட்டி போட்டிருப்பது, வீட்டிலே பெரிய ரகளைக்குத்தான் ஆஸ்பதம் என்று எனக்குக்கூடத் தெரியுமே! இருபது வருஷமாய் அவரோடு குடித்தனம் செய்திருக்கிற அம்மாவுக்கா தெரியாது? அப்பாவுக்கு மிருகங்கள் என்றாலே, கட்டோடு பிடிக்காது. அதிலும், பூனையைக் கண்டாலோ, கொள்ளிக் கட்டையையே தூக்கிக்கொண்டு விடுவார். அப்படிப்பட்ட 'சாத்விக' மனிதருடைய சட்டப் புத்தகங்கள் வைக்கும் கண்ணாடிப் பீரோவில்தான் மிஸஸ் மார்ஜாலம் பிரசவித்திருந்தாள்!

சென்னையில் வெள்ளம் வந்ததை இன்னும் யாரும் மறந்திருக்க முடியாது. எப்படி மறக்க முடியும்? நம் மெல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டல்லவா வெள்ளம் குறைந்தது! சென்னையிலே வெள்ளம் வரலாம்; பீரோவிலே பூனை குட்டி போடப் படாதா? அதில் என்ன ஆச்சரியம்? அது போகட்டும். அந்தப் பெரு வெள்ளம் தான், பூனைக்கு ஒருவிதத்தில் உதவியாய் நின்றது. வெள்ளத்தின் போது பல வீடுகளுக்குள் ஜலம் தேங்கி நின்றதல்லவா? எங்கள் வீடும் அவைகளில் ஒன்று. அப்போது அந்த ஜலம் எங்கள் வீட்டில் சும்மா இருக்கவில்லை. அப்பாவின் கண்ணாடிப் பீரோவில் ஒரு கண்ணாடியை அது உடைத்து விட்டது. அந்தத் துவாரத்தின் வழியாகத்தான், பூனை பீரோவுக்குள் நுழைந்து குட்டி போட்டிருக்கிறது! மூன்று குட்டிகள்: ஒன்று தும்பைப்பூப் போல் வெள்ளை; மற்றொன்று கரியைப் போல் கறுப்பு; இன்னொரு பூனைக் குட்டி பொன்னிற மஞ்சளாக இருந்தது.

என் தங்கை, "அழகாயிருக்கோனேம்மா?" என்று தாயாரிடம் கொஞ்சிக் கொண்டே கேட்டாள்.

சட்டப் புத்தகங்கள் வைத்திருக்கிற பீரோவிலே, பூனைக்கு என்ன வேலை? கேஸா நடத்தப்போகிறது? அட் நுழையத்தான் நுழைந்தது; பிரசவிக்கவும் வேண்டுமா? பிரசவித்தது. அப்பா துரத்தினார். திரும்பியும் வந்துவிட்டது. ஆனால், அப்பா மீண்டும் துரத்தவில்லையே. ஏன்?

என் தாய் பூனையைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே, சிறிது ஆழ்ந்த யோசனையில் மூழ்கினாள். பின்பு, திடீரென்று, "நம்ம வீட்டுக்கு அடிக்கடி வர பூனை தான் இது. பழகினதுதான்" என்று கூறினாள்.

"ஆமாம், ஆமாம். பார்த்துண்டே இருங்கோ. பூனைக் குட்டிகள் எல்லாம் சட்டப் பரிட்சையில் முதன்மையாய்த் தேறப் போறதுகள்" என்று சொல்லி, நான் சிரித்தேன்.

"எப்பொ தமாஷ் பண்ணனும், எப்பொ பண்ணக் கூடாதுன்னு உனக்குத் தெரியறதே யில்லே... ...இப்பொ என்ன பண்றது? எனக்கு ஒண்ணுமே புரியலெ. அப்பா வந்தா, வீடு திமிலோகப் படப் போறது. இந்த எழவு பிடித்த பூனை, பீரோவுக்குள்ளே போயா குட்டி போட்டுத் தொலைக்கணும்? எல்லாம் என் தலைவிதி" என்று நொந்துகொண்டாள் அம்மா.

எங்கள் அம்மாவின் கவலை துளிக் கூடத் தெரியாமல், மியா, மியா என்று கத்திக் கொண்டும், தன் குட்டிகளை நக்கிக்கொண்டும், கண்ணை மூடித் தவக்கோலத்தில் இருந்தது பூனை.

"இந்தாடி, அக்கா! இந்தக் குட்டியெல்லாம் பெரிசாப்போனா மஞ்சள் குட்டி எனக்கு; வெள்ளைக்குட்டி ஒனக்கு" என்றாள் தங்கை.

"கறுப்பு?" என்று நான் கேட்டேன்.

"அம்மாவுக்கும் அப்பாவுக்கும்."

"சரிதான், போங்கோடி, மூடங்களா! பங்கு பிரிக்க வந்துடுத்துகள், பங்கு. பாவம்! அப்பா வந்தா, பூனையும் குட்டிகளும் என்ன பாடுபடப்போறதுகளோ!" என்று அங்கலாய்த்தாள் அம்மா.

தங்கை இதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. "எனக்குத் தானே, அம்மா, மஞ்சள்?" என்று மழலைக் குரலில் கேட்டாள்.

"ஆமாம், போ. மஞ்சளும் ஆச்சு; சீயக்காயும் ஆச்சு. கெடக்கறது. அப்பா வந்தா, முந்திரிக் கொட்டைமாதிரி நீங்க ஒண்ணும் இதைப்பத்தி உளறிப் பிடாதேயுங்கோ. நான் பாத்துக்கறேன்" என்று சொல்லி, எங்களை அப்பால் அழைத்துச் சென்றாள் அம்மா.

சாயங்காலம் ஆயிற்று. அதுவரையில், அடிக்கடி பூனைக் குட்டிகளைப் பார்த்து விட்டு, சற்றுநேரத்துக் கொருதரம், "அம்மா, பூனை கத்தறது" என்றும் "குட்டிகள் பால் குடிக்கறது" என்றும், தங்கை அலமு 'நியூஸ் புல்லட்டின்' விட்டுக்கொண்டிருந்தாள். வேறு விசேஷம் ஒன்றுமில்லை. அஸ்தமித்ததோ இல்லையோ, அப்பாவும் வீடு வந்து சேர்ந்தார்.

அவர் வந்ததும், நாங்கள் எல்லோரும் ஒன்றுமே தெரியாதது போல், கமுக்கமாக எங்கள் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தோம். பூனை குட்டிபோட்டதை அன்று ராத்திரி அவர் பார்த்ததாகவே தெரியவில்லை. எப்படியோ ஒரு நாள் போது நல்லபோதாகக் கழிந்துவிட்டது.

மறுநாள் எதோ கேஸ் விஷயமாய்ச் சட்டப்புத்தகங்களை பார்க்கும் பொருட்டு, அப்பா கண்ணாடிப் பீரோவைத் திறந்தார். தன் குழந்தைகளுக்கு ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி, சீறியது

பூனை. அப்பா திடுக்கிட்டு, பீரோவைத் திரும்பவும் டபக்கென்று மூடிவிட்டார்.

இந்தக்காட்சியை ரகஸ்யமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த என் தங்கை, ஓட்டமாய் ஓடி வந்து, அம்மாவிடம் கிசு, கிசு என்ற குரலில், "அப்பா பாத்துட்டா" என்று சொன்னாள். நாங்களெல்லோரும் ஒருபெரிய புயல்காற்றை எதிர்பார்த்து நின்றோம். அப்பா கிடு, கிடு என்று நேரே சமையலறைக்கு வந்தார்.

"இது என்ன ஒரு பெரிய தொந்தரவாப் போச்சு! லா புஸ்தகத்தைத் தொட விடமாட்டேன் என்கிறதே இந்தப் பூனை!" என்று கத்தினார் அப்பா.

"எந்தப் பூனை?" என்று, ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள் அம்மா.

"எந்தப் பூனையோ! எனக்கென்ன தெரியும்—தாயாதிப் பூனை! கண்ணாடிப் பீரோவிலே குட்டிபோட்டுத்தொலச்சிருக்கு. அதைவிரட்டினால் ஒழிய, எனக்கு விமோசனம் கிடையாது" என்றார் அப்பா.

"இப்பொதான் குட்டி போட்டிருக்குன்னு சொல்றயள். குட்டிபோட்ட பூனை பொல்லாதாச்சே! அதுவும் இல்லாமே, பூனைக் குட்டிகள் கண்ணைக் கூடத் திறந்திருக்காதே. இன்னும் இரண்டு மூணு நாளைக்குள் கண் திறந்துடும். பூனையும் கொஞ்சம் பழகிப்புடும். அப்புறம் பூனைக் குட்டிகளை வேறொரு இடத்திலே எடுத்து விட்டால் போறது" என்று அம்மா சமாதானம் சொன்னாள்.

யார் செய்த புண்ணியமோ; அந்தச் சமயம் அப்பாவுக்கு, அம்மா சொன்னது நியாயம் என்றே பட்டது போலிருக்கிறது; பேசாமல்போய்விட்டார்.

இரண்டு மூன்று நாள் சென்றது. பீரோவிலிருந்து வெளியே வந்து மியாவ், மியாவ் என்று எங்களைநோக்கிக் கத்தத்தொடங்கியது பூனை. அப்பாவே அதற்குப் பால் விடும்படி உத்திரவிட்டார் என்றால், பூனையின் அதிர்ஷ்டத்தை என்ன என்று சொல்லுவது! ஆனாலும், அன்று மத்தியானமே பூனைக்குச் சனியன் பிடிக்க ஆரம்பித்து விட்டது! எத்தனை நாள்தான் அப்பாவும் பொறுமையாய் இருப்பார்? அவர் புத்தகம் எடுப்பதற்காக எப்போது பீரோவை நெருங்கினாலும், பழகிய பூனையாயிருந்தும் அது சீறியது. எவ்வளவு காலம் தான், கேஸுக்குச் சட்டத்தின் பலம் தேடாமலே இருப்பது?

"ஐயோ! இதன் தொந்தரவு பொறுக்கலையே! என்னை வேலை செய்ய முடியாமெ அடிக்கறதே! இதை வேறே இடத்தில் எடுத்து விடக் கூடாதா?" என்ற அவருடைய அபயக் குரல், எங்கள் செவிகளி லெல்லாம் ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

அம்மா சொன்னாள்: "இன்னும் பூனைக்குட்டிகள் கண்ணைத் திறக்கலையே; இதுக்குள்ளே எப்படி வேறே இடத்தில் வைப்பது? பூனைக்கு நீங்க ஏன் பயப்படணும்? அதுவும் பழகின பூனைக்கு? பூனை அப்பிடித்தான் சீறும். ஆனா, ஒண்ணு செய்யாது. போய்ப் புத்தகங்களை எடுத்துக் கோங்கோ."

அப்பா அப்படியே செய்தார். பூனை பழையபடியே சீறியது. அதோடு நிற்கவில்லை; பிறாண்டியும் விட்டது! அப்போதிருந்து புயல் உக்ரமாக அடிக்க ஆரம்பமாகி விட்டது.

"இந்தச் சனியன் பிடித்த பூனையை ஒழித்து விட்டுத்தான் மறு காரியம்" என்று தகப்பனர் சபதமிட்டார். அதைக் கேட்டு, அம்மா நடுங்கினள். அவளைப் போல்தானே, பூனையும் ஒரு தாய்? இளம் குட்டிகளோடு இருக்கும் பூனையை இம்சிப்பதென்ருல், அவள் மனம் தவித்தது.

அப்பா மிக்க கோபக்காரர். சொன்னல் சொன்னபடி செய்து விடுவார். அவரைச் சொல்லித் தான் என்ன செய்வது? பூனை சீறுவதும் மிரண்டுவதுமாய் இருந்தால், அவர் எப்படித்தான் தமது வேலையைக் கவனிப்பார்?

ஞாயிற்றுக்கிழமை வந்தது. அன்று பூனையைத் துரத்தியே தீர்வது என்ற திட சங்கல்பத்துடன், அப்பா ஆயுதபாணியானர். இடது கையிலே கோணிப்பை; வலது கையிலே ஒரு கம்பு; வரிந்து கட்டிய வேஷ்டி - இந்த முஸ்திப் போடு, தமது படையெடுப்பை மேற்கொண்டார்.

பீரோவைத் திறந்தார். பூனை சீறியது. அப்பா கம்பை ஓங்கினர். பூனை நிர்க்கதியாய் ஒடுங்கித் தலை பணிந்தது. கம்பால் பூனைக்குட்டிகளைக் கோணிப்பைக்குள் தள்ளினர். பூனை பரிதாபமாய்க் கதறியது. அதையும் அதே கோணிப்பைக்குள் தள்ளினர் அப்பா. அவர் கம்பை உபயோகப்படுத்திய ஜோரில் பூனைக் குட்டிகளுக்குச் சற்று அடிபட்டு விட்டது. 'மியாவ் மியாவ்' என்று அவை கத்தினது, உதைபட்ட குழந்தை 'வீல், வீல்' என்று அலறுவது போலிருந்தது. அந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல், அம்மா மாடிக்குச் சென்று விட்டாள்.

பூனையையும் அதன் குட்டிகளையும், வீட்டுக்குச் சிறிது தூரத்திலிருந்த ஒரு மைதானத்தில், அப்பா கொண்டுபோய் விட்டு விட்டார். வீட்டில் பூனையின் நடமாட்டம் இல்லா விட்டாலும், எப்போது பார்த்தாலும் எங்களுக்குப் பூனையின் நினைவுதான். ஆனல், அப்பாவுக்குச் சந்தோஷ ஞாபகம்; எங்களுக்கெல்லாம் வருத்தமான ஞாபகம்.

பூனை வீட்டை விட்டு வெளியேறி இரண்டு மூன்று நாளாகி விட்டது.

ஒரு நாள் மத்தியானம் என் தங்கையையும் அம்மாவையும் அழைத்துக்கொண்டு, ஒரு சொந்தக்காரர் வீட்டுக்கு நான் கிளம்பினேன். வீட்டுக்குக் காவலாக, அப்பா பின்னே தங்கிவிட்டார்.

பஸ் ஏறி, டிராம் இறங்கி, வெகு தூரம் வந்துவிட்டோம். பிறகு, ஒரு குறுகிய சந்தில் கொஞ்சம் நடக்கவேண்டும். அதில் நுழைந்து பாதிவழிபோயிருக்கமாட்டோம். 'ஹோ' என்று ஓர் இரைச்சல் கேட்டது. மூவரும் சேர்ந்தாப் போல் திரும்பிப் பார்த்தோம். இரண்டு கட்சி ஆசாமிகளுக்குள்

### அன்புப் பரீட்சை

புதிதாய்க் கல்யாணமான கிறிஸ்தவ தம்பதிகள். புருஷன் தன் மேல் வைத்திருக்கும் அன்பை, மனைவி சோதிக்க விரும்பினள். ஆகையால், அவள் புருஷனைப் பார்த்து, "நான் செத்துப்போனல் நீங்கள் வருத்தப்படுவீர்களா?" என்று கேட்டாள்.

"ஆஹா, அதில் என்ன சந்தேகம்?" என்ருன் புருஷன்.

"அடிக்கடி வந்து என் சமாதியைப் பார்ப்பீர்களல்லவா?"

"பார்ப்பேன், தினந்தோறும் பார்ப்பேன். அந்த வழியாகத் தானே நான் ஆபீசுக்குப் போக வேண்டும்."

ஏதோ சண்டை மூண்டிருந்தது. ஒரு கட்சியார் எங்கள் எதிரில் வந்து கொண்டிருந்தார்கள். மறு கட்சியார் எங்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். இடை நடுவில் நாங்கள் அகப் பட்டுக் கொண்டோம். என் தங்கை பயந்து போய், என் கையைப்பிடித்துக்கொண்டாள். அவளுடைய உடம்பு வெட வெட என்று ஆடிக் கொண்டிருந்தது. தாயாரும் அசந்து போய்க் கல் லாய் நின்று விட்டாள்.

காதால் கேட்க முடியாத அவ் வளவு கொடூரமான வசைமொழி களுக்கிடையே, சோடாப் புட்டி களும் கற்களும் பறந்தன. என் பாதுகாப்பி லிருந்த தங்கையை யும் அம்மாவையும் அந்த ஆபத்தி லிருந்து காப்பது என் கடமை யாகி விட்டது. பக்கத்தி லிருந்த ஒரு வீட்டுக்குள் சென்று பதுங் கிக் கொள்ளலாம் என்று நான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கை யில், ஒரு கல் பறந்து வந்து என் தங்கையின் தலையில் மோதியது. 'ஐயோ!' என்று அவள் வாய் விட்டு அலறினாள். ரத்தம் வழிய ஆரம்பித்து விட்டது.

அவசர அவசரமாக அவளையும் அம்மாவையும் பிடித்து இழுத்துக் கொண்டு போய், அருகே யிருந்த ஒரு வீட்டில் நுழைந்தேன். அப் போது, ஒரு பெரிய கண்ணாடித் துண்டு பறந்து வந்து என் காலில் பட்டது. பலத்த காயம். அம்மா வுக்கும் ஊமைக் காயம்.

வீட்டுச் சொந்தக்காரர் எங் களை விசாரித்து யாரென்று தெரிந்துகொண்டு, உடனே எங் கள் நிலை பற்றி அப்பாவுக்கு டெலிபோன் செய்துவிட்டு, தாம் எங்களை எங்கள் வீட்டில் கொண்டுபோய் விடுவதாகவும் கூறினார். போலீஸ் ஸ்டேஷனுக் கும் போன் செய்தார். சில போலீஸ்காரர் வந்து, கலவ ரத்தை அடக்கினார்கள்.

நாங்கள் வீடு சேர்ந்தபோது, அப்பா துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார். தங்கையின் மண்டைக் கட்டையும், என் னுடைய கால் கட்டையும், அம் மாவின் வெளிறிட்ட முகத்தை யுங் கண்ட அவர், பெருமூச்சு விட்டார்.

"என் மனசு என்னமாத் திக் குத் திக்குன்னு அடிச்சிண்டுது தெரியுமா?" என்றார் அப்பா.

அம்மா இதுதான் சமய மென்று வெகு நாசூக்காக, "அது மாதிரிதானே பூனையும் அவஸ் தைப் பட்டிருக்கும், நீங்க கம் பால் அதுங் குட்டிகளைக் காயப் படுத்தினபோது?" என்று கேட் டாள்.

அப்பா மனம் உருகிவிடுவார் என்று நாங்கள் நினைத்தோம். அவரோ தமது மிடுக்கை விடா மலே, "இருக்கும், இருக்கும். இருக்காதோ? அப்படியானா, லா புக் இருக்கற பீரோவிலே வந்து யார் குட்டி போடச்சொன்னா?" என்று பதிலளித்தார்.

ஆனால், அன்று மாலையே, பூனை தன் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு, மறுபடியும் எங்கள் வீட்டுக்குள் நுழைந்தது. அப்பா பார்த்துக் கொண்டுதான் இருந் தார்; துளி முணு முணுக்கவும் இல்லை. அது மாத்திர மல்ல; "குஞ்சு, குஞ்சம்மா! ஓடியா. உன் பூனையும் குட்டியும் திரும்பி வந்துடுத்து" என்று என் தங் கையை உரத்துக் கூப்பிட்டு, சந்தோஷம் பொங்கியவராய் அவ ளிடம் அவைகளைக் காட்டவும் தொடங்கிவிட்டார்!

*

# புதுப் பஞ்சாங்கம்

தி. ஜ. ர.

அவசர அவசரமாக ஒரு சமயம் நான் ரயிலுக்கு ஓடிக்கொண்டிருக்கையில், பின்னால் இருந்து ஒருவன் "ஸார், ஸார்" என்று கர்ம சிரத்தையாக என்னைக் கூப்பிட்டு, "ஸார், பஞ்சாங்கம்" என்றான்.

"அட, யார் பஞ்சாங்கம்? நானா நீயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டுக் கொண்டே திரும்பினேன்.

"கோவிச்சுக்காதே, சாமி; புதுப் பஞ்சாங்கம்" என்றான் ஒரு சிறுவன்.

அவன் கையிலே பச்சை, சிவப்பு, நீலம் முதலிய அட்டைகளோடு, சலசல என்று பலவிதமான பஞ்சாங்கங்கள் ஆடிக் கொண்டிருந்தன.

"மண்ணாங்கட்டி! அதற்காக அவசரமாய் ரயிலுக்குப் போகிறவனை என் அப்பா வம்புக்கு இழுக்கறே?" என்றேன் நான்.

"ரயிலுக்குத்தானே? இந்தப் பஞ்சாங்கத்தைப் பாரு; வண்டி கிடைக்குமா, கிடைக்காதான்னு தெரிஞ்சிக்கிட்டுத்தான் போயேன்" என்று, சிரித்துக் கொண்டே, அந்தப் பையன் ஒரு பஞ்சாங்கத்தை நீட்டினான்.

"என்னடா காலிப்பயலே! கேலியா செய்யறே!" என்று சொல்லி, நகர்ந்தேன்.

"ஓ! சாமி கிருஸ்தவரு போலே இருக்கு" என்று கூறி இளித்தான் பையன்.

அவன் வார்த்தை 'சுரீர்' என்று என் மனதில் தைத்தது. இந்தப் பயலிடம் பஞ்சாங்கம் வாங்காதவனெல்லாம் கிருஸ்தவனா? உண்மையில் எனக்குப் பஞ்சாங்கத்திலே, அவ்வளவு மோகம் கிடையாது. காலண்டரிலும், டைரியிலும்தான் ஆசை. இருந்தாலும், அதற்காகக் கிருஸ்தவன் ஆகிவிடுவேனா? இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டே நடந்தேன்.

ஸ்டேஷனுக்குப் போனதும் வண்டி தவறிவிட்டது. அந்தப் பஞ்சாங்கத்தைப்பற்றித் திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டே, அடுத்த வண்டிக்காகக் காத்து உட்கார்ந்திருந்தேன்.

அங்கேயும் யாரோ ஒருவர் ஒரு புதுப் பஞ்சாங்கத்தோடு வந்து சேர்ந்தார்.

எனக்கு அதைப் பார்த்ததும், என்னை அறியாமலே ஓர் எரிச்சல் வந்தது. ஆனால், அவரோ நான் உட்கார்ந்திருந்த அதே பெஞ்சியில் வந்து உட்கார்ந்து, பஞ்சாங்கத்தை ஆவலாகக் கையில் பிடித்துப் பிரித்து, மகா ருசிகரமான ஒரு நாவலைப் படிப்பது போல் படிக்கத் தொடங்கிவிட்டார்.

நான் அதை வெறித்து வெறித்துப் பார்ப்பதைக் கண்ட

'நான் என் செயும்!' என்று பாடினார் ஒரு பக்தர். நாள்தான் அத்தனையும் செய்கிறது என்று நம்புகிறவர் நம்மில் பலர் இருக்கிறார்கள். நாளும் கிழமையும் பார்க்க உதவுவது பஞ்சாங்கம். அந்தப் பஞ்சாங்கம் தமிழ் நாட்டிலே அரசு வீற்றிருக்கும் அதிசயத்தை என்ன சொல்வது?

ம், "இந்தாருங்க; நீங்க வேணுல் இதைக் கொஞ்சம் பாருங்களேன்" என்று என்னிடம் பஞ்சாங்கத்தைத் தர வந்தார்.

"இல்லே, நீங்களே படியுங்கள்."

"ஓ! இரைஞ்சு படிக்கச் சொல்றீங்களா? படிக்கிறேன்" என்று சொல்லிய அவர், ராகத்தோடு, ஏதோ கம்பராமாயணப் பிரசங்கிமாதிரி பாடத் தொடங்கினர்.

அடடே! ருசிகரமான நாவல் என்றல்லவா நினைத்தேன்! இந்தப் பஞ்சாங்கத்தில் கவிதை கூட இருக்கிறதே!

நண்பர் பாடியது இதுதான்:

'தாரணத்தில் மாரியறும்,
தாரணியில் கேடும் உண்டாம்...'

"சரி, சரி. போதும். நீங்கள் உங்கள் மனதுக்குள்ளேயே படித்துக் கொள்ளுங்கள்" என்று நான் சொன்னேன்.

"அதற்கென்ன செய்வது? பஞ்சாங்கத்தில் இருக்குதே அப்பிடி! சொச்சத்தையும்



கேளுங்க" என்ற அவர், என் ஆமோதிப்பை எதிர்பாராமலே,

'ஓராய்நீ; சீவன்களுய்யாது—
பார்பிணியால்,
ஐய, மடியுமே; அஃகம் குறைவாமே;
வெய்யர் பயமே மிகும்'

என்று முடித்தார்.

"போதும்; போதும். அற்புதமாய் இருக்கு!" என்று நான் சொன்னேன்.

"பஞ்சாங்கம் மாத்திரம் பொய் போற தில்லே" என்றார் அந்த நண்பர்.

"அதிலே நமக்கென்ன லாபம்? இந்தப் பஞ்சாங்கம் பலித்தால், துன்பமும் விரயமும் அல்லவா மலியும்? இது நாசமாய்ப் போக" என்று நான் ஆத்திரத்தோடு சொன்னேன்.

"நாம் செய்யற பாவத்துக்குப் பஞ்சாங்கம் என்ன செய்யும்?" என்றார் அவர்.

இது எனக்கு இன்னும் ஆத்திர மூட்டியது.

"இந்தாரும், ஐயா. நாம் என்று சொல்லாதேயும். நீர் பாவம் செய்யலாம். நான் செய்வதேயில்லே" என்று கொஞ்சம் அழுத்தமாகவே சொன்னேன்.

"ஓ! நீங்கள் மகாத்மாவா?"

"ஆமாம்." [உண்மையில் நான் மகாத்மா அல்ல.]

"பின்னே இமயமலேக்குப் போவதுதானே?"

வாஸ்தவம். பாவிக்குத்தான் ஊரிலே இடம்; மகாத்மாவை இந்த ஜனங்கள் ஊரிலே இருக்க விட மாட்டார்கள். பாவத்துக்கோ தண்டனே உண்டு. அதைப் பஞ்சாங்கத்திலே பார்த்து, ஆனந்தப் படுவார்கள். இவர்களால் தண்டிக்கமுடியாது!

அந்தப் பஞ்சாங்க நண்பரோடு, என்னல் இதற்குமேல் பேசவே முடியவில்லே.

சின்ன வயது முதலே, இந்தப் பஞ்சாங்கங்களேக் கண்டால், எனக்குப் பிடித்தமே கிடையாது. ஆனல், என் இஷ்டமில்லாமலே, என் வாழ்க்கையை எத்தனேயோ சமயம் ஆட்டிவைத்திருக்கிறது இந்தப் பஞ்சாங்கம். வேளே, நாழி, சுபாசுப சகுனம் எதுவும் நான் பார்ப்பதில்லே. என் வீட்டாரோ, ஓயாமல் பஞ்சாங்கம் பார்ப்பார்கள். என் வீட்டார் மாத்திரமா? நம் நாட்டிலே, உள்ள அத்தனே வீட்டாரும் தான். என் கல்யாணம், கார்த்தி அனேத்தும் பஞ்சாங்கத்துக்குக் கட்டுப்பட்டே நடந்திருக்கின்றன.

இந்து நாகரிகமே பஞ்சாங்கத்துக்குள் அடங்கியிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். இதனல்தான், சமீபத்தில் வடக்கே கூடிய பிராம்மணர் மகாநாட்டில், சங்கராச்சாரிய ஸ்வாமிகள், நாம் எல்லோரும் ஜோதிஷம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னர். எதையும் நாம் சுப யோக சுபகரண சுப முகூர்த்தத்தில் செய்வதற்கு உதவியாயிருப்பது பஞ்சாங்கம். ஆனல், அந்தப் பஞ்சாங்கத்துக்கு உதவியாயிருப்பது வெள்ளேக்காரனின் கடிகாரம். கடிகாரம் இல்லாவிட்டால், நாழி நட்சத்திரங்களே எப்படி அறிவது? அடியளப்பது, காட்டுத் துரும்பெடுத்துக் கண்டம் பதினருக்குவது, நட்சத்திர உச்சம் பார்ப்பதெல்லாம் எட்டிலே இருக்கட்டும்; நம்மால் முடியாது.

ஒரு வீட்டிலே மாங்கல்ய தாரணம் நடக்கிறது. மணையருகே உள்ள சாஸ்திரிகள், "சுவாமி, கடிகாரத்தைப் பாருங்கோ" என்கிறார். கடிகாரத்தைப் பார்த்தால்தான், முகூர்த்தம் வந்ததும் வராததும் தெரியும். இதோ ஒரு நண்பர் கிண்டிக் குதிரைப் பந்தயத்துக்குப் புறப்படுகிறார். பஞ்சாங்கத்தைப் பார்க்கிறார். தியாஜ்யம் ராகுகாலம் இல்லாமல் கிளம்ப வேண்டுமாம்! எதற்கு? ஊரார் வீட்டுப் பணமெல்லாம், ஓடிவந்து இவர் பைக்குள்ளே புகுந்து கொள்ள! முன்காலத்திலே, நம் நாட்டுத் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் கூட, பஞ்சாங்கம் பார்த்துத்தான் புறப்படுவார்களாம். இன்று நம் கிராமங்களுக்குப் போங்கள். ஒரே ஒரு பஞ்சாங்கத்தை வைத்துக் கொண்டு, கிராமத்தையே நாம் ஆண்டு விடலாம். பஞ்சாங்கத்திடம் கிராம ஜனங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை. பருவ மாறுதல்களைக் காட்ட ஓரளவு உதவும் பஞ்சாங்கத்தை, வாழ்க்கையின் சகல மர்மங்களையுமே ஆட்டி வைக்கும் சூத்திரக் கயிறாக, நாம் செய்துகொண்டு விட்டோம்!

இவ்விதமெல்லாம் சொல்வதால் நான் ஏதோ பஞ்சாங்க விரோதி என்று வாசகருக்குத் தோன்றியிருக்குமோ ஒருவேளை! உண்மையில், நான் அப்படிப்பட்டவன் அல்ல; நமது பஞ்சாங்கத்தைப் பிரமாதமாய் வியப்பவனே யாவேன். ஏனெனில், அது, நமது புராதன நாகரிகத்தின் தலைசிறந்த அத்தாட்சியாகும். வான சாஸ்திரத்தில், நம் முன்னோர், டெலஸ்கோப் முதலிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகளின் உதவியின்றி, வெறுங் கண் பார்வையைக் கொண்டே,

> **அபாயச் சங்கிலி**
>
> ஓடிக்கொண்டிருந்த ரயில் திடீரென்று நின்றது. பிரயாணிகளுக்குக் காரணம் விளங்கவில்லை. ஒரு வாலிபர், அருகில் நின்று கொண்டிருந்த டிக்கட் பரிசோதகரிடம் போய், காரணத்தை விசாரித்தார். "யாரோ அபாயச் சங்கிலியை இழுத்திருக்கிறார்கள். அதனால் தான் வண்டி நிற்கிறது" என்றார் அவர்.
>
> "புறப்பட ரொம்ப நேரமாகுமோ?" என்று ஆவலுடன் கேட்டார் வாலிபர்.
>
> "ஆம், இரண்டொரு மணி நேரமாகும்" என்றார் டிக்கட் பரிசோதகர்.
>
> "அட ராமா, அவ்வளவு நேரம் ஆகுமா? இன்று எனக்குக் கல்யாணம். பதினொரு மணிக்கு முகூர்த்தம் ..."
>
> டிக்கட் பரிசோதகர் நைஷ்டிக பிரம்மசாரி. அவர் இளைஞனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "அபாயச் சங்கிலியை இழுத்தவர் நீர் தானோ?" என்றார்.

பிரமிக்கத்தக்க அளவு ஆராய்ச்சி செய்திருப்பதன் விளைவுதான் நமது பஞ்சாங்கம். எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக, நமது பஞ்சாங்க கணிதம் பிசகில்லாமல் காலநிர்ணயம் செய்வது அதிசயமாகும். மேல்நாட்டுக் காலண்டர், இன்றும்கூட, தட்டுத் தடுமாறிக் கொண்டேயிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகையால், நாம் நமது பஞ்சாங்கத்தைப் பற்றிப் பெருமை கொள்ளலாம்.

ஆனால், இந்தப் பஞ்சாங்கத்திலே, சோதிடம் என்று ஒன்றைச் சேர்த்திருக்கிறார்களே; அங்கேதான் கொஞ்சம் தகராறாயிருக்கிறது. இந்தச் சோதிடம் என்பது என்ன சாஸ்திரம் என்றே எனக்குப் புரியவில்லை. நமக்குப் புரியாதது, தெரியா

தை யெல்லாம் நாம் தள்ளி விடுவதா என்று கேட்கலாம். வாழ்க்கையிலே வருங்காலம் ஒரு மர்மமாகும்; அந்த வருங்காலத்திலேதான், என் மனோராஜ்யக் கோட்டைகளை யெல்லாம் நான் கட்டிக் கொள்கிறேன். அவைகளை யெல்லாம் தகர்த்தெறிந்து, வருங்காலத்தையும் செத்த காலமாக்கிக் குலைப்பதற்கு ஒரு சாஸ்திரமும் வேண்டுமா? ஆண்டவன் தன்னையே தான் மறுத்துக் கொண்டு, சிருஷ்டியின் அற்புத நியதிகளை யெல்லாம் நாசமாக்கி, ஜீவசடங்களின் சுதந்தர இயக்கங்களுக்குப் பங்கம் விளைக்கும்படி செய்யும் ஒரு சாஸ்திரமும் இருக்க முடியுமா?

இவ்வாறு நான் கேட்டால், என்னை நாஸ்திகன் என்று சொல்லிச் சிரிக்கிறார்கள் ஜோதிஷ நண்பர்கள். நாள் பார்த்து, நாழி கணித்து, கடவுளையே ஏமாற்றிவிட முயலும் அவர்கள்தான் ஆஸ்திகர்களாம்! 'நாளென் செயும்? வினைதான் என் செயும்?' என்று தீரமாய்ப் பாடிய பக்தரிடத்திலே அவர்களுக்குத் திடநம்பிக்கை இல்லையே! பக்தியும் சங்கல்பமும் கர்மமும் நம்மிடம் இருந்தால், தாரண வருஷம் நம்மை ஒன்றும் செய்யாது. சென்ற காலம் மாளாத இருளிலே மறைந்துவிட்டது. வருங்காலமோ, நம் கண் கூசும் கோடி சூரியப் பிரகாசத்தோடு ஜொலிக்கிறது. இதோ இந்த நிமிஷம்தான், நம் கையில் கிடைத்த பொக்கிஷமாகும். இதை நாம் அழகாய் வாழ்ந்து பயன்படுத்திக் கொண்டோமானால், அடுத்த ஒவ்வொரு நிமிஷமும், நமக்கொரு நவயுகத்தின் பிறப்பாக விளங்கும். அந்தத் திறமையும் நம்பிக்கையும் தான் நமக்கு வேண்டும். அதற்கு உதவுமா பஞ்சாங்கம்?

❋

## சத்யமூர்த்தி சாதுர்யம்

ஒரு முறை, ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். பொதுமக்களிடையே கல்வியறிவைப் பரப்பவேண்டுமென்றும், தமிழ் வளர்வதற்கு அதுவே சிறந்த வழியென்றும் அவர் கூறினார். பேசும்போது, பழைய தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களிலிருந்து பல அற்புதமான மேற்கோள்களை எடுத்துக் கூறி, சபையோருக்கு மகிழ்ச்சி உண்டாக்கினார்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி சமஸ்கிருதத்திலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டுவது, ஒருவருக்குப் பிடிக்கவில்லை. அவர் எழுந்து நின்று, "உங்களுக்குச் சமஸ்கிருதத்தின்மேல் பிரியமா, தமிழ்மேல் பிரியமா? சொல்லுங்கள்" என்றார்.

பதில் சொல்லுவதற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தியா யோசிப்பவர்!

"நான் ஓர் எதிர்க் கேள்வி போடுகிறேன். உங்களுக்குத் தாயார்மேல் பிரியமா, தகப்பனார்மேல் பிரியமா? சொல்லுங்கள்" என்றார்.

கேள்வி கேட்டவர் இதற்குப் பதில் பதில் சொல்லவில்லை.

ஸ்ரீ சத்தியமூர்த்தி மேலும் கூறினார்: "தாயார்மேல் பிரியமா, தகப்பனார் மேல் பிரியமா என்று என்னை யாராவது கேட்டால், 'இரண்டு பேர் மேலும் எனக்குப் பிரியந்தான்' என்று உடனே நான் பதில் அளிப்பேன். சமஸ்கிருதம் என் தந்தை; தமிழ் என் தாய்."

# புதிய சீனா

"உலகத்திலேயே பகைவருக்கு நகைமுகங்காட்டி, நல்வரவு கூறி, அவர்களைத் தங்களிடம் ஐக்கியப்படுத்திக்கொண்டு விடுகிற சக்திவாய்ந்த தாய்மார் இருவர், வாழ்க பாரதமாதா! வாழ்க சீனத் தாய்!

இந்தியாவும் சீனாவும், பூமிதேவியின் மூத்த பெண்கள்; இரட்டைக் குழந்தைகள். இவ்விருவரும் அழியாத கன்னியர்; குன்றாத வனப்பினர். குறையாத வளத்தினர். இவர்கள், எத்தனையோ நாடுகளுக்கு நாகரிகப் பால் புகட்டினார்கள்; எத்தனையோ இடங்களுக்கு ஞான விளக்கை ஏந்திச் சென்றார்கள். நாகரீகத்தையும் ஞானத்தையும் மட்டுமா கொண்டு சென்றார்கள்? இல்லை, இல்லை; உணவையும் உடையையும் கூடக் கொண்டு சென்றார்கள். மற்றவர்களுடைய வந்தனத்தையோ நன்றியையோ எதிர்பார்த்து இவர்கள் இங்ஙனம் செய்யவில்லை; தங்கள் கடமையாகக் கருதியே செய்தார்கள்.

இன்று உலகத்தில் சத்தியமென்றும், தருமமென்றும் பேசப்படுகிறதென்று சொன்னால், அவை யாவும் இந்த இரண்டு நாடுகளிலிருந்து பிறந்தவைதான். யந்திர நாகரிக வெறி முற்றியுள்ள இந்த இருபதாவது நூற்றாண்டிலே மேற்படி சத்தியத்திற்கும் தருமத்திற்கும் மதிப்பு வைத்துப் பேசுவது இந்த இரண்டு நாடுகளுந்தான். சத்தியத்தையும், தருமத்தையும், தாங்கள் கவசமாக அணிந்துகொண்டிருக்கிற வரையில் தங்களுக்கு அழிவே கிடையாது என்ற திடமான நம்பிக்கையுடனிருப்பதும் இந்த இரண்டு நாடுகளுந்தான்.

ஆனால்—இந்த ஆனால் என்ற வார்த்தையை நாம் மிகுந்த மனவேதனையுடனேயே உபயோகிக்கிறோம்—இவ்விரண்டு நாடுகளும் எவ்வளவுக்கெவ்வளவு அமைதியிலேயே இன்பம் துய்த்து வந்தனவோ, துய்க்கும் ஆற்றல் பெற்றிருந்தனவோ அவ்வளவுக்கவ்வளவு யுத்தச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு அமைதியை இழந்து நிற்கின்றன. இப்படி அமைதியை இழந்து நிற்கின்ற காலத்திலும், ஒன்றுக்கொன்று அநுதாபத்தோடு பார்த்துக் கொள்கின்றன. இரண்டு நாடுகளுக்கும் பரம்பரையான தொடர்புண்டல்லவா? நெருங்கிய நட்பு உண்டல்லவா? உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சீனாவே! உரிமைக்காகப் போராடிவரும் இந்தியா, தனது மனப்பூர்வமான அநுதாபத்தை உனக்குத் தெரிவிக்கிறது."

இப்படி "புதிய சீனா" புத்தகத்தில் சர்மாஜீ ஆரம்பிக்கிறார்.

**புத்தகம் விரைவில் வெளிவரும்**

## சக்தி வெளியீடு

# தேயிலையின் சரிதம்—6



நோம்பும் இயந்திரத்தில் தேயிலைகள்

## இயந்திரக் கட்டம்

உஷ்ணக் காற்று ஊதப்பட்டு, தகுதியான வாசனையோடு கூடிய உயர்ந்த தேயிலை நோம்பி ரகவாரியாக பிரிக்கத் தயாராகிறது.

குச்சி முதலிய அன்னிய பொருள்கள் முதலில் எடுக்கப்படுகின்றன. பிறகு தேயிலை புடைக்கும் இயந்திரத்தில் கொட்டப்படுகிறது. இங்கே ஏராளமான சல்லடைகளும் முறங்களும் தாமாகவே பெரிய இலைகளையும் சிறிய இலைகளையும் பிறிக்கின்றன.

இப்படி கிடைத்த ரகவாரியான தேயிலை தனித் தனியான பெட்டிகளில் அடக்கம் செய்யப்பட்டு மேல் யாத்திரைக்குத் தயாராகிறது.

துரிதமாகவும் ஜாக்கிரதையாகவும் இந்த தேயிலை புது வாசனையுடன் உங்களிடம் சேர்க்கப்படுகிறது.

# ப்ரூக் பாண்ட்

# சொறி வைத்தியம்

ரஸ்தாவிலெல்லாம் சிலர் 'பிடில்' வாசிக்க ஆரம்பித்துவிடுகிருர்களே; அந்தச் சொறி எப்படி உண்டாகிறது? ஏன் பரவுகிறது? அதற்கு என்ன வைத்தியம்? இவ் விஷயங்களை விளக்குகிறது இந்தக் கட்டுரை.

பஸ் நிற்குமிடம், ரயில்வே ஸ்டேஷன், நடு வீதி—எங்கேயிருந்தாலும் சரி, சிலர் திடீரென்று 'பர், பர்' என்று சொறிய ஆரம்பித்து விடுகிருர்களே, இந்தக் காட்சியை இப்போது தமிழ் நாட்டில் பல இடங்களில் காண்கிரும். ஆனல், தமிழ் நாட்டில் மட்டுமல்ல; உலகெங்குமே இந்தச் சொறி பரவியிருக்கிற தென்று தோன்றுகிறது. பம்பாய்க்காரர் சொறிகிருர்களாம்; பிரிட்டனில் உள்ளவர்களும் சொறிந்து கொண்டுதானிருக்கிருர்களாம்.

பூலோகத்தில் சொறி சிரங்கு எப்போது தோன்றியது என்று யாராலும் சொல்ல முடியாது. ஏனெனில், அது அநாதி வஸ்துவாக, எத்தனையோ நூற்ருண்டுகளாய் உலகில் இருந்து வருகிறது. போன ஐரோப்பிய யுத்த காலத்தில் 1918-ஆம் ஆண்டு பிரிட்டனில் சொறி சிரங்கு மிகவும் அதிகரித்துவிட்டது. 1935-ஆம் ஆண்டு தொடங்கி மீண்டும் அதிகரித்து, 1939-ஆம் ஆண்டு நூற்றில் ஒருவர் தவருமல் சொறியத் தொடங்கி விட்டார்களாம்.

சொறி எப்படி வருகிறது? ரத்தம் கெட்டுப் போனுல் சிரங்கு வரும் என்று சிலர் சொல்லுகிருர்கள். அது தவறு. சொறி சிரங்குக்குக் காரணம் ஒரு பூச்சி. அது மிகச் சிறியது. உருவம், ஏறக்குறைய முட்டை வடிவில் அமைந்திருக்கும். மேற்புறம் வளைந்தும், அடிப் பக்கம் தட்டையாகவும் இருக்கும். அதற்குத் தலையோ கண்களோ இல்லை. எட்டுக் கால்கள் மாத்திரம் உண்டு. சிரங்குப் பூச்சியின் நீளம், ஓர் அங்குலத்தில் அறுபதில் ஒரு பகுதி இருக்கும். பெண் பூச்சி ஆண் பூச்சியைக்காட்டிலும் சற்றுப் பெரிதாய் இருக்கும். முட்டை சற்று நீளமானது. அது உடைவதற்குமூன்று நான்கு நாளாகும். உடைந்து, பூச்சி வெளிப்பட்ட பின், ஐந்தாறு நாளில் அது தன் காதலன் காதலியைத் தேடி, உடம்புத் தோலின்மீது அங்கும் இங்கும் சஞ்சரிக்கத் தொடங்கும். இந்தச் சஞ்சார காலத்தில், ஏராளமான பூச்சிகள் செத்து விடும். கொஞ்சம்தான் மிஞ்சும். பெண் பூச்சி கருத்தரித்ததும், நமது தோலின் மேல்புறத்திலே ஒரு வசதியான இடத்தைத் தேடிப் பிடித்து, அதைத் துளைத்து உள்ளே நுழைந்து கொள்ளுகிறது. இதற்கு ஏறக்குறைய ஒரு மணி நேரம் செல்லும். பிறகு, நிம்மதியாக அங்கே உட்கார்ந்து கொண்டு, இந்தப் புதிய பூச்சியும் முட்டையிடத் தொடங்குகிறது. நாள்தோறும் இரண்டு



இந்தப் பூச்சிதான் சொறி சிரங்கின் கர்த்தா. இது கண்ணுக்குத் தெரியாத அளவு சிறியது. படத்தில் பெரிது செய்து காட்டியிருக்கிறது.

மூன்று முட்டையாக இரண்டு மாதம் வரையில் முட்டையிடும். இப்படிச் சுகமாகக் குடும்பத்தை நடத்தி வரும் போது, தப்பித் தவறி நம்முடைய கை அங்கே பட்டுச் சொறிய ஆரம்பித்தோமோ, பூச்சியின் வீடு இடிந்து போகும்; அல்லது அதுவே இறந்து போனாலும் போகும். வீட்டை இழந்த பூச்சி, அங்கேயே மறு வீடு தோண்டிக் கொள்ளும். அல்லாமல், வேறு இடத்துக்கு ஓட்டம் பிடித்தாலும் பிடிக்கும். இந்த மாதிரி அவை வேறு இடத்துக்கு ஓட்டம் பிடிப்பதன் மூலமே, சொறி சிரங்கு பரவுகிறது. சிரங்கு பொதுவாக, கை கால்களிலும், மணிக்கட்டிலும், மர்ம ஸ்தானங்களிலுமே பிடிக்கிறது.

சிரங்குப் பூச்சி, தோலைத் துளைத்து உள்ளே நுழைந்த உடனே, அரிப்பு உண்டாகி விடாது. சில நாள் சென்றுதான் அரிப்பு எடுக்கும். சிலசமயம் மாதக்கணக்கும் ஆகும். மேலும், சிரங்குப் பூச்சி அங்கு மிங்கும் ஓடுவதாலோ, தோலைத் துளைப்பதாலோ, அரிப்பு உண்டாகாது. சருமத்தில் ஒருவித உணர்ச்சி தோன்றுவதன் காரணமாகவே, தினவு ஏற்படுகிறது. அத்தகைய உணர்ச்சி தோன்றுவதற்குச் சில நாளாகும். சிலசமயம் ஒரு மாதம் கூடச் செல்லும்.

**சிரங்கு பரவுவதற்குப் பல காரணங்கள் சொல்லுகிறார்கள்.** சிரங்கினால் பிடிக்கப்பட்டவர்கள் கையாளும் பொருள்களை மற்றவர்கள் கையாண்டால், அவர்களுக்கும் சிரங்கு உண்டாகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். பஸ், டிராம், நாற்காலி, மேஜை முதலியவைகளின் மூலம் சிரங்கு எளிதில் பரவுமென்று வேறு சில வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள். நன்றாக ஆராய்ந்து பார்த்தால், இது சரியல்ல என்று தோன்றுகிறது. பூச்சிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் பரவுவதற்கு வசதிகள் வேண்டும். தோல் கதகதப்பாய் இருந்தால், சிரங்குப் பூச்சி எளிதில் பரவும். அத்துடன், தேக உறவும் அவசியம். சிரங்குக்காரர்களுடன் ஒரே படுக்கையில் படுத்து உறங்கினால், அவர்களுக்கும் சிரங்கு உண்டாகும் என்பதில் சந்தேகமே வேண்டியதில்லை.

**இதற்கு மருந்து அல்லது வைத்தியம் ஏதாவது கிடையாதா?** உண்டு. அதை ஜாக்கிரதையாகவும் பொறுமையாகவும் கையாள வேண்டும். இதற்குக் கந்தகத்தையே இதுவரை மருந்தாக உபயோகித்து வந்திருக்கிறார்கள். இன்றும் அதுவே சிறந்ததென்று பலர் கருதுகிறார்கள். கந்தகம் பிரயோகித்தால் சொறி சிரங்குப் பூச்சியில் நூற்றுக்கு 97 முதல் 100 வரையில் பூச்சிகள் சாகின்றனவாம். பென்ஸில் பென்ஸோட் என்ற மருந்தோ, ஆயிரத்தில் 999 பூச்சிகளைக் கொன்று விடுகிறதாம்.

கந்தக சோப்புப் போட்டுக் குளித்து, சந்தன அத்தரைச் சிரங்குமீது தடவினாலும், ஓரளவு குணம் ஏற்படுகிறது. மருதாணி இலையையும் கொஞ்சம் மஞ்சளையும் சேர்த்து அரைத்து, அந்த விழுதைச் சிரங்கின்மேல் அப்பி, வெகு நேரம் அப்படியே வைத்திருந்து, பிறகு கழுவிக் குளிப்பதும் ஒரு நல்ல சிகிச்சைதான். எந்த மருந்து உபயோகித்தாலும் சரி, அதற்கு முக்கியமாக இரண்டு குணங்கள் இருக்க வேண்டும்: ஒன்று, அது எல்லாப் பூச்சிகளையும் கொல்ல வேண்டும்; இரண்

டாவது, அது நோயாளிக்கு அசௌகரியம் உண்டாக்காத முறையில், விரைவில் பூச்சிகளைக் கொல்லவேண்டும். இதற்காக, 'பென்ஸில் பென்ஸோட்' (Benzyl-benzoate) என்ற மருந்தைக் கொஞ்ச காலமாக எல்லோரும் உபயோகித்து வருகிறார்கள். குளித்துவிட்டு, ஒருமுறை இந்த மருந்தைப் போட்டுக் கொண்டால் போதும். அநேகமாக, சிரங்கிலிருந்து பூரணமாக விடுதலை யடைந்து விடலாம்.

சிரங்குக்குச் சிகிச்சைசெய்வதை விட, அது வராமல் முன் ஜாக்கிரதையாய் இருப்பதே மேலாகும். கூடியவரையில், சிரங்குபிடித்தவரை நெருங்காமல் இருந்து கொள்வதே நலம். சிரங்கு வந்தால், ஓயாமல் சொறிவது தவறு. சொறிந்தால் புண் வலுத்து, சீழ் கூடக் கட்டிக்கொண்டு விடும். சில சமயம் அதனால் ஜுரமும் வரும். ஒரு வீட்டிலே ஒரே ஒருவருக்குச் சொறி வந்தால், வீட்டிலே உள்ள அத்தனை பேருமே வைத்தியம் செய்து கொள்வது தான் நல்லது. ஏனென்றால், வியாதிப் பூச்சி எல்லோர் உடம்பிலுமே அநேகமாகத் தொற்றியிருக்கும். ஒருவருக்கு இன்று தினவெடுத்திருக்கும்; இன்னொருவருக்கு ஒரு மாதத்தில் தினவெடுக்கக் கூடும். ஒருவரிடம் செத்த பூச்சி, இன்னொருவரிடம் சௌக்கியமாய் இருந்து கொண்டிருந்தால், மாறி மாறி ஒருவரிடமிருந்து ஒருவருக்கு அது தாவிக் கொண்டேதான் இருக்கும். சொறி பிடித்தவர்களின் படுக்கைகள், உடைகளை யெல்லாம், நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரில் போட்டுக் கழுவிச் சுத்தம் செய்வது நலம். சலவைக்குப் போட்டாலும் போதும். சலவையின் சூட்டிலே பூச்சி செத்துவிடும். சொறி பெரிய வியாதியல்ல. என்றாலும், அது கொடுக்கும் ஓயாத உபத்திரவத்தைத் தாங்க முடியாது. அதனிடம் மிகவும் எச்சரிக்கையா யிருப்பதே நல்லது.

*

## மாஜி வைசிராய் குறும்பு

மாஜி இந்திய வைசிராயும் தற்போது அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஸ்தானிகராய் இருப்பவருமான லார்ட் ஹாலிபாக்ஸ், வாலிபரா யிருந்த போது, லண்டனிலிருந்து ஓர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். கன்னி கழியாத இரண்டு கிழவிகள் அவருக்கு இருபுறமும் உட்கார்ந்திருந்தார்கள். மூவரில் யாரும் பேசவில்லை.

ரயில் போய்க் கொண்டேயிருந்தது. வழியில், ஒரு கணவாயைத் தாண்டிச் செல்ல நேர்ந்தது. ஒரே இருட்டு. ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியாது. ஹாலிபாக்ஸ் ஒரு வேடிக்கை செய்யக் கருதினர். தமது புறங்கையை வாயருகே கொண்டுபோய், அதில் பலமுறை, உரக்கச் சத்தம் கேட்கும்படி, முத்தமிட்டார். ரயில் கணவாயைக் கடந்து மைதானத்தை அடைந்தது. ஹாலிபாக்ஸ் அந்தப் பெண்கள் இருவரையும் பார்த்தார். அவர்கள் இருவருடைய முகத்திலும் வியப்பு நிறைந்திருந்தது. ஹாலிபாக்ஸ் எழுந்து, தம் தொப்பியைக் கையில் பிடித்துக் கொண்டு, தலை குனிந்து, "ஆஹா! என்ன இன்பம்! வசிகரம் நிறைந்த உங்கள் இருவரில் யாருக்கு நன்றி செலுத்துவது என்று எனக்குத் தெரியவில்லை" என்றார்.

பின்பு, கிழவிகள் இருவரும், ஒருத்தியை ஒருத்தி சந்தேகத்தோடு 'உர்ர்ர்' என்று பார்த்துக் கொண்டிருக்கும்படி விட்டுவிட்டு, அவர் கீழே இறங்கிச் சென்று விட்டார்.

## ஆழ்வார் பாடிய

# தாலாட்டு

மு. அருணாசலம்

இறைவன் மனித உயிர்களைப் படைத்தபோது, அவற்றை ஆண்–பெண் என இரு பாலாகப் படைத்தான். உடல் வலி, மனவுறுதி, உழைப்பு ஆகிய வலிய இயல்புகளை ஆடவனிடம் அமைத்தான். இரக்கம், பராமரிப்பு, இனிமை போன்ற மெல்லியல்புகளைப் பெண்ணினிடம் அமைத்தான். இந்த இயற்கையமைப்பின் பயனாக, மக்கள் வாழ்க்கையிலே குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆடவனுக்கு ஏற்பட்டது. அக் குடும்பத்தைப் பேணுகின்ற தனி உரிமை பெண்ணுக்கே சொந்தமாகிவிட்டது.

பேணுகின்ற தனி உரிமை பெற்றுள்ள பெண்ணினிடத்திலே, இரக்கமுடைய நெஞ்சும், இன்முகமும், பொறையும் குடிகொண்டிருக்கின்றன. மக்கள் இனத்தைப் பெருக்குவதற்கான மகவு அவளிடத்தே தோன்றி, பெண்மையினும் உயர்ந்த தாய்மை நிலையை அவளுக்கு அளிக்கும்போது, தான் ஈன்ற குழந்தையினிடத்திலே அவளுக்கு அன்பு ஊற்றெடுத்துப் பெருகுகிறது. அவ்வன்பு காரணமாக, குழந்தைக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யும்போது, அது தரும் இன்னல்களையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டி வருகிறது. தனக்கு என்ன வேண்டும் என்பதைச் சொல்லித் தெரிவிக்க அறியாத சிறு மகவு, எதற்கெடுத்தாலும் அழக் கற்றிருக்கிறது. எதற்காக அழுகிறதென்பதை நேரத்தையொட்டித் திட்டமாக அறிந்து அதற்கேற்ற பணிவிடை செய்வது தாயிடம் அமைந்துள்ள அருங் கலைகளில் ஒன்று என்றே சொல்லவேண்டும். அழுத குழந்தையை எடுத்துத் தாய் பாலூட்டிய பின்னும், அது சிறிது முனகிக்கொண்டேதான் இருக்கிறது. இந்தச் சிறு முனகலையும் நிறுத்த வேண்டி, அவள் குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி ஏதேனும் பாட்டுப் பாடுகிறாள்.

பாட்டுப் பாடினால், பாட்டைக் கேட்கிற சுகத்திலே ஈடுபட்டு இளங் குழந்தையானது மெய்ம் மறந்து உறங்கிப்போகும். இப்படிப் பாடுகிற பாட்டு, சிறப்பாக ஏதேனும் சொல்லமைந்த பாடலாகத்தான் இருக்கும் என்பதில்லை. பெரும்பாலும் வெறும் ஒலியாகவே இருப்பதுண்டு. நாவை அசைத்து, இனிய ஒலி எழுப்பினாலே போதும்; குழந்தை கேட்டு உறங்கிவிடுகிறது. இவ்வாறு நா அசைத்தலும் பாட்டுப் பாடுதலுமே தாலாட்டு என்று

*குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்காக, அன்னை தாலாட்டுப் பாடுகிறாள். வைஷ்ணவ பக்தரான பெரியாழ்வாரோ, உலகளந்த திருமாலையே குழந்தையாகப் பாவித்து அவருக்குத் தாலாட்டுப் பாடுகிறார். இந்திரன் முதலான தேவர்கள் குழந்தைக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். ஆனால், மாயையில் வல்ல கண்ணனின் அழுகை ஓயவில்லை. அதற்குக் காரணம் என்ன? அவன் யாரிடமிருந்தோ ஒரு பொருளை விரும்புகிறான். அவர் யார், என்ன பொருள்?*

வழங்கி வருகின்றன. (தாலு ஆட்டு, தாலாட்டு; தாலு-நா.)

உண்மையான பக்தி பூண்ட அடியவர்கள் இறைவனிடத்திலே எத்தனையோ விதங்களில் நெருங்கி உரிமை பாராட்டிச் சொற்களாலே குலவுகிறார்கள். ஆண்டான் அடிமை என்ற தொடர்பை வைத்துக்கொண்டு, தாம் அடிமையாயிருந்து, தமக்கு அவனுடைய அருள் வேண்டுமென்று அடியவர் அந்த ஆண்டவனிடத்திலே முறையிடுவது ஒரு வகை. இறைவனிடத்திலே நெருங்கிய தோழமை பூண்டு, அந்த பாவத்திலே, தமக்கு வேண்டுவனவெல்லாம் தரும்படி அவனைக் கேட்பது மற்றொரு வகை. எப்பொருட்குந் தலைவனான இறைவனை நாயகனாகப் பாவித்துத் தம்மை நாயகி நிலையிலே வைத்துக் குலவிப் பாடுவது இன்னும் சிறப்பானது. ஆனால், சீவிலிபுத்தூர்ப் பட்டரான விண்டு சித்தர்-பெரியாழ்வார் — இந் நிலைகள் அனைத்திலும் மேலான தொரு அனுபவத்தைத் தமிழ்ப் பாடல்கள் மூலமாக நமக்குக் காட்டுகிறார்.

பக்தியினாலே கனிந்த அவருடைய இதயமானது தாய்மை நிலையை அடைந்திருக்கிறது. திருமாலைப் பற்றி எண்ணுந்தோறும், அவருள்ளத்திலே அவன் ஆயர்பாடியில் அசோதை பெற்றெடுத்த பூவைப் புதுமலர் வண்ணனாகிய குழந்தைக் கண்ணன் கோலத்தோடேயே தோற்றுகிறான். தாயானவள் குழந்தையைக் கண்டுவிட்டால் கொஞ்சுவதற்குக் கேட்கவா வேண்டும்? ஆயர்பாடியில் கண்ணன் அவதரித்த சிறப்பையே பல பாடல்களால் பாடிப் பாடி இன்புறுகிறார் ஆழ்வார். பிறகு அத் தெய்வக் குழந்தையின் உருவ அழகை உள்ளங்கால் தொட்டு உச்சிவரைப் பாதாதி கேசமாகப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார்; தம் கற்பனையில் ஆயர்பாடிப் பெண்கள் அனைவரையும் அழைத்து அவ்வழகை ஒவ்வொன்றாகக் காட்டுகிறார்.

இவ்வாறு அவர் காட்டி வருகின்ற நிலையிலே, குழந்தைக் கண்ணன் அழுகின்றான் என்ற ஓர் எண்ணம் தோன்றிவிடுகிறது. ஆயர்பாடியிலே அளவற்ற மாயங்கள் செய்த அம் மாயன் அழுவதாக ஆழ்வார் தம் தாயுள்ளம் எண்ணியதில் வியப்பில்லை. அழுகையை ஓயப்படுத்துவதற்கு எளிதான வழி இல்லாமலா போய்விட்டது? உடனே அருமையானதொட்டில் ஒன்றை அங்கே கொண்டுவருகிறார் ஆழ்வார். தொட்டில் யார் தந்தது? மாயக் கண்ணனுக்கு யாரால் தான் தொட்டிலமைக்க முடியும்? உலகனைத்தையும் படைத்த பிரமனே, படைத்துப் படைத்துத் தேர்ந்த தன் கைகளால் அழகிய சிறு தொட்டிலை ஆணிப் பொன்னாலே செய்து, அதில் மாணிக்கமும் வயிரமும் இழைத்து, கொண்டுவந்து தருகிறான். மாயம் வல்ல கண்ணன் அதில் உறங்குவானா? அவனோ, உலகெல்லாந் தனது ஓரடியால் அளந்த பெரிய வனாயிற்றே? எந்தத் தொட்டிலில் அவனைக் கண்வளரச் செய்ய முடியும் என்றெல்லாம் ஆழ்வார் அஞ்சவேயில்லை. அழகிய குறள் வடிவங்கொண்ட வாமனன் அல்லவா, இக்கண்ணன்? தொட்டிலிலே கண்வளர்வதற்கு என்ன தடை? ஆழ்வார் இப்படி அவனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாடுகிறார்:

மாணிக்கங் கட்டி
வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னாற்செய்த
வண்ணச் சிறுதொட்டில்
பேணி யுனக்குப்
பிரமன் விடுதந்தான்;
மாணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே
தாலேலோ

தொட்டிலிற் கிடத்திய குழந்தைக்கு ஆழ்வார் பல அணிகலன்களைப் பூட்டவேண்டு மென்று ஆசைகொள்கிறார். அவர் நினைத்த மாத்திரத்திலே தேவர்க ளெல்லாம் ஓடிவந்து பற்பல அணி வகைகளையும் கொண்டுவந்து குவிக்கிறார்கள். (எல்லாம் கற்பனையில்தான்.)

பின்னஞ்சிறு காலில் அணிவதற்கேற்ற கிண்கிணி யொன்றை இந்திரன் தருகிறான். சங்கின் வலம்புரி யென்ன, சேவடிக்கேற்ற பல கிண்கிணிகளென்ன, அங்கைக்கேற்ற சரிவளை என்ன, அரையி லணிவதற்கு நாண், தொடர்கள் என்ன — இத்தனையும் தேவர்கள் கொண்டுவருகிறார்கள். குபேரனுக்குச் சொல்லவா வேண்டும்? மார்பிலணிவதற்கென்று மாலையும் ஐம்படைத் தாலியும் தருகிறான். கடல் வளங்களை யெல்லாம் — முத்து மாலை, உயர்ந்த சாதிப் பவளம், அருமையான சங்கு வளை ஆகியவற்றை வருணன் கொண்டுவருகிறான். ஈசனும் அழகுமிக்க அணிகலன் ஒன்றை அனுப்புகிறான்: மணிகளும் ஒளிமிக்க மாதுளம்பூவும் தெழ்கும் இடைவிரவிக் கோத்த அணி.

இத்தனை அணி வகைகளையும் குழந்தைக்கு ஆழ்வார் தம் கற்பனையிலே பூட்டி, 'அழேல், அழேல்' என்று தாலாட்டுகிறார். உலகமுற்றும் அளந்த அந்தக் குழந்தைக்கு என்ன குறைவு இருக்கப்போகிறது? எல்லாவற்றுக்கும் உடையவனான குழந்தை அது. எனவே, அழுவானேன்?

உடையார் கனமணியோ
டொன்மா துளம்பூ
இடைவிரவிக் கோத்த
எழில்தெழ்கி னோடு
விடையேறு காபாலி
ஈசன் விடுதந்தான்;
உடையாய்! அழேல்அழேல்
தாலேலோ
உலகம் அளந்தானே!
தாலேலோ.

இவ்வளவு பெற்றும் அம் மாயக் குழவி தன் அழுகையை நிறுத்தவில்லை, மேலும் அழுகிறானாம். அவனுக்கு ஏதோ குறையாயிருக்கிறது. என்னதான் ஆடையும் அணிகலனும் பிறர் கொண்டு வந்து தந்தபோதிலும், அவன் மனத்திலே திருப்தி பிறக்கவில்லை. அவனுக்கு உரியவளான திருமகள் ஒன்றும் அனுப்பவில்லையே! திருமகளிடத்து அவனுக்குள்ள ஈடுபாட்டை நாம் நன்றாக அறிவோம். மார்பி லல்லவா அவளைத் திருமால் வைத்திருக்கிறான்! அவ்வளவு அருமை பொருந்திய திருமகளின் அன்புக்கு அடையாளமான பொருள் ஒன்றும் இன்னும் வரவில்லை யென்றால், மாயன் பொறுப்பானா? இதனாலேதான் மீண்டும் அவன் அழுகிறானாம்.

திருமகளும், தன் காதலன் பிரிவைப் பொறுப்பாளா? உடனே விரைந்து அன்போடு ஒரு கையுறை அனுப்புகிறாள், ஆழ்வார் தொட்டிலிற் கண் வளர்த்திய மாயக் கண்ணனுக்கு. அது என்ன பொருள்? இந்திரனும் குபேரனும் வருணனும் அனுப்பிய அணிகலன்கள் போல ஏதேனும் அணிகலனா? அன்று.

இறை வழிபாட்டுக்கு என்ன வேண்டும்? ஆடம்பரமான கோயிலும் விரிவான பூஜைமுறைகளும் மேளவாத்தியங்களும் இசைப் பாடல்களுமா? பால் நெய் தேன் முதலிய அபிடேகப் பொருள்கள், பழம் பலவகை அடிசில் முதலிய நைவேத்தியங்கள், அழகான மணம் மிக்க மலர்கள், மலர்களாலான அலங்காரங்கள் — இவைகளா? இவைகளைச் செய்வார் செய்க; ஆனால் எல்லோருக்கும் இவை வேண்டுவன அல்ல. உண்மையான அன்பு — பக்தி — இதுமட்டும் ஒருவன் அகத்திலே இருக்குமானால், இவையொன்றும் வேண்டாம். வெறும் புல் இருந்தால் போதும்; பச்சை இலை இருந்தாலும் போதும். அது கொண்டு இறைவனை வழிபடலாம். 'யாவர்க்குமாம் ஒரு பச்சிலை' என்கிறார் அடியவர். அப் பச்சிலைக்கு அவன் வசப்பட்டு விடுவான்.

கிருஷ்ண துலாபாரம் என்ற சரித்திரம் இவ்வுண்மையை உணர்த்துகிறது. சத்தியபாமையின் அளவற்ற பொன்னுக்கும் மணிக்கும் ஆபரணத்துக்கும் கட்டுப்படாத கிருஷ்ணன் ருக்குமணியின் அன்புக்கு அடையாளமான ஒரு சிறு துளசியிலைக்குக் கட்டுப்பட்டுவிட்டான். எனவே, அவ்வளவு அன்பையும் உட்கொண்டுள்ள அத் துளசி யிதழின் அருமைதான் என்ன!

ஆழ்வாருடைய குழவிக் கண்ணனுக்கு, இத் துளசி இதழ்களால் ஒரு மாலை கட்டித் திருமகள் அனுப்புகிறாள். இதன் அருமையை யார்தான் சொல்ல முடியும்? காட்டிலே தழைத்த துழாயானபடியால், அருமையான மணமெல்லாம் அதனிடத்திலே பொருந்தியிருக்கிறது.

மேலும், அந்த மாலையிலே, திருமகளுடைய கைவேலையின் திறமெல்லாம் அமைந்திருக்கிறது:

காரார் நறுந்துழாய்
கைசெய்த கண்ணியும்
வாரார் செழுஞ்சோலைக்
கற்பகத்தின் வாசிகையும்
தேனார் மலர்மேல்
திருமங்கை போத்தந்தாள்;
கோவே! அழேல்அழேல்
தாலேலோ
குடந்தைக் கிடந்தானே
தாலேலோ!

காத்தற் கடவுளாகிய திருமாலுக்கு உலகத்திலுள்ள எல்லாச் செல்வமும் உரியது; அவனே செல்வத்துக்கு நாயகன். திருமகளுக்கு அவன் நாயகன் என்பது போலவே, உழவுச் செல்வம் அனைத்துக்கும் இடமாயிருக்கிற பூமியும் அவனுக்கே தேவியாகிறாள் என்று நம்மவர்கள் கொண்டிருக்கிறார்கள். திருமகள் கண்ணனுக்குத் தன் கையுறையை யனுப்பியதும், பூதேவி தானும் சில கையுறைகளை அனுப்புகிறாள்: கச்சு, சுரிகை, பொன்வளை, சுட்டி, தாளில் அணிவதற்காகப் பொற்பூக்கள் என்றெல்லாம் பல பொருள்களை அச்சுதனுக்கென்றே அவள் தருகிறாள்:

கச்சொடு பொற்சுரிகை
காம்பு கனகவளை
உச்சி மணிச்சுட்டி ஒண்தாள்
நிரைப் பொற்பூ
அச்சுதனுக் கென்று
அவனியாள் போத்தந்தாள்
நச்சு முலையுண்டாய்!
தாலேலோ
நாராயணா! அழேல்
தாலேலோ.

திருமகளையும் புவிமகளையும் இவ்வாறு எண்ணியும் அழைத்தும் தாலாட்டிய ஆழ்வாருடைய கலையுள்ளத்திலே, இந்தச் சக்திகளுக்

கெல்லாம் மூல சக்தியாகிய அன்னை பராசக்திக்கு இடமில்லாமற் போகவில்லை. கற்பனையிலே அழுகின்ற இளங் கண்ணன், அழுகையை நிறுத்திச் சிறிது பொழுது உறங்கவேண்டும். உறங்கி விழித்தெழுந்தவுடனே அவனை நீராட்டவேண்டுமென்ற கருத்தோடு பராசக்தியானவள் வந்து நிற்கிருள். குழந்தையின் உடம்பெல்லாம் திமிர்ந்து குளிப்பாட்டுவதற்கேற்ற நானப் பொடியும் மஞ்சளும் வைத்திருக்கிருள். நீராட்டியபின் கண்ணுக்கு அழகுபெற இடுவதற்கான அஞ்சனமும் நெற்றியில் திலகமிடுவதற்கான சிந்தூரமும் கொண்டுவந்திருக்கிருள்.

இவ்வளவையும் கற்பனை செய்துகொண்டு, ஐயா, அழேல் என்று ஆழ்வார் கண்ணனைத் தாலாட்டுகிருர் :

> மெய்திமிரும் நானப்
> பொடியோடு மஞ்சளும்
> செய்ய தடங்கண்ணுக்
> கஞ்சனமும் சிந்தூரமும்
> வெய்ய கலைப்பாகி
> கொண்டுவளாய் நின்ருள்
> ஐயா! அழேல் அழேல்
> தாலேலோ
> அரங்கத் தணையானே!
> தாலேலோ.

ஆழ்வார் தந்த தாலாட்டானது பின்னே தமிழிலக்கியம் விரிந்து வளர்வதற்கு எவ்வளவோ உதவியிருக்கிறது என்பதைக் காண்போம். பின்னுலே வந்த குலசேகராழ்வார், கணபுரத்திலெழுந்தருளியுள்ள காகுத்தனைக் கண்டு வழிபட்டபோது, அக் காகுத்தனை இராமன் சரிதத்திலே ஈடுபட்டு, அச் சரிதத்தையே பத்துப் பாடல் கொண்ட ஒரு தாலாட்டுப் பதிகமாகப் பாடியருளினர். பின்வந்த கவிஞர்களுடைய புதிய பிரபந்த வகைகளில் ஒன்ருன பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தில் 'தாலப் பருவம்' என்ற ஒரு பருவத்தை அமைத்து, குழந்தையைத் தாலாட்டுவதையே அப் பருவத்துக் குரிய பொருளாகக் கொண்டார்கள். இதுவுமன்றி, தெய்வங்கள் மீதும் ஆசாரியர்கள் மீதும் 'தாலாட்டு' என்ற பெயரோடு பாடப்பெற்ற நூற்றுக்கணக்கான தாழிசைகளைக் கொண்ட பிரபந்தங்கள் பின்னர்த் தோன்றியிருக்கின்றன. இவ்வளவையும் ஒரு புடைதழுவி, நாடோடிப் பாடலாகவும் வாய்மொழியாகவும் நம் தாய்மார் நாவில் வழங்கும் தாலாட்டுப் பாடல்களுக்குக் கணக்கில்லை.

இவ்விதமாக, முழுமுதற் பொருளான இறைவனையே குழந்தையாக ஏந்தியெடுத்துத் தாலாட்டுப்பாடி, அதன்மேல் அடியவர் உள்ளமெல்லாம் அன்பு வெள்ளம் கரை கடந்தோடவும் தமிழ் இலக்கியம் பல துறையிலும் விரிந்து வளரவும் துணை செய்த உத்தம பக்தரான ஆழ்வாரைத் தமிழுலகமானது "பெரியாழ்வார்" என்று ஆராமை மீதூர வியந்து போற்றுவதல்லது, வேறென்ன செய்யக் கிடக்கிறது?

*

**பக்தனும் மாயையும் :** 'பூனை தன் குட்டிகளைப் பற்களால் பிடிக்கும்போது அந்தக் குட்டிகளுக்குத் தீங்கு உண்டாவதில்லை. ஆனல் அது ஓர் எலியை அப்படிப் பிடிக்குமானல் அந்த எலி உடனே இறந்து போகிறது. இதைப்போலவே, மாயையானது மற்றவர்களைத் துன்புறுத்தியபோதிலும், பக்தனைத் துன்புறுத்தாது.'

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# சிவாஜி

## தையல் நூல்

*

இறக்குமதியாகும் எந்த 'பிராண்'டையும் போல் உறுதியும் நம்பிக்கை யானதுமாகும்.

*

இந்தியாவில் தயாரித்தோர்:

**ஆக்மி திரெட் கோ., லிமிடெட்,**

பாங்க் ஆவ் பரோடா பில்டிங்
அப்பாலோ தெரு, பம்பாய்.








# டோங்ரே

## பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டானிக்

பற்கள் வளர
உதவி செய்கிறது



# சக்தி

வருட சந்தா ரூ. 6/-
தனிப் பிரதி 0/8

கீழ்க்கண்ட ஊர்களுக்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

சீயாழி, கல்லல்
ஸ்ரீரங்கம், திண்டுக்கல்
பழநி, பொள்ளாச்சி
மேட்டுப்பாளையம்

விவரங்களுக்கு எழுதவும்:

மானேஜர்:

சக்தி
115-இ, மோபரீஸ் ரோட்
ராயப்பேட்டை

தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய கம்பெனி

# ஹிந்துஸ்தான்

## கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்

### முன்னேற்றத்தின் நிலை

| | | | |
|---|---|---|---|
| 1942ளுத்தில் புதிய பாலிஸிகள் | ... | ரூ. | 2,88,05,001 |
| அமுலிலுள்ள மொத்த வியாபாரம் | ... | ரூ. | 19,36,75,434 |
| ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி ... | ... | ரூ. | 4,72,89,810 |
| மொத்த ஐவேஜிகள் ... | ... | ரூ. | 5,18,19,442 |

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும் :

மதராஸ் பிராஞ்சு :

"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"

107, அரமனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்

# பேபி பிராண்ட்

BABY BRAND PURE GHEE :: RAJAM & Co. COIMBATORE

TRADE MARK

## சுத்தமான நெய்

### சாப்பாட்டிற்கும் பட்சணங்களுக்கும் இன்றியமையாதது

புதிய வெண்ணையைக் கொண்டு நூதன சாதனங்களால் நவீன சாஸ்திர முறையில் கைதேர்ந்த நிபுணர்களைக் கொண்டு பக்குவமாயும் பரிசுத்தமாயும் தயாரிக்கப்பட்டது, எல்லா இடங்களிலும், பிரபல வியாபாரிகளிடமும், கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும் கிடைக்கும், எங்களிடம் 9 பவுண்ட் கொண்ட டின் வரவழைத்து ஒருமுறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

### குதூகல வைபவங்களுக்கும் பண்டிகைகளுக்கும்

எம் அபிமானம் கொண்ட வியாபாரிகளுக்கும் வாடிக்கைக்காரருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்தும் உரித்தாகுக

THIS IS OUR SPECIALITY
ROBMG

இதுவே எமது ஸ்பெஷல் ரகம்

## ராஜம் & கோ :: கோயமுத்தூர்



# ஓடாத கடியாரம்

பரதன்

மஞ்சுளாவுக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கலாம். நல்ல பெண். எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்ளுவாள். ஒரு சிறு உயிருக்குக் கூட அவள் தீங்கு இழைத்ததில்லை.

அவர்கள் வீட்டில் ஒரு கடியாரம் இருந்தது. மஞ்சுளாவுக்கு அந்தக் கடியாரத்தின் மேல் உயிர். அது ஓடும் சத்தத்தைத் தாலாட்டுப் போல நினைத்து, வெகு நேரம் கேட்டுக் கொண்டு இருப்பாள். அதைத் தினந்தோறும் துடைத்து மினு மினுவென்று வைத்திருப்பாள். இவ்வளவு செய்தும், அந்தக் கடியாரத்துக்குக் கொஞ்சமும் நன்றி இல்லை. அது சரியாக ஓடுவதில்லை. நினைத்தால் ஓடும், இருந்தாப்போலிருந்து நின்று விடும்.

அன்றிரவு, அவள் தகப்பனார் வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தார். மணி என்ன என்று சுவரைப் பார்த்தார். கடியாரம் ஆறிலேயே நின்றிருந்தது. அவருக்கு அசாத்தியமான கோபம் வந்தது. "இந்தக் கழுதையால் ஒரு பிரயோஜனமும் இல்லை. இடத்தைக் காத்துக் கொண்டு நிற்கிறது. சாவி கொடுத்தாலும் ஓட மாட்டேன் என்கிறது. இதைக் கொண்டுபோய், பேரீச்சம் பழக்காரனிடம் கொடுத்தால், அவன் கொஞ்சம் பேரீச்சம் பழமாவது கொடுப்பான்" என்றார், ரொம்பச் சலிப்பாக.

மஞ்சுளாவுக்குப் பயம் உண்டாயிற்று. தகப்பனார் அதைப் பேரீச்சம் பழத்துக்கு விற்றாலும் விற்பார். அவரைத் தட்டிச் சொல்லுவதற்கு யார் இருக்கிறார்கள்? ஆகையால், மெதுவாக "அப்பா, ஓடி ஓடி அது களைத்து விட்டது போலிருக்கிறது. கொஞ்ச நாள் ஓய்வு கொடுத்தால், அப்புறம் சரியாய்ப் போகும். அது இவ்வளவு காலம் உழைத்திருக்கிறது. கடைசிக் காலத்தில் நாம் காப்பாற்ற வேண்டாமா?" என்றாள்.

"சரிதான், போ. உன் வேலையைப் பார். தூங்கு போ" என்று அவள் மேல் சீறி விழுந்தார் தந்தை.

புருஷ முள்ளின் ஓட்டத்தைக் கண்டு மனைவி முள்ளுக்கு எரிச்சலாயிருக்கிறது. புருஷன் ஓடியாடி வேலை செய்ய வேண்டாமா? இல்லாவிட்டால், வீடே பாழாகி விடாதா? இது தெரியவில்லை சின்ன முள்ளுக்கு. ஆனால், கெட்டிக்கார மஞ்சுளா அதற்கொரு யுக்தி செய்து விட்டாள்.

மஞ்சுளா படுத்துக் கொண்டாள். "இன்னும் ஒரு தடவை பார்க்கிறேன். சரியாய்ப் போனால், சரி. இல்லையானால் எறிந்தே விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு, கடியாரத்துக்குச் சாவிகொடுத்தார். தந்தை முள்ளை எட்டு மணியில் திருப்பி வைத்துவிட்டு, தாமும் படுக்கப் போய் விட்டார். கடியாரம் ஓடத் தொடங்கியது. அந்த ஓசை மஞ்சுளாவின் காதுக்குச் சங்கீதம் போலிருந்தது. அதில் மெய்மறந்தவாறு, தூங்கிப் போனாள்.

நள்ளிரவில் அவள் தூக்கம் கலைந்தது. மணிக்கூண்டுக் கடியாரம் பன்னிரண்டு அடித்தது. அவள் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து, விளக்கேற்றி, கடியாரத்தைப்பார்த்தாள். அது ஓடவில்லை. அவள் தூங்கிக் கொண்டிருந்ததைப் போல, கடியாரமும் தூங்கிக் கொண்டிருந்தது! அவளுக்கு உண்டான வருத்தத்துக்கு அளவில்லை. "ஐயோ, அப்பா இதைப் பேரீச்சம் பழக் கடைக்காரனுக்கு விற்கப் போகிறார் என்பது இந்த மட்டசாம்பிராணிக்குத் தெரியவில்லையே!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். விளக்கை அணைத்து விட்டு, மறுபடியும் படுத்தாள்.

சற்று நேரம் கழிந்தது. எங்கும் ஒரே இருட்டாய் இருந்தது. அந்த இருட்டில் யாரோ இருவர் கிசுகிசு என்று பேசுவது போலிருந்தது. மஞ்சுளா போர்வையை அகற்றிவிட்டு, உற்றுக் கேட்டாள்:

"போதும், போதும், உங்களுக்கு வாழ்க்கைப் பட்டதிலிருந்து, நான் ஒரு நாளாவது சுகத்தைக் கண்டதில்லை. யாராலாகிறது, தினந்தோறும் இந்த மாதிரி ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் ஓடுவதற்கு? இரண்டு பேரும் ஓரிடத்தில் உட்கார்ந்து, ஆர அமரப் பேசுவதற்காவது நேரமிருக்கிறதா?" என்றது ஒரு பெண் குரல்.

"என்ன செய்வது, நம் தலையில் பகவான் அந்த மாதிரி எழுதி யிருக்கிறாரே! உள்ளதை நினைத்துத் திருப்தியடைய வேண்டியது தான். நாம் மணிக்கொரு முறை சந்திக்கிறோமே, அது போதாதா?" என்றது ஆண் குரல்.



வேறென்றுமில்லை; கடிகாரத்தின் பெரிய முள்ளுக்கும் சிறிய முள்ளுக்கும் நடக்கும் வாக்குவாதந்தான்.

"அதில் என்ன பிரயோஜனம்? ஒரு நிமிஷம் சந்திக்கிறோம், மறு நிமிஷம் பிரிந்து விடுகிறோம்."

"அதற்காக, ஓடாமலே இருந்து விடுவதா? அவரவர் வேலையை அவரவர் செய்து தானே ஆகவேண்டும். இந்த மாதிரி அடம் பண்ணினால் நமக்குத்தான் ஆபத்து. நேற்றிரவு வீட்டுக்காரர் என்ன சொன்னார், தெரியுமா?"

"என்ன சொன்னார், சொல்லுங்களேன்!" என்றது சின்ன முள்.

"நம்மைப் பேரீச்சம்பழக் கடைக்காரனுக்கு விற்று விடப் போகிறாராம். நீ இந்த மாதிரி இராப் பகலாய் உறங்கிக் கொண்டிருந்தால் நமக்கு அந்தக் கதிதான் கிடைக்கும்" என்றது பெரிய முள்.

"நீங்கள் சொல்லுவது பொய். என்னை மிரட்டுகிறீர்கள்" என்றது சிறிய முள்.

எல்லாவற்றையும் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த மஞ்சுளா, திடீரென்று எழுந்து, "இல்லை, இல்லை, உன் புருஷன் சொல்லுவது நிஜந்தான், அம்மா. நேற்றிரவு, அப்பா அந்த மாதிரியே சொன்னார்" என்றாள்.

இந்த மாதிரி யாராவது நடுவில் குறுக்கிடுவார்கள் என்று

### இந்திய சமஸ்தானங்கள்

இந்தியாவில் மொத்தம் 562-சமஸ்தானங்கள் இருக்கின்றன. இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில், சமஸ்தானங்கள் ஐந்தில் இரண்டு பங்காகும். ஜனத்தொகையில், ஐந்தில் ஒரு பங்கு சமஸ்தான மக்கள். இந்திய சமஸ்தானங்களின் அளவும் பொருளாதார நிலைமையும் வெவ்வேறாயிருக்கின்றன. விஸ்தீரணத்தில் ஹைதராபாத்தும் காஷ்மீரமும் சமம். ஆனால், ஹைதராபாத்தின் ஜனத் தொகை போர்ச்சுகல் ஜனத் தொகையைக் காட்டிலும் மற்றொரு பங்கு அதிகம். வருஷ வருமானம் 70-ஆயிரம் பவுன். ஆனால், குஜராத்திலுள்ள பில்பாரி என்ற சமஸ்தானத்தின் விஸ்தீரணம் என்ன தெரியுமா? 1.65-சதுர மைல். ஜனத்தொகை 27-பேர். வருஷ வருமானம் கிட்டத்தட்ட ஏழு பவுன். அதுவும் ஒரு சமஸ்தானம், சமஸ்தான உரிமைகளையும் அநுபவித்து வருகிறது!

இரண்டு முள்ளும் எதிர்பார்க்கவில்லை. அவை பயந்து போய், வாயை மூடிக்கொண்டன. அவைகளின் குடும்பச் சச்சரவும் ஓய்ந்தது. சிறிய முள்ளின் பதிலுக்காக மஞ்சுளா வெகு நேரம் காத்திருந்தாள். ஆனால், அது பேசவேயில்லை. அவள் மறுபடியும் எழுந்து போய், விளக்கேற்றி, கடியாரத்துக்குச் சாவி கொடுத்து விட்டு, வந்து படுத்துக் கொண்டாள். அது ஓடத்தொடங்கியது. 'டக் டக்' என்ற ஓசை மீண்டும் ஆரம்பமாயிற்று.

காலையில் எழுந்து பார்த்தாள். ஓடிக் கொண்டேயிருந்தது. மத்தியானம் பார்த்தாள். அப்போதும் ஓடிக்

கொண்டிருந்தது. இனி அது நிற்காது என்ற தைரியம் அவளுக்கு உண்டாயிற்று.

ஆனால், சாயங்காலத்தில், சின்ன முள் பெரிய முள்ளோடு சிக்கிக் கொண்டு, கொஞ்சம் சண்டி செய்யும் போல் இருந்தது. தகப்பனார் இன்னும் பார்க்கவில்லை. மஞ்சுளா ரேழியில் போய் நின்று கொண்டு, "ஓட்டை உடைசல் பித்தளைப்பாத்திரங்களுக்குப் பேரீச்சம் பழம் வாங்கலியா பேரீச்சம் பழம்?" என்று பொய்க் குரலில் கூவினாள். அதைக் கேட்டுப் பயந்து, சின்ன முள் ரொம்ப மரியாதையாய் ஓட ஆரம்பித்தது.

"மஞ்சுளா! என்ன விஷமம் இது? கடியாரம்தான் சரியாய் ஓடுகிறதே. அதை நான் பேரீச்சம்பழக்காரனிடம் போடப்போவதில்லை. நீ வந்து உன் பாடத்தைப் படி. இல்லையானால் உன்னை..........." என்றார் தகப்பனார்.

"பேரீச்சம்பழக்காரனிடம் போட்டு விடுவீர்களோ?" என்று கேட்டு, சிரித்துக் கொண்டே உள்ளே வந்து, பாடம் படிக்கத் தொடங்கினாள் மஞ்சுளா.

*

## யார்மேல் குற்றம்?

ஜெஹோஸூவா என்பவர் அரேபியாவிலே பிரபல மத குருவாய் இருந்து வந்தார். அவர் கருணை மிக்கவர். ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்வதையே தம்முடைய வாழ்க்கையின் லட்சியமாய்க் கடைப்பிடித்திருந்தார்.

ஒரு நாள், வேற்றூரான் ஒருவன் அவருடைய வீட்டுக்குப் போய், "படுப்பதற்கு இடம் வேண்டும்" என்று கேட்டான். மத குரு அவனை உள்ளே அழைத்துக் கொண்டுபோய் அவனுக்குச் சாப்பாடு போட்டு, பரணுக்கு அழைத்துச் சென்று படுக்கை விரித்துக் கொடுத்தார். அவன் படுத்துக்கொண்டான்.

நள்ளிரவில், எல்லோரும் உறங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், அவன் எழுந்து, பரணி விருந்த சில சாமான்களை எடுத்துக்கொண்டு கீழே இறங்க முயன்றான். ஆனால், நல்லவேளையாக அங்கே ஏணி இல்லை. அவன் படுத்துக்கொண்ட பிறகு, இரவில் அவன் இறங்க முயன்று தவறி விழுந்துவிடாதிருப்பதற்காக, மத குரு ஏணியை அகற்றிவிட்டார். திருடன், ஏணியிருக்கும் என்று நினைத்துக் கால் வைத்தவன், திடீரென்று நழுவிக் கீழே விழுந்தான்.

சத்தத்தைக் கேட்டு, மத குருவும் அவருடைய குடும்பத்தாரும் ஓடி வந்தார்கள். திருடன் கீழே விழுந்து கால் ஒடிந்து கிடப்பதைக் கண்டார்கள்.

மதகுரு திருடனைப் பார்த்து, "என்னப்பா, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா?" என்று கேட்டார்.

திருடன் வருத்தம் தோய்ந்த குரலில், "சாமி, என்ன இருந்தபோதிலும், உங்களைப்போன்ற அந்தஸ்தில் இருக்கும் ஒருவர் மற்றவர்களை நம்பாமல் நடுராத்திரியில் ஏணியை அகற்றிவிடுவார் என்று நான் நினைக்கவேயில்லை" என்றான்.



# வானவில்

ரா. ஸ்ரீ.

மண்ணைக் கடந்து வானம் போம்
வண்ணப் பாலம் வானவில்.
கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள்
காட்சி யளிக்கும் வானவில்.

விண்ணை அளக்க விரிந்திட்ட
விரல்போல் வளைந்த வானவில்.
எண்ணும் பஞ்ச வர்ணங்கள்
எடுத்துக் காட்டும் வானவில்.

சுட்டெரிக்கும் சூரியன்
சூடு மழையால் ஆறினான்.
இட்டிருந்த வானவில்
இடத்தில் மயங்கி மாறினான்.

தங்க ஒளியால் மின்னிய
தளிர்த்த சோலை பார்க்குமுன்,
எங்கே அந்த வானவில்?
யார் எடுத்துப் போயினார்!

# புத்தக உலகம்

**காரும் கதிரும்:** ஆசிரியர்: ரவீந்திரநாத தாகூர். மொழிபெயர்த்தோர்: த. நா. குமாரஸ்வாமி, த. நா. சேனாபதி. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2.

இதில், ரவீந்திரநாத தாகூர் எழுதிய ஏழு சிறுகதைகள் அடங்கியிருக்கின்றன. சிறுகதை, மேல் நாட்டுச் சிருஷ்டியே என்றாலும், தாகூர் தமக்கென்று வகுத்துக் கொண்ட ஒரு பாணியிலேயே கதை சொல்லுகிறார். அதில் முற்றிலும் கீழ்நாட்டுப் பண்பே கமழ்கிறது. அவை பெரும்பாலும் நடுத்தர வகுப்பினரின் வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. இந்தத் தொகுதியில் அடங்கியிருக்கும் கதைகளுள், 'காரும் கதிரும்', 'இடம் இருக்கிறது', 'மனைவியின் கடிதம்' மூன்றும் குறிப்பிடத்தக்கவை. மொழியலங்காரமும் உணர்ச்சிப் பெருக்கும் மிகுந்து, மனத்தை மயக்குகிறது 'இடம் இருக்கிறது' என்னும் கதை. மற்றக் கதைகளிலும், தாகூரின் மேதையைப் புலப்படுத்தும் பல அம்சங்கள் இருக்கின்றன. படிக்கும்போது ஒரு கவி எழுதிய கதைகள் என்ற நினைவு அடிக்கடி தோன்றும் முறையில் கவிதா ரசம் பரிபூரணமாக நிறைந்திருக்கிறது. பொதுவாக எல்லாக் கதைகளிலுமே மொழிபெயர்ப்பு, சரளமான இனிய தமிழ் நடையில் அமைந்திருக்கிறது.

**நாடகமணி மோலியர்:** ஆசிரியர்: ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ 0—13—0.

ஸ்ரீ மோலியர், பிரெஞ்சு நாடகாசிரியர்களுள் தலைசிறந்தவர். அவருடைய வரலாறும், அவர் இயற்றிய ஒரு நாடகத்தின் மொழிபெயர்ப்பும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. நாடகத்தின் பெயர் 'காதல் வைத்தியன்'. இதில், ஆடம்பரப் பிரியர்களான போலி டாக்டர்களை மோலியர் நன்றாய்ப் பரிகாசம் செய்கிறார். உயர்தர ஹாஸ்யம் மிக்க நாடகம். ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அழகிய தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

**சிறை அனுபவம்:** ஆசிரியர் ஆஸ்கார் ஒயில்ட். மொழிபெயர்த்தவர்: வி. ஆர். எம். செட்டியார். வெளியிட்டோர்: ஸ்டார் பப்ளிகேஷன்ஸ், காரைக்குடி. விலை ரூ. 1—4—0.

ஆஸ்கார் ஒயில்ட் ஐரிஷ் கவிஞர், கதாசிரியர், நாடகாசிரியர். 1895-ஆம் வருஷம் அவர் சிறைவாசம் செய்ய நேர்ந்தது. சிறையிலிருந்தபோது அவர் மனத்தில் தோன்றிய எண்ணங்கள், உணர்ச்சிகள், கவலைகள் முதலியவைகளை ஒரு புத்தக வடிவில் எழுதினார். அதுவே இந்நூல். ஸ்ரீ ஒயில்டின் வசனநடை, அழகும் இனிமையும் மிக்கது. அதை மொழிபெயர்ப்பதில் ஸ்ரீ வி. ஆர். எம். செட்டியார் மிக்க சிரமப்பட்டிருக்கிறார். மொழிபெயர்ப்பு நல்ல முறையில் அமைந்திருக்கிறது.

**நர்மதா பி. ஏ:** ஆசிரியர்: வஸந்தன். விற்பனை உரிமையாளர்: வி. சுப்ரமண்யம், 'கல்கி' ஏஜண்ட், தெப்பக்குளம், திருச்சி. விலை ரூ. 2.

இதில் மொத்தம் பதினாறு கதைகள் இருக்கின்றன. முதல் கதை தற்காலப் பிரச்னையை ஆதாரமாகக் கொண்டதாகும். திருட்டுத்தனமாக அரிசி மூட்டைகளைச் சேகரித்து வைத்து, அதிக விலைக்கு விற்கும் ஒரு வியாபாரியின் வாழ்க்கையிலே நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சித்தரிக்கிறது. எல்லாக் கதைகளும் பொழுதுபோக்குக்கு உரிய முறையில் ரசமாக அமைந்திருக்கின்றன. ஆசிரியரின் ஹாஸ்யம் தனித்தன்மை வாய்ந்ததாயிருக்கிறது. புத்தக அமைப்பு, கவர்ச்சியளிக்கிறது.

**ஸ்ரீ அரவிந்தர்:** ஆசிரியர்: ப. கோதண்டராமன். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், சென்னை-மதுரை. விலை ரூ. 2—0—0.

இந்நூலின் இரண்டு பதிப்புகள் ஏற்கெனவே செலவழிந்து இப்போது மூன்றும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. இதில் ஸ்ரீ அரவிந்தருடைய வாழ்க்கை வரலாறும் அவரது யோக முறையும் அவருடைய முயற்சிகளால் உலகத்துக்கு உண்டாகும் பயனும் அடங்கியிருக்கின்றன. ஏறக்குறைய அரவிந்தரைப் பற்றிய எல்லா விவரங்களும் இதில் அடங்கியிருக்கின்றன என்று சொல்லலாம். அற்புதமான இந்த வாழ்க்கைச் சரித்திரத்தை, ஸ்ரீ கோதண்டராமன் எளிய நடையில் ரசமாக எழுதியிருக்கிறார். இந்தப் பதிப்பில் சில புதிய விஷயங்களையும் சேர்த்திருக்கிறார்

**கதைக் கொடி (மலர் 1):** வெளியிட்டோர்: ஆசிய ஜோதிப் பிரசுரம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2—8—0,

தமிழ் நாட்டுச் சிறு கதை வளர்ச்சிக்கு இந்நூல் மற்றோர் அறிகுறியாகும். சிறுகதையுலகில் புகழ்பெற்று விளங்கும் பதினொன்கு எழுத்தாளர்களுடைய கதைகள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. இதில், சிறுகதையின் பல்வேறு அம்சங்களைக் காணலாம். ஆசிரியர்கள் நுட்பமான விஷயங்களைச் சாமர்த்தியமான முறையில் கையாண்டிருக்கிறார்கள். பி. எஸ். ராமையாவின் 'கார்னிவல்', சிதம்பர சுப்ரமண்யன் எழுதியிருக்கும் 'அலமேலுவின் அஹிம்சை', ரா. ஸ்ரீ. தேசிகன் எழுதியிருக்கும் 'பொய்', பி. எம். கண்ணனுடைய 'தெய்வ சங்கல்பம்', புரசு பாலகிருஷ்ணனின் 'நாஸ்திகன்'—நல்ல கதைகள். மஞ்சேரி ஈசுவரன் எழுதியிருக்கும் 'ராட்டின'த்திலுள்ள வர்ணமும் நடையழகும் உணர்ச்சிச் செறிவும், மனங் களிக்கச் செய்கின்றன. யாவுமே படிப்பதற்கினிய கதைகள்.

**காளி:** மொழி பெயர்த்தவர்: க. நா. சுப்ரமண்யம். வெளியிட்டோர்: ஜோதி நிலயம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை: ரூ. 0—8—0.

இது ஒரு ஜெர்மன் காதல் கதை. பால்பான் ஹெய்ஸே என்ற ஆசிரியர் எழுதியது. கதாநாயகி வீணை வாசிக்கவில்லை; கதாநாயகன் சிற்பம் செதுக்கவுமில்லை. பூ, 'புசுப்பம்' ஒன்றும் கிடையாது. எளிய நிகழ்ச்சிகள்; எளிய காட்சிகள். மிக்க அழகான காதல் கதை. மனங் குழையச் செய்யுமாறு உணர்ச்சிகளை ஆசிரியர் எழுப்புகிறார். அதற்காகச் சிக்குச் சிடுக்குகள் நிறைந்த வலைப் பின்னல் ஒன்றையும் அவர் பின்னவில்லை. எளிய கதை. கதையேயில்லை என்று கூடச் சொல்லலாம். ஆனால், படிப்பவரின் சுவாரஸ்யம் துளியும் குன்றவில்லை. தெள்ளத் தெளிந்த அழகான மொழி பெயர்ப்பு.

**சமூகத்தில் ஸ்திரீகளின் நிலைமை:** வெளியிட்டோர்: தமிழ் நாடு அகில பாரத சர்க்கா சங்கம், திருப்பூர். விலை குறிப்பிடவில்லை.

"பாவம், ஸ்திரீ ஓர் அடிமையாகவே இருக்கிறாள். ஸ்திரீகள் தங்கள் மூக்கையும் காதையும் குத்திக் கொள்ளுவதை, அவர்கள் தாங்களாகவே ஏற்படுத்திக் கொள்ளும் அடிமைச் சின்னமாக நான் கருதி வந்திருக்கிறேன்" என்று காந்திஜி ஒரு கட்டுரையில் கூறுகிறார். பெண்கள் முன்னேற்றம் சம்பந்தமாகக் காந்திஜி கூறியிருக்கும் பல அருமையான கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகள் இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இது காந்தி ஜயந்தி வாரத்தில், பஞ்சாலைத் தொழிலாளர் நலனைக் கோரி, ஆமதாபாத் மஜூர் மகாஜன சபையார் ஹிந்தியில் வெளியிட்ட நூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். ஆண் பெண்கள் எல்லோரும்—முக்கியமாக, சமூக சீர்திருத்தக்காரர்கள் அனைவரும்—படித்துப் பயன்பெற வேண்டிய அருமையான புத்தகம்.

**கம்பன் மலர்:** சென்னைக் கம்பன் கழக வெளியீடு. விற்பனை உரிமையாளர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: மலிவுப் பதிப்பு ரூ. 2—0—0; உயரிய பதிப்பு ரூ. 2—8—0.

தமிழரின் இலக்கியச் செல்வமான கம்ப ராமாயணத்தின் சுவையையும் நுண் பொருளையும் விளக்கி, தக்க அறிஞர்கள் எழுதிய பதினறு கட்டு

ரைகளும், நாமக்கல் ராமலிங்கம், தேசிக விநாயகம் பிள்ளை இருவரும் தனித் தனி பாடிய சுவையுள்ள இரண்டு பாடல்களும் இதில் அடங்கி யிருக்கின்றன. மகாமகோபாத்தியாய பண்டித மணி கதிரேசச் செட்டியார், நாவலர் பண்டித வேங்கடசாமி நாட்டார், ராவ் சாஹிப் வையாபுரிப் பிள்ளை, ராவ் சாஹிப் மு. ராகவையங்கார், ரா. பி. சேதுப் பிள்ளை, சுவாமி சுத்தானந்த பாரதியார், டி. கே. சிதம்பரநாத முதலியார், மு. அருணாசலம், பி. ஸ்ரீ., கி. வா. ஜகந்நாதன் முதலிய பலர் வெவ்வேறு அம்சங்களை அழகுபட விளக்கி யிருக்கிறார்கள். மிக நேர்த்தியான பதிப்பு.

**கவிஞன் குரல் :** ஆசிரியர்: நாமக்கல் வெ. ராமலிங்கம். வெளியிட்டோர்: தமிழ்ப்பண்ணை, தியாயகராய நகர், சென்னை. விலை ரூ. 3—0—0.

இந்த யுத்தத்தினால், பல புதிய கவிஞர்கள் இங்கிலாந்திலே தோன்றி விட்டார்களாம். அதில் ஆச்சரியமில்லை. ஏனெனில், பெரிய கொந்தளிப்புகள் ஏற்படும்போது, உணர்ச்சிமிக்க ஆத்மாக்கள் கவிஞராக வெளிவருவது சகஜமாகும். காந்திஜியின் இயக்கத்தால், நம் நாட்டிலே முன்னணிக்கு வந்த கவிஞர் நம் ராமலிங்கம் இல்லையா? உணர்ச்சிப் பெருக்கும், ஆனால் அதிலே ஒரு சாந்தமும், பணிவும், ஆனால் அதிலே எவருக்கும் தலை குனியாத ஓர் உறுதியும், சுதந்தர சிந்தனையும், ஆனால் அதிலே பழமையில் தோய்ந்த ஒரு பண்பாடும் ஒரு கவிஞனின் சிறந்த லட்சணங்கள் என்றால், நாமக்கல் கவிஞர் அவைகளைப் பூரணமாய்ப் பெற்றிருப்பவர். விருப்பு வெறுப்பின்றி, தாம் கண்ட உண்மைகளையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் தம்முடைய வசனங்களிலும் கவிகளிலும் அவர் நிறைத்திருக்கிறார். காந்தியமே, அவருடைய ஊன்றுகோல். கட்டுரைகள், கவிகளில் எல்லாம், பெரும்பாலும் அதன் சாயை தெளிந்தோ கரந்தோ படர்ந்திருக்கும். காதல், காமம், கற்பு, தமிழிசை, சமதர்மம், கலை அரசியல், அஹிம்சை, பிராம்மண – பிராம்மண ரல்லாதார் இயக்கம் முதலிய பல்வேறு பொருள்கள் குறித்தும், தெளிந்த பார்வையோடு, கவிதை அல்லது கட்டுரை உருவில், அவர் வாக்கு இந்நூலிலே நிறைந்திருக்கிறது. ஆம்; இது கவிஞனின் குரல்தான். இதை ஒவ்வொரு தமிழனும் படித்து, பாரபட்ச முறையில் சிந்தித்தார்களானால், பயன் காணுவது நிச்சயம்.

**இதுவும் ஒரு பிரகிருதி :** ஆசிரியர் : நாடோடி, தியாகராயநகர், சென்னை. விலை : ரூ. 2—8—0.

வாழ்க்கையிலே சில பேர்களைப் பார்த்தாலே நமக்குக் கொஞ்சம் நகைச்சுவை உண்டாகிவிடும். அந்த மாதிரி பல ரக மனிதர்களைப்பற்றிய சித்திரங்களை, ஆசிரியர் தீட்டியிருக்கிறார். 'வாயாடி வராகசாமி', 'அடுத்த வீட்டு அண்ணா முத்து', 'குண்டுத் தாத்தா', 'சாப்பாட்டு ராமன்', 'குல்லாப் பேர் வழி' என்ற பேர்களைக் கேட்டவுடனேயே, நபர்களை நாம் உருவகம் செய்து விடலாம். முக்கியமாய் அந்த அண்ணாமுத்துவின் கிராமபோன் வியாபாரம் மாதிரி அசட்டுச் சமத்துகளை, நாம் ரசிக்காமலிருக்க முடியாது.

**சத்தியமூர்த்தி :** பதிப்பாசிரியர்கள் : எஸ். நடராஜன், வி. ஆர். ராதா கிருஷ்ணன். வெளியிட்டோர் : விவேக சிந்தாமணி, மயிலாப்பூர், சென்னை. விலை : ரூ. 1—0—0.

எத்தனையோ இடுக்கண்களுக்கும் அவதூறுகளுக்கும் ஆளாகியும் உயிருள்ள மட்டும் தேசியமே மூச்சுக் காற்றாய், காங்கிரஸுக்கே சேவை செய்து, ஆவி துறந்த மேதை திரு. சத்தியமூர்த்தி. அவரைப் பற்றி, திரு. முத்துரங்க முதலியார், டாக்டர் சுப்பராயன், பாஷ்யம், ஐயகர், ஸி.பி., சங்கு சுப்பிரமணியம் முதலிய பலரின் அபிப்பிராயங்களும் குண வர்ணனைகளும் இந்தப் புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. அழகிய மூவர்ணத் தேசியக் கொடியைப் பகைப் புலனாய்க் கொண்ட சத்திய மூர்த்தியின் தத்ரூபமாய் ஓவியர் 'ஆர்யா' தீட்டிய படம் அட்டையை அலங்கரிப்பது, புத்தகத்துக்கு ஒரு வசிகரம் தருகிறது.

574



# சக்தி

மாத வெளியீடு

B HOUSE FOR ARTISTS



Balu Bros
P. S. A.
சுப்ரமணிய செட்டி & கம்பெனி
தங்கம், வெள்ளி நகை வியாபாரிகள்
32, 33, கீழக்காவணிமூல வீதி, மதுரை. தந்தி: CASH



கலைவாணிக்கு

ஸ்ரீமதி என். வி.

## வஸந்த கோகிலத்தின்

# கீதாஞ்சலி

N. 18229

ஆர்வத்தியால்
விருத்தம் 2 பாகங்கள்
(ஸ்வாமி சுத்தானந்த பாரதி)
ராகமாலிகை

முன் வெளியிட்ட
அரிய ரிகார்டுகள்

N. 18206
ஞானகுருபர
பல்லவி & ராகமாலிகை

N. 18207
இந்த வரம் கரஹரப்ரியா
உதயசூந்தரி விருத்தம்

N. 18217
குழலோசை
ஆசைகொண்டேன்

N. 18219
ஆனந்த நடனம்
2 பாகங்கள் காம்போதி

*

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சிறந்த சங்கீதம்

# "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சீரிய ஒலிப்பதிவு

# உங்கள் தொழிலாளிகளுக்கு நீங்கள் செய்யும் நன்மைகள்



எவ்வளவோ உண்டு. அதில் முக்கியமானவைகளில் ஒன்று அவர்களை இன்ஷ்யூர் செய்வது தான். அவர்கள் பெறும் ஊதியத்திலிருந்து தாங்களாகவே இன்ஷ்யூர் செய்து கொள்வதை எதிர்பார்க்க முடியாது. ஆனால் முதலாளியாகிய நீங்கள் அவர்களின் பேரில் ஒருமிக்க பாலிஸிகள் எடுத்து, சிறு தொகைகளில் ப்ரிமியம் கட்டி அவர்களுடைய எதிர்கால வாழ்வையும் சந்தோஷமாக இருக்கச் செய்யலாம். அதனால் உங்களிடம் அவர்களுக்கு உள்ள மரியாதையும் அபிமானமும் நீடித்து வரும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குத் தகுந்தபடி நாங்கள் திட்டங்கள் வகுத்திருக்கிறோம். விவரங்களுக்கு எங்களுக்கு எழுதவும்.

## யுனைடெட் இந்தியா

பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

"யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்"

எஸ்ப்ளனேட் - - மதராஸ்

## மாளவிகா

எழுதியவர் :

**சரோஜா ராமமூர்த்தி**

இந்த நாவல், லிர்ட் லிட்டன் எழுதிய ஓர் ஆங்கில நூலைத் தழுவி எழுதிய தாகும். கடல் கொண்ட காவிரிப்பூம் பட்டினத்தைப் பின்புலமாக வைத்து, ஆசிரியர் கதையைப் புனைந்திருக்கிறார். கண்ணிழந்த பிரதிமா என்ற ஒரு பெண் தன் காதலனுக்காகத் தன்னையே தியாகம் செய்து கொள்ளுகிறாள். மனத்தை உருக்கும் இனிய கதை.

**விலை ரூ. 1-4-0**

## இன்னா நாற்பது

பதிப்பாசிரியர் :

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

கபிலதேவர் அருளிய இந்நூலை, சென்னை, சர்வ கலாசாலைத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் சிறந்த முறையில் பலவகை அகராதி, குறிப்புக்கள் முதலியவற்றுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

**விலை அணா பத்து**

## நான்மணிக்கடிகை

பதிப்பாசிரியர் :

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

இது விளம்பி நாகனார் என்ற பழந் தமிழ்ப் புலவர் இயற்றிய நூல். திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களுடன் ஒப்பிடக் கூடிய பெருமை வாய்ந்தது. ஒவ்வொரு தொடரும் மாசு நீக்கி நன்றாக இழைக்கப் பெற்ற மணி போன்றதாகும். பலவகை அகராதி குறிப்புக்களுடன் வெளியிடப் பெற்றிருக்கிறது.

**விலை ரூ. 1-4-0**

**ஏனைய தமிழ், ஆங்கிலப் புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்**

**எல்லாவற்றிற்கும் தபால் செலவு தனி**

**சக்தி காரியாலயம்**

சென்னை : : மதுரை






தமிழ் நாடு ஏஜெண்டுகள் :

**ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்**

மேல கோபுர வீதி - - மதுரை

# அறிவிப்பு

261, சைனா பஜாரில் இருந்த புத்தகசாலை 16-5-44 முதல் **115-E, மோபரீஸ் ரோடு,** ராயப்பேட்டையில் நடை பெற்று வருகிறது. ஆதலால் அன்பர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தங்களுக்குத் தேவையான புத்தகங்களுக்கு எழுதித் தருவித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

சக்தி காரியாலயம்
115-E, மோபரீஸ் ரோடு
ராயப்பேட்டை - - சென்னை



## பொருள் அடக்கம்


காந்தி என்ன செய்வார் — 73

காலச் சுழல் — 75

உடன் கட்டை
மஞ்சேரி எஸ். ஈச்வரன் — 76

தொண்டி நகர ஆராய்ச்சி
எஸ். வையாபுரிப் பிள்ளை — 82

பொன் மயில்
'சாக்யன்' — 89

அம்மானைப் பாடல்
மு. அருணசலம் — 92

கண்ணன் குழலோசை
வ. அ. தியாகராஜன் — 97

சோஷலிஸம்
வெ. சாமிநாத சர்மா — 101

வாழ்க்கைச் சக்கரம்
'உமா' — 105

கருணை வள்ளல்
'ஸரஸி' — 106

வாயில்லாப் பூச்சி
ஜெ. எல். பெரஸ் — 113

நானும் லெனினும்
'எதிர்காலம்' — 121

சத்திரத்தில் சிப்பாய்
ஜைனேந்திர குமார் — 129

ஆஹா—ஊஹூ!
தி. ஜ. ர. — 136

சாதுரியக் கவிஞர்
'பரதன்' — 140

ஜாலக் கண்ணடி
ரா. ஸ்ரீ. — 142

புத்தக உலகம் — 143

தாரண
மலர் 10

# சக்தி

வைகாசி
இதழ் 2

**அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!**

## காந்தி என்ன செய்வார்?

இருபத்தொரு மாத காலம் சிறையிலே வாடிவிட்டு, வாழ்க்கைத் துணைவியையும் வலது கை போன்ற பிரதம சிஷ்யனையும் அங்கேயே பறிகொடுத்து விட்டு, மெலிந்த மேனியும் தளர்ந்த ஆவியுமாய், ஆகாகான் மாளிகைச் சிறையிலிருந்து மகாத்மா காந்தி வெளியே வந்துள்ளார். அவரது விடுதலை தேசமெங்கும் களிப்பூட்டியுள்ளது; உலகமெங்கும் நம்பிக்கை எழுப்பியுள்ளது. 'வாராது வந்த மாமணி' போன்ற தலைவன் விடுதலை அடைந்தார் என்ற ஒன்றே தான் தேசத்தின் களிப்புக்குக் காரணம். உலகத்தாரோ, 'அவர் விடுதலையால், இந்திய அரசியல் நெருக்கடி தீர வழி பிறக்கலாம்' என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.



ஆனால், மகாத்மா காந்தி எந்த நிலையில் விடுதலையடைந்திருக்கிறார்? எந்தக் காரணத்தினால் சிறை சென்றாரோ அந்தக் காரணத்துக்குப் பரிகாரம் கிடைத்துவிட்டதா? கிடைக்கப்போகிறதா? அது யார் கையில் இருக்கிறது? இந்தக் கேள்விகளையெல்லாம் யோசிக்கும்போதுதான், நாம் அஞ்சவேண்டியிருக்கிறது

தேக அசௌக்கியம் ஒன்றே காரணமாகத்தான் அவரை விடுதலை செய்ததாக, இந்திய சர்க்காரும் அமெரியும் கூறுகிறார்கள். காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை விடுதலை செய்யாமல் அவர்கள் இன்னும் பிடிவாதமே பிடிக்கிறார்கள். அமெரி துரையோ, வேவல் பெருமானோ, துளியும் மனம் மாறியதாகத் தெரியவில்லை. இந்த நிலைமையில், அரசியல் நெருக்கடி தீரும் என்று நம்புவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

காந்திஜியை எவ்வித நிபந்தனையுமில்லாமலே விடுதலை செய்திருக்கிறார்கள் அல்லவா? அதிலே இருக்கிறது அரசியல் சூட்சுமம் என்று சிலர் நினைக்கிறார்கள். நிபந்தனை விதித்திருந்தால், அந்த விடுதலையை மகாத்மாஜி உதறித் தள்ளியிருப்பார். அது சர்க்காருக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால்தான், அவரை நிபந்தனையற்று விடுவித்திருக்கிறார்கள். அதற்கு நாம் எவ்வித அந்தரார்த்தமும் கற்பித்துக்கொண்டு, மனம் பூரிக்க வேண்டியதில்லை.

இந்திய அரசியல் விஷயத்தில் கடுகளவு தாராள மனோபாவமும் காட்ட அமெரி துரை தயாராயில்லை என்பது, ஒவ்வொரு நாளும் தெள்ளத் தெளிய விளங்கி வருகிறது. அவர் சமீபத்திலே பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளையும் பேசிய பிரசங்கங்களையும் தொகுத்து ஒரு புதிய புத்தகம் வெளியிட்டிருக்கிறாராம். அவைகளிலே அவர் என்ன சொல்லுகிறாராம் தெரியுமா? உலகத்திலே பொதுவுடைமைத் தத்துவம் தோற்றுவிட்டதாம்; தனி

நபர் சுதந்தர தத்துவமும் தோற்று விட்டதாம். 'உள்ளதை விடாதே; குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொள்' என்ற கன்ஸர்வேடிவ் தத்துவம்தான் இனி ஜயிக்கப் போகிறதாம்—இதுதான் அமெரி துரையின் பலமான அபிப்பிராயம். 'இருப்பதை இழுவோம்' என்ற இதே மனோபாவம்தான் சர்ச்சிலுக்கும் இருக்கிறது. யுத்தத்திலே அச்சு நாடுகளின் நிலைமை தளரத் தளர, சர்ச்சில் கோஷ்டியின் அகந்தைப் பேச்சும் விஷம்போல் மேல் ஸ்தாயிக்கு ஏறிக் கொண்டிருக்கிறது. இந்தச் சர்ச்சில் பிரதம மந்திரியாகவும் அந்த அமெரி இந்தியா மந்திரியாகவும் இருக்கும் வரையில், இந்தியப் பிரச்னையில் நம்பிக்கைக்கு இடம் ஏது?

ஆனால், இந்தியாவின் தலையெழுத்து ஒரு சர்ச்சில் கையிலும் ஓர் அமெரி கையிலும் ஒரு வேவல் கையிலும் இல்லை. அது, சுதந்தர ஆவேசம்-வெறி-பிடித்துச் சர்வ தியாகமும் செய்யச் சித்தமாகும் இந்தியர்களின் கையிலே—அவர்களின் கையிலே மாத்திரம் தான்—மற்ற இந்தியர் கையிலே அல்ல—இருக்கிறது. என்றாலும், சுதந்தர இயக்கம், சதா காலமும் ஒரேவிதமாய், ஒரே கதியில் நடவாது. காந்திஜி அதை அறிவார். எதிரி என்ன செய்வான் என்று எதிர்பாராமலே, பெருந்தன்மையோடு தம் கடமையைத் தாம் புரியும் மனப் பக்குவம் அவருக்குண்டு. பெருமிதத்திலே வெற்றியும் பணிவிலே தோல்வியும் அவருக்குக் கிடையாது. அவர் தர்மமே கவசமாய்ப் பூண்ட ஒரு சத்தியாக்கிரகி. ஆகையால், விசால மனோபாவத்தோடு, இன்று அவர்—என்றும் போலவே தான்—நடந்து கொள்வார் என்பதில் மட்டும் நமக்கு ஐயம் வேண்டியதில்லை.

அமெரியும் சர்ச்சிலும் தலைகீழாய் நிற்கலாம்; வேவல் துரை வித்தாரம் பேசலாம்; நம்மிடமே தோன்றியுள்ள கோடரிக் காம்புகள் எப்படி வேண்டுமாயினும் குதிக்கலாம். ஆனால், இந்திய விடுதலை, இன்று உலகத்தின் பிரச்னையாகிவிட்டது. 'என் சொந்த விஷயம்' என்று பிரிட்டன் இனியும் சொல்லிக் கொண்டிருக்க முடியாத நிலையை அது எட்டிவிட்டது. மனித சுதந்தரத்தில் உண்மையான ஆர்வம் படைத்த உலக மக்கள் அனைவருமே—பிரிட்டிஷ் மகாஜனங்களும் கூட—இந்திய விடுதலையில் அனுதாபம் காட்டுகிறார்கள். இந்தியப் பிரச்னைக்கு இந்த அந்தஸ்து ஏற்பட்டதற்கு, மகாத்மா காந்தியும் காங்கிரஸுமே காரணம் என்பதை, நாணயமுள்ள எவரும் மறுக்க முடியாது.

"என் விடுதலையைப்பற்றி எனக்குச் சந்தோஷமேயில்லை; வெட்கமாய்க் கூட இருக்கிறது.....என் நோய் குணமானதும், என்னைக் கைது செய்துவிடப் போகிறார்கள். கைது செய்யாவிட்டால், நான் என்ன செய்ய முடியும்? ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ் வாங்க முடியாது" என்று, ஜயகருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில், மகாத்மாஜி கூறுகிறார். சர்க்காருக்கு ராஜி மனோபாவம் உண்டா, காந்திஜியின் விடுதலை அதற்கான ஓர் அறிகுறியா என்பதைச் சோதிக்க இந்த ஒரு கடிதமே போதும். மீண்டும் கிளிப்பிள்ளை போல, 'ஆகஸ்டுத் தீர்மானம் வாபஸாக வேண்டும்' என்று அமெரி கோஷ்டியார் ஜம்பம் பேசி பயனில்லை. அப்படிக்கன்றி, காந்திஜியைச் சிறைப்படுத்தாமல் விட்டு வைப்பார்களானால், கம்பீரமும் பெருந்தன்மையும் விசால நோக்கமும் கொண்ட உன்னதமான ஓர் அறிக்கையை மகாத்மாஜி கூடிய சீக்கிரம் வெளியிடுவார்; சகல விதமானவர்களின் நல்லெண்ணத்தையும் பெற்றுக் காப்பாற்றவும் ஒரு பெருமுயற்சி செய்வார்; தேசத்தின் விடுதலை இயக்கத் தீபத்தை அணையாது சுடர்விடச் செய்வார் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஏனெனில், அந்த மகானுக்குத் தர்மமே ஜயமாகும்.

## துன்பமே தர்மம்

"துன்பம் அநுபவிப்பதே மனித குலத்தின் லட்சணம். அது ஓர் அநாதி தர்மமாகும். குழந்தை ஜனனமாவதற்காக, தாய் துன்பம் அநுபவிக்கிறாள். சாவிலிருந்தே வாழ்வு பிறக்கிறது."

—காந்திஜி.

# காலச்சுழல்

**கமிஷனர் தடை:** தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், இந்த மூன்று மாகாணக் காங்கிரஸ்காரர்களையும் கூட்டி ஒரு மகாநாடு நடத்த, ஸ்ரீமதி ருக்மணி லட்சுமிபதி, ஸ்ரீ முத்துரங்க முதலியார், ஸ்ரீ கே. கோடி ரெட்டி மூவரும் முயற்சித்தார்கள். ஆனால், இந்த மகாநாடு நடக்க, சென்னைப் போலீஸ் கமிஷனர் அனுமதி தரவில்லை. இந்தக் காங்கிரஸ்காரர்கள், அனுமதிவேண்டிச் சர்க்காருக்கு விண்ணப்பித்துக் கொண்டதே நமக்குப் பிடிக்கவில்லை. அதிகாரவர்க்கம் அனுமதி தராதது, அதற்குமேல் வெறுப்பளிக்கிறது.

**முதலாளிகள் முக்கோணம்:** இந்த யுத்தத்தால், ஒரு விநோதப் போராட்டம் உருவடைந்து வருகிறது. இந்தியத் தொழில்களை வளர்க்க இது தான் சமயமென்று, இந்திய முதலாளிகள் ஒரு திட்டம் தயாரித்தார்கள். இதைக் கேட்ட உடனே, பிரிட்டிஷ் முதலாளிகளுக்குத் திகில் உண்டாகி விட்டது. அவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். ஆனால், மெல்ல அமெரிக்க முதலாளிகள் ஒரு கூச்சலை எழுப்பி இருக்கிறார்கள். இந்தியாவின் தொழில் நிர்மாணத்துக்குத் தாங்கள் உதவுவதாயிருந்தால், உத்தரவாதம் வேண்டுமாம். என்ன உத்தரவாதம்? "இந்தியாவுக்குச் சுதந்தரம் கூட அளித்துவிடுவார்கள் போலிருக்கிறதே: அளித்தால், இந்திய சர்க்கார் ஒழுங்காய் நடக்குமா? அதற்கு உத்தரவாதம் தந்தால்தான் நாங்கள் உதவலாம்" என்று அவர்கள் ஒரு கூச்சல் கிளப்பியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் முதலாளிகளோ, "ஐயோ! இந்திய முதலாளிகள், அமெரிக்க முதலாளிகளிடம், தொடர்பு கொண்டுவிடுவார்கள் போலிருக்கிறதே! அதற்கு இடம் தராமல் மடக்க வேண்டும்". என்கிறார்கள். இந்த முக்கோணப் போராட்டம் எங்கே போய் முடியப்போகிறதோ, தெரியவில்லை.

**பஞ்சாப் நாடகம்:** பஞ்சாப் பிரதம மந்திரியிடம் ஜனாப் ஜின்னாவின் மிரட்டல் பலிக்கவில்லை. ஜின்னாவின் லீக் கோபமடைந்தது. "உம்மை விசாரிக்க வேண்டும்; டில்லிக்கு வாரும்" என்று, லீக் காரியக் கமிட்டி கட்டளை போட்டது. "அங்கே வர எனக்குச் சௌகரியப்படாது" என்று மறுத்துவிட்டார் பஞ்சாப் பிரதமர். "அப்படியானால் நாங்களே அங்கே வருகிறோம்" என்று லாகூருக்கு ஓடியது லீக் கமிட்டி. அதன் உருட்டலையெல்லாம், பஞ்சாப் பிரதம மந்திரி லட்சியம் செய்யவில்லை. கமிட்டி அவரை லீக்கிலிருந்தே அகற்றிவிட்டதாகத் தீர்மானித்து, தடபுடலாய் ஓர் அறிக்கை விட்டது. பார்க்கலாம் ஒரு கை என்று பஞ்சாப் பிரதம மந்திரியின் கட்சியார் கர்ஜிக்கிறார்களாம். ஜனாப் ஜின்னாவுக்கு நல்ல தூக்கம் வருமா? அதற்கு அல்லாவைத்தான் பிரார்த்திக்கவேண்டும்.

**காலஞ்சென்ற ஸ்ரீ கு. ப. ரா:** தமிழ் எழுத்தாளர்களுள் அடக்கமே உருவாக விளங்கியவர் ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன். சகோதர எழுத்தாளர்களுடைய அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர், அவரைப்போல் வேறு யாருமே இல்லையென்று சொல்லலாம். ஆரம்பத்திலே சிறுகதைத் துறையில் இறங்கிய ஒரு சில எழுத்தாளர்களுள் அவரும் ஒருவர். பல அழகிய கதைகளும் பொருள் செறிந்த கட்டுரைகளும் எழுதியும், வங்காளி ஹிந்தி முதலியவைகளிலிருந்து மொழிபெயர்ப்புகள் செய்தும், **ஸ்ரீ கு.ப.ரா.** தமிழிலக்கியத்துக்கு உதவியிருக்கிறார். அவர் மரணத்தால், தமிழ்நாடு ஒரு சிறந்த நூலாசிரியரையும் எழுத்தாவர்கள் ஓர் அரிய நண்பரையும் இழந்துவிட்டார்கள். அவருடைய குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# உடன்கட்டை

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

பேரூர் ஒரு பெரும் சிவக்ஷேத்திரம்; கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள ஒரு சிறு நகரம். சிவன் கோயிலில் பெரும் பகுதியையும் திருமலை நாயக்கரின் மைத்துனர் அளகாத்ரி நாயக்கர்தான் கட்டினாராம். திப்புசுல்தான் ஒரு கேடும் செய்யாமல் விட்டுச் சென்ற கியாதி, இந்தக் கோயிலுக்குத்தான் உண்டு.

1830-ஆம் வருஷத்தில் பேரூர் ஒரு சிற்றூராகவே இருந்தது. கோவிலும் அதனை அடுத்த பிராமணர் அக்கிரஹாரமும் பேரூராக விளங்கின. அங்கே சாஸ்திர ஆராய்ச்சி, வேதபாராயணம் இவைகளுக்குக் குறைவே கிடையாது. சந்தோஷமும் குதூகலமும் பிரதிபலிக்கும் ஜனங்களின் குறையற்ற வாழ்க்கை, அவ்வூரில் பொங்கும் தக்ஷிணகங்கை என்ற காஞ்சி நதியின் பரிசுத்த ஜலத்தைப்போல், பெருகிப் பிரகாசித்தது. அக்கிரகாரத்தின் கிழக்குக் கோடியில் வேங்கடரமண சாஸ்திரியாரின் வீடு இருந்தது. ஊராரின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர் சாஸ்திரியார். ஹிந்து தர்ம சாஸ்திரத்திலும் வேதாந்தத்திலும் நிபுணர். குணத்திலும் நடத்தையிலும் அருந்ததி அவருக்கு ஏற்ற மனைவியாவாள். அவர்களின் வயோதிக காலத்தில் மகளாய்ப் பிறந்து, அவர்களுக்குக் குழந்தையில்லாக் குறையைப் பார்வதி தீர்த்துவைத்தாள்.

உத்தமமான சதிபதிகளுக்குப் பிறந்த குழந்தை, மட்டமாக இருக்குமா? தகப்பனின் புத்தியும் தாயின் நன்னடத்தையும், பார்வதியிடம் பொங்கி வந்தன. வருஷங்கள் சென்றன. சாஸ்திரங்களின் விதிப்படி மணம் முடிக்கவேண்டிய பருவத்தை, பார்வதி அடைந்தாள். கொள்ளே காலம் கங்காதர சர்மா கன்னிகையைத் தானம் பெற்றுக் கொண்டார். இன்ப வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே, ராதா கிருஷ்ணன் பிறந்தான். பேரன் பிறந்ததால், புத்திரன் இல்லை என்ற குறையும் சாஸ்திரியாருக்குச் சிறிது தீர்ந்தது.

மாப்பிள்ளையை மகன் போல் பாவித்து, சர்மாவுக்கு வேத வேதாந்தப் பயிற்சியெல்லாம் செய்துவைத்தார் சாஸ்திரியார். காலையில் காஞ்சி நதியில் நீராட்டம்; ஜபதபம்; கடவுள் வழிபாடு; வேதாந்த ஆராய்ச்சி; போஜனம்; ஆராய்ச்சி; மாலை ஸ்நானம்; கடவுள் வழிபாடு— இப்படி அவர்களுடைய காலம் நிம்மதியாய்க் கழிந்தது. பார்வதி, அவள் தாயார், குழந்தை ஆகிய மூவரும் அன்பினால் இன்பமும், இன்பத்தால் பிரேமையும் பொங்கும் ஆனந்த வாழ்க்கையை இடைவிடாது அனுபவித்துவந்தார்கள்.

இவர்களின் குடும்பம்போல் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழும் குடும்பம், வேறெதுவும் கிடையாதென்பது சுற்றுப்

---

சககமனம் - அதாவது உடன் கட்டை ஏறுதல்-பழைய சங்கதியாகிவிட்டது. ஆனாலும், அந்தப் பழைய வழக்கத்தை எழுவாயாகக் கொண்டு, கும்பல் மனோதத்துவத்தை அற்புதமாய்ச் சித்தரிக்கிறது இந்த மனமுருக்கும் சோகக் கதை.

புறத்திலுள்ள கிராமங்களில் பரவி யிருந்தது. ஆனல், இந்தக் குடும் பத்தின் ஆனந்த வாழ்க்கையில் கொடும் விதி புகுந்து தன் லீலை யைப் புரியத் தயாராகிக்கொண் டிருந்ததை, ஒருவரும் கனவு கூடக் காணவில்லை.

கொடும் பனியால் கருகி மடியும் மலர்கள்போல், மாந்தர்களை மடியச் செய்தாள் மஹாமாரி. பறையர் தெருவில் ஆரம்பித்துக் குடியானவர் தெருவில் கோர தாண்டவம் புரிந்தாள் தேவி. அக்கிரஹாரத்துக்குள் வரமாட் டாள் என்று மனப்பால் குடித்த பேதைகளின் எண்ணத்தில் மண் போட, அக்கிரஹாரத்திலும் நுழைந்தது வைசூரி. ஊருக்குப் பெரியவரை மரியாதை செய்வது போல், சாஸ்திரியாரின் வீட்டில் நுழைந்து, கங்காதர சர்மாவின் மேல் தன் சக்தியை அது உப யோகித்தது. வியாதி முற்றவே, சாஸ்திரியாரின் வீட்டை அணுக வும் ஊரார் பயந்தார்கள். அன் பும் மரியாதையும் காட்டியவர் கள், அவரை இந்தக் கஷ்டகாலத் தில் தனியே விட்டுவிட்டார்கள்.

நெருப்பில் துடிக்கும் புழுப் போல், குருத்து வாழை இலை மேல் துடித்தது சர்மாவின் உடல். வேதம் ஒலித்த வாயி லிருந்து பேத்தலும் பிதற்றலும் கிளம்பின. 'பிழைப்பான்' என்று நம்பிய சாஸ்திரியார், கடைசியில் கடவுள்மேல் பாரத் தைப் போட்டுவிட்டார். கட வுளும் கைவிட்டார். அணையும் தருணத்தில் சுடர்விட்டெரியும் விளக்குப் போல், சர்மாவின் உயிர் சிறிது சக்தி பெற்றது. "இனிமேல் நான் பிழைக்கமாட் டேன். குழந்தையை கெனச்சா வது நீ உயிரோடே இரு. அசட் டுப் பிசட்டுன்னு ஒண்ணும் பண் ணிப்பிடாதே" என்று, கண்ணீர் சொரியும் பார்வதியிடம், சர்மா கூறினர்.

காலன் அணுகிவிட்டதை அறிந்த சாஸ்திரியார், தெய்வ நாம ஸ்மரணம் செய்தார். யானை யைக் காக்க ஓடிவந்த பரந்தாம னின் கண்ணோக்கம், சர்மாவின் மேல் விழுந்தது. அவர் முகம் சற்றுத் தெளிவடைந்தது.

"சர்வ தர்மங்களையும் விட்டு விட்டு என்னையே சரண் அடை. சகலபாவங்களினின்றும் உன்னை நான் விடுவிக்கிறேன். துயரப் படாதே" என்று கீதையில் பக வான் கூறுவதை, சாஸ்திரியார் ஜபித்தார். இது சர்மாவின் உயிருக்குச் சஞ்சீவிபோல் இருந் தது. சதைப் பற்றற்ற கைகளைச் சந்தோஷத்துடன் தூக்கி, "பர மனே! உன்னைச் சரண் அடை கிறேன்" என்று அவர் கூவினர். தூக்கிய கைகள் கீழே விழுந் தன. சர்மா கடவுள் திருவடியை அடைந்தார்.

கணவனை இழந்த மனைவியின் கதறல், கல்லையும் கரைத்தது. வயோதிகரின் மனத்தைப் பிளந்து பொங்கியது துக்கவெள் ளம். விஷயம் தெரியாத குழந்தை ராதாகிருஷ்ணனின் பரந்த கண் கள், ஆச்சரியத்துடன் அவர்களை விழித்துப் பார்த்தன.

## 2

"ஆமாம். வேறே என்ன செய் யறது? சாஸ்திரங்களை மீற லாமா? உடன்கட்டை ஏற வேண்டியதுதான்" என்றுர் எண் பது வயதுக் கிழவர். கூட்டத்தி லுள்ளவர்களும் ஆமோதித்தார் கள்.

"மிகவும் சிறிசு. அவ குழந் தையையும், எங்க வயோதிகத்

தையும் எண்ணிப் பார்த்தாவது இதெ நிறுத்த முடியாதா?'' என்று அழுதாள் அருந்ததி.

"சீச்சி, என்ன முட்டாள் தனம்! பெரிய பண்டிதருக்கு மனைவியாயிருக்கிற நீ கூட இப்படிக் கலங்கலாமா? உடன்கட்டை ஏறும் பத்தினியை விட விதந்துவா மேல்?'' என்றார் கிழவர்.

"அவன் செத்த அப்புறம் ஒன் பெண் இருந்து என்ன பலன்? இந்த மாதிரி செய்ய எண்ணற உங்களோடே இருக்கிறதெவிட, ஊரை விட்டு ஓடிப்போவதே மேல்'' என்றாள் ஒரு கிழவி.

உடன்கட்டை ஏறுவதில் ஒரு குருட்டு நம்பிக்கை, மதாசார அனுஷ்டானம் இவைகளை வற்புறுத்தினார்கள், எல்லாம் அறிந்த பண்டிதர்கள். விதவையின் அவமான வாழ்வைவிட, உடன்கட்டை ஏறும் பெருமையைப் பெரிதாக எண்ணினார் சாஸ்திரியார். இவ்விதம் பார்வதி உடன்கட்டை ஏற ஏற்பாடு நடந்தது.

சூரியன் அஸ்தமித்தான். காஞ்சி நதிக்கரையை நோக்கிப் பிரேத ஊர்வலம் கிளம்பியது. பந்தங்கள் ஏந்திய பலர் அணிவகுத்துச்



செல்ல, முதலில் பிரேதம் சென்றது. அதன் பின்னே, பெண்கள் புடைசூழ ஸதி பார்வதி எலுமிச்சம் பழங்களை அம்மானை ஆடிக்கொண்டே மெல்ல மெல்ல நடந்தாள். இவர்களைச் சுற்றி ஊர் ஜனங்களின் கூட்டம். நதிக்கரையில் சிதை தயாராயிருந்தது; நன்ருய் உலர்ந்த விறகு மெத்தை. பூர்வாங்கக் கிரியைகள் முடிந்தன. சிதைமீது ஏறியது பிரேதம். ஸதியும் முன் வந்தாள். எண்ணெயைக் குடித்துவிட்டு, பந்தங்கள் கொழுந்து விட்டு எரிந்தன. இந்த வெளிச்சத்தில் சிதையை நோக்கி வரும் ஸதியின் தோற்றம் அடியோடு மாறியது. மஞ்சள் கரை கொண்ட சிவப்பு ஆடை. முழங்கால்வரை அவிழ்ந்து தொங்கும் கூந்தல். நெற்றியில் குங்குமம். பந்தங்களின் கோர ஒளியைப் பிரதிபலிக்கும் மஞ்சள் தடவிய கன்னங்கள். கையில் வெற்றிலை பாக்கும் பழமும் நிறைந்த தட்டு.

அவசர அவசரமாக, புரோகிதர் சடங்குகளை முடித்தார். வெற்றிலை, பழம் முதலியவை நிறைந்த தட்டைப் புரோகிதரிடம் சமர்ப்பித்து, பார்வதி தன் பெற்ருேரை நமஸ்கரித்தாள். அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை. சாஸ்திரியாரும், அருந்ததியும் சிலைபோல் நின்ருர்கள்; கரைபுரண்ட துக்கத்தால், உணர்ச்சி இழந்தார்கள். ஸதி புரோகிதர் பக்கம் திரும்பினுள். "நான் சொல்லுவதைத் திரும்பச் சொல்லு. 'வாழ்வு, சாவு இரண்டிலும், நாதா, உம்மை நான் பிரியேன். எப்போதும் உம்முடனேயே இருப்பேன்' என்று சொல்லு" என்ருர் புரோகிதர்.

தன் நினைவற்று, கிளிப்பிள்ளையைப்போல், அந்த வார்த்தைகளை அவள் திருப்பிச் சொன்னுள். புரோகிதர் அளித்த தீபத்தை ஏந்தி, மும்முறை சிதையைச் சுற்றி வலம் வந்தாள். ஓர் அழகிய யுவதி பலியாவதைக் கண்டு பயந்தோ என்னவோ, அசையாமல் இருந்தது காற்று. பார்வதி சிதைமீது ஏறினுள். தீபச்சுடர் விறகின்மீது பாய்ந்தது. சிதையும் பற்றியது. கதிகலங்கிய ஸதி, கணவனின் உடலை அணைந்தாள். உடனே புரோகிதரும் பிறரும் நெய்க்குடங்களைக் கவிழ்த்து, தணிந்த அக்கினியை மீண்டும் வளர்த்தார்கள். ஜ்வாலை கொழுந்துவிட்டுக் கிளம்பியது. பார்வதி திடீரென்று அலறினுள். ஆனுல், கூடியிருந்த ஜனங்களின் ஜயகோஷத்தில், அவளது அலறல் அமுங்கிவிட்டது. பார்வதியின் பரிதாபத்தைப் பரமனிடம் சென்று முறையிடுவதுபோல், தீயின் நாக்குகள் வானுற ஓங்கிப் புலம்பின. ஜனங்களின் கோஷம் ஓய்ந்து, நிசப்தம் நிலவியது. "பகவானின் பாதார விந்தங்களை ஸதி அடைந்துவிட்டாள்" என்று புரோகிதர் முழங்கினர். அதை ஆமோதிப்பது போல், சடார் படார் என்று தீச்சுடர்கள் வெடித்தன.

## 3

வெள்ளி முளைத்தது. உடன் கட்டை ஏறிய பார்வதியை எண்ணி அழுத கண்ணைப்போல், சந்திரன் சிவந்து பிரகாசித்தான். பெண்கள் கண்விழித்து, அவரவர் வீட்டு வேலைகளில் ஈடுபட்டார்கள். அருந்ததியும் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் சென்ருள். "கண்ணே! இனிமே நீ எப்படியடீ திரும்பி வருவே! அம்மான்னு என்னெ

அன்போடெ அழைக்க யாருடீ இருக்கா! என்னெயும் ஒன்னோடே அழைச்சுண்டாவது போயிடேன்!" என்று புலம்பிக்கொண்டே, பாத்திரங்களை அருந்ததி தேய்க்கத் தொடங்கினாள்.

"அழாதேடீ, அம்மா! நானே இதோ உன்கிட்ட வந்துட்டேன்" என்று ஒரு குரல் கேட்டது.

அருந்ததி திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள். பொழுது புலர்வதால் மங்கிவரும் சந்திரனின் ஒளியில், ஸதி பார்வதி, தாயின் முன் தோன்றினாள்.

"அம்மா! என்னை மறுபடியும் பார்க்கறது ஒனக்குச் சந்தோஷமாய் இல்லையா?" என்று கேட்டாள் பார்வதி.

"இல்லே, இல்லே. நீ என் பெண் இல்லே. அவளுடைய ஆவி நீ. ஏதோ பாசத்தாலே திரும்பி வந்திருக்கற பிசாசு நீ. இல்லேன்னா, எரிஞ்சு சாம்பலாப்போன நீ எப்பிடித் திரும்பி வாமுடியும்!" என்று, பயத்தால் நடுங்கிய குரலில் சொன்னாள் அருந்ததி.

"இல்லே, அம்மா. நான் எரிஞ்சு சாகலே. புகை சூழ்ந்துண்ட உடனே, சூடு பொறுக்காதவபோலக் கதறினேன். அதெ நிஜம்னு நினைச்சு, புரோகிதர் ஏமாந்துட்டார். சந்தடி பண்ணாமெ, தவழ்ந்துபோய் ஆத்துத் தண்ணிலெ முழுகிப்புட்டேன். அப்பறம், அந்த அரசமரம் இருக்கே, அதும் பொந்திலே போய் ஒளிஞ்சுண்டேன். எல்லாரும் கலெஞ்சு போனத்துக்குப் பின்னாடி, நடுநிசியிலே யார் கண்ணிலெயும் படாமெ, இங்கே வந்து மறைஞ்சுண்டேன். ஆனா, என்னெக் கோழைன்னு நினைக்காதே, அம்மா. உயிரெ விடறதுக்கு நான் பயப்படலெ. ஆனா, உயிர் போகச்சே, அவா சொன்னாளே 'கொழந்தெயெ நினைச்சாவது உயிரோடே இரு'ன்னு? அதெ நான் காப்பாத்த வாண்டாமா? அதுக்காகத்தான் திரும்பி வந்துட்டேன்" என்றாள் பார்வதி.

இதைக் கேட்ட அருந்ததி, உணர்ச்சி மீறி ஆனந்தம் பொங்கியவளாய், மகள் பார்வதியை வாரியணைத்துக் கொண்டாள். இந்தப் பரவச வெள்ளத்திலே, இருவரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை; திடீரென்று, அருந்ததியின் அணைந்த கைகள் தளர்ந்து பிரிந்தன. அவள் கீழே சாய்ந்தாள். கட்டு மீறிய ஆனந்தம், அவள் மூச்சைத் திணறடித்து, உயிரையே குடித்துவிட்டது. பால் கறக்கும் வேளை வந்ததால், 'அம்மா! அம்மா!' என்று கத்தியது பசுங்கன்று. கால கீதத்துக்குச் சுருதி போடுவதுபோல், சுவர்க் கோழி ஒலித்துக்கொண்டிருந்தது. மின்மினிகள், தங்கள் சின்னஞ் சிறு தீபங்களை அணைத்துவிட்டன. கங்குலில் மங்கிய சந்திரன், மேகத்திரை யொன்றின் பின் மறைந்து கொண்டான். ஒரு தெய்விக சாந்தி எங்கும் நிலவியது. அதிலே கலந்துவிட்டாள் அருந்ததி. கால சக்கரத்தின் சுழலிலிருந்து அவள் விடுபட்டுவிட்டாள். சந்தேகத்தால் மனம் பதைத்த பார்வதி, கீழே விழுந்த தாயின் முகத்தைக் குனிந்து நோக்கினாள். அவள் சந்தேகம் நிஜமாகிவிட்டது. "அம்மா! உன்னைக் கொல்றத்துக்காடீ திரும்பி வந்தேன் இந்தப் பாவி!" என்று தன்னை மறந்து கதறினாள்.



மலையில் உயர்ந்தது ஹிமயமலை
இங்கில் உயர்ந்தது ஜப்கோ இங்க்
Revathi
ஜப்கோ
பவுண்டிங்க்
ஜய பாரதம் கம்பெனி
மல்லேஸ்வரம் : : பெங்களூர்

// # தேவை

எங்கள் லைப் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு இராமனாதபுரம், புதுக்கோட்டை சமஸ்தானம் பகுதிகளுக்கு செல்வாக்குள்ள 'ஆர்கனைசர்' தேவை. தகுந்த சம்பளமும் அலவன்சும் கொடுக்கப் பெறும்.

பிராஞ்ச் செகரெட்டரி:

**ஆர்யஸ்தான் இன்சூரன்ஸ் கம்பெனி**

121-B, அரமனைக்காரத் தெரு : : மதராஸ்

# உலக நிலை

## ராஜாஜி எழுதிய
## புதிய நூல்

எந்தக் கடுமையான பிரச்னையையும் நன்றாய் அலசி ஆராய்ந்து மிகத் தெளிவாகச் சொல்லுவதில் ராஜாஜி வல்லவர். உலகத்தின் பல்வேறு தேசங்களின் பொருளாதார நிலைமைகளை, திட்டமான ஆதரவுகளோடும் புள்ளி விவரங்களோடும் ராஜாஜி இந்நூலை எழுதியிருக்கிறார்

காலிகோ பதிப்பு .... ரூ. 2-0-0
ராப்பர் பதிப்பு .... ரூ. 1-8-0

ஜூன் 15-ஆம் தேதிக்குள் முன் பணம் அனுப்புவோருக்கு தபாற் செலவின்றி அனுப்பிக்கப்பெறும்

**சக்தி காரியாலயம்**

115-E, மோபரீஸ் ரோடு
ராயப்பேட்டை : : சென்னை

இந்தக் குரலைக் கேட்டு, சாஸ்திரி வெளியே ஓடிவந்தார். தாம் சொப்பனத்திலும் நினையாத இந்தக் காட்சி, அவரைத் திகைப்படையச் செய்தது.

"யாரு, பார்வதியா!—பார்வதியா!"

சாஸ்திரியாரின் குரல், ஒரு பயமும் ஆச்சரியமும் கலந்து நடுங்கியது.

"ஆமாம், பார்வதிதான்."

அந்தப் பதில், எங்கிருந்தோ அகாத தூரத்திலிருந்து மங்கி வரும் உயிரற்ற எதிரொலிபோல, சாஸ்திரியாரின் காதுகளில் விழுந்தது.

"பாவி பார்வதிதான். திரும்பி வந்து, அம்மாவையும் கொன்னுட்டேன்" என்று, அவள் தொடர்ந்து சொன்னாள்.

சாஸ்திரியாருக்கு ஒன்றும் புரியவில்லை. அங்குமிங்கும் நோக்கினார். மனைவியின் தேகத்தைத் தொட்டுப்பார்த்தார். அது ஜில்லென்று கட்டையாய்க்கிடந்தது.

பொழுது புலர்ந்தது. அந்தத் தெளிவில், சாஸ்திரியாரின் முகம் ஒரு கோர மாறுதலை அடைந்தது. அவர் புத்தியும் பேதளித்தது. வெறிக்க வெறிக்க எங்கேயோ பார்த்த கண்களுடன், பேய் போல் சிரித்துக்கொண்டு, தெருவிலே ஓடினார்.

ஓடிக்கொண்டே, "சிநேகிதர்களே! மகா ஜனங்களே! எல்லோரும் எழுந்திருங்கோ! இந்த அதிசயத்தைப் பாருங்கோ! சிவபெருமான் திருவிளையாடல்! என் சம்சாரத்தெ எடுத்துண்டு, என் பெண்ணைத் தந்துட்டார்" என்று கூச்சலிட்டார்.

ஜனங்களுக்கு, சாஸ்திரியாரின் இந்தக் கலவர வார்த்தைகள், முதலிலே விந்தையாய் இருந்தன. இவருக்கு ஏதோ சித்தப் பிரமை பிடித்துவிட்டதோ என்று அவர்கள் நினைத்தார்கள். ஒருவர் ஒருவராய்க் கூடித் திரண்டு, சாஸ்திரியாரின் வீட்டில், அவர்கள் புகுந்தார்கள்.

பார்வதி நின்றுகொண்டிருந்தாள்! என்றுமில்லாத ஜோதியுடன் பிரகாசித்தன அவள் கண்கள். அவளுக்கு முன்னே தரையில், ஆவிபோன அருந்ததியின் உடலம் கிடந்தது—இதுவே அவர்கள் கண்ட காட்சி.

"அடி பாவி! பாழும் விதந்து, நீ திரும்பி வந்துட்டயே! ஒன் பாவமே ஒன் தாயெக் கொன்னுடுத்து; ஒன் தகப்பனின் புத்தியையும் தடுமாறப் பண்ணிடுத்து! ஊரையே நாசம் பண்ணறதுக்குத்தான் நீ வந்திருக்கே!" என்று பார்வதியைத் திட்டிக் கொண்டே, அவர்கள் அவளுடைய கையையும் காலையும் கட்டினார்கள்.

சதி பார்வதி மீண்டும் தகனமாகிவிட்டாள். ஆனால், பழைய வைபவங்கள் இல்லை; மங்களகரமான பழைய ஊர்வலமில்லை; பழைய ஜயகோஷங்களுமில்லை.

பேரூர் இன்றும் ஒரு பெரும் சிவக்ஷேத்திரமாகவே விளங்குகிறது. தக்ஷிண கங்கையின் பிரவாகமும் அங்கே ஓடிக்கொண்டுதான் இருக்கிறது.

✲

## வீரன் யார்?

போர்க் களத்தில் ஆயிரக் கணக்கானவர்களைக்கொன்ற சிப்பாயைக் காட்டிலும், தன்னைத்தானே வென்ற மனிதனே பெரிய வீரன்.

—தம்மபாதா (புத்தர் உபதேசம்)

# தொண்டி நகர ஆராய்ச்சி

எஸ். வையாபுரிப் பிள்ளை

தமிழ்நாட்டுப் பண்டைய நகரங்களுள் ஒன்றாகிய தொண்டியின் வரலாறு தமிழ் நாகரிகத்தின் தொன்மைக்கு ஓர் அறிகுறி. இந்தப் பெயரை அறிந்தவர்கள் மிகச் சிலரே. இராமநாதபுரம் ஜில்லாவில் இராமநாதபுரத்திற்குச் சில மைல் தூரத்தில் தொண்டி என்னும் ஒரு சிறு நகரம் இருக்கிறது. அதைத்தான் நம்மவர் சிலர் கேட்டிருக்கலாம். அதற்கு மிகமிக முற்பட்டு, சுமார் 2000 வருஷங்களுக்கு முன் சிறந்து விளங்கிய தொண்டி என்ற நகரம் ஒன்று மேல்கடற் கரையிலே இருந்தது. சேரனுக்குரிய ஒரு கடற்கரைப் பட்டினமாக இது விளங்கியது. இந்தப் பட்டினம் தமிழுலகில் மட்டும் பெருமை பெற்றிருந்தது அன்று. எகிப்திய கிரேக்கனொருவன் எழுதிய பெரிப்ளூஸ் என்ற பிரயாண நூலில் இந்நகரத்தைக் குறித்திருக்கிறான். இந்நூல் தோன்றிய காலம் சுமார் கி. பி. 60. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று டாக்டர் ஷாவ் என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில், தொண்டி கேரளபுத்திர ராஜ்யத்தைச் சார்ந்த மிகப் பிரசித்தி பெற்ற பட்டினம் என்றும், முசிறிப் பட்டினத்திற்கு 500 ஸ்டேடியா (சுமார் $57\frac{1}{2}$ மைல்) தூரத்தில் கடற்கு அருகில் தெளிவாக விளங்கி நின்றது என்றும், இரண்டு பட்டினங்களையும் இணைத்து ஓர் ஆறு ஓடியதென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

பெரிப்ளூஸுக்குப் பின், சுமார் கி. பி. 150-ல் வாழ்ந்த தாலமி என்பவன், தான் எழுதிய பூமி சாஸ்திரத்தில், இத்தொண்டியைப் பற்றிக் கூறியுள்ளான். இவன் கணித சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் பூமி சாஸ்திரத்திலும் சங்கீதத்திலும் வல்லவனாயிருந்தவன். இவன் வாழ்ந்த இடம் அலெக்ஸாண்டிரியா நகரமாகும். இவன் காலத்து அரசன் ஆண்டோனைனஸ் பயஸ்.

மேற்குறித்த இரண்டு கிரேக்க ஆசிரியர்களும் இப்பட்டினத்தின் பெயரைத் திண்டிஸ் எனக் குறித்தனர். இக் கிரேக்கப் பெயருக்கு

---

சுமார் 2000 வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டில் தொண்டி என்ற ஒரு நகரம் இருந்தது. அதன் பெருமை தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், மேல்நாடுகளிலும் பரவியிருந்தது. அது சேரனுடைய துறைமுகப் பட்டினம். ஆனால், அதன் பெருமையைப் பார்த்து, பகையரசர்களும் தங்கள் நகரங்களுக்குத் தொண்டி என்று பேர் வைத்துக் கொண்டார்களாம். அத்தகைய புகழ்வாய்ந்த பழந்தமிழ் நகரத்தைப் பற்றிய ரசமான ஆராய்ச்சி. இது 1-5-44-தேதி சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒலி பரப்பப் பெற்றதாகும்.

மூலமான நகரப் பெயர் 'தனூர்' ஆகலாம் என்று டாக்டர் யூல் கூறினர். இவருக்குப் பின் டாக்டர் பர்ணல் கடலுண்டி என்று இப்போது வழங்கும் ஊர்தான் தொண்டி என்றும் இதனைக் கடல் — துண்டி என்று கூறுவது உண்டென்றும் எழுதியுள்ளார். சங்க இலக்கியங்களில் 'கானலந் தொண்டி' என்று பல இடங்களில் வந்துள்ளது கடல்—துண்டி என்று கொண்ட முடிவை வற்புறுத்துகிறது. ஆனல் டாக்டர் ஷாவ் 'பொன்னுனி' என்பது தொண்டியாகலாம் என்பர்.

தொண்டி என்பது கடலின் கழிக்கு ஒரு பெயராகத் தஞ்சைப் பிரதேசத்திலும் ஈழப் பிரதேசத்திலும் வழங்குகிறது. கடலினின்றும் உட்பாய்ந்த கழியை அடுத்து இப்பழைய பட்டினம் இருந்ததுபற்றி இப்பெயர் தோன்றியது என்று எண்ண இடமுண்டு.

இனி, சங்க இலக்கியங்களில் இத்தொண்டியைப்பற்றி வருவனவற்றை நோக்குவோம். மேல் கடற் கரையில் வெகுதொலையில் இந்நகரம் இருந்தது என்பதை ஒரு புலவர் தற்காலத்தாருக்கு ஒவ்வாத ஒரு முறையிலே கூறுகிறர். ஒரு காதலன் தன் காதலி அருமையானவள் என்பதையும், அடைதற்கு முடியாதபடி அத்தனை தூரத்தில் (உயர்வில்) அவள் உள்ளவள் என்பதையும், ஓர் உவமானத்தால் குறித்தார். "கொரமாண்டல் கோஸ்ட்" (சோழ மண்டலக் கரை) என்னும் கீழ் கடற்கரையிலேயுள்ள சிறகு அற்ற நாரை 'மலபார் கோஸ்ட்' என்னும் மேல்கடற் கரையிலேயுள்ள தொண்டிப்பட்டினத்தின் கடற்கழியிலே யுள்ள அயிரை மீனை உண்ணுவதற்கு விரும்புவது போலுள்ளது தனது நெஞ்சு காதலியைக் காதலித்தது என்பது உவமானம். அச்செய்யுள் வருமாறு:

குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி
முன்றுறை
அயிரை ஆரிரைக்கு அணவந் தாங்குச்
சேயள் அரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பாலோயே.

(சங்க - 1564)

மேல் கடற்கரையிலுள்ள இத்தொண்டியின் நில அமைப்பு ஒரு செய்யுளில் அழகுறச் சொல்லப்பட்டிருக்கிறது.

குலை இறைஞ்சிய கோட்டாழை
அகல்வயல் மலைவேலி
நிலவுமணல் வியன்கானல்
தெண்கழிமிசைச் சுடர்ப்பூவின்
தண் தொண்டியோர் அடுபொருந

(சங்க - 1151)

என்பது அச்செய்யுட் பகுதி. இங்கே, மிகுதியாய்க் காய்த்துக் குலைகள் வளைந்து கிடக்கிற தெங்கின் தோட்டங்களும், அகன்ற வயலிடங்களும், மலையாகிய வேலியும், நிலவுபோல ஒளி விடுகின்ற மணல் நிரம்பிய அகன்ற கானலும், தீத்தோன்றுவதுபோலப் பூக்கள் நிரம்பியிருக்கின்ற கழிநீருமுடைய தொண்டி என்பது இதன் பொருள். ஆகவே குளிர்ந்த தோட்டங்களும், மருத நிலமும், குறிஞ்சி நிலமும், நெய்தல் நிலமும் கலந்து கிடக்கின்ற பிரதேசத்தின் நடுவிலே இப்பழைய நகரம் இருந்தது என்பது விளங்குகிறது. மலர் நிரம்பிய சோலைகள் இந்நகரத்திற்கு அணியாய் இருந்தன. 'தொண்டித் தண் கமழ் புதுமலர்' (சங்க — 97) 'முண்டக நறுமலர் கமழுந் தொண்டி' (சங்க — 98) என்று வரும் செய்யுளடிகள் இதற்குச் சான்று. இம்மலர்ச் செறி

வால் இங்கே இனிய தேனின் நறிய வாசனை எப்பொழுதும் கமழ்ந்து கொண்டிருக்கும். 'கள் நாறும்மே கானலந் தொண்டி' (சங்க—1930) என்பது ஒரு சங்கச் செய்யுளடி.

கடலையடுத்துள்ள ஒரு துறை முகமாக இது விளங்கிற்று என்பது 'பனித்துறைத் தொண்டி' (சங்க—93), 'துறைகெழு தொண்டி' (சங்க—101) என்ற அடிகளால் புலனாகிறது. கடல் அலைகள் கரையிலே மெல்லென மோதி, முழவு ஒலிப்பது போல ஒலித்துக் கொண்டிருக்கும் என்று அலையின் ஓசையைப் புலவர்கள் அனுபவித்துக் கூறியிருக்கிறார்கள். 'வளைகடல் முழவின் தொண்டியோர் பொருந' (சங்க-1744) 'திரைஇமிழ் இன்னிசை அளைஇ......இசைக்குந் தொண்டி' (சங்க-92) என்பன அவர்கள் கூறிய இனிய நன்மொழிகள். இக் கடற்கரையிலே உப்பு விளைத்தலும் மீன் பிடித்தலும் மக்கள் தொழில்கள்.

மோட்டு மணலடைகரைக்
கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி (சங்க-16)
... ... ... தந்தைக்கு
உப்புநொடை நெல்லின் மூரல்வெண்
சோறு
கொழுமீன் தடியொடு குறுமகள்
கொடுக்கும்
திண்தேர்ப் பொறையன் தொண்டி
(சங்க-1105)

உப்பை விற்று அதற்கு மாறாகக் கொண்ட நெல்லினாலாகிய வெண் சோற்றினை மீன் வேட்டைமேற் சென்ற தந்தைக்கு அவன் குறுமகள் கொடுத்தாள் என்று பொருள்.

பெரிப்ளூஸ் முதலியவற்றிலுள்ள குறிப்புக்களால் தொண்டியில் மரக்கலத்தின் மூலமாக வியாபாரம் நடந்து வந்த செய்தி நமக்குத் தெரிகிறது. இவ்வகை வியாபாரத்தைப்பற்றிய குறிப்பு யாதொன்றும் சங்க இலக்கியத்தில் வெளிப்படையாகக் காணப்படவில்லை. துறை என்ற பொதுப் பெயரிலிருந்து இவற்றைக் கருதிக் கொள்ளவேண்டும் என்று தோன்றுகிறது. இதனை அடுத்துள்ள பிறிதொரு பழைய பட்டினமாகிய முசிறி இவ்வகையான ஒரு வாணிக ஸ்தலமாக இருந்தது என்பதற்குத் தக்க இலக்கியச் சான்று உள்ளது.

சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை
கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி (சங்க - 1305)

இங்கே நன்கலம் என்பது மரக்கலம். கறி என்பது மிளகு. முற்காலத்து மிளகு மேலை நாட்டினரால் அரிய வியாபாரப் பொருளாகக் கொள்ளப்பட்டிருந்தது.

இங்ஙனமாகவும், தொண்டியைப் பற்றி இவ்வகைக் குறிப்பு இலக்கியங்களிற் காணப் பெறாதது சிறிது வியப்பாகவே இருக்கிறது.

இனி, தொண்டியில் வயற்பரப்பு மிக்குள்ள சிறப்பும் பலபடியாகச் சங்க இலக்கியங்களிலே விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது. உப்புக்கு மாறாக நெல்லைப் பெற்று அமுதாக்கும் செய்தி முன்னரே குறிப்பிடப்பட்டது (சங்க-1108). பிறிதொரு செய்யுளில் 'கானலந் தொண்டி நெல்லரி தொழுவர்' (சங்க-2341) என அங்கேயுள்ள அறுவடைச் செய்தி கூறப்படுகிறது. இத் தொண்டியில் விளைந்தது வெண்ணெல். ஒரு செய்யுள் இத் தொண்டி வெண்ணெல் தமிழகம் முழுவதும் பெரும்புகழ் பெற்

றிருந்தது என்பதை உணர்த்து கிறது.

பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது என் தோழி
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (சங்க-1040)

என்பது அச் செய்யுள். சிறந்த நறு நெய்யும், தொண்டியில் விளைந்த அரிய வெண்ணெல் வெண்சோறும், எழு கலத்திலே கலந்து இட்டுக் கொடுத்தாலும் அது, தலைவன் வருவதைத் தெரிவித்துக் கரைந்த காக்கை செய்துள்ள பேருதவிக்குச் சிறிதும் ஈடாகாது என்பது கருத்து. இதனால் தொண்டி வெண்ணெல் கிடைத்தற்கரிய இனிய உணவுப் பொருள் என்பது நன்கு புலப்படும். வயற்பரப்புக்களில் நிகழும் செய்திகளை ஒரு செய்யுள் அழகாக உணர்த்துகிறது. அங்குள்ள சிறு பெண்கள் வயிரம் பாய்ந்த கரிய உலக்கையைக் குழந்தையாகக் கொண்டு, உயர்தரமான நெல் விளைந்திருக்கும் வயல்களின் வரம்பணையிலே அதனைத் துயிலச் செய்து, விளையாடுகிற தொண்டி என்று மருதநிலச் சித்திரம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது.

பாசவல் இடிக்த கருங்காழ் உலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டி (சங்க-1161)

என்பது சங்க இலக்கியம்.

இப் பழைய நகரம் பல தெருக்கள் உடையதாய், விழா, இன்னிசை யரங்குகள் முதலியன நிகழ்தலினாலே எப்பொழுதும் இன்னொலியுடையதாய் விளங்கியது. 'முழவு இமிழ் இன்னிசை மறுகுதோறிசைக்குந் தொண்டி' (சங்க-92) என்பது ஒரு செய்யுட் பகுதி. அன்றியும் நன்றாக அரண் முதலியவற்றால் பாதுகாக்கப்பட்டது என்பது 'கதலிற் கானலந் தொண்டி' (சங்க-1929) என்ற தொடரால் தெரிய வருகிறது. இது சேரனது பெரு நகரங்களில் ஒன்று.

வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன்
தெண்டிரைப் பரப்பின் தொண்டி முன்றுறை (சங்க-1359)

எனவும்,

திண்தேர்ப் பொறையன் தொண்டி (சங்க-2293

எனவும் வரும் அடிகளால் இதனை உணரலாம். இங்ஙனமாக மேல்கடற் கரையிலே பலவகையான நல்ல இயல்புகளோடு பொருந்தி விளங்கியது இந் நகரம். 'தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே' (சங்க-96) என்பது ஒரு செய்யுட் பகுதி.

இந்நகரோடு சார்ந்த இரண்டு வரலாறுகள் காணப்படுகின்றன. ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் பதிற்றுப் பத்து என்னும் நூலில் ஆறும் பத்தில் புகழப்பெற்றுள்ளான். இவன் தண்டகாரண்யத்தில் வருடை என்று பெயர் வழங்கிய ஒருவகையான ஆட்டைப் பிடித்துத் தொண்டி என்ற நகரத்திற்குக் கொணர்ந்து அதனைக் கொடுப்பித்தான் என்றது ஒரு செய்தி. இதனைக் கூறும் அடிகளை அவற்றின் பின்வரும் அடிகளோடு சேர்த்து நோக்குமிடத்து யாகஞ் செய்தற் பொருட்டு ஆடு கொடுக்கப்பட்டது என்று ஊகித்தல் பொருந்தும். இச்செய்தியால் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் என்ற பெயர் இச்சேரனுக்கு வழங்கியது.

வேறொரு வரலாறும் சங்க நூல்களால் புலனாகின்றது. முற்காலத்திலே தோல்வியுற்ற பகைவனுடைய பற்களைப் பிடுங்கி அவற்றை வெற்றி கொண்டவனது நகர வாசலில் வெற்றிக்கு அறிகுறியாகப் பதித்து வைப்பது வழக்கம். இவ்வகை வரலாறு ஒன்றை ஓர் அகநானூற்றுச் செய்யுள் (சங்க - 2136) தெரிவிக்கிறது. இதனோடு ஒத்து, மூவன் என்னும் பேராற்றல் வாய்ந்த பகைவன் ஒருவனைத் தொண்டி நகரத்து அரசனாகிய பொறையன் வெற்றிகொண்டு அவன் பல்லினைத் தனது நகரத்தின் வாயிற் கதவிலே தைத்து வைத்தான் என்ற செய்தி.

மூவன் முள்ளெயிறு அழுத்திய கதவின்
கானலந் தொண்டி. (சங்க - 1929)

என்ற செய்யுளால் உணரலாகும்.

தொண்டியைப் பற்றி அகநானூற்றில் 3-ம், ஐங்குறு நூற்றில் 10-ம், குறுந்தொகையில் 3-ம், நற்றிணையில் 3-ம், பதிற்றுப் பத்தில் 2-ம், புறநானூற்றில் 2-ம், ஆக 23 செய்யுட்கள் சங்க இலக்கியத்தில் வந்துள்ளன. இவற்றுள் 2 செய்யுட்களின் ஆசிரியர் பெயர்கள் தெரிந்தில. மற்றைச் செய்யுட்களை இயற்றியவர்கள் ஒன்பது ஆசிரியர். அவர்கள் அம்மூவனார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், குடவாயிற் கீரத்தனார், குறுங்கோழியூர் கிழார், குன்றியனார், நக்கீரர், பரணர், பெருங்குன்றூர்க் கிழார், பொய்கையார் என்பவர்கள். இப்புலவர்கள் வாழ்ந்து இச்செய்யுட்களை இயற்றிய காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டாகலாம்.

தொண்டியின் பெருவாழ்வும் கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டோடு முடிவடைந்து விட்டது என்று ஒருவாறாக நாம் ஊகித்தல்கூடும். சங்க இலக்கியங்களுக்குப் பின்னுள்ள நூல்களில் சேரர்களுக்குரிய இம்மேல்கரைத் தொண்டியைக்குறித்து யாதொரு குறிப்பும் காணப்படவில்லை. யாது காரணத்தாலோ இந்நகரம் தனது பண்டைப் பெருமையை இழந்து வந்திருக்க வேண்டும். ஆனால் இதன் பெயர் தமிழகத்தில் ஒரு மந்திர சக்தியைப் பெற்றிருந்தது என்று சொல்லலாம். ஏனென்றால், சேரர்களோடு பகைமை கொண்டிருந்த பாண்டியர்களும் தங்களுக்குரிய துறைமுகப் பட்டினம் ஒன்றைத் தொண்டி எனப் பெயரிட்டு அழைத்தனர்.

இவ் விரண்டாவது தொண்டியைக் குறித்து நாம் முதன் முதலில் அறிவது இறையனார் களவியலுரையிலே வரும் பாண்டிக் கோவையிலேதான்.

மீனவன் தொண்டி (இறைய — 11)

நறையாற்று......வேல்கொண்ட
கோன் தொண்டி (இறைய — 14)

மன்னன் மதுராகன தொண்டி
மாக்கடலே (களவியற்காரிகை பக்-96)

மாறன்...தொண்டிக்கானல்
(இறைய — 147)

என்பன முதலாகவரும் பாண்டிக் கோவைச் செய்யுட் பகுதிகள் மேற்கூறியதற்குச் சான்று. இக்கோவையின் தலைவன் சம்பந்தர் காலத்தவன். எனவே ஏழாவது நூற்றாண்டில் இம்மீனவன் தொண்டி உளதாயிருந்தது. இதற்கு முன்னும் சங்க காலத்திற்குப் பின்னும் சுமார் ஐந்தாம் நூற்றாண்டளவில், இவ்விரண்டாவது தொண்டி தோன்றியிருத்தல்கூடும். 'வரகுணன் தொண்டியின் வாய்' (யா — காரிகை உரை) என்று வரும் பழஞ்செய்யுள் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்

பகுதியில் வாழ்ந்த வாருணனைக் குறித்ததாகலாம். நந்திக் கலம்பகம் கொண்ட மூன்றாவது நந்திவர்மன் பாண்டியனது தொண்டி நகரத்தைக் கைக்கொண்டவன் என்று அந்நூல் 38-ஆம் செய்யுள் உணர்த்துகின்றது. ஆகவே ஒன்பதாம் நூற்றாண்டில் இந்நகரம் சிறப்புற்று விளங்கியது.

இதற்குப் பின்னர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் ராஜாதிராஜன் II காலத்து ஆர்ப்பாக்கம் சாஸனத்தில் (20–1899) தொண்டி கூறப்பட்டிருக்கிறது. பாண்டி மண்டலத்தை ஈழ மண்டலப் படைகள் பிடித்துக் கொண்டு குலசேகரபாண்டியனை மதுரையினின்றும் வெருட்டி விட்டன. குலசேகரனுக்கு அபயமளித்த ராஜாதிராஜனுடைய சாமந்தர்களை எதிர்த்து இப்படைகள் சென்று தொண்டிப் பிரதேசத்தில் கடும்போர் புரிந்து வெற்றி கொண்டன. பின்னர் இவ்ஈழத்துப் படை முறியுண்டதனால், பாண்டியர்கள் மீண்டும் வலிமையுற்று விளங்கினார்கள். இக்காலத்தும் இத்தொண்டி சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கிற்று.

பின்னர் ஒரு காலத்துச் சோழ வம்சத்தைச் சார்ந்தவன் ஒருவன் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்து வந்தான். பாண்டியன் முற்றும் தோல்வியுறும் நிலையில் இருந்தான். அப்பொழுது அவனுக்காக ஆதிவீர ரகுநாத சேதுபதி போர் புரிந்து சோழனை முறியடித்து வெருட்டினார். இந்நன்றியைப் பாராட்டி இத்தொண்டித் துறைமுகத்தைப் பாண்டியன் சேதுபதிக்குக் கொடுத்தான் (நெல்ஸன் 3-116). சேதுபதிகள் தொண்டியைச் சில காலம் தங்கள் தலைநகராகக் கொண்டிருந்ததும் உண்டு (நெல்ஸன் 3-144). இதன் பின்னர் விஜய நகரத்து ராயர்களும் மதுரை நாயக்க அரசர்களும் தென்னாட்டை ஆண்டுவந்தனர். அவர்கள் காலத்தும் தொண்டி சேதுபதிகள் கைவசமே இருந்து வந்தது. ஆனால் சேதுபதிகளும் சிவகங்கை ஜமீன்தார்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் தொண்டி சிவகங்கை ஜமீன் வசமாயிற்று. ஒரு காலத்து, திண்டுக்கல்லையும் தொண்டியையும் இணைக்கவும், பின் திண்டுக்கல்லையும் மேல்கடற் கரையையும், இணைக்கவும் ஓர் ஆலோசனை கி. பி. 1796-ல் நிகழ்ந்ததுண்டு (நெல்ஸன் 4-24).

சேரர் தொண்டி, பாண்டியர் தொண்டி தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது போலவே, சோழ குலத்தோர் தொண்டி ஒன்று கீழ்த்திசையிலே கடலுக்கப்பாலுள்ள பிரதேசத்தில் தோன்றுவதற்கும் காரணமாயிருந்தது என்று நினைக்க இடமுண்டு.

### மந்திரவாதி அழைப்பு

மந்திரவாதி, ஓர் அழகிய பெண்ணை மேடைக்கு அழைத்துக் கொண்டு வந்து நிறுத்தி, "இவளை மாயமாய் மறைய வைக்கப் போகிறேன். இவளோடு சேர்ந்து மறைவதற்கு யாராவது ஒரு கனவான் முன் வருவாரா?" என்று கேட்டான்.

கூட்டம் முழுதும் ஆள்மேல் ஆள் மோதி யிடித்துக் கொண்டு ஒரே கலவரம் செய்து விட்டார்கள்!

ஆங்க தன்றியும் ஓங்கிரும் பரப்பின்
வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன்
கூடல்
வெங்கண் நெடுவேள் வில்விழாக்
காணும்
பங்குனி முயக்கத்துப் பனியரசு
(சிலப் 14. 106-112)

எனச் சிலப்பதிகாரத்திலே ஊர் காண் காதையில் இச் செய்தி கூறப் பட்டுள்ளது. இங்கே, 'கீழ்த்திசையிலே தொண்டி என்னும் பதியிலுள்ள அரசர்' என்ற அடியார்க்கு நல்லார் உரையும் 'தொண்டியோர்—சோழ குலத்தோர் என்ற அவரது குறிப்பும் உணரத்தக்கன. இத் தொண்டி பாண்டிநாட்டுத் தொண்டியாக இருத்தல் இயலாது. ஏனென்ருல் தொண்டியினின்றும் புறப்பட்ட மரக்கலத் திரள்கள் கீழ் காற்றிஞலே கடலில் செலுத்தப்பட்டு மதுரையை வந்து அடைந்தன என்று இவ்வடிகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வந்த மரக்கலங்கள் வாரோசு என்னும் கற்பூரவகை முதலிய அயல்நாட்டுப் பொருள்களைக் கொண்டுவந்தன என்று அறிகிருேம். இத் தொண்டி சுமத்ரா, ஜாவா முதலிய பிரதேசங்களில் சோழகுலத்தோரால் அமைக்கப்பட்ட ஒரு நகரமாதல் வேண்டும். இதனைக் குறித்து இப்பொழுது யாதும் அறிய இயலவில்லை. கீழ் கடலுக்கு அப்பால் இவ்வாறு தொண்டிப் பெயர் பெற்ற நகரம் ஒன்று இருந்தது உண்மையாயின், நாளிதுவரை அறியப் படாத ஓர் அரிய சரித்திரச் செய்தியைச் சிலப்பதிகாரமும் அதன் உரையும் உணர்த்துகின்றன என்று கருதவேண்டும்.

*

## அழகான சாமான்

புராதனமான புத்தகங்களும் கையெழுத்துப் பிரதிகளும் கிடைத்தால், மேல் நாட்டார் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து வாங்கத் தயாராய் இருக்கிருர்கள். "ராணி மாப்" (Queen Mab) என்பது ஷெல்லி எழுதிய நூலாகும். அந்த நூலின் முதல் பிரதி அச்சானதும், ஷெல்லி அதில் தம் கையொப்பமிட்டு, அதைத் தமக்கென்று வைத்துக்கொண்டார். 1920-ஆம் வருஷம் அந்தப் புத்தகம் விலைக்கு வந்தது. ஹெச். ஜி. வெல்ஸ் 1200 பவுன் கொடுத்து அதை விலைக்கு வாங்கினார். சில வருஷங்கள் கழித்து அதை யாருக்கோ விற்ருர். பின்பு, சில காலம் சென்று மறுபடியும் 13,600 பவுனுக்குத் திரும்பவும் அதை வாங்கிக் கொண்டார்.

## விட்டுப்போன விஷயம்

அமெரிக்காவிலே நியூ யார்க் நகரத்தில் பின் வருமாறு ஒரு போர்டு எழுதியிருந்தது: "சோடாக் கம்பெனிக்கு ஒரு குமஸ்தா தேவை. அவர் முழு நேரமும் வேலை செய்யக்கூடியவரா யிருந்தாலும் சரி, பகுதி நேரம் வேலை செய்யக் கூடியவராய் இருந்தாலும் சரி; அனுபவம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; ஆணுயிருந்தாலும் சரி, பெண்ணுயிருந்தாலும் சரி. தேவைதான்."

அந்த போர்டு போட்ட நாலைந்து நாளைக்குப்பிறகு, அந்த வழியாகப் போன ஒருவர், பென்ஸிலால் அந்த விளம்பரத்தின் இடையிலே "உயிரோடிருந்தாலும் சரி, பிணமாயிருந்தாலும் சரி" என்று எழுதிவிட்டுச் சென்ருர்.





சிறு வித்திலிருந்து தோன்றியது ஆலமரம், ஆனால், அது எண்ணற்றவர்களுக்கு நிழலைக் கொடுக்கிறது. அதைப் போல, ஏழை, எளிய வர்கள் முதல் பணக்காரர் வரை எல்லோரும் வாங்கி ஆனந்திக்கும் முறையில் 'அசோகா' குறைந்த விலையில் கிடைக்கிறது.

# எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

மதருஸ் விற்பனையாளர்கள்:

## வி. கனகய்ய செட்டி & கம்பெனி

நைனியப்ப நாய்க்கன் தெரு

சகல விதமான
வலிகளையும்
10 நிமிஷங்களில்
நிறுத்த




# பேபி பிராண்ட்

BABY BRAND PURE GHEE
TRADE MARK
RAJAM & Co. COIMBATORE

## சுத்தமான நெய்

### சாப்பாட்டிற்கும் பட்சணங்களுக்கும் இன்றியமையாதது

புதிய வெண்ணையைக் கொண்டு நூதன சாதனங்களால் நவீன சாஸ்திர முறையில் கைதேர்ந்த நிபுணர்களைக் கொண்டு பக்குவமாயும் பரிசுத்தமாயும் தயாரிக்கப்பட்டது, எல்லா இடங்களிலும், பிரபல வியாபாரிகளிடமும், கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும் கிடைக்கும், எங்களிடம் 9 பவுண்ட் கொண்ட டின் வரவழைத்து ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

### குதூகல வைபவங்களுக்கும் பண்டிகைகளுக்கும்

எம் அபிமானம் கொண்ட வியாபாரிகளுக்கும் வாடிக்கைக்காரருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்தும் உரித்தாகுக

THIS IS OUR SPECIALITY
ROBMG
இதுவே எமது ஸ்பெஷல் ரகம்

## ராஜம் & கோ :: கோயமுத்தூர்



# பொன்மயில்

சாக்யன்

மன்னன் பிரம்மதத்தன் காசி நகரை ஆண்ட காலத்தில், போதிசத்தன் ஒரு சொர்ண மயிலாய்ப் பிறந்தான்.

அது மகா லாவண்யம் வாய்ந்த மயில். தோகை விரித்து ஆடும் போது, தங்கமும் பச்சையும் மின்ன, அதன் ஆயிரம் ஊதாக் கண்களும் மலர்ந்து சிரிக்கும். தன் லாவண்யத்தைக் கண்டு, வேடன் அம்பு எந்த நேரத்திலே தன் மீது பாய்ந்து விடுமோ என்று சதா காலமும் அஞ்சியது அந்த மயில். ஆகையால், அமைதியாய், பத்திரமாய் வாழ்வதற்காக, நெடுந்தூரத்துக் கப்பால் உள்ள தண்டகாரண்யத்தில் ஒரு குன்றின்மீது அது வசித்து வந்தது. ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும், சூரிய தேவனையும் அநாதியான ஞான புருஷனையும் போற்றிப் புகழும் ஒரு மந்திரத்தை, மகா இனிய காகலி ராகத்தில் இடைவிடாது மயில் பாடி வந்தது. அந்த மந்திரமே அதைச் சகல தீமைகளினின்றும் காப்பாற்றி வந்தது.

இவ்விதம் அது தன்னை ஜாக்கிரதையாயும் விழிப்புடனும் தற்காத்து வந்தும், கூர்மையான கண்களையுடைய ஒரு வேடன் அதைக் கண்டுவிட்டான். தான் கண்ட மயிலைப்பற்றி, வேடன் தன் மகனுக்குச் சொன்னான்.

இதே வேளையில், காசி மன்னன் பிரம்மதத்தனின் மனைவியான ராணி கேமா, ஓர் அதிசயக் கனவு கண்டாள். சொர்ண மயமான ஒரு மயில், வெகு அழகாகத் தர்ம சாஸ்திர நுட்பங்களை விளக்கி உபதேசித்ததுபோல, அந்தக் கனவிலே அவள் கண்டாள். அதை மன்னனிடம் தெரிவித்து, அந்தக் கனவை நிறைவேற்ற வேண்டுமென்று, மன்னனை ராணி வேண்டிக் கொண்டாள். கனவிலே கண்ட காட்சியும் கேட்ட உபதேசமும், அவள் மனதைக் கவிந்து சஞ்சலத்தில் ஆழ்த்தின.

மன்னன் உடனே தன் மந்திரிகளையும் வேதசாஸ்திர பாரங்கதர்களான பிராம்மணர்களையும் ஒரு சபை கூட்டினான். ராணியின் கனவை அவர்களிடம் சொன்னான். இந்த மண்ணுலகிலே அத்தகைய ஒரு பட்சி எங்கேயாவது இருக்கிறதா என்று அவர்களைக் கேட்டான்.

பண்டிதரும் பிரதானிகளும் ஒருவருக்கொருவர் காதோடு காது வைத்துக் கிசுகிசு என்று கலந்தாலோசித்த பின்பு, யாவரினும் முதிய—அறிவில் மிகுந்த—ஒரு கிழவர் சொன்னார்:

“ஏ ராஜனே! உன் ராஜ்யத்திலுள்ள சகல வேடர்களும் உன் சந்நிதானத்துக்கு வர வேண்டுமென்று கட்டளை பிறப்பி. அவர்களிலே எவனாவது ஒருவன், அத்தப் பட்சியைக் கண்டிருக்கக்

புத்த பகவானுடைய பூர்வ ஜன்மங்களை விளக்கும் ஜாதகக் கதைகள் கலா சௌந்தரியம் மிகுந்தவை யென்று கீர்த்தி பெற்றவை. அவைகளின் காவிய ரசனைக்கும் அபூர்வ தத்துவங்களைச் சுட்டிக் காட்டும் சிறப்புக்கும் இந்தக் கதை ஓர் உதாரணம்.

கூடும். யாருமே கண்டிராவிட்டால், அனைவரும் சேர்ந்து தேடி அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவிடலாம்.''

முதலிலே அந்தப் பட்சியைப் பார்த்த வேடனை, ஒருவாறு கண்டுபிடித்தார்கள். அவனும் தன் வலையை எடுத்துக் கொண்டு துரிதமாய்க் கிளம்பினான். பொன் மயிலைப் பிடிக்க, தன் வாழ்நாள் முழுதும் அவன் எத்தனையோ முயற்சி செய்தும் பயன்படவில்லை. ராணி கேமா, தன் ஆசை நிறைவேறாமலே, ஏங்கி ஏங்கி மாண்டுவிட்டாள்.

மன்னன் மகா கோபமும் பெருந் துயரும் அடைந்தான். அந்தக் கோபத்திலே, அவன் ஒரு பொன் பட்டயம் செய்தான். அதிலே, 'அதோ, வெகு தூரத்திலே தண்டகாரண்யக் குன்றின் மேல் வாழும் பொன் மயிலின் புலாலை எவன் ஒருவன் உண்ணுகிறானோ அவன் நித்ய யௌவனம் பெற்றுச் சிரஞ்சீவியாய் வாழ்வான்' என்ற வாசகத்தையும் செதுக்கி வைத்தான்.

ஒருவனுக்குப் பின் ஒருவனாக ஆறு மன்னர்கள், அந்த மயிலைப் பிடிக்கத் தங்கள் வாழ்நாள் முழுதும் முயன்று தோற்றார்கள். கடைசியிலே, ஏழாவது மன்னன், தன் ராஜ்யத்திலேயே மகா சாமர்த்தியசாலியான ஒரு வேடனைத் தேர்ந்து, தண்டகாரண்யத்துக்கு அனுப்பினான்.

வேடன் வெகு எச்சரிக்கையாய்ச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும், சூரிய தேவனையும் அநாதியான ஞான புருஷனையும் போற்றிப் புகழும் ஒரு மந்திரத்தை மகா இனிய

### பிறவித் துன்பம்

இந்த வாழ்க்கையை உண்டாக்கியவன் யார் என்பதைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, ஜீவிய சமுத்திரத்திலே பல முறை பிறந்து தேடிப் பார்த்தேன். ஒரு பலனும் இல்லை. அவனைக் கண்டு பிடிக்கும் வழி தெரியவில்லை. பிறக்கப் பிறக்கத் துன்பமே உண்டாகிறது.

—தம்மபாதா (புத்தர் உபதேசம்)

காகலி ராகத்தில் அந்த அதிசயப் பட்சி இடைவிடாது பாடி வந்ததை அவன் கேட்டான். ஓ! இந்த மந்திரம்தான் அதை இவன் கண்ணியில் விழாது காப்பாற்றி வருகிறதாக்கும்!

தட்சணமே அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஒரு நாள் அதிகாலையில் கீழ்வானம் வெளுக்கு முன்னே, தன்னிடம் பழகியதொரு பெண்மயிலை எடுத்துக் கொண்டு சென்று, அங்கே விட்டான். தான் ஒரு புதருக்குப் பின்னே மறைந்து கொண்டு, கைகளைத் தட்டிச் சமிக்ஞை செய்தான். பெண் மயிலும் அந்த ஜாடை யறிந்து, 'கூ' என்று அகவியது. தண்டகாரண்யத்தில் வாழ்ந்துவரும் இத்தனை காலமாய் ஒருநாளும் தான் கேட்டிராத இந்தக் குரலை, பொன் மேனி படைத்த அந்த ஆண்மயில் கேட்டதும், தன் மந்திரத்தையெல்லாம் மறந்தது; தானுமே ஆனந்த பரவசத்தோடு கூவிக் கொண்டு, தளுக்கிக் குலுக்கும் அந்தப் பெண் மயிலைச் சந்திக்க ஓடி, வேடனின் கண்ணியிலே விழுந்து விட்டது.

வேடனும் ஜய குதூகலத்தோடு, காசி மன்னனிடம் அந்தப்

பொன் மயிலைக் கொண்டு சென்ருன். அரசன் அதற்குக் கௌரவமாய் ஓர் ஆசனம் அளித்தான்.

சிறைப்பட்டிருந்தும் இவ்விதம் கௌரவிக்கப் பெற்ற அந்தப் பொன் மயில், "என்னைப் பிடித்து வர ஏன் வேடரை அனுப்பினுய்?" என்று மன்னனைக் கேட்டது.

"எவன் ஒருவன் உன் புலாலைத் தின்கிருனே அவன் நித்ய யௌவனம் பெற்றுச் சிரஞ்சீவியாவான். அதனுல்தான் உன்னைப் பிடித்து வரச் செய்தேன்" என்று மன்னன் பதில் அளித்தான்.

'சாவில்லாத அமரத்துவம் பெறுவதற்காக உயிர்ப் பிராணிகளைக் கொல்லுவதாமே; என்ன முட்டாள்தனம்!' என்றெண்ணிச் சிரித்தது மயில். பின்பு அது முன் ஜன்மத்தில் தான் புரிந்த நற்செயல்களின் பயனுகவே இந்தப் பொன் தோகை பெற்றிருப்பதாக மன்னனுக்கு எடுத்துரைத்தது.

மேலும், "ஏ ராஜனே! ஓர் உயிரின் சாவிலிருந்து மற்ருேர் உயிருக்கு எப்படி அமரத்துவம் பிறக்கும்? எல்லா உயிரும் ஒன்றேயாகும். கருணை ஒன்றுதான், அமரத்துவம் அளிக்கும்" என்று அந்தப் பொன் மயில் பாடியது.

இவ்வாறு தர்ம சாஸ்திர ரகஸ்யத்தை விளக்கி உபதேசித்த பொன் மயிலை, மன்னனும் ராணியும் வியந்து பணிந்து சுற்றி வலம் வந்தார்கள். அதைப் பிடித்துவந்த வேடனே, தன்னை யறியாமலே திடீரென்று உருமாறிக் காஷாய முடுத்த பிட்சுவாய் நின்ருன்.

*

## நல்ல யோக்கியதாம்சம்!

மெட்ரோ கோல்ட்வின் மேயர் சினிமாக் கம்பெனி முதலாளி ஒரு முறை தம்முடைய காரியாலய மானேஜரை அழைத்து, "நான் வேலைக்கு எப்படி ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறேன் என்பதைப் பாரும்" என்று சொல்லிவிட்டு, பக்கத்து அறையில் காத்துக் கொண்டிருந்த விண்ணப்பதார்களை ஒருவர்பின் ஒருவராக வரச் சொன்னுராம்.

முதல் விண்ணப்பதார் வந்தார். முதலாளி அவரைப் பார்த்து, "இரண்டும் இரண்டும் எத்தனை?" என்று கேட்டார் "நான்கு" என்ருர் அவர். "ரொம்பச் சரி, பக்கத்து அறையில் போய் இரும்" என்று சொல்லி விட்டு, அடுத்த விண்ணப்பதாரை அழைத்தார். அவர் வந்ததும் அதே கேள்வியைத் திருப்பிக்கேட்டார். "ஆறு" என்ருர் அவர். "அற்புதம், கற்பனு சக்தி நிறைய இருக்கிறது" என்ருர். மூன்ருவது நபரிடமும் அதே கேள்வியைக் கேட்டார். அவர் "முப்பத்து ஒன்பது" என்ருர். "சபாஷ், என்ன அற்புதமான அறிவு, விசாலமான திருஷ்டி - நல்லது, அடுத்த அறையில் இரும். அழைக்கிறேன்" என்ருர்.

பின்பு, மானேஜரை அழைத்து, "இந்த மூன்று பேரில், யாரை நான் தேர்ந்தெடுப்பேன் என்று நீர் நினைக்கிறீர்?" என்று கேட்டார். "முப்பத்து ஒன்பது சொன்னவரைத் தேர்ந்தெடுப்பீர்கள்" என்ருர் மானேஜர்.

அல்ல. ஆறு என்று சொன்னவரையே தேர்ந்தெடுப்பேன்" என்ருர் முதலாளி.

"ஏன்?" என்று கேட்டார் மானேஜர்.

"ஏனு? அவர் என் மனைவியின் தம்பி" என்ருர் முதலாளி.

# அம்மானைப் பாடல்கள்

மு. அருணாசலம்

'கதை சொல்லு, கதை சொல்லு' என்று பாட்டியையும் தாத்தாவையும் நச்சரிக்காத குழந்தையே கிடையாது. ராமன் அல்லது கிருஷ்ணன் கதையா, வேறு குறவன் குறத்தி கதையா, அல்லது ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதையா — எதுவாயிருந்தாலும் சரி, கதை கேட்பதில் குழந்தைகளுக்கு விருப்பந்தான். குழந்தைகளின் உள்ளத்தில் பரந்ததொரு மனோதர்மம் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. இதன் துணைகொண்டு அவர்கள், கதையிலே குறைவாயுள்ள கை கால் முதலியவற்றைத் தாமே சேர்த்து ஒட்டிக்கொள்கிறார்கள்.

படி, படி என்று நாம் குழந்தைகளுக்கு எவ்வளவு தூரம் சொன்னாலும் அவர்களுக்குப் படிப்பது பெரிய தொந்தரவாகத்தான் இருக்கிறது. கதை கேட்பதில் அவர்களுக்குள்ள உற்சாகத்தில் கடுகளவுகூட, படிப்பதில் வருவதில்லை. ஆனால் வேறொன்றிலே அவர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி — அதாவது, பாட்டுக் கேட்பதிலே.

'பொருளே நல்லதங்காள் - பொல்லாத வேளையிலே' என்று தொடங்கும் நல்லதங்காள் பாட்டைப் பாட ஆரம்பித்து விட்டால், கல் மனம் படைத்த பெண்களும் உள்ளம் உருகிவிடுவார்கள். இம்மாதிரி அம்மானைப் பாடல்கள், மற்ற இலக்கியங்கள் பார்த்துப் பெருமைகொள்ளத் தக்க முறையில், கிராமத்தார்களிடையே ஏகபோக ஆட்சிபுரிகின்றன. அவற்றின் அழகையும் நயத்தையும் விளக்குகிறது இந்தக் கட்டுரை.

வீட்டில் நாம் நண்பர்களோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். நம்முடைய பேச்சில் குழந்தைகளுக்குச் சுவை சிறிதும் கிடையாது. நம்மைக் கவனிக்காமலே, தோட்டத்தில் அவர்கள் கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பார்கள். பேசிக்கொண்டேயிருக்கும்போது, நம்முள் ஒருவர் ஏதேனும் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, ஒரு பாட்டைப் பாடுவார். அவ்வளவு தான். இந்தப் பாட்டின் ஒலி தோட்டத்தில் விளையாடும் குழந்தைகளின் காதில் விழும். எல்லோரும் தாங்கள் விளையாடிய பந்தையும், பம்பரத்தையும் மரப்பாச்சிப் பொம்மையையும் அப்படியே எறிந்து விட்டு, ஓடிவருவார்கள். தங்கள் உடம்பில் படிந்த மண்ணோடும் புழுதியோடும் உள்ளே ஓடிவந்து, நம்மைச் சுற்றி நின்று பாட்டைக் கேட்பார்கள். பாட்டு, ராமாயணப் பாட்டாகவோ, திருவாசகப் பாடலாகவோ, இருக்கும். குழந்தைகளுக்குப் பொருள் விளங்காமலே இருக்கும். பாடியதிலும் ராகமிராது. ஆனாலும் பாட்டு என்ற மாத்திரத்திலே அதைக் கேட்பதில் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டந்தான்.

குழந்தைகளைப் போன்ற மனப்பான்மை நாட்டுப் புறத்திலுள்ள பாமர மக்களிடம் அதிகமாய்ப் பொருந்தி யிருக்கிறது. கதையிலும் பாட்டிலும் அவர்கள் மிகுதியாக ஈடுபடுகிறார்கள். இதை

உணர வெகுதூரம் போகவேண்டாம். ரயில் வண்டிகளிலும் பஸ் ஸ்டாண்டுகளிலும் பார்த்தால் போதும். புத்தக வியாபாரி ஒருவன் உரத்துப் பாடிக்கொண்டு, காலணாப் புத்தகமொன்றை விற்றுவருவான். அது, 'தெற்குப் புது வயல் தீப்பற்றிய சிந்து' அல்லது 'பருத்தியூர்ப் படுகொலைச் சிந்து' அல்லது 'வெங்கனூர் வெள்ளச் சேதம்' என்ற ஏதாவதொரு சிந்துப் பாட்டாயிருக்கும். பரிதாபகரமான நிகழ்ச்சிகள் ஏதேனும் அடிக்கடி நிகழ்கின்றன. ஒரு திருவிழாக் கொட்டகையிலே தீப்பிடித்திருக்கும். தண்ணீர்ப் பாசனத் தகராறு காரணமாகச் சண்டை ஏற்பட்டிருக்கும். அல்லது மழையினாலே ஆற்றில் வெள்ளம் வந்து சில ஊர்களில் சேதம் ஏற்பட்டிருக்கும். இந்தச் செய்திகள் வெளியான மறுநாளே ஒருவன் இதைப் பாட்டாகப் பாடிப் புத்தகமாக அச்சிட்டு விற்கிறான். ரயிலிலும் பஸ் ஸ்டாண்டிலும் சந்தையிலும் திருவிழாக் கூட்டத்திலும் இவன் பாடிக்கொண்டு நிற்கக் காணலாம். இவன் பாட்டுக்கும் யாப்பிலக்கணத்துக்கும் ஒத்துவராது. ஆனாலும், பாட்டைக் கேட்பதிலும், கதைப்போக்கைத் தெரிந்துகொள்வதிலும், நம் மக்களுக்கு எவ்வளவோ ஆசை. வியாபாரி பாடுவது காரணமாக, ஆயிரம் புத்தகங்கள் அரை மணி நேரத்தில் விற்றுப் போகின்றன.

இவ்வாறு ஒரு கதையை எளிய நடையில் பாட்டாகப் பாடிப் பாமர மக்களை ரசிக்கச் செய்வது, புதுமையல்ல; எவ்வளவோ பழமையான தந்திரம். புகழேந்திப் புலவரைப் பற்றி வழங்கும் கதையை நாம் அறிவோம். அவர் மீதிருந்த பொறாமை காரணமாக ஒட்டக்கூத்தர் அவரைச் சிறையிலே போட்டுவிட்டார். உணவு கொடுக்கவில்லை. சிறையில் அடைபட்டுக் கிடந்த புகழேந்தி என்ன செய்வார் பாவம்? பட்டினி கிடப்பவர் உயர்ந்த காவியம் பாட முடியுமா? சிறைச் சுவரிலிருந்த சாளரத்தின் வழியாகப் பார்த்தார். வெளியே சுவர் ஓரமாயிருந்த சாலையில், சிறு பெண்கள் இடுப்பிலே குடத்தை ஏந்திக்கொண்டு, அருகிலுள்ள ஆற்றுக்குக் குளிக்கச் சென்றுகொண்டிருந்தார்கள். பெண்களாயிற்றே, இவர்கள் உள்ளத்தில் இரக்கமுண்டாகும், தாம் உண்பதற்கு ஏதேனும் உணவு பெறலாம் என்று புலவர் எண்ணினார். ஆனால் தாமிருந்த சிறைப்பக்கம் அவர்களுடைய கவனத்தை எப்படி இழுப்பது?

சாதாரணமாய்க் கூப்பிடுவதைவிட, பாட்டுப் பாடினால் அவர்கள் நின்று கவனிப்பார்கள் என்று நினைத்தார். உடனே, ஒரு பாடலைப் பாடலானார். படிப்பில்லாத அப்பெண்களுக்கும் விளங்கக் கூடிய நடையிலே, எளிய சொற்களை, கடின சந்தியோ யமகத் திரிபோ இல்லாமல், சிறு சீர்களாக அமைத்துப் பாடலானார்.

**என்றனது திருநாடு**
**கேட்கிறையோ அம்மே**
**ஏற்றமுள்ள இந்திரனூர்**
**ஆளுமெங்கள் நாடு.**
**பச்சைமலை பவளமலை**
**எங்களது நாடு**
**பரமசிவன் வாழுவதும்**
**எங்களது நாடு.**
**வங்காளம் சிங்காளம்**
**மகதமெங்கள் நாடு**
**வளம்பாடிக் குறியுரைக்க**
**வந்தேனடி அம்மே.**

என்று புகழேந்தியார் பாடினார். 'அப்பெண்கள் சாளரத்தின் வழி

வந்த பாடலைக் கேட்டார்கள். சுவரருகே வந்தார்கள். புலவர் தம் பாட்டை நிறுத்தி அவர்களுக்குத் தம் பசிப்பிணியை எடுத்துரைத்தார். பெண்கள் ஓடோடியுஞ் சென்று சோறு கொண்டு வந்து சாளரத்தின் வழியாக அவருக்குத் தந்தார்கள். அவரும் உண்டு பசியாறினார். மேலும் கதையைத் தொடர்ந்து பாடும்படி வேண்டிக் கொண்டார்கள். அவரும், நாள் தோறும் அப் பெண்கள் ஆற்றுக்குக் குளிக்கப் போகும் நேரத்திலே, சிறிது சிறிதாகப் பல கதைகளைப் பாடினார்.

இந்த விதமாக, அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, ஏணியேற்றம் போன்ற அம்மானைப் பாடற் கதைகள் தோன்றின. இவ்வரலாறு உண்மையாயிருக்கலாம். இல்லாமலும் போகலாம். பாட்டாகப் பாடினால், பெண்கள் கூட, கதைகளைக் கேட்டு அனுபவிக்க முடிகிறது என்பதை இது காட்டுகிறது.

நாட்டுப் புறத்தில் வாழ்ந்த பழங்கால மக்கள், நகர மக்கள் போல உடுத்திய ஆடை கலையாமல் நாற்காலியில் உட்கார்ந்து பொழுதுபோக்குபவர்கள் அல்ல. பகல் நேரம் முழுதும் கடுமையான வெயிலிலே வயலில் நின்று, நெற்றி வேர்வை நிலத்தில் விழ, அரும்பாடு பட்டு உழைக்கிறார்கள். காலையிலே பழைய சோறும், உச்சி வேளையிலே, சமைத்த சோறு அல்லது கஞ்சியும் இவர்கள் வயற்கரையிலே நிழலில் உட்கார்ந்து உண்டு விடுகிறார்கள். பொழுது சாய்ந்த பின் வீட்டுக்கு வந்து குளித்து முழுகிச் சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டபின், நாலைந்து பேர் கூட்டமாய்ச் சேர்ந்தவுடன், சற்று நேரம் உல்லாசமாய்ப் பொழுதுபோக்கத் தோன்றுகிறது. பெரும்பாலோருக்கு எழுத்து வாசனையே தெரியாது. ஆகவே, இவர்கள் பூசாரியைத்தேடிப் போகிறார்கள். அவனுக்கு ஒருவேளை கொஞ்சம் படிக்கத் தெரியும். அல்லது அந்தந்தக் குட்டித்தேவதையின் கதையைக் கூறும் பாடல் அவனுக்குத் தலைமுறை தலைமுறையாக மனப்பாடம் ஆகியிருக்கும். புத்தகத்தின் உதவியில்லாமல், மதுரை வீரன் கதையோ, காத்தவராயன் கதையோ, மாரியம்மன் தாலாட்டோ—ஏதாவது ஒரு கதையைச் சுகமாகப் பாடி, கேட்போரை அனுபவிக்கச் செய்யும் திறமை அவனுக்குண்டு.

வெற்றிலைப் பையும் கையுமாய்க் குடியானவர்கள் பூசாரியை வந்து சூழ்ந்து கொள்வார்கள். பூசாரியும் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக வெற்றிலை போட்டு, புகையிலையும் மென்று விட்டானானால், அவ்வளவு தான்: தலை கிறு கிறுக்க ஆரம்பிக்கும். கையிலே உடுக்கு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பாடத் தொடங்கி விடுவான்:—

மாயி மகமாயி
மணிமந்த்ர சேகரியே
ஆயி உமையவளே
ஆதிசிவன் தேவியரே
கண்ண புரத்தாளே
காரண மாரிமுத்தே
கண்ண புரத் தெல்லைவிட்டு
கடுகநீர் வாருமம்மா

என்று தொடங்கினானால், அந்த மாரியம்மனைக் கயிலாயத்திலிருந்து கண்ணபுரத்திற்குக் கொண்டு வந்து, அங்கிருந்து மீண்டும் தன்னூர்க் கோயிலுக்கு அழைத்து வருவதற்குள், இராத்திரி மணி பன்னிரண்டு, ஒன்று ஆகிவிடும். அதுவரையில் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்

டிருந்த மக்கள், ஆண் பெண் அனைவரும், பிறகு எழுந்து தங்கள் வீட்டுக்குச் சென்று உறங்கு வார்கள்.

இப்படியாக, ஓழிந்த நேரத்திலே ஏதேனும் ஒரு கதையைப் பாடச் செய்து மணிக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருப்பதே நாட்டுப்புற மக்களுக்கு நல்ல பொழுதுபோக்கா யிருந்தது. இந்தக் கதைகள் யாவும் பாட்டாகவேதான் வழங்கினவா, வசனத்திலே இல்லையா என்று கேட்கலாம். வசனத்திலும் இருந்தன. விக்கிரமாதித்தன் கதைக்கும் முப்பத்திரண்டு பதுமைக் கதைக்கும் வரையறையுண்டா? தமிழறியும் பெருமாள் கதை, மரியாதைராமன் கதை என்றெல்லாம் எத்தனையோ வழங்கின. ஆனால் பாமர மக்களுக்கு இவற்றிலே உற்சாகம் குறைவு தான். ஏன்? பாட்டைப் பாடுவதிலும் கேட்பதிலும் உண்டாகும் இன்பமும் மனவெழுச்சியும் வசனத்தில் இல்லை. ஆகவே வசனமாகக் கதை கேட்கும் பழக்கம் குறைவு.

என்னென்ன கதைகள் பாட்டாகவே வழங்கினவென்று பார்த்தால், வழங்காத கதையே இல்லையென்று சொல்லிவிடலாம். மகாபாரதக் கதைகளுக்குக் கணக்கே இல்லை. முன்னமே சொன்ன அல்லியரசாணி மாலை முதலியன, பஞ்சபாண்டவர் வனவாசம், மகாபாரத அம்மானை என்றெல்லாம் எத்தனையோ. இராமாயண சம்பந்தமான நங்கைப் பாட்டுக்கள் பல. இவைபோக, சோகச்சுவை கொண்டு முடியும் துன்பியற் கதைகளும் சிலவுள்ளன. பொதுவாகத் தமிழிலே சோகச் சுவையோடு முடியும் கதைகள் குறைவென்று சொல்வார்கள். ஆனால் இந்த அம்மானைக் கதைகளைக் கவனித்தால், இந்தக் கூற்று சரியன்று என்று தெரிய வரும்.

தெருவிலே பிச்சைக்காரி வருகிறாள். வீடுவீடாகச் சென்று பிச்சை கேட்கிறாள். பிச்சை போடுங்கள் என்று சும்மா கேட்டாளானால் எத்தனைபேர் பிச்சை போடுவார்கள்? ஒருவராவது போடுவார்களாவென்பது சந்தேகம். ஆகவே, அவள் பிச்சை கேட்பதற்காகப் பாடுகிற வித்தையொன்றைப் பரம்பரையாகக் கற்றுக் கொண்டிருக்கிறாள். என்ன பாட்டுப் பாடுகிறாள்? தெய்வத்தின் மேலே தோத்திரப் பாடலா, பாடுகிறாள்? இல்லை. 'போறுளே நல்ல தங்காள் — பொல்லாத வேளையிலே' என்று தொடங்கி, பஞ்சத்திலடிபட்ட நல்ல தங்காள் தன் தமையன் வீட்டுக்குப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு செல்வதையும், அங்கே அவள் படும் கஷ்டத்தையும், விரித்துப் பாட ஆரம்பிக்கிறாள். பரிதாபகரமான இந்தக் கதையைக் கேட்கச் சகியாமல், வீட்டிலுள்ள பெண்மணிகள் ஒரு பிடி அரிசியைப் போட்டுப் பிச்சைக்காரியை அனுப்பி விடுகிறார்கள். சோகரசமான கதையைப் பாடினால், கேட்கிற தாய்மார் மனமிரங்குவார்கள் என்று பிச்சைக்காரி எப்படியோ தெரிந்து கொண்டிருக்கிறாள்.

சரித்திர சம்பந்தமான அம்மானைக் கதைகள் மற்றொரு முக்கியமான வகை. இந்தக் கதைகளைக் கேட்பதற்கும், புத்தகங்களையோ ஏட்டுச் சுவடிகளையோ தேடிப் போகவேண்டிய அவசியமுமில்லை. நாட்டுப்புறங்களிலே பிச்சைக்காரர் தெருவிலே பாடி வரும் பாட்டை ஊன்றிக் கவனித்தால் போதும். ஒரு பிச்சைக்

காரன் மிக்க வீரச்சுவை பொருந்தப் பாடுவதைக் கேளுங்கள்.

நவாபுக்குக் கப்பம் கட்டும்படி தோன்ற மல்லண்ணன் செஞ்சிக் கோட்டைக்கு வந்து தேசிங்கு ராஜனைக் கேட்கிறான்.

அந்தப் பேச்சைக் காதிலே கேட்டான்
ராஜா தேசிங்கு
படபடவென்று பல்லைக் கடித்தான்
ராஜா தேசிங்கு
கையைத் தூக்கிக் கனைத்துத் தட்டினான்
ராஜா தேசிங்கு
இனியில்லாத கோபமாச்சுது ராஜாவுக்
கானாலும்
பார்த்தவுடனே தோன்ற மல்லனும்
பதைத்து விழுந்தானும்
விழுந்தவுடனே சலாம்செய்து
வேண்டிக் கொண்டானும்.

இப்படியாகப் பாடுகிறான் பிச்சைக்காரன். சுகமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், ஆண் பெண் குழந்தைகள் அனைவரும். கதை பாடின பிச்சைக்காரனுக்குச் சோறும் அரிசியும் துணியும் பரிசில் வழங்குகிறார்கள். கிராமாந்தரங்களிலே இன்றும் இப்படி நடந்துவருகிறது.

இவ்விதம் எத்தனை எத்தனையோ வகைகளில் அம்மானைப் பாட்டுக்களும் கதைகளும் வழங்குகின்றன. இவை சாமான்யமானவை என்று தள்ளிவிடுவதற்கில்லை. உதாரணமாக, கவிச்சுவை நிரம்பிய சில வரிகளைப் பாருங்கள்: பாண்டியர் ஆட்சியிலே பாண்டி நாட்டின் வளம் எப்படியிருந்தது?

வாழை வடக்கீனும்
வான்கமுகு மேற்கீனும்
கரும்பும் இளநீரும்
கண்திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும்
கதிர் உழக்கு நெற்காணும்
அரிதாள் அறுத்துவர
மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக
ஐங்கலந்தேன் கூடுகட்டும்
மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெலென்று
ஆனைகட்டிப் போரடிக்கும்
அழகான தென்மதுரை.

இந்த வரிகளுக்குப் பொருள் விளக்கமே தேவையில்லை. அவ்வளவு எளிய சொற்கள், தெளிவான நடை, உணர்ச்சிமிக்க வருணனை.

பழங்காலத்தில் வழங்கிய இத்தகைய அம்மானைப் பாடல்களிலே, பெருங் கவிஞரும் ஈடுபட்டிருக்கிறார்கள். சிலப்பதிகாரம் பாடிய ஆசிரியர், பெண்கள் கூற்றாகச் சில அம்மானைப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அடியாராகிய மாணிக்கவாசகரும் திருவம்மானை என்றே அழகாக ஒரு பதிகம் பாடியிருக்கிறார்.

இந்த அம்மானைக் கதைகளால் நமக்குப் பயனுண்டா? உண்டு. இக்காலத்திலே வெளிவரும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் நூதனத் தமிழையும் படித்துத் தலைவலி வந்தபோது, அல்லியரசாணிமாலை என்ற அம்மானைப் பாடலை எடுத்து,

கட்டுக் கலங்காணும்
கதிருழக்கு நெற்காணும்

என்று படித்தோமானால், நம்முடைய தலைவலியெல்லாம் பறந்துவிடுகிறது, மனத்திலே இன்பம் நிறைகிறது.

இந்த அம்மானைப் பாடல்கள் வாழ்க.

*

## காந்தி கேட்பது.

ஜனங்கள் நேரு சொல்லுவதைக் கேட்கிறார்கள். நேரு காந்தி சொல்லுவதைக் கேட்கிறார். காந்தி, கடவுள் சொல்லுவதை மாத்திரம் கேட்கிறார்.

—லின் - யூ - டாங்



# கண்ணன் குழலோசை

**வ. அ. தியாகராஜன்**

**மில்ட்டன்** என்னும் ஆங்கிலக் கவி, "சாந்தியின் வெற்றிகள் யுத்தத்தின் வெற்றிகளைக் காட்டிலும் குறைந்தனவல்ல" என்று ஓர் இடத்தில் சொல்கிருன். அமைதியில் வெற்றி பெறுவது போரில் வெற்றிபெறுவதை விட அதிகக் கஷ்டம். பழைய காலத்தில் அடிமைகள் இருந்தபோது அடிமைகளை வாங்கி விடுவது சுலபம். ஆனல் அவர்களுக்குச் சாப்பாடு போட்டுக் காப்பாற்றுவது கஷ்டம். ரோம ஏகாதிபத்தியத்தில் ஓர் அடிமையின் விலை சுமார் இருபது ரூபாய். ஆனல், அவனுக்குச் சாப்பாடு போட்டு வளர்க்கவே ஒரு மாதத்துக்கு இவ்வளவு பிடிக்கும். அதனல் அடிமைகளுக்குச் சாப்பாடு குறைவாகவே கிடைக்கும். ஓர் அடிமையின் ஆயுள் சாதாரணமாய் நான்கு வருஷங்களே.

அன்ருருநாள் குரு க்ஷேத்திரத்தில் பெரும் போர் நிகழ்ந்தது. போர்க்களத்தின் நடுவிலே, கண்ணன் குழலோசை-கீதை-பிறந்தது. இன்று அதைக்காட்டிலும் கோரமான ஒரு போர் மூண்டிருக்கிறது. முழு உலகமுமே - மனித சமூகமே - கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. அன்று பிறந்த குழலோசை இன்றும் என்றென்றும்-ஒலிக்கத்தான் செய்கிறது. மனித குலம் அதற்குச் செவி சாய்க்குமா?

பெரிய விஷயங்களிலும் இந்த உதாரணம் பொருந்தும். ஓர் அரசாங்கத்தை மற்ருெரு அரசாங்கம் பிடித்து விடலாம். ஆனல் அதை போஷிப்பது கஷ்டம். சரித்திரத்தை ஆராய்ந்தவர்கள் இப்படிப்பட்ட அரசாங்கங்களின் வாழ்வு இருநூறு வருஷங்களே என்கிருர்கள். ஆனல் ரோம ஏகாதிபத்தியம் ஆயிரம் வருஷங்கள் இருந்தது.

இதற்குக் காரணம் என்னவென்ருல் அது காலத்தை யனுசரித்து தன்னுடைய குணத்தை மாற்றிக் கொண்டே போயிற்று. பொதுவாக யுத்தத்தில் இறப்பதற்குத் துணிய வேண்டும்; அமைதியில்கஷ்டத்தைப்பொறுத்துக்கொண்டு வாழ்வதற்குத் துணிய வேண்டும்.

**யுத்தம்** தீமையை அழிக்கிறது. பலஹீனமான ராஜ்யங்கள் பிறரால் அழிக்கப்படுகின்றன. பலஹீனமாய் இருப்பது ஒரு தீமை என்று ஏற்படுகிறதல்லவா? ஏன் ஒருநாடுபலஹீனமாகவேண்டும்? மனிதர்கள் அமைதியில் சுகத்தைத் தேடுகிருர்கள், அல்லது பணத்தைத் தேடுகிருர்கள். நாளடைவில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள வித்தியாசம் அதிகரித்துக்கொண்டே

வருகிறது. ஏழைகளுடைய உரிமைகள் குறைந்துகொண்டே வருகின்றன. அதனால் அவர்கள் வெளிநாட்டிலிருந்து ஒருவன் சண்டை போடவந்தால், "நமக்கென்ன?" என்று சும்மா இருந்து விடுகிறார்கள். ஓர் அரசாங்கத்துக்காக ஜனங்கள் தங்கள் உயிரைக் கொடுக்கத் தயாராயிருப்பார்களானால் அந்த அரசாங்கம் நீடித்துவாழும். ஆனால், அது எப்போது முடியும்? ஓர் அரசாங்கம் அமைதிக் காலத்தில் தன்னுடைய ஜனங்களைப் பலவிதமாக வருத்திக் கொண்டிருக்குமானால், அதற்குக் கஷ்ட காலம் வந்த போது "நீங்கள் எனக்காக இறக்கவேண்டும்" என்றால் யார் கேட்பார்கள்? பிரான்சில் புரட்சி ஏற்பட்டபோது, குடியானவர்களுக்கு நில உரிமை கிடைத்தது. அதனால், குடியானவர்கள் தங்கள் பிள்ளைகளை நெப்போலியனுடைய ராணுவத்தில் சேர்க்க இசைந்தனர். ருஷியாவிலும் இந்த விதியை நாம் பார்க்கிறோம். அதனால் யுத்தத்தில் வாழ விரும்பும் தேசம், அமைதியில் வறுமையை ஒழிக்க வேண்டும்; ஏழையாய் யாரும் இருக்கக்கூடாது என்று விதிக்க வேண்டும். ஒவ்வொருவனுக்கும் பொருள் கொஞ்சமேனும் இருந்தால் அதற்காக அவன் சண்டை போடுவான்.

வறுமை இல்லாத தேசம், அமைதியைப் பாதி வென்றுவிட்டது என்று சொல்லலாம்.

யுத்தம் தீமையை அழிக்கிறது. ஆனால் தீமையை அழிப்பவன் தானும் அந்தத் தீமையில் அகப்பட்டுக் கொண்டிருப்பானாகில் அவனுக்கு எப்படி வெற்றி கிடைக்கும்? ஒரு துடைப்பம் குப்பையைக் கூட்டுகிறது. அதன் தலையும் அந்தக் குப்பையிலேயே புரளுகிறது. அதனால் என்ன? வேலை முடிந்ததும் கண்ணுக்குத் தெரியாமல் அதை அப்புறப்படுத்தி விடுகிறோம். பொல்லாதவர்களுடைய போரும் இப்படியே. அவர்களுடைய வேலை முடிந்தபிறகு இயற்கை, அவர்களை மறைத்துவிடுகிறது. அதனால்தான் கண்ணனுடைய குழலோசை கீதையில் கேட்கிறது: யுத்தத்தை ஜெயிக்கவிரும்புபவன் தருமத்தை ஜெயிக்கவேண்டும். எப்படி ஒரு சங்கிலியின் குணம் அதில் இருக்கும் ஒவ்வொரு வளையத்தாலும் பாதிக்கப் படுகிறதோ, அது போலவே ஓர் அரசாங்கத்தில் நீதி என்பது அங்குள்ள ஒவ்வொருவராலும் காப்பாற்றப்பட வேண்டும். அரசாங்கமும் தருமமும் ஒன்று என்பதை அவர்கள் உணரவேண்டும். இதை விட்டு விட்டு, தனிமனிதன் செய்யும் தப்புகளெல்லாம் அரசாங்கத்தில் தருமமாக மாறிவிடுமானால், அது கொள்ளைக்காரருடைய அரசாங்கமாகுமே யொழிய அது தருமராஜ்யம் ஆகாது. தனிமனிதனுக்காக ஒரு நீதி, அரசாங்கத்துக்காக ஒரு நீதி என்று இல்லை. அர்த்தசாஸ்திரத்தில் பல குறுக்கு வழிகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. ஆனால் குறுக்கு வழியில் போவதற்கு நேர்வழியில் போவதைவிட அதிக நேரம் வேண்டும்.

அதனால் எந்த அரசாங்கம் அமைதியில் பொது நன்மையையே தருமமாகக் கருதி அதற்காக உழைக்கிறதோ, அதுவே யுத்தத்திலும் வாழ்கிறது. ஆனால் அரசாங்கத்தின் வாழ்க்கை, தனி மனிதனுடைய வாழ்க்கையை விட நீண்டது. சாதாரணமாக ஒரு நூற்றாண்டுக்கு நான்கு தலைமுறைகள் என்று எடுத்துக் கொள்ளலாம். இருநூறு வருஷங்

களுக்கு எட்டு ஆகிறது. அமெரிக்காவில் ஒரு பழமொழி உண்டு. "ஷர்ட்டை மடித்த கைக்கும் ஷர்ட்டை மடித்த கைக்கும் மூன்று தலைமுறைகளே" என்பது. இந்திய அரசாங்கத்தில் எத்தனையோ பேர் திவான்களாகி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பிள்ளைகள் ஏன் திவான்களாவதில்லை? கஷ்டப்படுவது ஒரு தலைமுறை; சுகத்தைத் தேடுகிறவர்கள் மற்றொரு தலைமுறை. சுகத்தைத் தேடுகிறவர்கள் ஊக்கத்தை இழந்து விடுகிறார்கள். அதனால்தான் அரசாங்க சக்கரமும் சுழன்று கொண்டே போகிறது.

ஆனால், தீமை அழிந்துபோவதைப்போல் நன்மையும் அழிந்துபோவது இயற்கையின் விதியன்று. தீமை பிறரை மட்டுமல்ல, தன்னைத்தானே அழித்துக் கொள்கிறது. ஆனால் நன்மையில் வளரும் சக்தி இருக்கிறது. அதனால்தான் தருமத்தைக் காப்பாற்றுவதற்காக யுத்தமே யொழிய ஜயத்திற்காக யுத்தமில்லை. ஆகையால் தான் கீதையில் வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாகப் பாவிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முருகனுடைய வேல் ஓர் அறிவுச் சின்னம். மனிதனுடைய சாசுவதமான வெற்றிகள் அறிவால் உண்டாக வேண்டுமே யொழிய, வேலையை ஒரு போர்ச் சின்னமாகக் கொள்வதாலல்ல. எப்படி குகைவாசி தற்காலத்து நாகரிகத்தை யறியானோ, அப்படியே தற்காலத்து மனிதர்கள் எதிர்காலத்து நாகரிகத்தை அறிய முடியாது என்கிறான் ஓர் ஆங்கில அறிஞன். தனி மனிதன் தன்னுடைய இருதயத்தில் குகைவாசியின் மனதை வைத்திருக்கும் வரை, அவன் ஆகாயத்தில் பறந்துபோன போதிலும் அவன் ஒரு குகைவாசியே. அதனால்தான் கீதை, யுத்தத்தில் அமைதியின் தருமத்தைப் போதிக்கிறது; கல்விகலை, பெருந்தன்மை இவைகளை நிலை நாட்டுகிறது. கீதை மறு உலகத்திற்குப் போவதற்கு ஒரு வழி என்று அதன் பொருளை ஒடுக்கக்கூடாது. தருமத்தைப் பொறுத்தமட்டில் மறு உலகம் இந்த உலகைவிட வித்தியாசமானது என்று நாம் எண்ணக் காரணமில்லை. இந்த உலகம் மறு உலகத்தின் நிழல் என்றே நாம் கருதலாம். தனி மனிதனுக்கு ஏன் இவ்வளவு முக்கியமான இடம் கீதையில் கொடுத்திருக்கிறதென்று கேட்கலாம். எப்படி ஒரு விளக்கு, தான் பிரகாசிப்பது மல்லாமல் சுற்றிலும் வெளிச்

---

**சிக்கன உபதேசம்**

*முதலாளி:* செட்டாக குடித்தனம் பண்ண வேண்டும். கண்டபடி செலவழிக்கக் கூடாது. நீ சம்பளத்தை எல்லாம் செலவழித்து விடுவாய் போலிருக்கிறதே!

*சிப்பந்தி:* எஜமான், அப்படி ஒன்றும் அதிகமாய்ச் செலவழிப்பதில்லை. அதற்கு நான் எங்கே போவேன்? முப்பது ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. அதில் இருபத்தைந்து ரூபாய் தான் நான் எடுத்துக் கொள்ளுகிறேன்.

*முதலாளி:* மீதி ஐந்து ரூபாயைப் பாங்கியில் போட்டு வைக்கிறாயாக்கும்?

*சிப்பந்தி:* அல்ல, பாங்கியில் எப்படிப் போடுவது? மனைவி கையில் கொடுத்து விடுவேன். அது கூடக் கொடுக்கா விட்டால், நான்கு ஐந்து குழந்தைகளை வைத்துக் கொண்டு அவள் கஷ்டப்பட மாட்டாளா?

---

சத்தை வீசுகிறதோ அதுபோல் தனி மனிதன் உலகத்தின் நன்மையைத் தேட ஒரு கருவியாகிறான். அதனால் தருமம் என்பதை தனி மனிதன் தருமம், அரசாங்க தருமம், யுத்த தருமம், சமாதான தருமம், இந்த உலகத்துத் தருமம், மறு உலகத்துத் தருமம் என்று பிரிக்க முடியாது. மின்சாரத்தைப் பலவிதமாக உபயோகித்த போதிலும், மின்சாரம் என்பது எப்படி ஒன்றேயோ, அது போலவே தர்மம் என்பதும் நன்ருய்ச் செதுக்கப்பட்ட ஒரு வயிரக் கல்லின் பலமுகங்களைப் போன்றது. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு முகத்திலிருந்து அதிகமாக வெளிச்சம் வீசினுலும், அது இயற்கையில் ஒன்றே.

அதன் குணத்தை யறிந்து நடப்பவன் சுய வெற்றியை அடைகிருன். தன்னைத்தானே ஜயிக்காதவன் எப்படிப் பிறருக்கு எஜமானனு யிருக்கமுடியும்? அறிவின் வெற்றி அன்பின் வெற்றி. இதில் தீமை வந்தபோதெல்லாம் எங்கே தப்பு இருக்கிறது என்பதைத் தெரிந்து சரிப்படுத்திக்கொள்ளக் கூடிய சக்தி இருக்கிறது.

குருக்ஷேத்திரப்போர் மிகப் பழையதாகி விட்டது. சரித்திரத்திலே இப்படிப்பட்ட போர் உண்டா என்று கேட்பாரும் உளர். ஆனுல், கீதையின் தத்துவம் என்றும் மாறுபடாதது. கண்ணன் குழலோசையைக் கேட்டு அதைப் பின்பற்றும் மனிதர்களுக்கும் தேசங்களுக்கும் போகப்போக வழி தெரியும்.

*

## காரணம் என்ன ?

தற்போதுள்ள பிரிட்டிஷ் மன்னருக்கு ஆண் வாரிசு இல்லாததால், அவருடைய புதல்வியாகிய எலிஸபெத் இளவரசியை, வேல்ஸ் இளவரசியாக்க வேண்டுமென்று லாயிட் ஜார்ஜ் போன்ருேர் முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனுல், மன்னர் இதை ஒப்புக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் என்ன ?

மன்னர் நினைத்தால் எலிஸபெத் இளவரசியை வேல்ஸ் இளவரசியாக்கி விடலாம் என்பதில் சந்தேகமில்லை. நினைத்ததை யெல்லாம் சிருஷ்டிக்கும் அதிகாரம், கொள்கை யளவில் மன்னருக்கு உண்டு. ஆனுலும், பரம்பரைச் சம்பிரதாயம் ஒன்று இருக்கிறதல்லவா? சாதாரணமாக, பட்டத்து இளவரசருக்கு மாத்திரமே வேல்ஸ் இளவரசர் என்ற பட்டமும் அவருடைய மனைவிக்கு வேல்ஸ் இளவரசி என்ற பட்டமும் சூட்டப்படுவது வழக்கம்.

எலிஸபெத் இளவரசிக்கு 'வேல்ஸ் இளவரசி' என்ற பட்டம் கொடுத்த பிறகு, மன்னருக்கு மகனே பேரனே பிறந்தால், அப்போது ஒரு சிக்கல் ஏற்படும். வேல்ஸ் இளவரசிப் பட்டம் யாருக்கு உரியது என்பதில் தகராறு உண்டாகும். தவிரவும், எலிஸபெத் இளவரசி நேர்வாரிசு அல்ல, அனந்தர வாரிசு. நேர்வாரிசுகள் பட்டத்துக்கு வருவதற்கு இடையிலே யாரும் புகுந்துவிட முடியாது. ஆனுல், எலிஸபெத் இளவரசி அனந்தர வாரிசு. மன்னருக்கு மகன் பிறந்தால், எலிஸபெத்தின் நிலைமை மாறிப் போகும்.

பிரிட்டிஷ் சரித்திரத்தில், இதுவரை ஒரு பெண்ணுவது தந்தைக்குப் பின் பட்டத்துக்கு வந்ததில்லை. எலிஸபெத்தை 'வேல்ஸ் இளவரசி' யாக்க மன்னர் விரும்பாத காரணம் இதுவாகவே இருக்கவேண்டும்.

# சோஷலிஸம்

வெ. சாமிநாத சர்மா

சாதாரணமாகத் தமிழ் நாட்டுக் கிராமங்களில் 'சமுதாயப் பொது' என்று சொன்னல் எல்லோருக்கும் தெரியும். சமுதாயத் தோப்பு, சமுதாயக் கொல்லை என்றெல்லாம் அழைப்பார்கள். எந்த ஒரு தனி நபருக்கும் சொந்தமல்லாமல், எல்லா நபர்களுமடங்கிய சமுதாயத்திற்குச் சொந்தமாயிருப்பது எதுவோ, எதனுடைய உற்பத்தியை, சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரும், குடும்பவாரியாகவோ, தனிப்பட்டவர் வாரியாகவோ சரிசமானமாகப் பகிர்ந்து கொள்கின்றனரோ அதற்கு — அந்தப் பொதுச் சொத்துக்கு—சமுதாயப் பொது என்று பெயர். இது நமது நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இந்தச் சமுதாயப் பொதுவான சொத்து இருப்பதன் காரணமாக, தனிப்பட்டவருடைய சொத்துரிமை, பொருளுற்பத்தி உரிமை, அதை விற்கும் உரிமை முதலியன எவ்விதத்திலும் பாதகமடைவதில்லை. இந்தச் சமுதாயப் பொது என்பதுதான், விரிந்த பொருளில், நவீன பாஷையில் சோஷலிஸம் எனப்படுகிறது. ஒரு சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருள்கள் உற்பத்தியாவதற்கும், உற்பத்தியான அந்தப் பொருள்கள் எல்லோருக்கும் ஒழுங்காகக் கிடைப்பதற்கும் மூலகாரணமாயுள்ள நீர், நிலம், காடு, சுரங்கம், போக்குவரத்து முதலியன யாவும் சமுதாயப் பொதுச் சொத்தாக இருக்க வேண்டுமென்று சொல்வதுதான் சோஷலிஸம். எவ்வித பேதமுமில்லாமல் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கக் கூடிய மாதிரி இருப்பதனல் அபேதவாதம் என்றும், சமுதாய வாழ்க்கை நடைபெறுவதற்கு மூலமாயுள்ள பொருள்கள் தனிப்பட்டவருடைய உடைமையாயில்லாமல், பொதுவுடைமையாக இருப்பதனல் பொதுவுடைமை என்றும் இஃது அழைக்கப்படுகிறது.

எனவே சோஷலிஸம் என்பது அடிப்படையில் ஒரு பொருளாதாரத் திட்டந்தான். இந்தத் திட்டத்தை நடைமுறையில் கொணர்வதற்காக இஃது அரசியல் கொள்கையாகக் கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தையும் கொள்கையையும் வலியுறுத்திக் கொண்டு செல்கிற முறையில் இஃதொரு தத்துவமாகவும் நாளாவட்டத்தில் வளர்ந்து விட்டது. ஆனல் பிற்காலத்தில் இதைப் பற்றிப் பல வியாக்கியானங்களும் பல கட்சிகளும் தோன்றி, ஒவ்வொரு சாராரும் தாங்கள் சொல்வதுதான் அசல் சோஷலிஸம் என்றும், தாங்கள்தான்

இந்தக் காலத்திலே சோஷலிஸம் என்ற வார்த்தையை எல்லோரும் தாராளமாய் உபயோகிக்கிறார்கள். சோஷலிஸத்தின் பரம விரோதியாகிய ஹிட்லர்கூட, தம்முடைய நாஸிஸத்துக்கு 'தேசிய சோஷலிஸம்' என்ற பேர் கொடுத்திருக்கிறார். முசோலினியும் சோஷலிஸ வேஷத்திலேயே பதவிக்கு வந்தார். நாஸிஸமும் பாஸிஸமுமே உண்மையான சோஷலிஸம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையாகுமா? நிஜமான சோஷலிஸம் எது?

உண்மையான சோஷலிஸ்ட்டுகள் என்றும் சொல்லிக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்; அவரவருடைய திருஷ்டிக்குத் தோன்றியபடி புதுப் புது நூல்களும் எழுதி வெளியிட்டார்கள். ஆக, சோஷலிஸம் என்ருல் இன்னது தான் என்று நிர்ணயமாக வரையறுத்துச் சொல்ல முடியாத அளவுக்கு இந்த சோஷலிஸம் வளர்ந்தும் ஆனல் சிதைந்தும் இப்பொழுது இருக்கிறது. ஓர் அறிஞன் கூறுவதுபோல் சோஷலிஸம் என்பது "எல்லோர் தலைக்கும் பொருந்தக்கூடிய தொப்பி மாதிரி" ஆகிவிட்டது. எனவே சோஷலிஸம் என்ற வார்த்தையைச் சொல்வது சுலபம்; ஆனல் அதைத் திட்டமாக விளக்குவது கடினம்.

உலக சரித்திரத்தில் அவ்வப்பொழுது பல அறிஞர்கள் தோன்றி, சமுதாயத்திலே காணப்பெறும் சீர் கேடுகள், பொருள் உள்ளார்க்கும் பொருள் இல்லார்க்கும் இடையில் காணப்பெறும் வேற்றுமைகள் முதலிய பலவற்றிற்கும் பரிகாரம் தேட வேண்டி, ஒரு சமுதாயம் இன்னபடிதான் இருக்க வேண்டும், இன்னபடிதான் இயங்க வேண்டும் என்று சில அபிப்பிராயங்களைத் தெரிவித்துவிட்டுப் போயினர். இவர்களில் பலர், ஒரு லட்சிய சமுதாயத்தைக் கற்பனையாகச் சிருஷ்டித்து விட்டும் போயிருக்கிருர்கள். இந்த லட்சிய சமுதாயத்தில் அல்லது கற்பனை ராஜ்யத்தில் சொத்தெல்லாம் பொதுச் சொத்தாக்கப்பட்டது; அநீதியே ஏற்படாமல் செய்யப்பட்டுவிட்டது. இப்படிக் கற்பனையாகச் சிருஷ்டித்து விட்டு இந்த அறிஞர்கள் மனச்சாந்தியடைந்தார்கள்.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தி இருந்த பிளேட்டோ என்ற கிரேக்க அறிஞன், தனது 'ஜன ஆட்சி' என்ற நூலில் மேற்சொன்ன மாதிரியான ஒரு லட்சிய சமுதாயத்தையே சிருஷ்டித்து விட்டுப் போனுன். ஸர் தாமஸ் மூர் (Sir Thomas More 1478–1535) என்பவன், சமுதாயப் பொதுவான ஸ்தாபனங்களடங்கிய ஒரு கற்பனை ராஜ்யத்தைத் தனது "உட்டோப்பியா" என்ற நூலில் வகுத்துவிட்டுப் போனுன். பூர்யே (F. C. Fourier 1772-1837) என்ற பிரெஞ்சு அறிஞன், சமுதாயத்தைப் பல குழுக்களாகப் பிரித்து அந்தந்தக் குழுவும் அதனதன் தேவைகளைப் பூர்த்திசெய்கிற முறையில் ஒரு திட்டம் வகுத்து விட்டுப் போனுன். ஸர் ராபர்ட் ஓவன் (Sir Robert Owen 1771–1858) என்ற ஓர் ஆங்கிலேய நெசவுமில் முதலாளி, பொதுவுடைமை முறையில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சில ஸ்தாபனங்களைப் பரீட்சார்த்தமாக நடத்திப் பார்த்தான். ஓவன் கோலிய இந்த ஸ்தாபனங்கள்தான் பின்னர் வளர்ந்த கூட்டுறவு இயக்கத்துக்கும் தொழிலாளர் இயக்கத்துக்கும் வழிகாட்டிகளா யிருந்தன.

இங்ஙனம் பல அறிஞர்கள் தோன்றி, பொதுமையை அடிப்படையாகக் கொண்ட லட்சிய சமுதாயத்தை நிர்மாணித்து விட்டுப் போனர்களாயினும், இவர்களில் யாரும்—ஓவனைத் தவிர்த்து—இதனை எப்படி நடை முறையில் கொணர்வது, அப்படிக் கொணர்ந்தால் அதனை நீடித்து நிலைக்கச் செய்வதெப்படி என்பவைகளைப்பற்றி ஒழுங்கான ஒரு திட்டம் வகுத்துக் கொடுத்தார்களில்லை. தங்களுடைய கருத்துக்

களை வெளியிட்ட மாத்திரத்தில் மானிட சமுதாயம் அவைகளை ஏற்று அனுஷ்டிக்கத் தொடங்கி விடும் என்ற திருப்தியுடனிருந்து மறைந்துவிட்டார்கள்.

கார்ல் மார்க்ஸ்தான் (1818–1883) முதன் முதலாக சோஷலிஸத்தை சாஸ்திர ரீதியான ஒரு தத்துவமாக, நடைமுறையில் கொணரக்கூடிய ஒரு திட்டமாக வகுத்தவன். இதனுலேயே இவன் 'சோஷலிஸத்தின் பிதா' என்று அழைக்கப்படுகிருன். இவனுடைய திட்டம் 'சாஸ்திரீய சோஷலிஸம்' (Scientific Socialism) என்றும், மற்றவர்களுடையது 'உட்டோப்பியன் சோஷலிஸம்' (Utopian Socialism) அதாவது கற்பனையிலே கண்டு மகிழக்கூடிய சோஷலிஸம் என்றும் முறையே அழைக்கப் பெறுகின்றன.

சாஸ்திரீய சோஷலிஸம் என்பதுவே பின்னர் மார்க்ஸீயம் என்றும் கம்யூனிஸம் என்றும் பல பெயர்களை அடைந்தது. இதுவும் மார்க்ஸின் பிற்காலத்தில் பல கிளைகளாகவும் பல கட்சிகளாகவும் பிரிந்திருக்கின்றன.

சோஷலிஸத்தின் அடிப்படையான கோட்பாடுகள் மூன்று. அவை முறையே,

1. உற்பத்தி சாதனங்களை, அதாவது எவை எவை சமுதாயத்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்திசெய்வதற்குக் காரணமாயிருக்கின்றனவோ, உதாரணமாக நீர், நிலம், காடு, சுரங்கம், போக்குவரத்து முதலியவற்றைத் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக்காமல் பொதுவுடைமைகளாக்குதல்; இந்த நோக்கத்துடன் முக்கியமான தொழில் ஸ்தாபனங்கள், போக்குவரவு சாதனங்கள் முதலியவற்றைப் பொதுஜன நிருவாகத்திற்குக் கொண்டு வருதல்.

2. ஒரு சிலருக்கு லாபங் கிடைக்கும்படியாக பொருள்களை உற்பத்தி செய்யாமல் எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய விதமாக பொருள்களை உற்பத்தி செய்தல்.

3. எந்தத்தொழில் நடைபெறுவதற்கும் சமூக சேவையே முக்கிய தூண்டுதலாகயிருக்கவேண்டுமே தவிர, ஒரு சிலருடைய நலனே, அந்தச் சிலருடைய லாபமோ தூண்டுதலாயிருக்கக் கூடாது.

இந்த மூன்று கோட்பாடுகளைப் பொறுத்தமட்டில் எல்லா சோஷலிஸ்ட்டுகளும் ஒன்றுபட்டவர்களே. இவைகளை நடைமுறையில் கொண்டு வருகிறபோது தான் கட்சி வேற்றுமைகள் தோன்றுகின்றன.

**முள்ளும் மலரும்**

பிரபல ஆங்கிலக் கவிஞரான மில்டன் கண்ணிழந்து குருடரான போது, ஒரு பெண்ணை மணந்து கொண்டார். ஒரு முறை அவர்கள் வீட்டுக்குப் போயிருந்த ஒரு நண்பர், அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்து அதிசயித்து, "உம்முடைய மனைவி ரோஜாப் பூவைப் போல் செக்கச் செவேலென்று இருக்கிருள்" என்று மில்டனிடம் கூறினர்.

மில்டன் சிரித்துக் கொண்டே, "அவள் செவேலென்று இருக்கிருளோ, கறேலென்று இருக்கிருளோ எனக்குத் தெரியாது. மலரைப் பார்க்க என்னல் முடியவில்லை. ஆனல் அதன் முட்கள் சுறுக் சுறுக் கென்று குத்துவது மாத்திரம் எனக்குத் தெரிகிறது" என்ருர்.

சென்ற பத்தொன்பதாவது நூற்றுண்டுத் தொடக்கத்திலிருந்து சமுதாயமானது முதலாளித்துவ ஆதிக்கம் பெற்றே இயங்கி வருகிறது. இந்த முதலாளித்துவ சமுதாயத்தைப் பொதுவுடைமைச் சமுதாயமாக மாற்ற வேண்டுமானல் அது பிரசாரத்தின் மூலமாகவும் படிப்படியாகச் சீர்திருத்தங்கள் செய்துகொண்டு போவதன் மூலமாகவுமே முடியும். அப்படித்தான் செய்யவேண்டும். ஒரு நிலையிலிருந்து மற்ருெரு நிலைமைக்குச் சமுதாயம் மாற வேண்டுமானல் அதற்கு நீண்ட காலமே செல்லும். அதனைத் துரிதப்படுத்துவதனல் சமுதாயத்தில் பல சீர்கேடுகள் உண்டாகும் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். இவர்களுடைய இந்தக் கோட்பாட்டுக்கு 'பரிணமவாத சோஷலிஸம்' (Evolutionary Socialism) என்று பெயர். புரட்சி செய்துதான் சமுதாயத்தை ஒரு நிலையிலிருந்து மற்ருெரு நிலைக்கு அழைத்துச்செல்லமுடியுமென்று இன்னொரு சாரார் கூறுகின்றனர். இவர்கள்தான் மார்க்ஸீயர்கள்; அதாவது மார்க்ஸைப் பின்பற்றுகிறவர்கள். இவர்களுடைய கோட்பாட்டுக்குப் 'புரட்சிவாத சோஷலிஸம்' (Revolutionary Socialism) என்று பெயர். அதாவது முன்னவர் சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று கூறுகின்றனர். பின்னவர் சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்கின்றனர். முன்னவருடைய கோஷ்டிகள் பிரிட்டிஷ் தொழிற்கட்சி, பேபியன் சொஸைட்டி (Fabian Society) முதலியன. பின்னவராகிய புரட்சிவாத சோஷலிஸ்டுகள்தான், அதாவது சாஸ்திரீய சோஷலிஸ்டுகள்தான், லெனின் தலைமையில் ருஷ்யாவில் புரட்சி நடத்தி அரசாங்க ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டவர்கள். இவர்களுக்குள்ளே கூட பின்னடி கருத்து வேற்றுமை ஏற்பட்டு ட்ரோட்ஸ்கி (Trotsky) என்பவனுடைய தலைமையில் தனியாக ஒரு கட்சி பிரிந்துவிட்டது.

## பாதிரியார் பரிதவிப்பு

நடுக் கடலில், கொடி அசைந்தாடியவாறு கம்பீரமாகப் போய்க் கொண்டிருந்தது ஒரு கப்பல். திடீரென்று நாலா புறமும் மேகங்கள் திரண்டன. இடி மின்னலுடன், மழை பலமாகப் பெய்தது. உலகத்தையே அழிக்கப் புறப்பட்டதுபோல பெரும் புயல் ஆரம்பமாயிற்று. கடல் கொந்தளித்தது. அலைகள் சீறிப் பாய்ந்தன. கப்பல் சிறு படகைப் போலத் தத்தளித்தது. சில நிமிஷத்துக்குள் அது மூழ்கிவிடும் போலிருந்தது. மாலுமியின் நம்பிக்கை தளர்ந்தது. அவன் பிரயாணிகள் எல்லோரையும் அழைத்து, "இனி நம் கையில் ஒன்றும் இல்லை, கடவுள்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்" என்றான். பிரயாணிகளில் ஒரு பாதிரியாரும் இருந்தார். மாலுமியின் வார்த்தைகளைக் கேட்டதும் அவர் முகத்தில் கலவரம் மூண்டது. "ஆ, அவ்வளவு மோசமான நிலைமைக்கா வந்து விட்டோம்!" என்றார்.

## குண வலிமை

மலரின் சுகந்தம் காற்றை எதிர்த்துச் செல்லாது. சந்தன வாசனையும் தூப தீபங்களின் மணமும், காற்றுச் செல்லும் வழியே செல்லும். நல்லொழுக்கத்தின் மணம் காற்றையும் எதிர்த்துச் செல்லவல்லது. சத்புருஷனின் மணம் நாலா மூலையிலும் பரவுகிறது.

—(தம்மபத - புத்தர் உபதேசம்)

# வாழ்க்கைச் சக்கரம்

[தம்மை உலக மாயையில் சிக்கவைக்கக் கருதிய தந்தைக்கு, சித்தார்த்தர் தமது பழவினைப் பயனைப் பரிந்துரைத்தல்]

வினைப்பயனால் யானு முன்னே
வேடர்குலத் துதித்தேன் ;
வெங்கானம் எங்குமோடி
வேட்டையாடிக் களைத்தேன்.

நினைக்கநிரைக் கொய்யவந்த
சிறுமியோடு நானும்
சிறுநிலையி லூஞ்சலிட்டுச்
சிறுகாட்டில் களித்தேன்.

சிரித்த முல்லை மலர்பறித்தே
சிறுமியர் தம் குழலில்
திருத்தமுறச் சூட்டிவிட்டுத்
திரும்பிநோக்கும் வேளை

ஒருத்தியென்முன் ஊர்வசிபோல்
ஒருநொடியில் வந்தே
உடலசையா உரைபகரா
ஓவியம்போல் நின்றாள்.

நின்றவட்கோர் மான் கன்றும்
நெஞ்சமதும் ஈந்தேன்.
நிலமதில் அசோதை அவள் ;
நெகிழ்ந்த மகன் நானே.

அன்றுமுதல் உலக வாழ்வில்
அடிமையாகி விட்டோம்.
ஆசையினால் வருதுயரை
அள்ளியள்ளி அளந்தோம்.

இன்பதுன்பச் சக்கரத்தால்
இவ்வுலகை இணைத்தே
இறப்போடு பிறப்பெனவே
எழுந்தசாலை வழியே

நின்றுருளும் ஞாலவாழ்வு
நீண்டதேரி வினையாய்
நெஞ்சறிந்த காதலினால்
நீ மகிழ வந்தோம்.

— உமா

*

# கருணை வள்ளல்



ஸரளி

அன்பு, இரக்கம், தூய்மை, ஞானம் முதலிய தெய்வ சம்பத்தெல்லாமே திரண்டு உருவெடுத்து அவதரித்தது போன்ற மகான் கௌதம சித்தார்த்த புத்தர். 'ஆசியாவின் ஜோதி' என்று அவர் இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறார். உலகத்தின் மிக ஏராளமான மக்களால் பின்பற்றப்படும் பௌத்த மதத்தின் மூலகர்த்தா அவர்.

கிறிஸ்து பிறக்க 620 வருஷங்களுக்கு முன், நேப்பாள ராஜ்யத்தின் எல்லையில், கபிலவாஸ்து எனும் சிறிய ராஜ்யத்தை ஆண்டு வந்த சுத்தோதனர் என்ற மன்னனுக்கும் மாயாதேவி என்ற ராணிக்கும் திருமகனாய்க் கௌதம சித்தார்த்தர் அவதரித்தார்.

பால்யத்திலேயே அவர் அதி சூட்சுமமான புத்திசாலி. படிப்பிலும், சிலம்பம், வில், வாள், குதிரையேற்றம் முதலிய வித்தைகளிலும் முதன்மையாய்த் தேறினார். அவருடைய கருணைப் பிரவாகமும் அந்தச் சிறு வயதிலேயே உருக்கொண்டுவிட்டது. குதிரை மீதேறிக் காட்டிலே வேட்டையாடச் செல்வார். மருண்டோடும் மான்களைத் துரத்திக்கொண்டே போவார். நடு வழியிலே திடீரென்று தயங்கி நின்று அந்தத் திக்கற்ற மான்களிடம் பரிதாபம் கொண்டு மனமிளகி, அவைகள் தப்பியோடும்படி விட்டுவிடுவார். குதிரைப் பந்தயத்திலே எல்லோருக்கும் முன்னே பாய்ந்து பறப்பார். வெற்றி அவருடையதே என்று எல்லோரும் நிச்சயமாயிருக்கையில் சட்டென்று நின்றுவிடுவார். தம் குதிரையின் வேதனைப் பெருமூச்சைக் கண்டு, அவர் உள்ளம் உருகிவிடும். வெற்றியைப் பெரிதென மதிக்காமல், குதிரையை நிறுத்தி ஆசுவாசப்படுத்துவார்.

வசந்த காலம். ஒரு நாள் சில அன்னங்கள், அரண்மனைத் தோட்டத்தின் வழியாய், தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. சித்தார்த்தரின் தாயாதியான தேவதத்தன் என்ற ஒரு கோமகன், அந்த அன்னங்களில் ஒன்றை அம்பெய்தி வீழ்த்தினான். அது சித்தார்த்தருக்கு முன்னே விழுந்தது. அம்பு செருகிய அதன் இறக்கைகள் ரத்தம் பெருகிச் சிவந்திருந்தன. அந்தப் பரிதாபக் காட்சியால் சித்தார்த்தரின் இதயம் நெகிழ்ந்தது. கருணை சுரந்து, அந்த அன்னத்தைத்

கத்தியின் மூலம் உலக சமாதானத்தை நிறுவி விடலாமென்று ஐரோப்பிய ராஜதந்திரிகள் கனவு காணுகிறார்கள். ஏறக்குறைய 2500 வருஷங்களுக்கு முன் வாழ்ந்த பகவான் புத்தருடைய உபதேசம், இன்றைய நிலைமைக்கு மிகத் தேவையாக இருக்கிறது. அன்று அவருடைய உபதேசத்தைக் கடைப்பிடித்து, தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தான் அசோக மன்னன். ஆனால், இன்று அவருடைய உபதேசத்தைக் கேட்க யார் இருக்கிறார்கள்? புத்த பகவான் நிர்வாணமடைந்த புனிதமான வைசாகத் திருநாளில், அவருடைய வாழ்க்கை வரலாற்றை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தமது மடிமீது தூக்கி வைத்துக் கொண்டு, அதன்மீது பதிந்திருந்த அம்பை மெல்லப் பிடுங்கினார். ஆர்வத்தோடு இதமாக அன்னத்தைத் தடவிக்கொடுத்தார். குளிர்ந்த தழைகளையும் தேனையும் அதன் காயத்திலே வைத்துக் கட்டினார். துன்பமும் வேதனையும் துளியுமறியாப் பாலகனாதலால், வலியென்றால் எப்படியிருக்கும் என்றறிய, அவருக்கு ஓர் ஆவல் உண்டாயிற்று. அந்தக் கூரிய அம்பின் முனையால், தம் கையிலே குத்திப் பார்த்துக் கொண்டார். வலியை அறிந்ததும், கண்ணீர் பெருக்கிக் கொண்டே, மீண்டும் அந்த அன்னத்தை இங்கிதமாய்க் கொஞ்சி, சிகிச்சையும் புரிந்தார்.

தேவதத்தன் வந்து "நான் வீழ்த்திய அன்னம் என்னுடையது. அதை என்னிடம் கொடு" என்று கேட்டான்.

"உயிரைக் கொல்பவனுக்கு, உயிர் சொந்தமாகாது. உயிரைக் காப்பாற்றுபவனுக்கே அது சொந்தமாகும். ஆகையால், அன்னம் என்னுடையதே யாகும். உன்னிடம் தரமாட்டேன்" என்று சொல்லிவிட்டார் சித்தார்த்தர்.

ராஜசபையிலே பண்டிதர்களையெல்லாம் கூட்டி, இதுபற்றி விவாதமும் நடந்தது. சித்தார்த்தரின் கட்சியே ஜயித்தது.

சித்தார்த்தருக்குவயது பதினெட்டாயிற்று. கோலி மன்னனின் மகளான யசோதரை என்ற பேரழகியை, சித்தார்த்தருக்கு மணம் செய்துவைக்க, சுத்தோதனர் விரும்பினார். யசோதரையை அடைய விரும்பி வேறு சில கோமகன்களும் வந்து சேர்ந்தார்கள். வாள் வீச்சிலும், வில் கலையிலும், குதிரை யேற்றத்திலும் ஒரு போட்டி நடந்தது. மூன்றிலும் முதல் தரமாய் வென்ற சித்தார்த்தரையே, யசோதரை மாலையிட்டாள்.

கருணைமூர்த்தியான மகனின் உள்ளக் கனிவைக்கண்ட தந்தை, துன்பத்தின் சாயைகூடத் தெரியாமல் மகன் வாழ வேண்டுமென்று எண்ணி, ஓர் அற்புத மாளிகையை நிருமித்து, அதிலே ஆடலும்பாடலும் சர்வபோகங்களும் நிறைந்திருக்கும்படி ஏற்பாடு செய்தார். அந்த அரண்மனையிலே மகனையும் மருமகளையும் குடியிருத்தி, ஏராளமான தாதியரைப் பணிவிடைக்கமர்த்தினார். தலையில் ஒரே ஒரு மயிர் நரைத்த பெண்ணும் அங்கே இருக்கக் கூடாது; வதங்கிய ஒரே ஓர் இலைச்சருகு கூட அங்கே காணலாகாது—இப்படியெல்லாம் திட்டம் செய்தார் சுத்தோதனர். சித்தார்த்தர் இவ்விதம் ஏதும் குறைவில்லாமல் இந்திரபோகத்தோடு, காதலும் களிப்புமாய் வாழ்ந்தார்.

ஆயினும், குதிரைமீதேறி நகர் சுற்றிவர, சிலசமயம் வெளியே செல்வார். அப்போதெல்லாம் வெளியே கண்ட பல துயரக் காட்சிகள், அவர் மனதைக் கிளறின. சாலையிலே அநாதையாய் நோயுற்று அவதிப்படும் நொண்டி முடங்களையும், செத்துச் சுடுகாடு செல்லும் சவங்களையும் கண்டபோது, "துன்பம், மரணம் ஆகிய வேதனைகளிலிருந்து மனிதனுக்கு விமோசனம் கிடையாதா? உயிர்க்குலத்தின் இன்னல்களிலிருந்து அவைகளை விடுவிக்க வழி ஒன்றுமில்லையா? அந்த வழியை நான் காணவேண்டும்" என்று அவர் மனம் ஏங்கியது. தம் சுக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசியானால் தான்,

அந்தப் பேரின்ப மார்க்கத்தைத் தாம் கண்டுபிடிக்க முடியும் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால், அதை வெளிப்படச் சொன்னால், ஒரு ராஜ்யத்துக்கே அரசரான தந்தை அனுமதிப் பாரா? மகா சுந்தரியான மனைவி தான் மனம் இசைந்து விடை கொடுப்பாளா? அவர் மனதுக் குள்ளே மறுகிக் கொண்டே இருந்தார்.

இவ்விதம் சித்தார்த்தரின் மனது தவித்துக் கொண்டிருந்த ஒரு சமயத்தில், அவருக்கு யசோ தரையிடம் சொர்ண விக்ரகம் போல் ஓர் ஆண் குழந்தை பிறந் துள்ளது என்ற சேதி வந்தது. "இதோ மற்றொரு பந்தம் முளைத்து விட்டது. இனித் துறவு பூணாமல் கணமும் தாமதிக்க லாகாது" என அவர் எண்ணினார்.

குழந்தை பிறந்த திருவிழா அரண்மனையிலே கோலாகல மாய்க் கொண்டாடப் பட்டது. பாட்டும் கூத்தும் விருந்தும் கேளிக்கையும் நிறைந்திருந்தன. சித்தார்த்தரின் மனது மட்டில் இந்த எதிலும் செல்லாமல், தாமரை இலை நீர்த்துளிபோல் தத்தளித்துக் கொண்டிருந்தது.

அன்றிரவு அவர் உறங்கிக் கொண்டே யிருக்கையில், மனம் நடுங்கியவராய், ஏதோ வீடு பற்றிய கூச்சலைக் கேட்ட வர்போல், திடுக்கிட் டெழுந் திருந்தார். எவ்வித லட்சியமு மில் லாமல் மனம்போன போக்காய் வாழும் இந்த இன்பவாழ்க்கையை உடனே கைவிட முடிவு செய்தார். மனைவி உறங்கும் அறை வாயிற்படிக்குச்சென்றார். எண்ணெய்த் தீபம் ஒன்று 'மினு மினு' என்று எரிந்துகொண் டிருந்தது. அந்த ஒளியிலே, தம் ஆசைமனைவி யசோதரையை ஒரு முறை பார்த்தார். ஹம்ச தூளிகா மஞ்சத்திலே அயர்ந்து தூங்கிய அவளைச் சூழ மலர்கள் இறைந்து கிடந்தன. சமீபத்திலே பிறந்த சின்னஞ்சிறு சிசுவை அணைத்துக் கொண்டு அவள் படுத்திருந்தாள். முதன் முறையும் கடைசி முறை யுமாக அந்தக் குழந்தையை வாரி யெடுத்துஅணைத்து உச்சிமுகர்ந்து முத்தமிட்டுக்கொள்ள வேண்டும் போல் அவருக்கு ஆசை வந்தது. ஆயினும் அப்படிச் செய்தால் யசோதரை விழித்துக் கொள்ளு வாளே என்று அஞ்சினார். அந்த ஆசையை அடக்கிக்கொண்டார். ஒரு பெருமூச்சு விட்டார்.

பின்பு மனதை உறுதி செய்து கொண்டு மறுபுறம் திரும்பினார். தமது குதிரை மீதேறி, சாய்ந்து கொண்டிருந்த சந்திர ஒளியிலே கோட்டை கொத்தளங்களையெல் லாம் கடந்து பல மைல் தூரம் சென்று விட்டார். அங்கே இறங்கி, தம்முடைய ஆபரணங் களை யெல்லாம் களைந்து, தலைமயிரை உடை வாளால் சேதித்து, அவைகளையும் குதிரை யையும் தம் தந்தைக்கு அனுப்பி விட்டு, ஏகாங்கியாய் நடந்தார். சிறிது தூரத்தில் கந்தலுடுத்து நின்ற ஓர் ஏழையிடம் சென்று, தமது ராஜாங்க உடையை அவ னுக்குக் கொடுத்து விட்டு, அவ னது கந்தையைத் தாம் வாங்கி அணிந்து கொண்டார். மனித வர்க்கத்தின் துயரத்தை யெல் லாம் தீர்க்கும் மகா ரகஸ்யத்தைத் தேடி, பரதேசியாய் அலையத் தொடங்கினார்.

கிடைத்த பிக்ஷைகளை வாங்கிப் புசித்தார். காடுகளிலும் குகை களிலும் திரிந்து, பல ரிஷிகளையும் முனிவர்களையும் சந்தித்தார். அவர்களுடைய யோகப் பயிற்சி

களெல்லாம் அவருக்குத் திருப்தி யளிக்கவில்லை.

இந்த நிலையில், மலையடிவாரத்திலே மேகம்போல் புழுதி எழுப்பிக் கொண்டு ஓர் ஆட்டுமந்தை செல்வதை அவர் கண்டார். அந்த ஆட்டு மந்தையின் கடைசியில், ஏதோ காயம் பட்டு ரத்தம் ஒழுக நொண்டி நொண்டிப் பின் தங்கியது ஒரு குட்டி. தாய்ஆடு இது கண்டு தவித்து இங்கும் அங்கும் ஓடியது. இந்தப் பரிதாபத்தைக் கண்ட பிரபு சித்தார்த்தர், அந்த ஆட்டைத் தோளிலே தூக்கிப் போட்டுக் கொண்டு, "அன்னை ஆடே! அமைதி பெறு. அதோ அந்த மலைக் குகையிலே உட்கார்ந்து உலகின் துயரத்தையெல்லாம் கண்டும் மூக்கைப் பிடித்துக் கொண்டு அந்த முனிவர்களைப்போல் கல்நெஞ்சோடு உட்கார்ந்திருப்பதைவிட, ஒரே ஒரு விலங்கின் துயரத்துக்கு ஆறுதல் அளிப்பது எவ்வளவோ மேலாகும்'' என்று சொன்னார்.

பின்பு, மந்தையை விரட்டிச் செல்லும் ஆட்டிடையர்களை நோக்கி, "இந்த ஆடுகளையெல்லாம் எங்கே அப்பா ஓட்டிச் செல்லுகிறீர்கள்?'' என்று அவர் கேட்டார்.

பிம்பிசார மன்னன் புரியப் போகிற யாகத்திலே பலிகொடுப்பதற்காக இவைகளை ஓட்டிச் செல்லுகிறோம்'' என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.

இதைக் கேட்ட சித்தார்த்தரின் மனது துடித்தது. நொண்டி ஆட்டுக்குட்டியைத் தோளிலே தாங்கியபடியே, சித்தார்த்தரும் அந்த மன்னனின் சபைக்குச் சென்றார்.

யாக குண்டத்தின் முன்னிலையில் ஓர் ஆடு கட்டியிருந்தது. பிம்பிசார மன்னன், எதிரே நின்றுகொண் டிருந்தான். அவனுக்கு இருபுறமும் புரோகிதர்கள் மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டு நின்றார்கள். மந்திரம் முடிந்தது. பலிகொடுப்பதற்காக ஒரு புரோகிதர் ஆட்டை வெட்ட வாளை ஓங்கினர்.

அந்தச் சமயத்தில் சித்தார்த்தர் "ஏ! உத்தம மன்னனே! அதை வெட்டச் சொல்லாதே!'' என்று கம்பீரமாகக் கூவி, ஆட்டைக் கட்டியிருந்த கயிற்றையும் அவிழ்த்துவிட்டார். அவருடைய தேஜஸைக் கண்டு அத்தனை பேரும் பிரமித்துத் திகைப்புற்றதால், யாரும் அவரைத் தடுக்கவில்லை.

பிறகு, அவர் சொன்னார்: "யார் வேண்டுமானாலும் ஓர் உயிரை வாங்கிவிடலாம். ஆனால், உயிரை யாரும் கொடுக்க முடியாது. சகல பிராணிகளுக்குமே, தன் தன் உயிரின்மேல் மிக்க ஆசைதான். கருணையே பெரிதாகும். உலகத்தைப் பலவீனர்களுக்கு லளிதப்படுத்தித் தருவதும், பலவான்களுக்குக் கம்பீரமாக்கித் தருவதும் கருணைதான். ஆண்டவனின் கருணைக்காகப் பிரார்த்திக்கும் மனிதன், தன் கீழுள்ள உயிர்களிடம் கருணையற்று நடக்கலாமா? எல்லா உயிரும் ஒன்றே அல்லவா? பூமாதேவி எவ்வளவு அற்புதமாயிருக்கிருள்! இங்கே சகல உயிர்களும் அன்போடு இணைந்து, அருமையான தானியங்களையும் இனிய கனிகளையும் கந்த மூலங்களையும் உண்டு, தூய நீரைப் பருகி, அத்தனை பேரும் இன்பமாய் வாழலாமே!''

இந்தக் கருணைப் பிரவாகமான பிரசங்கம், அந்தப் புரோகிதர்களின் மனதையும்கூட இளக்கி

விட்டது. அவர்களாகவேயாகாக் கினியை அணைத்து, பலி வாளை யும் வீசி எறிந்துவிட்டார்கள்.

தன் நாட்டிலே இனி யாரும் யாகத்துக்கோ உணவுக்கோ உயிர்களைக் கொல்லலாகாது என்று பிம்பிசார மன்னனும் அடுத்த நாளே கட்டளை பிறப் பித்துவிட்டான்.

சித்தார்த்தர் ஒரு ராஜ குமா ரர் என்று அறிந்துகொண்ட அவன், "எனக்கு மகனில்லை. தாங்கள் ஓர் அழகிய பெண்ணை மணந்து, என் அரண்மனையிலே வசித்து, என் ராஜ்யத்தை ஆண்டுவரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

"இவையெல்லாம் எனக்கிருந் தன. இவைகளைத் துறந்து விட்டே வந்திருக்கிறேன். நான் ஒரு தர்ம ராஜ்யத்தை ஸ்தாபிக் கப்போகிறேன். கயையின் நிழற் கரையிலே எனக்கு ஒளி கிடைக் கும். அங்கே சென்று சத்திய தர்சனம் செய்த பின்பு திரும்பி வந்து உன் அன்புக்கு என் கட மையைச் செலுத்துகிறேன்" என்று சொல்லிய சித்தார்த்தர், கயைக்குப் போய்விட்டார்.

அங்கே கானகத்தில் ஒரு மரத் தடியில் உட்கார்ந்து ஊண் உறக்கமில்லாமல் தியானத்தில் ஆழ்ந்தார். உடல் வாடியது. கண் பஞ்சடைந்தது. அவரோ உக்ர தவத்திலிருந்து பிறழவில்லை.

இச் சமயம், அந்தக் காட்டின் குறுக்குப் பாதையிலே கல்லையும் முள்ளையும் புதர்களையும் கடந்து சில நடன கணிகைகள் காலிலே சதங்கை ஒலிக்க, ஒரு சித்தாரை மீட்டிக்கொண்டும் பின்வரும் கருத்துடைய ஒரு பாட்டைப் பாடிக்கொண்டும், பல வர்ணப் பட்டுப்பூச்சிகள்போல் தாவணி கள் பறக்கக் குதித்துக் குதித்துக் கொண்டு நிழலுக்கு நிழல் தாவிச் சென்றார்கள்.

சுருதி கூட்டி யாழை மீட்டிச்
சொகுசுடனே பாடுவோம்.
கருதும் மனது குழைய மனிதர்
கவலை அகல ஆடுவோம்.

சுருதி கூட்டும் தந்தியினை
அளவு மீறி இழாதே;
பெரிதும் தளர்த்தி விட்டதனைத்
தொய்ந்து சோர விடாதே.

அளவு மீறி இழுத்த தந்தி
அறுந்து பாட்டுப் பறந்திடும்.
தளர்ந்து தொய்ந்த தந்தியிலே
தேய்ந்து பாட்டு மாய்ந்திடும்.

அந்தப் பாட்டு பிரபு சித் தார்த்தரின் மனதைத் தைத் தது; "ஆஹா! சில சமயம், புத்தி மான்களுக்கு மூடர்கள் எவ் வாறு போதனை செய்து விடுகிறார் கள்! என் ஜீவியம் என்ற தந்தி யிலே கானத்தை எழுப்புவதற் காக, இப்படித் தானே நானும் அளவுக்கு மிஞ்சி அதை இழுத்து முறுக்குகிறேன்! அதன் பலன் என்ன? என் கண் மங்கியது; பலம் குன்றியது. இப்படி உயிரை விடுவதிலே என்ன லாபம்? தேகத்தை வருத்துபவனுக்குச் சத்திய தர்சனம் எவ்விதம் சித் திக்கும்?" என்று ஆலோசித்தார்.

இச்சமயம் அங்கே சுஜாதை என்ற ஓர் உத்தமி வந்து, இவ ருடைய தேஜஸைக் கண்டு, இவரை அந்த வனத்தின் தெய்வ மென்றே எண்ணிவிட்டாள். தனக்குக் குழந்தை பிறந்ததற் காக, தன் பிரார்த்தனையைச் செலுத்த வந்த அவள், இவருக்கே தான் கொண்டு வந்த உண்டி வகைகளைப் படைத்து உண்ணும் படி வேண்டினாள். உண்டு களை தீர்ந்த சித்தார்த்தர், வாழ்க்கை லட்சியத்தைப் பற்றி அவளிடம் சம்பாஷித்தார்.

"கணவனின் அன்பும் குழந்தையின் முறுவலும் தெய்வப்பணிவிடையுமே எனக்குப் பேரின்பம் ஆகும்" என்று அந்தக் கற்பரசி சொன்னாள்.

அவளுடைய உத்தம குணநிசயத்தைக் கண்ட பிரபு சித்தார்த்தர், "தாயே! நீ குருவுக்குக் குருவாய் உபதேசிக்கிறாய். என் சத்திய சோதனையிலே வெற்றி பெற என்னை வாழ்த்து" என்று வேண்டிக் கொண்டார்.

அப்படியே அவள் வாழ்த்தினாள்.

பின்னும் பல காலம் அங்கிருந்த அரசமரத் தடியிலே இருந்த வண்ணம் தியானத்திலாழ்ந்தார். அப்போது, ராகத் துவேஷங்களால் மனதில் எழுந்த பற்பல கடும் சோதனைகளையும் கடந்து உறுதியாய்த் தவம் புரிந்தார். கடைசியிலே அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டு விட்டது.

மனிதன் ஏன் பிறப்பு இறப்பென்ற சுழலிலே அகப்பட்டு இன்ப துன்ப சாகரத்திலே மூழ்கித் தவிக்கிறான்? அவனுடைய மமகாரம் தான் அதன் காரணமாகும். மனிதனின் இன்ப துன்ப பந்தங்களுக் கெல்லாம், அவனுடைய காமங்களே - ஆசைகளே - பொறுப்பாகும்: 1. மண், பெண், பொன்னாசை; 2. ஆத்மா சிரஞ்சீவியாய் வாழவேண்டும் என்ற ஆசை; 3. பேரும் புகழும் சம்பாதிக்கவேண்டு மென்ற ஆசை — இந்த மூன்றுமே தீமையாகும்.

வாழ்க்கையின் சங்கடங்களிலிருந்தும் ஏமாற்றங்களிலிருந்தும் விடுபட, இந்த மூன்றுவித ஆசைகளையுமே ஒழித்து விடவேண்டும். பிரம்மசர்யம், சத்தியம், அஹிம்சை, திருடாமை, பொருள் தேடாமை ஆகிய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து அன்பும் கருணையும் நிறைந்த வாழ்க்கையை நடத்தவேண்டும். இதுவே, மனிதன் சகல இன்ப துன்பங்களிலிருந்தும் விடுபட்டு நிர்வாணமடையும் மார்க்கமாகும் என்று அவர் கண்டார்.

அதன் மேல் சித்தார்த்தர், தாம் கண்ட தர்ம மார்க்கத்தை, உலகுக்கெல்லாம் உபதேசிக்கப் புறப்பட்டார். புத்தர் (ஒளிபெற்றவன்) என்று ஜனங்களெல்லாம் அவரைக் கொண்டாடத் தொடங்கினார்கள்.

புத்தருக்குப் பல சிஷ்யர்கள் சேர்ந்தார்கள். தமது உபதேசத்தைப் பரப்ப, பிட்சுக்கள் அடங்கிய ஒரு 'ஸங்கத்'தையும் அவர் ஏற்படுத்தினார்.

கபிலவாஸ்துவைத் துறந்த ஏழு வருஷங்களுக்குப் பின்பு, அந்தப் புராதன ராஜ்யத்துக்கு, மீண்டும் சென்றார். முன்னே ரதத்திலே ராஜ வைபவத்தோடு தாம் பவனி வந்த அந்நகரின் தெருக்களிலே, சகலத்தையும் துறந்த ஒரு பிட்சுவாய்க் காஷாயக் கோலத்துடன் அவர் இன்று காலால் நடந்து சென்றார். அன்று வாள் தாங்கிய கை, இன்று கப்பறை தாங்கியிருந்தது.

அரண்மனையில் தந்தையும் சகோதரனும் ராஜகுமாரிகள் பலரும் சூழ்ந்திருந்து, புத்தரை வரவேற்றார்கள். ஆனால், யசோதரையை மட்டில் அங்கே காணோம். மாயாதேவிதான் காலமாகி விட்டாள். ஆனால், யசோதரை எங்கே?

புத்தரின் மனதிலே எழுந்த இந்தச் சந்தேகத்தைக் குறிப்பால் அறிந்த தந்தை, "சித்தார்த்தா, உன்னிடம் அவளுக்குள்ள

அன்பு துளியும் குன்றவில்லை. ஆயினும், உன்னைக் கண்டால், கட்டித் தழுவிக் கொள்ள உண்டாகும் ஆசையைத் தன்னால் அடக்க முடியாது. அப்படிச் செய்தால், பெண்ணையே தொடுவதில்லை என்று நீ செய்து கொண்டிருக்கும் விரதத்துக்குப் பங்கமாகுமே; அது கூடாது என்று தான் அவள் வரவில்லை" என்றார்.

புத்தர் புன்முறுவல் செய்து, "பாதகமில்லை; அவள் வரட்டும்" என்றார்.

குழந்தை ராகுலனைக் கையிலே பிடித்து அழைத்துக் கொண்டு, தன் பாசத்தை யெல்லாம் அடக்கிக் கொண்ட மன உறுதியோடு, பரபரப் பில்லாமல் அன்னம் போல் யசோதரை நடந்து வந்தாள்.

என்றாலும், பட்டுப் பீதாம்பரங்களோடு தான் கண்டிருந்த ராஜகுமாரன், பரதேசிக் கோலமாய் இந்நாள் வந்து நிற்கும் காட்சியைக் காண, அவளால் மனந் தாளவில்லை. கண்ணீர் பெருக்கிக் கொண்டே அவர் காலடியில் விழுந்து, அவருடைய முழக் தாளைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

கௌதமர், அவளைக் கைதூக்கி, ஆறுதல் கூறி, பெண்களுக்கும் தம்முடைய தர்ம மார்க்கத்திலே இடமுண்டு என்று கூறினார்.

பின்னால், புத்த சந்யாசினிகளின் மடம் ஒன்று ஏற்படுத்தி அதன் தலைவிகளில் ஒருத்தியாக அவளைப் புத்தர் நியமித்தார். மன்னன் சுத்தோதனனும், வயது வந்த பின் ராகுலனும், பௌத்த மார்க்கத்தைத் தழுவினார்கள்.

உன்னதமான தர்மத்தைப் பல காலம் போதித்துக் கொண்டிருந்து விட்டு, மகான் புத்தர் சுமார் கி. பி. 480-ஆம் ஆண்டு வாக்கில் நிர்வாண மடைந்தார். கோடிக் கணக்கான மக்கள் அவரை ஓர் அவதார புருஷனாகவே மதித்து, இன்று தொழுது வணங்குகிறார்கள்.

'புத்தம் சரணம் கச்சாமி ;
தம்மம் சரணம் கச்சாமி ;
ஸங்கம் சரணம் கச்சாமி.'

அதாவது "புத்தனைச் சரணடைகிறேன் ; தர்மத்தைச் சரணடைகிறேன்; ஸங்கத்தைச் சரணடைகிறேன்" என்பதையே தாரக மந்திரமாக அவர்கள் ஜபித்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

*

## சாமர்த்தியமான மழுப்பல்

யுத்தம் ஆரம்ப மாவதற்கு முன்னால், காமன்ஸ் சபையில் ஓர் அங்கத்தினர் பிரிட்டிஷ் பிரதம மந்திரியை நோக்கி, "லண்டன் மீது ஜெர்மன் விமானங்கள் குண்டு வீசினால், பெர்லின் மீது பிரிட்டிஷ் விமானங்கள் குண்டு வீசுமா?" என்று கேட்டார்.

அப்போது சர்வ தேச நிலைமை மிக்க சிக்கலாக இருந்தது. அந்த நிலையில், இதற்கு என்ன பதில் சொல்லுவ தென்று, பிரதம மந்திரிக்கு ஒன்றும் விளங்க வில்லை. சற்று நேரம் கழித்து அவர் சொன்னார்:

"இதற்கு 'ஆம்' என்று பதில் சொன்னால், எதிரி ரொம்பக் கோபமடைந்து நம்மை அழிக்க வருவான். 'இல்லை' என்று பதில் சொன்னால், எதிரிக்கு நம்மிடமுள்ள பயம் நீங்கிப்போகும். இரண்டும் சொல்லாமலிருந்தால், கனம் அங்கத்தினருடைய சந்தேகம் தெளியாது. நான் என்ன செய்வேன்?"

# வாயில்லாப்பூச்சி

ஜே. எல். பெரஸ்

இங்கே இந்த உலகத்தில் வாயில்லாப் பூச்சியான பாஞ்சே இறந்துபோனது யாருக்குமே தெரியாது. பாஞ்சே யார், அவன் எப்படி வாழ்ந்தான், எந்த விதமாகச் செத்தான் என்ற விஷயங்களைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றுமே தெரியாது. அவனுடைய நெஞ்சுத் துடிப்புத் திடீரென்று நின்று விட்டதா? அவனுடைய பலம் கொஞ்சம் கொஞ்சமாகக் குன்றிச் செத்தானா? அல்லது தாங்க முடியாத பெரும் சுமையைத் தூக்கி அவனுடைய எலும்புகள் நொறுங்கிவிட்டனவா? எது என்று யாருக்குத் தெரியும்? ஒரு வேளை பட்டினி கிடந்தே மடிந்திருக்கலாம்!

ஒரு ஜட்காவண்டிக் குதிரை வழியில் விழுந்து செத்திருந்தால் கூட, ஜனங்கள் அதைப்பற்றிப் பிரமாதப் படுத்தியிருப்பார்கள்; பத்திரிகைகளில் விரிவான செய்திகள் பிரசுரமாகியிருக்கும்; நூற்றுக் கணக்கான ஆவல் நிறைந்த ஜனங்கள் ஸ்தலத்துக்குச்சென்று வேடிக்கை பார்த்திருப்பார்கள்... ஆனால், பாஞ்சே, ஓர் ஏழைக் கூலிதானே!

பாஞ்சே மௌனமாக வாழ்ந்தான், மௌனமாக மாண்டான்; ஒரு நிழலைப்போல், இந்த உலகத்திலே ஜீவித்து மறைந்தான்.

வாழ்க்கையிலே சுகமில்லாதவனை 'வைகுந்தம் சேரலாம்' என்று ஏமாற்றி என்ன பயன்? இந்த உலகிலே ஒடிந்து விழுந்தவன், அங்கே போனாலும் நிமிர மாட்டான் என்பது நிச்சயம். அதற்கு உதாரணம் இந்த வாயில்லாப் பூச்சி. இ. ராமச்சந்திரன் ஆங்கிலத்திலிருந்து இதை மொழி பெயர்த்திருக்கிறார்.

அவன் வெறும் நிழலாயிருந்தான். அவன் உருவம் பதிந்த மனித இதயம் ஒன்றும் கிடையாது; அவன் நினைவைக்கொண்ட மனித ஜீவனே இல்லை!

யாராவது வார்சையோ, வார்சுக்குரிய ஏதேனும் சொத்தையோ, அவன் விட்டுச் செல்லவில்லை; அவன் தனிமையில் வாழ்ந்து தனிமையில் மடிந்தான்!

இந்த உலகத்திலே இவ்வளவு சந்தடி இல்லாதிருந்தால், தாங்கமுடியாத பெரும் சுமையைத் தூக்கி, பாஞ்சேயின் எலும்புகள் முறிந்த சப்தம் யாராவது ஒருவர் காதிலாவது விழுந்திருக்கும்; இந்த உலகத்திலே இவ்வளவு வேலையும், சுறுசுறுப்பும், அவசரமும் இல்லாதிருந்தால், யாராவது ஒருவரேனும் மனிதப் பிறவியான பாஞ்சேயைப் பார்த்திருக்கக்கூடும்; ஒளியிழந்த கண்களுடன், குழிவிழுந்த கன்னங்களுடன் — தலையில் சுமையில்லாத போதுகூட — கூனிய முதுகு நிமிராமல் பாஞ்சே நடப்பதை அவர் கண்டிருக்கலாம்!

பாஞ்சே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டபோது, அவன் குடியிருந்த மூலை வெகுநேரம் காலியாகக் கிடக்கவில்லை. அந்த இடத்துக்குப் பத்துப்பேர் காத்திருந்தார்கள்; அவர்களுக்குள்ளே ஏலம்கூறி அதிகத் தொகை கொடுத்தவருக்கு அந்த இடத்தை அளித்தார்கள். ஆஸ்பத்திரிக் கட்டிலிலிருந்து அவனைத் தூக்கிச் சென்றபோது, அந்த இடத்துக்காக இருபது ஜீவன்கள் காத்துக் கொண்டிருந்தன; சவக்

கிடங்கிலிருந்து முதுகாட்டுக்கு அவனைத் தூக்கிச் சென்றபோது, அந்த இடத்துக்கு இருபது சவங்களைத் தூக்கி வந்திருந்தார்கள்; எங்கேயோ மதில்சுவர் சரிந்து விழுந்து மாண்டவர்களாம்... யார் கண்டார் அவன் குழிக்குள்ளே எவ்வளவு நேரம் நிம்மதியாகக் கிடக்கப் போகிறான் என்று! யார் கண்டார், அந்தக் கையகலம் மண்ணுக்கு எவ்வளவு போட்டியோ!

இந்த உலகத்திலே அவன் சந்தடியின்றிப் பிறந்தான்; சந்தடியின்றி வாழ்ந்தான்; சந்தடியின்றி மாண்டான். துளிக்கூடச் சந்தடியின்றி, அவனைப் புதைத்து விட்டார்கள்.

ஆனால், மறு உலகத்தில் அப்படியில்லை! அங்கே பாஞ்சேயின் மரணம் பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது!

தேவதூதனின் கொம்பு, சப்த லோகங்களும் அதிரும்படி முழங்கிற்று, 'வாயில்லாப் பாஞ்சே செத்துவிட்டான்!' என்ற செய்தியை. பெரிய பெரிய சிறகு படைத்த பெரிய பெரிய தேவ தூதர்கள், அங்குமிங்கும் பறந்தோடினார்கள். ஒருவருக்கொருவர் இந்த முக்கியமான செய்தியை அறிவித்தார்கள். பாஞ்சேயைத் தேவ சபைக்கு அழைத்தாகி விட்டது! தேவ லோகம் முழுவதும் அல்லோலகல்லோலம்! வாயில்லாப் பாஞ்சே! வாயில்லாப் பாஞ்சே!!

மென்மையான ஒரு கந்தருவப் பெண், பளபள என்று மின்னும் கண்களும், தங்கம் தடவிய சிறகுகளும்கொண்டு, பஞ்சு போல் அடிவைத்து, பாஞ்சேயை எதிர்கொண்டழைக்க ஓடினாள். பறக்கும் சிறகுகளின் படபடப்புச் சப்தமும், களிப்புடன் நகைக்கும் சின்னஞ் சிறு தூதர்களின் இனிய நாதமும், தேவலோகம் முழுவதும் நிரம்பியது; கடவுளுடைய காதுக்கும் அது எட்டியது. பாஞ்சே வரப்போகிறான் என்று அவரும் அறிந்தார்.

பிதாவான எப்ரஹாம், தேவலோகத்தின் வாசற்படியில் போய்க் காத்து நின்றார்; பாஞ்சேயை வரவேற்கத்தான்! ஆஹா! புராதனமான அவருடைய முகத்திலே தோன்றிப் படர்ந்த களி நகையின் ஒளிதான் என்ன அழகு!

இதென்ன சப்தம்?

ஒன்றுமில்லை; பாஞ்சே உட்காருவதற்காக, சொர்ண மயமான ஓர் ஆசனத்தை இரு தூதர்கள் உருட்டி வருகிறார்கள்!

இதென்ன பளிச்சென்ற மின்னல்?

தங்கக் கிரீடம்; விலைமதிக்க முடியாத ரத்தினக் கற்கள் வைத்துப் பதித்தது. எல்லாம் பாஞ்சேக்குத்தான்!

"என்ன? இன்னும் தேவசபையில் விசாரணை நடக்கவில்லை. அதற்குள்ளாகவா இத்தனை ஆர்ப்பாட்டம்?" என்று சிறிது பொருமையுடன் கேட்கின்றன சித்தர்களின் ஆவிகள்.

"அதெல்லாம் சும்மாப் பெயருக்குத்தானே நடக்கும்! ராஜாங்க வக்கீல்கூட வாயில்லாப் பாஞ்சேயின்மேல் ஒரு குற்றமும் கண்டு பிடிக்க முடியாது! விசாரணை ஒரு நிமிஷத்தில் முடிந்து போகும்" என்று தூதர்கள் சொல்லுகிறார்கள்.

சின்னஞ் சிறு தேவதூதர்கள், பாஞ்சேயின் ஆவியை ஏந்திப் பிடித்து இன்னிசை பாடினார்கள்; பிதா எப்ரஹாம் வெகு நாள் காணாத கண்மணியைக் கண்டதைப்

போல் கைகுலுக்கி வரவேற்ருர்; தேவலோகத்திலே அவனுக்காக ஒரு தனி ஆசனம் தயாராயிருப்ப தாய் யாரோ சொன்ஞர்கள்; அவனுடைய தலைக்கு ஒரு பொன் கிரீடம் காத்திருக்கிறதென்றும், தேவசபையில் அவன் மேல் யாரும் குற்றம் சொல்லப் போவ தில்லை யென்றும் அவன் காதில் விழுந்தது — இவ்வளவையும் காதால் கேட்டு, கண்ணுல் கண்ட பிறகும்கூட, அவன் நம்பவே யில்லை. கீழுலகத்திலே யிருந்தது போலவே பயத்தினுல் அவன் வாய் அடைத்துவிட்டது! அவன் இதயத் துடிப்பு நின்றுவிட்டது! இது ஏதோ ஒரு கனவாயிருக் குமோ அல்லது ஏதாவது தவருத லாகத் தன்னைக் கொண்டு வந் திருக்கிருர்களோ என்று சந்தே கித்தான்!

இரண்டு விதமும் அவனுக்குப் புதிதல்ல! பல தடவைகள், கீழுலகத்தில், குவியல் குவிய லாகப் பணத்தைக் கண்டெடுப்ப தாக, அவன் கனவு கண்டிருக் கிருன்; கண்விழித்ததும், தான் என்றும்போல் சுத்தப் பர தேசியே என்பதை உணர்ந்திருக் கிருன். அநேகம் தடவைகள், இவனைக் கண்டதும் சிலர் தவருத லாக அன்பாய்ப் பேசிய பிறகு இவன் முகத்தைப் பார்த் ததும் கோபமாக வெறித்துக் கொண்டு போனதில்லையா?......

"என்னுடைய அதிர்ஷ்டம் அவ்வளவுதான்!" என்று நினைத் தான் பாஞ்சே.

குனிந்த தலை நிமிராமல், மூடிய கண்கள் திறவாமல், அவன் அங்கே நின்ருன்; கண் ணைத் திறந்தால் எங்கே அந்த அதிசயக் கனவு கலைந்து எங் கேயோ நரகலோகத்தில் கொடிய சர்ப்பங்களும் தேள் களும் நிறைந்த குகைக்குள்ளே கண் விழிப்போமோ என்ற பயம்; துளி அசைவும் இன்றிக் கல்போல் நின்ருர்கள்.

அவன் உடல் நடுங்குகிறது; அந்தத் தேவதைகள் அவனைப் பற்றிப் பாடும் புகழ்மாலைகள், அவன் காதில் விழவில்லை; அவர் கள் செய்யும் ஆரவாரத்தை அவன் கவனிக்கவில்லை. பிதா வான ஏப்ரஹாம் சொல்லிய உப சார வார்த்தைக்கு, அவன் பதி லளிக்கவில்லை. தேவ நீதிபதிக்கு முன்னிலையில் தன்னைக் கொண்டு போய் நிறுத்தியதும், அவரை வந் திக்கக்கூட அவன் மறந்துவிட் டான்.

பீதியால் நடுங்கும் பாஞ் சேக்கு, என்ன செய்வதென்று தெரியவில்லை.

தேவ நீதிசபையின் அடித் தளத்திலே அவனுடைய பாதம் பட்டதும், அவன் குனிந்து பார்க் கிருன்; அவன் பயம் பன்மடங்கு அதிகமாகிறது. கீழே தரையெல் லாம் சுத்தப்பளிங்குக் கற்கள்! நவரத்தினங்கள்! "எனக்கா இந்தத் தரை!" என்று அவன் நினைக்கிருன். அவனுடைய நெஞ்சு அளவுகடந்த பீதியால் உறைந்து போகிறது. "யார் கண் டது, எந்த மகாத்மா அல்லது யோகிக்குப் பதிலாகத் தவருத லாய் என்னைக் கொண்டுவந்திருக் கிருர்களோ?......அந்தப் புண்ணி யாத்மா, வந்ததும் நான் தொலைந் தேன்!" என்று நடுங்கினுன்.

இந்தக் கதிகலங்கிய பயத்தில், "பேசாத பாஞ்சேயின் வழக்கு!" என்று நீதிபதி கூறி யதையும், அவன் கவனிக்க வில்லை. ஒரு தஸ்தவேஜியை வக் கீலிடம் கொடுத்து நீதிபதி சொன்ஞர்: "இதைப் படியும்; சுருக்கமாயிருக்கட்டும்!"

அந்த அறை முழுவதும் பாஞ்சேயின் கண்களுக்குக் கிறு கிறு என்று சுற்றுகிறது. அவன் காதில் யாரோ உலக்கைகொண்டு இடிக்கிறார்கள்; இருந்தபோதிலும் வக்கீலின் குரல் தெளிவாக அவன் காதில் விழுகிறது; வீணையினின்றும் நழுவி விழும் இசையமுதைப் போல், அவருடைய வாயினின்றும் வார்த்தைகள் உதிர்ந்து வெளிவருகின்றன.

"லட்சணமான ஒரு தேகத்துக்கு, திறமை மிகுந்த ஒரு தையல்காரன் தைத்த ரவிக்கையைப்போல், அவனுடைய பெயர் அவனுக்குப் பொருந்துகிறது."

"அவர் என்னசொல்லுகிறார்?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளுகிறான் பாஞ்சே. அப்போது இன்னொரு குரல், வக்கீலை இடைமறித்துச் சொல்லுகிறது:

"உவமைகள் வேண்டாம்!"

வக்கீல் பேசுகிறார்: "அவனுடைய ஆயுள் காலத்தில் அவன் கடவுளைப் பற்றியோ, மனிதனைப்பற்றியோ ஒரு வார்த்தைகூட முணு முணுத்ததில்லை! மாற்சர்யம் என்ற தீப்பொறி அவன் விழிகளிலே உதிர்ந்ததேயில்லை; அவன் தன் சுயநலத்துக்காக ஒரு தடவைகூடக் கடவுளைப் பிரார்த்தித்ததில்லை."

பாஞ்சேக்கு ஒன்றும் விளங்கவில்லை; மறுபடியும் அந்தக் குரல் குறுக்கிடுகிறது:

"அணி யலங்காரங்கள் வேண்டாம்!"

"பரம யோகியான யோபு முனிகூட இவ்வளவு தூரம் சகித்துக் கொண்டிருக்கவில்லை..."

"நடந்ததைச் சொல்லவேண்டும், கால தாமதம்வேண்டாம்!" என்று கூவுகிறார் பொறுமையிழந்த நீதிபதி.

"பதின்மூன்றாவது வயதில் அவனுடைய தாயார் இறந்து மாற்றாந் தாய் வந்தபோது... மாற்றாந்தாயா அவள்? அவள் ஒரு கொடிய விஷப்பாம்பு, ஒரு ராட்சஸி!"

"ஒரு வேளை என்னைத்தான் சொல்லுகிறார்களோ?" என்று நினைக்கிறான் பாஞ்சே.

"தயவுசெய்து அன்னிய மனிதரைத் தூஷிக்க வேண்டாம்" என்கிறார் நீதிபதி.

"அவள் அவனுக்குப் புளித்துப்போன, பூச்சியரித்த ரொட்டித் துண்டுகளைத்தான் கொடுத்தாள். கறியென்று சொல்லி எலும்புத் துண்டைக் கடிக்கச் சொன்னாள்; அவள் மட்டும் சுயமான பாலும், தயிரும் அள்ளி அள்ளிச் சாப்பிட்டாள்..."

"விஷயத்தைச் சொல்லும்!"

"ஆனால், அவனுக்கு அடிகளும் உதைகளும் நிறையக் கொடுத்தாள்...கந்தல் ஆடையை அணிந்துகொண்டு, குளிர் நடுக்கும் பனிக்காலத்தில் காட்டுக்குப் போய், அவளுக்காக அவன் விறகு வெட்டி வருவான்...பல நாள் அவன் கைநரம்புகள் புடைத்துவிடும்! அவன் பாதம் பனியில் கிடந்து உறைந்துவிடும்; ஆனாலும், அவன் வாய்திறக்கவில்லை; அவனுடைய தந்தைக்கு முன்னிலையிலும்......"

"குடிகாரப் பயல்!" என்று அடக்க முடியாமல் சொல்லிச் சிரித்தார் ராஜாங்க வக்கீல். பாஞ்சேக்கு உள்நடுக்கல் எடுத்தது.

"...அவன் முணு முணுத்ததில்லை!" என்று வாக்கியத்தை முடித்தார் வக்கீல்.

மேலும் சொல்லலானார்: "எப்போதும் அவன் தனிமையில் வாழ்ந்தான்; தோழர்கள் கிடையாது; பள்ளிப் படிப்போ பூஜ்யம்.....ஒரு புது ஆடை உண்டா? துளிச் சுதந்தரம் உண்டா?...

"விஷயத்தை மட்டும் சொல்லும்" என்கிறார் நீதிபதி.

"ஒருநாள் இரவு, கொட்டும் மழையில் அவனுடைய தந்தை குடிவெறியில் அவனை மென்னியைப் பிடித்து நெட்டி வெளியில் தள்ளியபோதும், அவன் பேசவில்லை!...வாயைத் திறக்காமல் எழுந்து கால்போன வழியில் ஓடினான். வயிறு பசித்துத் துடித்த போது கூட, அவன் வாயைத் திறந்து கேட்க வில்லை; கண் பார்வையால்தான் யாசித்தான்.

"மழையில் நனைந்து கொண்டே, அவன் ஒரு பெரிய நகரத்தை அடைந்தான். ஒரு துளி ஜலம் அகண்டமான சமுத்திரத்திலே போய்க் கலப்பதுபோல், அவன் அந்த நகர வாழ்க்கையில் கலந்தான். அன்று இரவு அவனுக்கு ஜெயிலில்தான் படுக்கை...ஆனால் அவன் வாய் திறக்கவில்லை. ஜெயிலைவிட்டு வெளியில் வந்ததும், மிகவும் கடினமான வேலை எங்கே கிடைக்கும் என்றுதான் தேடினான்! ஆனால், வாய் பேசவில்லை!

"வேலையைவிடக் கடினமாயிருந்தது, அந்த வேலையைக் கண்டுபிடிக்கும் வேலை. அவன் வாய் திறக்கவில்லை.

"உடம்பிலே வழிந்த வியர்வையினாலேயே, காய்ச்சல் கண்டது; முதுகிலே சுமந்த கனமான சுமையினால், எலும்புகள் நொறுங்கின; பசியினால், வயிறு துடித்தது—அப்போதும் அவன் வாய்திறந்து பேசவில்லை!

"ஒரு காசுக்கு எவ்வளவு சுமை தூக்க வேண்டுமென்று, அவன் கணக்குப் பார்க்கவில்லை; ஒரு வெள்ளி நாணயத்தைச் சம்பாதிப்பதற்குள், அவன் எவ்வளவு தடவை கால்தடுமாறிக் கீழே விழுந்திருப்பான் என்று எண்ணவில்லை; எவ்வளவு தடவை உயிர்போய் வந்தது என்பதை அவன் கவனிக்கவில்லை; அவன் தன்னுடைய துரதிர்ஷ்டத்தைப் பற்றியோ, பிறரின் நல்லதிர்ஷ்டத்தைப் பற்றியோ, நினைக்கவில்லை. அவன் மௌனமாயிருந்தான்!

"தன் சம்பளத்தைக் கூட அவன் உரத்துக் கேட்டதில்லை. பிச்சைக்காரனைப் போல் நடையண்டை போய் நிற்பான்; அவன் கண்களிலே ஒரு கெஞ்சும் பாவனை, நாய்க்குட்டி போல. 'அப்புறம் வா!' என்று சொல்லுவார்கள். தன்னுடைய சம்பளத்தை அப்புறம் வந்து கேட்க நிச்சலனமான நிழலைப்போல், அவன் திரும்பி விடுவான்!

"அவனுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய கூலியைக் கொடுக்காமல் ஏமாற்றிய போதும், அல்லது அவனுக்குச் செல்லாக் காசைக் கொடுத்த போதும், அவன் வாய் திறந்தானா?......எப்போதும் அவன் வாய் மூடியே இருந்தது!"

"ஐயோ, நிஜமாகவே என்னைத்தான் சொல்லுகிறார்கள்" என்று நினைக்கிறான் பாஞ்சே.

கொஞ்சம் தண்ணீரைக் குடித்து விட்டு மேலும் சொன்னார் வக்கீல்: "ஒரு தடவை அவன் வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது...கட்டு மீறிய ஒரு கோச்சு வண்டி, இவனைக் கடந்து பறந்து சென்றது...

கோச்சு ஓட்டி, வழியில் விழுந்து மண்டை உடைந்து கிடந்தான்... மிரண்டு ஓடிய குதிரைகளின் வாயிலிருந்து நுரை தள்ளியது; அவைகளின் கால் குளம்புகளி லிருந்து தீப்பொறி பறந்தது; கோச்சு வண்டிக்குள் ஒரு மனி தன் பயந்து கிடந்தான்.

"பாஞ்சே துணிகரமாக அந் தக் குதிரைகளைப் பிடித்து நிறுத் தினன்.

"இவ்விதம் காப்பாற்றப்பட்ட மனிதன் தர்மசிந்தை உள்ளவன். அவன் பாஞ்சே செய்த உதவியை மறக்கவில்லை.

"இறந்து போன கோச்சோட் டியின் ஸ்தானத்தில் பாஞ்சேயை அவன் அமர்த்தினன். அது மட்டு மில்லை; அந்த மனிதன், பாஞ் சேக்கு ஒரு மனைவியையும் அளித் தான்; அதோடு, அவனுக்கு ஒரு குழந்தையையும் அருளினன்!.... என்ருலும், பாஞ்சே வாய் திறக்க வில்லை!..."

"என்னைத்தான், என்னைத்தான் சொல்லுகிருர்கள்" என்று தனக் குத்தானே முனகிக் கொள் கிருன் பாஞ்சே. அவன் நம் பிக்கை வலுவடைகிறது. ஆன லும், இன்னமும் அந்த நீதி பதியை நிமிர்ந்து பார்க்க அவ னுக்குத் துணிவு வரவில்லை.

வக்கீல் சொல்வதைக் கவனிக் கிருன்: "அவனுடைய எஜமான் திவாலாகி அவன் சம்பளத்தைக் கொடுக்கத் தவறியபோதும், அவன் பேச வில்லை.....அவன் மனைவி ஒரு பச்சைக் குழந்தையை இவனிடம் விட்டுவிட்டு ஓடிப் போன போதும், இவன் வாய் திறக்கவில்லை!...

"பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு, அந்தக் குழந்தை பெரியவ ஞக வளர்ந்து, பாஞ்சேயை வீட்டை விட்டுத் துரத்திய போதும், அவன் வாய் திறக்க வில்லை...

"அதன் பிறகு, இவனுடைய எஜமான் மற்றவர்களுக் கெல் லாம் கொடுக்க வேண்டிய பாக்கி களைக் கொடுத்துவிட்டு, இவ னுடைய சம்பளப் பாக்கியில் ஒரு காசுகூடக் கொடுக்காத போதும், இவன் வாய்திறந்து கேட்டான?...இன்னும் அதே எஜமான் இன்னொரு தடவை கோச்சு வண்டியில் போகை யில், இவன்மேல் வண்டியை ஏற்றிவிட்ட போதுதான், வாய் திறந்தான?... போலீஸ்காரர்கள் கேட்டபோது, தன்னை யார் இவ்விதம் முடமாக்கியது என்று அவன் சொன்னன? இல்லவே யில்லை...

"உரக்க அழுவதற்குச் சர்வ சுதந்திரம் அளிக்கப்படும். ஆஸ் பத்திரியில் கூட, அவன் பேச வில்லை!

"துட்டு இல்லாமல் கவனிக்க முடியாது என்று டாக்டர் சொன்னபோதும், அங்கேயுள்ள சிப்பந்திகள் அவனுக்கு மாற்று உடை கொடுக்க மறுத்த போதும், அவன் பேசவில்லை!

"உயிர் துடிக்கும் கடைசி நேரத்திலும், அவன் பேசவில்லை...

"கடவுளைக் குறித்தோ மனி தனைக் குறித்தோ, அவன் ஒரு வார்த்தையும் முணுமுணுத்த தில்லை... இவ்வளவுதான்!"

மறுபடியும் பாஞ்சே நடுங்கு கிருன்; ஏனெனில் அந்த வக்கீ லுக்குப் பிறகு ராஜாங்க வக்கீல் பேசுவார் என்பது அவனுக்குத் தெரியும். அவர் என்னென்ன சொல்லப் போகிருரோ? அவ னுடைய வாழ்க்கைச் சம்பவங்

கள் முழுவதும் அவனுக்கே மறந்து போய்விட்டன: ஒரு விநாடியில் நடந்தது மறுவிநாடி மறந்துவிடும். ராஜாங்க வக்கீல் எதைதை நினைவு வைத்துக் கொண்டு சொல்லப் போகிறாரோ!...

"கனவான்களே!" என்று கம்பீரமான குரலில் தொடங்கினார் ராஜாங்க வக்கீல். ஆனால், உடனே நிறுத்திவிடுகிறார்.

மறுபடியும் "கனவான்களே!" என்று சற்று மிருதுவான குரலில் ஆரம்பம், மறுபடியும் மேலே போகவில்லை.

முடிவில் வெண்ணெயைப் போல் மிக மிக மிருதுவான குரலில் சொல்லுகிறார்: "கனவான்களே! அவன் வாயே திறக்கவில்லை. நானும் வாய்திறக்கப் போவதில்லை!"

சற்றுநேரம் மௌனம்.

பிறகு, மிக மிருதுவான ஒரு புதுக் குரல் நடுக்கத்துடன் கேட்கிறது. "பாஞ்சே, குழந்தாய் பாஞ்சே!" இனிமையான குழலின் நாதத்தைப்போல் இந்தக் குரல் அவன் உள்ளத்தை உருக்குகிறது. "என் கண்மணி"— பாஞ்சேயின் இதயம் இளகிக் கரைந்து விடுகிறது. அவன் கண்ணை விழித்துப் பார்க்கிறான்; கண்ணீர் வெள்ளம் பார்வையை மறைக்கிறது...இவ்வளவு அமைதியுடன், இவ்வளவு மனம் விட்டு அவன் அழுததில்லை..."என் குழந்தாய், பாஞ்சே!"...அவன் தாய் இறந்த பிறகு, இந்த மாதிரியான குரலை, இந்த வார்த்தைகளை அவன் கேட்டதில்லை.

பிரதம நீதிபதி மேலும் சொன்னார்: "குழந்தாய், நீ மௌனமாகவே எப்போதும் கஷ்டப்பட்டிருக்கிறாய். உன்னுடைய தேகத்திலே காயம்படாத இடமோ, வடுப் பதியாத அவயவமோ இல்லை. உன்னுடைய ஜீவனிலே, இரத்தம் கசியாத இடம் இல்லை... ஆனாலும், நீ வாயைத் திறந்து ஒன்றும் சொன்னதில்லை...

"கீழுலகத்திலே அவர்களுக்கு இந்த விஷயங்களையறிந்து கொள்ளச் சக்தியில்லை. ஒரு கூச்சல் போட்டால் உலகத்தையே நீ ஆட்டிவிடலாம் என்று உனக்குக்

### நியாயமான காரணம்

முசோலினி ரோம் நகரத்தில் ஒரு பத்திரிகாலயத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ரொம்ப வறுமை. ஒருமுறை அழுக்கு உடைகளை அணிந்து கொண்டு ஒரு பணக்காரி வீட்டுக்குப் போயிருந்தார். அவள் அவரை வரவேற்கவும் இல்லை, முகங்கொடுத்துப் பேசவும் இல்லை.

பல வருஷங்கள் கழிந்தன. முசோலினி இத்தாலிய சர்வாதிகாரியானார். அதே பெண், இப்போது ஒரு காரியமாக முசோலினியைப் பார்க்கப்போனாள். கொஞ்ச நேரம்பேசிக் கொண்டிருந்த பிறகு அவள் "எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்" என்றாள்.

முசோலினி சிரித்தார். பின்பு, எழுந்து கம்பீரமாக நின்று, கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு, "அம்மா, இத்தாலியில் நான் வைத்ததே சட்டம் என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, என்னைப் பார்க்க வந்திருக்கிறாய். அந்தக் காலத்தில் என்னைக் கொஞ்சம் மரியாதையாக நடத்தியிருக்கக் கூடாதா?" என்றார்.

"நான் என்ன செய்வது? நீங்கள் சர்வாதிகாரியாவீர்கள் என்பது எனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் அந்த மாது.

கூடத் தெரியாது. உன்னுடைய பலம் உனக்கே தெரியாது...

"பூலோகத்திலே அவர்களுக்கு உன்னுடைய மௌனத்திற்குத் தகுந்தபடி சன்மானிக்கத் தெரியாது. அந்த உலகம் பொய்யானது. இங்கே, இந்தச் சத்திய லோகத்திலே, உனக்குத் தகுந்த வெகுமதி கிடைக்கும்.

"உன் செய்கைகளை, இங்கே பரிசீலனை செய்ய மாட்டார்கள்; உன்னை எடைபோட்டு மதிப்பிடப் போவதில்லை. உனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்! இந்தத் தெய்வலோகத்தில் உள்ள அவ்வளவும் உனக்குத்தான்; உன்னுடையவைதான்!"

பாஞ்சே முதன் முதலாகக் கண்களை நிமிர்த்திப் பார்க்கிறான். எங்கும் ஒரே ஜோதி மயம்; எங்கே பார்த்தாலும், ஒரே பளபளப்பு. ஒளி வெள்ளம் பாய்ந்து எங்கும் நிரம்புகிறது. அவர்கள், ஆசனங்கள், தேவதூதர்கள், நீதிபதிகள் – பார்த்த விடமெங்கும் ஒளிக் கதிர்கள்! கோடி சூர்யப் பிரகாசம்!!

பாஞ்சேயின் கண்கள் தாழ்கின்றன.

"நிஜமாகவா?" என்று அவன் சந்தேகத்துடன் கேட்கிறான்.

பிரதம நீதிபதி பதில் சொல்லுகிறார்: "நிச்சயமாகத்தான்! தெய்வலோகத்தில் உள்ள எல்லாம் உனக்குச் சொந்தம்! எது வேண்டுமோ அதைப் பொறுக்கி எடுத்துக் கொள்! உனக்குச் சொந்தமானதை, நீ எடுத்துக் கொள்ளத் தடை என்ன!"

"நிஜமாகத்தானா?" என்று மீண்டும் கேட்கிறான் பாஞ்சே, சற்று உறுதியான குரலில்.

"ஆமாம், நிச்சயமாக!" என்று ஒரே முகமாய் எல்லோரும் சொல்லுகிறார்கள், அழுத்தமாக.

புன்சிரிப்புடன் சொன்னான் பாஞ்சே: "அப்படியானால், ஒவ்வொருநாளும் பொழுது விடிந்ததும், சுடச்சுட ஒரு முழு ரொட்டியும் நல்ல வெண்ணெயும் எனக்குக் கிடைக்க வேண்டும்."

நீதிபதிகளும் தேவதூதர்களும் லஜ்ஜையுடன் தலைகுனிந்தார்கள். ராஜாங்க வக்கீலின் சிரிப்புச் சப்தம், தேவலோகம் முழுவதும் எதிரொலி செய்தது.

*

## படிக்கவா!

அமெரிக்க சர்க்கார் அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர், என்ன விஷயத்தைப்பற்றி எழுதியனுப்பினாலும், உடனே ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அதைப் படித்து முடித்து, வேண்டிய உத்தரவைத் தாமதமின்றிச் செய்து விடுகிறார். இதற்கு ஒரு காரணம் உண்டு.

இந்த அதிகாரி, உத்தியோகத்துக்கு வந்த புதிதில், ஒரு நீண்ட அறிக்கையை ஜனாதிபதிக்கு எழுதியனுப்பினார். வெகுநாள்வரையில் பதிலே இல்லை. அதிகாரி, ஜனாதிபதியிடம் நேரே சென்று, "நான் அனுப்பிய அறிக்கையைப் படித்தீர்களோ?" என்று கேட்டார்.

"படிக்கவா! அதை என்னால் கையிலே தூக்கவே முடியவில்லையே? அதற்கப்புறமல்லவா படிக்கவேண்டும்!" என்றார் ரூஸ்வெல்ட்.

அதற்குப்பின் ரூஸ்வெல்ட்டுக்கு என்ன விஷயம் எழுதியனுப்பினாலும், காலே வரிக்குமேல் அந்த அதிகாரி எழுதுவதில்லை. அதிகாரி என்ன எழுதினாலும், ரூஸ்வெல்ட் உடனே படித்து விடுவதும் வழக்கமாயிற்று.

# நானும் லெனினும்

எதிர்காலம்

**இந்தியப் பண்புக்குப் பொதுவுடைமை ஏற்றதல்ல என்று சில‌ர் சொல்லுகிறார்கள். இது உண்மையா? இது சம்பந்தமாக, லெனினுடைய கருத்து என்னவாயிருக்கும்? இதோ, அவர் உயிர் பெற்று எழுந்து வந்து பேசுகிறார்! கற்பனையில்தான்.**

நேற்றிரவு நான் லெனினைக் கண்டேன். ஆம், விளாடிமிர் இலிச்யூலியோனோவைத் தான். ரஷ்யப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி உலகத்துக்கு வழிகாட்டியாக ரஷ்யாவில் சமதர்ம அரசியலை ஸ்தாபித்த அதே லெனினைத்தான். நான் ரொம்ப மரியாதையுடன் அவருகே சென்றேன். அவர் என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரிப்பதுபோலத் தோன்றியது.

"**வா,** அப்பா" என்று அவர் அன்புடன் என்னை வரவேற்றார்.

"நீங்கள் உண்மையில் லெனின் தானா?" என்று கேட்டேன்.

அவர் சிரித்துக் கொண்டே "நீ பெரிய சந்தேகப் பேர்வழியாய் இருக்கிறாயே! நான்தான் அந்த சாக்ஷாத் லெனின்" என்று சொன்னதும், எனக்கு நம்பிக்கை பிறந்தது.

"நான் தங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்."

"பேஷாகக் கேள்."

"தாங்கள் எழுதிய புத்தகங்களைப் படிப்பதற்கு முன் பல சந்தேகங்கள் தோன்றின; படித்த பிறகு, வேறு பல சந்தேகங்கள் தோன்றின. மார்க்ஸையும், எங்கல்ஸையும் படித்த பிறகு, தோன்றிய சந்தேகங்கள் பல தங்கள் புத்தகங்களைப் படித்ததன் மூலம் மறைந்தன. ஆனால், தாங்கள் இறந்ததற்குப் பிறகு தோன்றிய பல சந்தேகங்களை யாரிடம் போய்த் தீர்த்துக் கொள்வதென்று யோசித்துக் கொண்டிருந்தேன். நல்லவேளையாக நீங்களே இங்கே வந்து சேர்ந்தீர்கள்."

நான் கிளப்பும் சந்தேகங்களைக் கேட்க அவருக்கு ரொம்ப ஆவல். கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதில் அவர் கைதேர்ந்தவர் அல்லவா? எத்தனையோ பேர்களை வாயடக்கிய அவருக்கு நான் ஒரு பிரமாதமா? சுயநலத்தைக் கோரி, கொள்கையை வெகு நுணுக்கமாகத் திரித்துக் கூறும் பேர்வழிகளைத் தலையெடுக்கவொட்டாமல் அடிக்க வேண்டுமென்று அவர் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தவர். ஆகையால், எதிரியின் சூழ்ச்சியை வெளிப்படுத்தவும், ஏமாறாமலிருக்கும்படி பொதுஜனங்களை எச்சரிக்கவும் அவர் பின்வாங்கியதேயில்லை. ஆனால் என்னை அவர் சந்தர்ப்பவாதி என்று நினைக்கவில்லை. ஆயினும், வேண்டுமென்றே சந்தர்ப்பவாதியாக இருப்பது எவ்வளவு தீமை பயக்கக்கூடியதோ, அவ்வளவு தன்னையறியாமலே சந்தர்ப்பவாதியாக இருப்பதும் தீமை பயக்கக்கூடியதென்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அது காரணமாகவே என் சந்தேகத்தைத் தீர்ப்பதில் அவருக்கு ஆவல் உண்டாயிற்று. அத்துடன் என் சந்தேகத்தை நீக்கினால்

நான் பலருடைய சந்தேகத்தைப் போக்குவேனென்றும் அவர் கருதினார். ஆயினும், வெளிப் பார்வைக்கு, நான் அவருடைய ஓய்வைக் குலைப்பதாகக் காட்டிக் கொண்டார்.

“என்னப்பா, சோவியத் ரஷ்யாவில் ஓய்வு கிடைக்கவில்லையே என்று நினைத்து, இங்கே வந்தால், என் தலைவிதி இங்கேயும் ஓய்வு கிடைக்காது போலிருக்கிறதே!” என்று தமாஷாகச் சொன்னார்.

“நீங்கள் சொல்லுவது ரொம்ப வேடிக்கையாக இருக்கிறதே! நீங்கள் சதா படித்துக் கொண்டும், தொழில் திட்டங்கள், பொருளாதாரத் திட்டங்கள் போட்டுக் கொண்டும் இருந்தீர்கள். இரவும் பகலும் மூளைக்கு ஓய்வின்றி வேலை கொடுத்து வந்ததால், தங்கள் மூளைப் பகுதியே கல்லாக மாறி வந்தது; கண்கள் தெரியவில்லை. ஸ்டாலின் முதலியோர் எவ்வளவோ கெஞ்சியும், நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ள மறுத்து விட்டீர்கள். ‘ஓய்வு எடுத்துக் கொள்ளாவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம்’ என்று அவர்கள் பயமுறுத்திய பிறகுதான், உங்கள் கல் மனம் இளகியதாக நான் சரித்திரத்தில் படித்திருக்கிறேன். ஸ்டாலின் முதலிய பெரிய பெரிய சோவியத் அதிகாரிகளையே ஏமாற்றப் பார்த்த நீங்களா ஓய்வெடுத்துக்கொள்ளுபவர்?” என்று நான் அதிசயத்துடன் சொன்னேன்.

“நீ சொல்லுவது பழங் கதையல்லவா! அதிருக்கட்டும். என்னவோ சந்தேகங்கள் கேட்க வேண்டும் என்றாயே, என்ன சந்தேகங்கள்? கேள், பார்ப்போம்” என்றார், ஏதோ ஒரு சுவை நிறைந்த பொருளை ருசி பார்க்க விரும்புபவர் போல.

“பெர்ன்ஸ்டீன் நரோடியர்கள், ப்ளகானவ், காட்ஸ்கி, மென்ஷ்விக் கட்சியினர் முதலியோர் சந்தர்ப்பவாதிகள் என்று கூறி, அதைப் பொதுஜனங்களுக்கு நீங்கள் ருசுப்பிக்கவும் செய்தீர்கள். அவர்கள் மார்க்ஸின் தத்துவத்தை எந்தெந்த வகையில் திரிக்க முடியுமோ அந்தந்த வகையில் திரித்தார்கள். ஆனால், உங்கள் தெளிவுக்கு முன் அவர்கள் குழப்பம் நிற்க முடியவில்லை. நீங்கள் உயிரோடிருந்த வரை இந்தச் சந்தர்ப்பவாதிகள் கூட்டம் தலையெடுக்கவில்லை. இப்போதோ, இந்தக் கூட்டம் முன்னாலிருந்ததைக் காட்டிலும் பெருகியிருக்கிறது. சோவியத் ரஷ்ய ஆட்சிமுறையே ஒரு சர்வாதிகாரம் என்றும், இந்தச் சர்வாதிகாரத்திற்கும் ஹிட்லர் முசோலினி சர்வாதிகாரத்திற்கும் ஒரு சிறிதும் வேறுபாடில்லையென்றும் கூறுவதுடன், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் என்ற பெயரில் அதிகார வெறியில் பொதுஜனங்களை அடக்கியாள ரஷ்யாவில் பொதுவுடைமைக் கட்சியைத் தாங்களே சிருஷ்டித்துவிட்டீர்களென்றும் குற்றம் சாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.”

“அவர்கள் இவ்விதம் குற்றம் சாட்டுவதில் என்ன புதுமை இருக்கிறது! இதே பல்லவியைத் தானே, நானிருந்த காலத்திலும் அவர்கள் படித்தார்கள். அவர்களுடைய தன்னலத்தையும், அறிவீனத்தையும் வெளிப்படுத்தவே என் வாழ்நாளில் பாதி செலவாகியிருக்கிறது. அரசு (State) என்பது மனித சமூகத்திற்கு எப்போதுமே தேவைப்படுகிற ஒரு காரியம் அல்ல. மனித சமூகம்

கூட்டம் கூட்டமாகக் கூடி வசித்த காலத்தில் அரசு என்ற இந்த ஸ்தாபனத்திற்குத் தேவை ஏற்படவில்லை. தொழில் வேறுபாடுகளும், பொருளாதார வேறுபாடுகளும் ஏற்பட்ட பிறகு, ஏழை பணக்காரன், சுரண்டுபவன் சுரண்டப்படுபவன் என்ற இரண்டு பிரிவுகள் ஏற்படத் தொடங்கின. இந்தப் பிரிவுகள் ஏற்பட்ட காரணத்தினால், ஒரு வர்க்கத்தார் இன்னொரு வர்க்கத்தாரை அடக்கியாள வேண்டிய அவசியம் உண்டாயிற்று. அவ்விதம் அடக்கியாள ஒரு சக்தி வேண்டுமாதலால், அந்தச் சக்தியைச் சிருஷ்டித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த முறையில் தோன்றிய சக்தி அல்லது கருவியே அரசு என்பதாகும். இதைப்பற்றி ஏற்கெனவே எங்கல்ஸ் ரொம்ப விளக்கமாக எழுதியிருக்கிறார். அதை நீ படித்திருப்பாய் என்று நினைக்கிறேன்.''

"ஆம், படித்திருக்கிறேன். ஆனால், அது நான் மேலே கேட்ட கேள்விக்கு எப்படிப் பதிலாகும்?''

"அரசு என்று நாம் மேலே சொன்ன ஸ்தாபனம், பொருளையும், பொருள் செய்யும் வசதிகளையும் படைத்த வர்க்கத்தாரின் ஸ்தாபனம் என்பதை அடிக்கடி நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அது காரணமாகவே சுரண்டப்படும் கூட்டத்தாரை அடக்கி, அமுக்கி, மேலேற முடியாமல் செய்வதற்கு இந்த ஸ்தாபனம் உதவியாக இருக்கிறது. இது பெரும்பான்மையோரான பாட்டாளி மக்களை அடக்கும் பொருட்டுத் தோன்றிய சிறுபான்மையோரான முதலாளிகளின் கைக்கருவியாகும்.

"முதலாளித்துவத்தின் போக்கு எப்படியும் இறுதியில் பொதுவுடைமையில் கொண்டு போய்விடும் என்று நாம் படித்திருக்கிறோம். முதலாளித்துவம் வளர்ச்சியடைய அடைய, பொருளாதார நெருக்கடிகளும், உலக யுத்தங்களும் அடிக்கடி ஏற்பட்டு, உலகப் பாட்டாளி மக்களைக் கிளப்பி விடுகின்றன. பெரிய அரசியல் புரட்சி உண்டாகிறது. அப்போது முதலாளிகள் கையிலிருந்து பாட்டாளி மக்களின் கைக்கு அரசியல் மாறுகிறது. இதே முதலாளிகளின் ஸ்தாபனத்தை வைத்துக் கொண்டு, பாட்டாளி மக்கள் தங்கள் அரசியலையும் பொருளியலையும் நடத்த முடியாது. ஏனெனில், இது பெரும்பான்மையோரை அடக்கச் சிறுபான்மையோர் உருவாக்கிய கருவியாகும். இந்தக் கருவியின் உபகருவிகளான போலீஸ், உத்தியோக வர்க்கம், சேனை ஆகிய மூன்றும் இப்போது தேவைப்படாது. ஏனெனில், பொதுஜனங்கள் எல்லோருமே இப்போது ஆயுதபாணிகளாகி விடுகிறார்கள்.

"பொதுஜனங்களை அடக்கியாள ஏற்பட்ட இவைகளை இனி வைத்துக் கொள்ள நியாயமில்லையென்றால், இனி அரசு என்பதே தேவைப்படாதா என்று கேட்கலாம். பொதுவுடைமை பூரண அம்சத்துடன் ஏற்படுகிறவரையில் அரசு என்கிற ஸ்தாபனம் ஏதாவது ஒரு ரூபத்தில் இருந்துதான் தீரும். ஆனால், அது கொஞ்சம் கொஞ்சமாகச் சக்தி இழந்து வந்து, இறுதியில் மறைந்துவிடும். அது பூரணமாக மறையும் காலமும் பூரண அம்சத்துடன் பொதுவுடைமை தோன்றும் காலமும் ஒன்றாயிருக்கும். அதுவரையில் இந்த ஸ்தாபனம், முன்னிருந்ததற்கு மாறாக, சிறுபான்மை

யோரை அடக்கப் பெரும்பான்மையோரின் கையில் உள்ள கருவியா யிருக்கும். ஆயினும், இதை என் பாட்டாளி மக்களின் சர்வாதிகார அமுல் என்று அழைக்கவேண்டுமென்ற சந்தேகம் தோன்றுவது இயற்கை.

"அரசு என்பது ஒரு வர்க்கத்தாரின் சர்வாதிகார அமுலாகத்தான் இருக்க முடியுமேயன்றி, பூரண ஜனநாயக ஆட்சியாக இருக்க முடியாது. ஜனநாயகம் என்று பெயரிட்டழைப்பதற்காக அது பூரணமான ஜனநாயகமாகி விடாது. பொருளாதாரச் சுதந்திரம் இல்லாமல், வெறும் அரசியல் சுதந்திரம் மட்டும் பெரிய காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. உண்மையான, பூரணமான சுதந்திரம் நிலவமுடியுமேயானல், அப்போது அரசியல் ஸ்தாபனம் ஒன்று இருக்கவேண்டிய அவசியம் நேரிடாது. இதை எல்லாம் ஒட்டியே, பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமென்று அழைத்தது. இதை வேறு விதமாகத் திரித்துக் கூறுவதில் என்ன பொருளிருக்க முடியும் என்று எனக்கு விளங்கவில்லை. இந்த விஷயங்களை யெல்லாம் 'அரசும் புரட்சியும்' என்ற எனது புத்தகத்தில் விளக்கமாக எழுதி யிருக்கிறேன். இருந்தாலும் என்ன? பொதுஜனங்களின் தெளிவையும் உறுதிப் பாட்டையும் குலைப்பதற்கென்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு இதைப் படிக்கவேண்டுமென்கிற கட்டாயம் என்ன? படித்தாலும், இதைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய அவசியம் இராதல்லவா?"

"இந்தச் சந்தர்ப்ப வாதிகள் இப்போது ஒரு புது விஷயத்தைக் கிளப்பி விட்டிருக்கிருர்கள். அதைப்பற்றித்தான் நான் உங்களை முக்கியமாகக் கேட்க நினைத்தது. உங்கள் ரஷ்யாவில் மட்டும்தான் ப்ளக்கானவ், மார்டாவ், ஆக்ஸெல்ராட் முதலிய ஆசாமிகள் இருக்கிருர்கள் என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். எங்கள் இந்தியாவிலும் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், சமதர்ம வாதிகளென்றும், பொதுவுடைமைவாதிகள் என்றும் சொல்லிக் கொள்பவர்கள் பலர் இருக்கிருர்கள். இந்தியாவின் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள் எல்லாமே வேறு. ஆதலால் இந்தியாவுக்குப் பொதுவுடைமை ஒருநாளும் வராது என்று இவர்கள் சத்தியம் செய்கிருர்கள். இவர்கள் கூறுவதில் ஏதாவது உண்மையிருக்கிறதென்று உங்களுக்குத் தோன்றுகிறதா?"

"இது புதுச் சந்தேகம் அல்ல. தொன்று தொட்டுச் சொல்லி வரும் சந்தேகம்தான். இதை நிவர்த்திப்பது ரொம்ப எளிது. பொதுவுடைமையின் போக்கைத் தடைசெய்ய முதலாளி வர்க்கத்தார் ஒரு கூலிப்படையைச் சேர்க்கிருர்கள். இந்தக் கூலிப் படையினர் அங்குமிங்குமாகச் சில விஷயங்களைப் படித்துக் கொண்டு தங்களைப் பெரிய பொதுவுடைமைவாதிகள் என்று கூறிக் கொள்ளுகிருர்கள். பத்திரிகைகளெல்லாம் (பெரும்பாலும் முதலாளி வர்க்கத்தாரைச் சேர்ந்தவை) தொழிலாளர்களின் உண்மையான தலைவர்கள் இவர்கள்தான் என்று பிரமாதப்படுத்தி விடுகின்றன. பொதுஜனங்கள், பாவம், என்ன செய்வார்கள்? எளிதில் நம்பி விடுகிருர்கள். உள்ளூர அன்பு இருப்பினும், சர்க்காரும் முதலாளி வர்க்கத்தினரும் இவர்களை

வெறுப்பது போலக் காட்டிக் கொள்ளுகிறார்கள்.

"சர்க்காரும் முதலாளி வர்க்கத்தாரும் வெறுக்கும் எதுவும் தங்களுக்கு நன்மை பயப்பதாயிருக்குமென்ற ஒரு நம்பிக்கை யிருப்பதால், தொழிலாளர்கள் இவர்கள் பசப்பில் எளிதில் மயங்கிவிடுகிறார்கள். முன்னேற்பாட்டுடன் முதலாளி வர்க்கத்தார் விரித்த வலை, ஒரு குறிப்பிட்ட காலம் வரையில், தொழிலாளர் இயக்கத்தை அடியோடு கிள்ளி எறிந்துவிட உதவியா யிருக்கிறது. இவ்விதம் பொதுஜனங்களையும் தொழிலாளர்களையும் ஒருங்கே ஏமாற்றித் தங்கள் சுயநலத்தை விருத்தி செய்து கொள்ளும் இந்தக் கூலிப் படையினர் விசித்திர விசித்திரமான கொள்கைகளையும், தந்திரங்களையும் ஜனங்களின் முன் சமர்ப்பிப்பார்கள். இவைகளெல்லாம் மார்க்ஸ், எங்கல்ஸ் சொன்னதென்று சொல்லுவார்கள். மார்க்ஸுக்குச் சரியான வார்சுதாங்கள்தான் என்று சொல்லிக் கொள்வார்கள்.

"மார்க்ஸ் தத்துவத்தை வெகு வேலைப்பாட்டுடன் இவர்கள் மாற்றிக் கூறுவதை, சாதாரண ஜனங்கள் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? மார்க்ஸ் கொள்கையின் அடிப்படையை மாற்றிய பிறகு, மாற்றிய அந்த அடிப்படையின் மேலேயே ஆராய்ச்சி செய்து கொண்டு போய், உண்மையான மார்க்ஸிஸம் முதலாளிகளின் சார்பில் இருக்கிறதென்று, சொல்லாமல் சொல்லிக் காட்டுவார்கள். மார்க்ஸையும் எங்கல்ஸையும் சந்தேகமறப் படிக்காதவர்களுக்கு இவர்கள் சொல்லுவதில் உண்மையிருப்பதுபோலத் தோன்றுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

"தொழிலாளர்கள் பொருளாதாரப் போரில்தான் ஈடுபட வேண்டும் என்றும், அதுவே காலம் செல்லச் செல்ல, அரசியல் போராக மாறிவிடும் என்றும் சொல்லுவார்கள். தொழிலாளர்களிடையே தானாகப் புரட்சி மனப்பான்மை தோன்றாத வரையில் முதலாளி வர்க்கத்தார் நடத்தும் அரசியலைக் கவிழ்க்க நினைப்பது மடமை யென்றும், பொதுவுடைமை அறிவை யூட்டித் தொழிலாளர்களிடையே புரட்சி மனப்பான்மையை உண்டு பண்ணுவது இயலாத காரியம் என்றும் சொல்லுவார்கள். முதலாளித்துவமும் நன்றாக அபிவிருத்தியடைந்த பிறகு தானாகவே பொதுவுடைமை தோன்றும் என்று சொல்லி இருக்கிறது அல்லவா? ஆதலால், பொதுவுடைமையில் ஆர்வம் கொண்ட எல்லோரும் முதலாளித்துவத்திற்கு ஓர் இடையூறும் செய்யாமல் அதை நன்றாக வளரவிட வேண்டும். அதன் வளர்ச்சிக்குக் கூடிய மட்டிலும் தங்களாலான உதவியைச் செய்ய வேண்டுமென்று சொல்லுவார்கள். இவர்களுக் கெல்லாம் நான் அவ்வப்போது சரியான பதில் கொடுத்து வந்திருக்கிறேன் என்பதை நீயறிவாய்."

"ஏனைய நாட்டுப் 'பொதுவுடைமை வாதிகள்' ஒரு காலத்தில் பொதுவுடைமை ஏற்படும் என்றாவது ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தியப் 'பொதுவுடைமை வாதிகள்' இந்தியாவுக்குப் பொதுவுடைமை எந்தக் காலத்திலும் வராதென்றல்லவா சொல்லுகிறார்கள்?"

"வாஸ்தவம். இவர்கள் கையாளும் ஏமாற்றம் ஏனைய நாட்டு ஏமாற்றங்களின் ஜாப்தாவில்

சேராதது போலத் தோன்றும். உண்மையில் எல்லாம் ஒன்று தான். முதலாளி வர்க்கத்தாரின் கூலிக்கு ஆசைப்பட்டு மார்க்ஸ் வாதி என்று சொல்லிக்கொண்டு மார்க்ஸின் மூலாதாரக் கொள் கைகளை எப்படிச் சாதுரியமாக மறுக்கிறார்களோ, அதேமாதிரி பொதுவுடைமை வாதிகள் என்று சொல்லிக் கொண்டு பொது வுடைமை சில நாடுகளுக்கு வரா தென்று சொல்லுகிறார்கள். எவ் வளவு கேவலமான பொது வுடைமை வாதியாக இருந் தாலும், முதலாளித்துவத்தைப் போன்று, பொதுவுடைமையின் இயற்கை சர்வ தேசியமான தென்பதை மறுக்க மாட்டான். ஏனெனில், இது அவ்வளவு எளிமையான விஷயம். இந்த விஷயத்தையே திரித்துச் சொல் லிக் கொண்டிருப்பவர்கள் தாங் களும் பொதுவுடைமை வாதிகள் தாம் என்று ஜனங்களை நம்ப வைப்பதில் பெரிய சாமர்த்தி யம் இருக்கத்தான் செய்கிறது. பொதுவுடைமை வாதிகளன்றி, தீவிர முன்னேற்றக் கட்சியினர் என்று சொல்லிக் கொள்ளும் பூர்ஷ்வாக்களும் இவ்விதம் சொல்லி வருவதைக் காணலாம். இவர்கள் எல்லோருக்குமே நாம் கொடுக்கும் பதில் ஒன்றுதான். அது இவர்களது உள்நோக்கங் களை வெளிப்படுத்த உதவியா யிருக்கும்."

"நீங்கள் அவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர் கள் என்பதைக் கேட்கத்தான் ரொம்ப ஆவலாயிருக்கிறது. அதைத் தயவுசெய்து கொஞ்சம் விளக்கமாகவே சொல்லுங்கள்."

"இந்தியப் பண்பாட்டுக்கும் பொதுவுடைமைக்கும் பொருந் தாது என்று சொல்வது சரியே. ஆனால், இந்தியப் பண்பாடு என் பது என்ன? ஆதிகாலம் தொட்டு மாற்றம் என்பதையே காணமல் வந்திருக்கிற ஒரு வஸ்துவா? அப் படியானால், இன்று நாம் இந்தியர் களின் பண்பாடு என்று சொல்லு கிற காரியம் காலப்போக்கில் உருவாகாமல் திடீரென்று உதய மானதா? இதைச் சற்றுப் பார்ப் போம்.

"பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஏற்படுமுன், ஒவ்வொரு கிராம மும், ஒரு தனி ராஜாங்கம்போல் இருந்தது. ஒரு கிராம மக்கள் இன்னொரு கிராம மக்களை அந்நி யர்கள் போலப் பார்த்து வந்தார் கள். அடுத்த கிராமத்துக்கு ஏதா வது ஆபத்து நேர்ந்தால், அதைப் பற்றி இவர்கள் சிந்தை செய்வ தில்லை. ஒவ்வொரு கிராம மக் களும் தங்கள் தங்களுக்கு வேண் டிய சாமான்களைத் தாங்களே உற்பத்தி செய்து கொண்டார் கள். தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வெளியே போகவேண் டிய கட்டாயமும், இதர கிராமத் தார்களை எதற்கும் நம்பியிருக்க வேண்டிய அவசியமும் இவர்க ளுக்கு ஏற்படவில்லை. இந்தக் கிரா மப் பொருளாதாரத்தை அடிப் படையாகக் கொண்ட சமுதாய அமைப்பு,இந்தியப் பண்பாட்டின் உயிர்நாடி என்று சொல்லவேண் டும். இந்தச் சமுதாய அமைப்பு, சநாதனமாக அமைந்த ஒரு விஷயமல்ல. பொருள் செய்யும் முறைகளையும், பொருள் உற்பத்தி செய்யுங் காலத்தில் ஒருவரோ டொருவர் வைத்துக் கொண்ட தொடர்புகளின் இயற்கையையும் ஒட்டிக் காலப்போக்கில் உரு வானதே இது."

"அப்படியென்றால், இந்தியப் பண்பாடு மாறுகின்ற இயல்

புடையதென்று சொல்லுகிறீர்களா ?"

"ஆமாம். இந்தியப் பண்பாடாயிருந்தாலும் சரி, வேறு நாட்டுப் பண்பாடாயிருந்தாலும் சரி, பண்பாடு என்பது மாறிக்கொண்டுதான் இருக்கும். எந்த அடிப்படையின்மீது பண்பாடு உருவாக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அடிப்படையே மாறும்போது அதுவும் மாறித்தானே ஆகவேண்டும். சரி, நமது விஷயத்திற்குச் செல்வோம். நாம் மேலே சொன்ன கிராமப் பொருளாதார அமைப்பும் சமுதாய அமைப்பும் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின் மாறிவிட்டன. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படு முன் எந்த ராஜா தங்களை ஆளுகிறார் என்பதைப்பற்றிக் கிராம மக்களுக்கு அவ்வளவாகத் தெரியாது ; தெரியவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஏனெனில், தங்கள் நிலத்துக்குள்ள கிஸ்தியைச் செலுத்திவிட்டார்களென்றால், அவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்பு அதோடு நின்றது. ஆனால் பிரிட்டிஷ்காரர்கள் வந்த பிறகு நிலைமை புரட்சிகரமாக மாற ஆரம்பித்தது. கிராமப் பொருளாதார அமைப்பு, சிதைக்கப்பட்டது. சிதைந்து, காரியத்துக்கு உதவாமல் போன கிராமப் பொருளாதாரத்தின் ஸ்தானத்தில் இன்னொரு பொருளாதார அமைப்பையும் ஏற்படுத்தவில்லை.

"இந்த நிலையில் பல கஷ்டங்கள் ஏற்படத்தொடங்கின. பழைய அமைப்பில் பசியால் வாடி மெலிகிற காரியம் இல்லை. பெரிய பணக்காரர்களாகிக் கிராமம் முழுவதையுமே விலைக்கு வாங்குகிற காரியமுமில்லை. ஒவ்வொரு கிராமத்தாருக்கும் நிலம் பொதுவாக இருந்தது. ஏழை, பணக்காரன் என்ற பிரிவை இந்தச் சமுதாய அமைப்பில் அவ்வளவாகக் காண முடியாது. ஆனால், இன்றைய நிலைமை என்ன? கோடிக்கணக்கான மக்கள் சாப்பாடின்றிச் சாகிறார்கள். கிஸ்தி கட்ட முடியாமல் நிலத்தையே கடனுக்கு விட்டுப்போகிற குடியானவர்கள் கூட்டம் பெருகி வருகிறது. இயந்திரத் தொழிலைப் பிரதானமாகக் கொண்ட பெரிய நகரங்கள்—இவைகள் இந்தியப் பண்பாட்டுக்குப் புறம்பானவை—தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. சிறு கைத்தொழில்கள் மேல்நாட்டுயந்திரத் தொழில்களோடு போட்டி போட முடியாமல் ஏற்கெனவே மாய்ந்து போயின. சில கைத்தொழில்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நேரடியாகவே நாசம் செய்தது. இதன் பயனாக, இந்தக் கைத்தொழில்களையே ஜீவனோபாயமாகக் கொண்டவர்களெல்லாரும், ஏதாவது கூலிக்காவது உழுது பயிர் செய்து காலத்தை ஓட்டலாம் என்று கிராமத்தை நோக்கிச் செல்லுகிறார்கள். இதன் காரணமாக நிலத்தை நம்பியிருப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. எனவே, சொந்த நிலமுள்ள குடியானவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டும், கூலிக்கு உழவு வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டும் இருக்கிறது. புரட்சிகரமான இந்த மாற்றங்களோடு இந்திய சமுதாய அமைப்பும் மாறி வருகிறது. சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்தியக் குடியானவன் ஒருவன் இன்றைய இந்தியாவை இனம் கண்டு கொள்வதே கஷ்டமாய் இருக்கும்.

"பழைய இந்தியச் சமுதாய அமைப்பே மாறிவிட்டதாகவா சொல்லுகிறீர்கள்?"

"சந்தேகமில்லாமல். இவ்வளவு புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்ட பிறகும் பழைய இந்தியப் பண்பாடும் நாகரிகமும் முன்னிருந்தபடியே இருப்பதாக எண்ணிக் கொள்வது சரியாகுமா? முதலாளித்துவ முறை ஒரு நாட்டில் அபிவிருத்தி அடையும்போது, மற்ற நாடுகளையும் அது தன் வழிக்குக் கொண்டு வருகிறது. முதலாளித்துவம் வேண்டாம் என்று சொன்னாலும் அது விடப்போவதில்லை. இதற்கு இந்தியா ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரும்பி அழைக்கவில்லை. ஆனால், அது தன்னை வந்து தாக்கும்போது, ஒன்று அதோடு போரிட்டு அதை வெல்ல வேண்டும், அல்லது அதற்குத் தகுந்த முறையில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த இரண்டாவது காரியம் தான் இன்று இந்தியாவில் நடந்து வருகிறது."

"ஏகாதிபத்தியம் இந்தியாவை ஆண்டு வருவதனால், இந்தியா எப்படிப் பொதுவுடைமை நாடாகிவிட முடியும்?"

"ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் முதிர்ந்த நிலையாகும். முதலாளித்துவம் பூரண வளர்ச்சியடையும்போது, தன்னையறியாமலேயே அது பொதுவுடைமை அமைப்புக்கு அடிகோலுகிறது; அதாவது, அது தனக்கே குழி தோண்டிக் கொள்ளுகிறது. இதுதான் ரஷ்யாவில் நடந்தது; இந்தியாவிலும் இதர நாடுகளிலும் நடக்கப் போகிறது. அறிந்தோ, அறியாமலோ, இந்த உண்மையை மறுத்துப் பேசுவதில் காரியமில்லை. இந்தியாவின் பண்பாடு அதற்கு இடம் கொடுக்காது. இந்தியர்களின் ஆத்மீகப்போக்கு அதை ஏற்றுக் கொள்ளாது என்று சொல்லுவதனால் சரித்திரப் போக்கைத் தடை செய்துவிட முடியாது. ஏனெனில் பண்பாடு, ஆத்மீகத் தன்மை, நாகரிகம் அரசியல் முறை, பழக்க வழக்கங்கள், சமுதாய அமைப்பு என்பவைகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டவையாகும். அந்தப் பொருளாதார அமைப்பு மாறுகிறபோது, அவைகளும் மாறித்தான் ஆகவேண்டும். இந்த உண்மையை, இந்தியாவிலுள்ள சந்தர்ப்ப வாதிகள் அறியாதவர்கள் அல்ல. ஆயினும், உண்மையைச் சொன்னால், அவர்கள் ஜனங்களைச் சுரண்டிப் பிழைக்கவும், செல்வாக்கோடு வாழவும் எப்படி முடியும்? ஆனால், உங்கள் சந்தர்ப்பவாதிகள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், இந்தியா பொதுவுடைமை நாடாக மாறத்தான் போகிறது, அதில் சந்தேகமில்லை" என்று சொல்லிக் கொண்டே அவர் நடக்க ஆரம்பித்தார். அவர் எங்கோ நடந்து சென்றார். அவர் உருவம் பார்வையிலிருந்து மறைகிற வரையில் கண் சிமிட்டாமல் அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

*

## நானும் நீயும்

ஜனநாயகம் என்றால், 'நான் உனக்குச் சமம்' என்று அர்த்தமல்ல; 'நீ எனக்குச் சமம்' என்று பொருள்.

—ஜேம்ஸ் ரஸ்ஸல்

# தமிழ்ச் சுடர் நிலையம்

●

புத்தக வெளியீட்டாளர்

82 B, செம்புதாஸ் தெரு, சென்னை

○
○○

தமிழிலே அறிவுக்கு விருந்தளிக்கும் உயர்ந்த புத்தகங்கள் வெளியிடுகிறோமென்பதைத் தமிழன்பர்களுக்கு அன்புடன் அறிவிக்கிறோம்.

○○
○

தமிழ்ச் சுடர்
நிலையத்தார்




## ஜீவாம்ருதம்

நரம்புகளுக்கு வலிவையூட்டி தசைகளை வளர்த்தி, தளரா வீரியத்தையுண்டுபண்ணி, எவரையும் எத்துறையிலும் முன்னணியிலிருக்க உதவி, வாழ்க்கையை இன்ப மயமாக்கும் சிறந்த டானிக் பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின் ஜீவாம்ருதம்,

எல்லா மருந்து ஷாப்புகளிலும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

ஆயுர்வேதாஸ்ரமம், (ESTD. 1898) மதறாஸ்

AJE-10

# புதிய சீனு

எழுதியவர் :

## வெ. சாமிநாத சர்மா

சீன அரசியலும் சரித்திரமும் ரொம்பச் சிக்கலானவை. உலகத்தில் எந்த நாட்டைப் பற்றி வேண்டுமானுலும் இலகுவில் எழுதலாம் ஆனுல், சீனுவைப் பொறுத்த வரையில், அது நடக்கிற காரியம் அல்ல என்று ஓர் அறிஞன் கூறுகிருன். ஆனுல், 'புதிய சீனு' அக்கூற்றைப் பொய்யாக்கும் முறையில் வசீகரமான நடையில் அமைந் திருக்கிறது.

சுமார் 450 பக்கங்கள், அழகிய பல படங்கள், காலிகோ பைண்ட்

ஜூன் 25-ஆம் தேதி வெளியாகும்

ஜூன் 15-ஆம் தேதிக்குள் முன் பணம் அனுப்புவோருக்கு
தபாற் செலவின்றி அனுப்பிக்கப் பெறும்

விலை ரூ. 6-8-0

## சக்தி காரியாலயம்

சென்னை : : மதுரை

# கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய
வெண்மையாக்குவதில்
நிகரற்றது

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர் : **டி. எஸ். ஆர். & கோ**

கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட் : **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**

திருவல்லிக்கேணி, மதராஸ்

# சத்திரத்தில் — சிப்பாய்

ஜைனேந்திர குமார்

அக்காலத்தில் ரயில் கிடையாது. குதிரைதான் மிகவும் வேகமான வாகனம்.

சிப்பாய் உடையணிந்திருந்த ஒரு வழிப்போக்கன், சாலையோரத்திலிருந்த ஒரு சத்திரத்தருகே, தன் குதிரையினின்றும் இறங்கினான். குதிரையைத் தட்டிக் கொடுத்து விட்டு, அவன் உள்ளே சென்றான். வெகு தூரத்திலிருந்து வந்ததால், அவன் மிகவும் களைப்புடைந்திருந்தான். இருபத்து நான்கு மணி நேரம் அங்கே தங்கியிருந்துவிட்டு, அப்புறம் போய்விடுவான். இன்னும் அவன் வெகுதூரம் பிரயாணம் செய்யவேண்டும்.

அவன் குதிரையைச் சத்திரக்காரனிடம் ஒப்புவித்து, அதற்குத் தீனி போடும்படி சொன்னான். தான் தங்கியிருப்பதற்கு, சௌகரியமான ஓர் அறை வேண்டுமென்றும் கேட்டான். செலவைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை. ஆனால் சௌகரியம் வேண்டும்.

எல்லா ஏற்பாடுகளும் ஆயின. சாப்பாட்டை முடித்துக் கொண்டு, அவன் படுக்கையில் படுத்தான்.

ஒரு சிப்பாய்க்கும் இதயம் உண்டு; ஆசாபாசங்கள் உண்டு. மனிதனை மிருகமாக்கும் யுத்தகளத்திலேயிருந்து திரும்பி வருபவன் மிடுக்காய்த்தான் இருக்கிறான். பின்னால் எப்படி மாறிவிடுகிறான்! இதைச் சித்தரிக்கும் இந்த ஹிந்திக் கதையை, கு. குருசாமி மொழிபெயர்த்துள்ளார்.

அவனுக்கு வெகு சீக்கிரம் தூக்கம் வந்துவிட்டது. தன் வீட்டைப்பற்றியும் குடும்பத்தைப்பற்றியும் அவன் கனவு காண ஆரம்பித்தான். சென்ற ஐந்து வருடங்களாக விதவையைப் போல் வாழ்ந்து வந்த அவனுடைய மனைவி, அவன் போய்ச் சேர்ந்தவுடன், வீட்டு வேலைகளில் மும்முரமாய் முனைந்திருக்கிறாள். அன்பாகவும் கனிவாகவும் அவனோடு பேசுவதற்கு அவளுக்குக் கொஞ்சமேனும் நேரமில்லை. அவனுடைய கண்ணுக்குத் தென்படாமலே அவள் தன் வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள். அவன் மடியில் இரண்டாயிர ரூபாய் இருந்தது. அதை அவன் இன்னும் அவளிடம் சொல்லவில்லை. இரண்டாயிரம்! தான் இல்லாத காலத்தில் அவள் எப்படி வாழ்ந்து வந்தாள் என்பதைத் தன் கண்ணாலேயே பார்க்க வேண்டுமென்பது அவனுடைய விருப்பம். ஆபத்துக் காலத்தில் அவளுக்கு உதவியாயிருப்பதை விட்டு, அவன் ஏன் எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டிருந்தான்? பணமில்லாமல், உற்றார் உறவினர் இல்லாமல் அவள் எப்படிக் காலங் கழித்திருப்பாள்?—அத்துடன், நாலரை வயதுள்ள இந்தக் கரன்சிங்! ஐயோ, மீண்டும் மீண்டும் அவன் தன் மனைவியின் அழகைப் பருக விரும்புகிறான். ஆனால் அவள் அதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. இவன்தானே கரன்சிங்?—அடேடே, ரொம்பப் பெரியவனாகி

விட்டானே! தன் தாயாரைப் போலவே இருக்கிறான். "ஏன் ஐயா, உங்கள் பெயர் கான்சிங் தானா? நான் யார் என்று சொல்வீர்களா? உங்களுடைய தந்தை யார், தெரியுமா? அவர் சண்டைக்குப் போயிருக்கிறார். நான் அவரிடமிருந்துதான் வருகிறேன். அவர் உங்கள்மேல் மிகவும் பிரியமாயிருக்கிறார்" என்று சொல்லி, இரண்டு கைகளையும் நீட்டி, அவன் தன்னுடைய மகனைத் தூக்கித் தன் மடிமீது வைக்க விரும்பினான்.

திடீரென்று அவன் கண் விழித்துப் பார்த்தான். தன்னுடைய வீடு இன்னும் வெகுதூரத்தில் இருக்கிறதென்பதையும், தான் இருக்குமிடம் ஒரு சத்திரம் என்பதையும் உணர்ந்தான். கண்களைத் துடைத்துக் கொண்டு, மடியிலிருந்த பணத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். நேரம் மிக மெதுவாகச் செல்வது போல் தோன்றியது. பேச்சுத் துணைக்காக அவன் சத்திரக்காரனை அழைத்தான். அவன் மூலம், அந்தப் பிரதேசத்துச் சமாசாரங்களை எல்லாம் தெரிந்துகொண்டு, சைனியம் சண்டை சம்பந்தமான அநேக விஷயங்களை அவனுக்குக் கூறினான். குழந்தை குட்டிகளை நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் விட்டுவிட்டு, ஒவ்வொரு நிமிஷமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிப்பாய் வாழ்க்கையைப் பற்றி விரிவாகச் சொன்னான். அது சுவாரசியமான வாழ்க்கைதான்; ஆனால் கொடுமையும், பீதியும் நிறைந்த சுவாரசியம் அது. ஜனங்கள் கொல்வதும், கொல்லப்படுவதும் எவ்வளவு பயங்கரமான காட்சி! தன்னைப் போன்ற இதர மனிதர்களை மனந்துணிந்து எப்



படித்தான் சொல்லுகிறார்களோ, தெரியவில்லை. யாருக்கும், தான் சாவது மகிழ்ச்சி தரக் கூடிய விஷயமல்ல. தங்களால் கொலை யுண்டு இறந்து போகிறவர்களுக் கும் மரணம் கஷ்டமாய்த்தா னிருக்கும் என்பது அவர்களுக்கு ஏன் விளங்குவதில்லையோ, தெரிய வில்லை. கொன்றபின் அவர்கள் ஏன் சந்தோஷமடைகிறார்கள்? சாதாரண வாழ்க்கையில் கொலை பெருங் குற்றமாகக் கருதப்படு கிறது. ஆனால், சண்டையில் அதே கொலையைப் புகழத்தக்க செய லாகக் கருதுகிறார்கள். அங்கே எவன் அதிகப்பேர்களைக்கொல்லு கிறானோ, அவனையே சாமர்த்திய சாலியாக நினைக்கிறார்கள். அவ னுக்கே பரிசுகள் கிடைக்கின் றன.

சிப்பாய் சொன்னான்: "எனக்கு இதில் சந்தோஷமே இல்லை. ஆனால், ஜனங்கள் புகழும்போது கொஞ்சம் சந்தோஷம் உண்டா கத்தான் செய்கிறது. யார் அதிகப் பகைவர்களைக் கொல்கிறார்கள் என்று எங்களிடை ஒரு போட்டி யும் இருந்தது. அப்போட்டியில் வெல்ல வேண்டும் என்ற எண்ண மும் தோன்றியது. ஆனால் உண் மையில் பிறரைக் கொல்வதில் எவ் விதமான மகிழ்ச்சியுமில்லை. பகை வர்கள்! அவர்கள் எப்படி என் பகைவர்கள் ஆனார்கள் என்பது எனக்கு விளங்கவே இல்லை. நான் இதுவரை கொன்றவர்கள் எல் லோரும் எனக்கு என்ன தீங் கிழைத்தார்கள்? பகைவர்கள் தான். ஆனால் அவர்களை நான் முன்பின் பார்த்ததுகூடக் கிடை யாது. அப்படியானால், என் தலையை வெட்டுவதற்காக, அவர் கள் வாளாயுதத்தை ஓங்கிக் கொண்டு ஏன் வந்தார்கள்? எங் களுக்குள் ஒருவிதமான தகரா றும் இல்லாதபோது, நானும் அவர்களை ஏன் வெட்டிக் குவித் தேன்? இதில் எங்கேயோ தவறு இருப்பதாகத் தோன்றுகிறது. இதோ பார், நீயும் நானும் இருக் கிறோம். நீயும் நானும் இதற்கு முன் சந்தித்ததில்லை. ஆனால் நாமிருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். ஒருவரை யொருவர் கொல்வதற்கு முயலுவ தில்லை. ஒருவருக்கொருவர் உதவி யாகவே இருக்கிறோம். 'சைனி யத்தில் நமக்குச் சம்பளங் கிடைக்கிறதல்லவா?' என்று நீ சொல்வாய். அவர்கள் சம்பளங் கொடுப்பதற்காக நாம் சண்டை செய்கிறோம். ஆனால், வெற்றி யடைய வேண்டும், நம்முடைய கடமையை நிறைவேற்ற வேண் டும் என்ற எண்ணம் உண்டா கிறதே, அது எங்கிருந்து உண் டாகிறது? அதில் ஏதோ ரகசியம் இருக்கிறது. இரண்டு மூன்று வருஷம் சைனியத்திலிருந்ததில், என் மனம் மரத்துவிட்டது. மனைவி மக்களோடு வசிக்க வேண்டும், நிலத்தை உழுது ஏதா வது பயிர்செய்ய வேண்டும், கையால் உழைத்துப் பிழைக்க வேண்டும் என்று வெகுநாளாய் எனக்கு ஆசை. பட்டாளத்தை விட்டு வந்துவிட வேண்டுமென்று எத்தனையோ தடவை நினைத் தேன். அந்த எண்ணம் இப் பொழுதுதான் நிறைவேறியது" என்றான் சிப்பாய்.

சத்திரக்காரன் "உம், உம்" என்று கேட்டுக் கொண்டே இருந்தான். இம்மாதிரி சலிப்புக் காட்டாமல் கேட்டுக் கொண் டிருந்தால் தனக்கு ஏதாவது இனம் கிடைக்குமென்பது அவ னுக்கு நன்றாய்த் தெரியும். இடை யிடையே "ஆம் எஜமான், ஆம் எஜமான்" என்று சொல்லி,

மேலும் பேசுவதற்கு உற்சாக மூட்டினன்.

சிப்பாய் மேலும் சொன்னன்: "இத்தனை நாளாய் நான் என் குழந்தையைப் பார்க்கவில்லை? அங்கே என்னென்ன நடந்திருக்கிறதோ, யாருக்குத் தெரியும்? என் மனைவி தனியாகவே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பாள். நான் இப்படி உயிரோடு திரும்பி வருவேன் என்பது என்ன நிச்சயம்? சண்டையில் நான் செத்துப் போகவும் கூடுமல்லவா?—என்ன தம்பி, என்ன சொல்கிருய்?"

"ஆம், எஜமான்!"

"இதோ பார். நீ இங்கே இருக்கிருய். உனக்கு ஒரு பயமுங் கிடையாது, ஒரு சங்கடமுமில்லை. உன்னுடைய வேலை உண்டு, வீடு உண்டு. ஊரை விட்டு, வீட்டை விட்டு வெகு தூரத்தில் அலைய வேண்டிய அவசியமில்லை. குழந்தை குட்டிகளோடு வசிக்கும் சுகத்தை விட்டு விட்டு, வெகு தூரம் சென்று, அடிமைத் தொழில் புரிந்து, சம்பாத்தியஞ் செய்து, பின்பு திரும்பி வந்து, ஆடம்பரமாய் வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதில் என்ன ஆனந்தமிருக்கிறது?—ஏன், நான் சொல்வதென்ன?"

குற்றேவல் புரிந்து கொண்டிருந்த அந்தச் சத்திரக்காரன் தன்னைப்பற்றிப் பெருமையாக நினைக்க வேண்டுமென்று சிப்பாய் விரும்பினன். ஆகையால், அவன் தன் பையிலிருந்து ஆறணவை எடுத்து, சத்திரக்காரனிடங் கொடுத்து, "இந்தா, உன் குழந்தைகளுக்கு ஜிலேபி வாங்கிக் கொடு. ஆனல் இதை மறந்து விடாதே: நாளைக் காலையில் குதிரை சேணத்துடன் தயாராயிருக்க வேண்டும். இன்னும் நூறு மைல் தூரம் இருக்கிறது. சீக்கிரம் ஊர் போய்ச் சேர வேண்டுமென்பது என் ஆசை" என்றுன்.

சத்திரக்காரன் தலைகுனிந்து, "சரி, எஜமான்" என்றுன்.

சாயந்திரம் ஆனதும், இங்கு மங்கும் சற்று உலாவிவிட்டு, இரவு சத்திரத்திற்குத் திரும்பி வந்து, அன்னபானதிகளை முடித்துக்கொண்டு, படுத்துத் தூங்க முயன்றுன். அதிகாலையிலே எழுந்திருந்து புறப்பட்டுவிட வேண்டும் என்பது அவனுடைய எண்ணம்.

நள்ளிரவு. அவன் நன்றுய் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். பக்கத்தில், எங்கிருந்தோ ஒரு குழந்தை அழும் சத்தங் கேட்டது. அதன் தாயார் அதை அமர்த்துவதற்கு எவ்வளவோ முயன்றுள்; ஆனல் முடியவில்லை. ஒருவேளை பசியாயிருந்ததோ, அல்லது வெறும் பிடிவாதந்தானே தெரியவில்லை. தாயார் குழந்தையை அடித்துப் பார்த்தாள்; வைது பார்த்தாள்; ஆனல் அது அழுவதை நிறுத்தவில்லை.

அந்த நிசப்தமான இரவில், குழந்தை விடாமல் அழுதுகொண்டிருந்தது, அவனுக்கு அமங்கலமாகத் தோன்றியது. தன் மனைவியைப் பற்றிச் சுக சொப்பனங் கண்டு கொண்டிருந்த அவனுடைய தூக்கங் கலைந்தது. அந்த அர்த்தமற்ற ராகமற்ற சுரமற்ற கதறல், இரவின் மௌனத்தைக் கிழித்துக்கொண்டு தன் காதில் வந்து விழுவதை அவன் சிறிதேனும் விரும்பவில்லை. பேசாமல் அதைச் சகித்துக்கொண்டு தூங்கிவிடலாம் என்று முதலில் நினைத்தான். ஆனல் தூங்க முடிய

வில்லை. அந்த அழுகையும் நின்ற பாடில்லை. கடைசியில், எரிச்சலுடன் அவன் சத்திரக்காரனைக் கூப்பிட்டான். சத்திரக்காரன் வந்து பீதியுடன் நின்றான்.

"இதென்ன கூக்குரல்?"

"ஒரு குழந்தை, எஜமான்..."

"குழந்தைதான், நாசமாய்ப் போக! சும்மா இருப்பதற்கென்ன, அது?"

"உடம்புக்குச் சௌகரியமில்லை போலிருக்கிறது, எஜமான்."

"சௌகரியமில்லா விட்டால், அதற்கு இதுதானா இடம்?—ஏன் சௌகரியமில்லை?"

சத்திரக்காரன் பதில் சொல்லவில்லை.

"அதன் தாயார் கூட இருக்கிறாளா?"

"இருக்கிறாள், எஜமான். நாளைக்கு இங்கிருந்து போய்விடுவதாகச் சொல்கிறாள்."

"நம்முடைய தூக்கத்திற்குப் பங்கம் உண்டாகிறது. குழந்தையை அமர்த்த வேண்டுமென்று அவளிடம் போய்ச் சொல். சீக்கிரம் போ."

சிறிது நேரத்தில் சத்திரக்காரன் திரும்பிவந்து, கொஞ்ச நேரத்திற்குள் குழந்தை அழுகையை நிறுத்திவிடும் என்று சொன்னான்.

ஆனால் குழந்தை, அழுது கொண்டே தானிருந்தது. அது பக்கத்து அறை. தாயார் குழந்தையை இரண்டு மூன்று அடி அடித்த சத்தமுங் கேட்டது. ஆனால், அதன் மூலம் குழந்தையின் அழுகை அதிகரிக்கவே செய்தது.

"நாசமாய்ப் போக, செத்துத் தொலையேன்! உன்னால் நான் என்ன சுகத்தை அடைந்தேன்?" என்று சொல்லி, அவள் அழ ஆரம்பித்தாள்.

சிப்பாய், தூங்குவதற்கு மீண்டும் முயற்சித்தான். ஆனால் குழந்தை கதறிக் கொண்டே இருந்தது. ஒரு ஸ்திரீயின் விம்மல், ஒரு குழந்தையின் அழுகை, இவைகளுக்கு மத்தியில் தூங்குவது லேசான காரியமா? அதைச் சகித்துக் கொண்டிருப்பதுதான் லகுவா? ஆகையினால், அதைப் பொறுத்துக் கொண்டிருக்கச் சிப்பாயினால் முடியவில்லை. சத்திரக்காரனை மீண்டும் கூப்பிட்டு, "நாசமாய்ப் போன குழந்தை,—அது அழுகையை நிறுத்தாது! விரட்டிவிடு அவர்களை வெளியே" என்று கத்தினான்.

"பாவம், ஏழை! இன்னுங் கொஞ்ச நேரந்தான், எஜமான். விடிந்ததும், அவளும் தன் வழியே போய்விடுவாள்; நீங்களும், புறப்பட்டு விடுவீர்கள்."

"இல்லை, இல்லை. இப்பொழுதே போகச் சொல். நோயாளிகளுக்கு இதுவா இடம்? எனக்குத் தூக்கமே வரமாட்டேன் என்கிறது."

"எஜமான், இந்த நடுராத்திரியில், பாவம், அவள் எங்கே போவாள்?"

"எங்கே போவாளா? உலகம் முழுவதும் உன் சத்திரத்திற்குள்ளேதானா அடங்கி இருக்கிறது? குதிரை லாயத்துக்கோ அல்லது வேறு எங்கேயோ—எங்கே வேண்டுமானாலும் போகச் சொல். நமக்குக் கொஞ்சமேனும் உபத்திரவம் இருக்கக் கூடாது. தெரிகிறதா?"

பணம் படைத்த சிப்பாயின் அதிருப்திக்கு உள்ளாகச் சத்திரக்காரன் விரும்பவில்லை. இனும் அதிகம் கிடைக்குமென்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது. ஆகையால் அவன் குழந்தையின் தாயிடம் சென்று, "பக்கத்து அறையில், பட்டாளத்தைச் சேர்ந்த சர்தார் ஒருவர் இருக்கிறார். குழந்தை அழுவதால் அவருடைய தூக்கம் கலைந்து போகிறது. குழந்தையை உன்னால் அமர்த்த முடியாவிட்டால், அதைத் தூக்கிக் கொண்டு வெளியே போய்விடு" என்றான்.

"குழந்தை இந்த ஸ்திதியில் இருக்கும்போது, நான் அதை எங்கே தூக்கிக் கொண்டு போவேன்? காலமோ குளிர் காலம்; பாதி ராத்திரி ஆகிவிட்டது. கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள், ஐயா! கிழக்கு வெளுக்கவும், நான் புறப்பட்டு விடுகிறேன்."

"இல்லை, இப்போதே புறப்படு. இல்லையானால், அவர் கோபித்துக் கொள்வார்."

"அந்தச் சர்தாரிடம் கைகூப்பிச் சொல். நான் ஏழை. சிறிது நேரம் பொறுத்துக் கொள்ளட்டும். குழந்தையின் தந்தை இங்கில்லை. நான் இதை இப்பொழுது எங்கே தூக்கிக்கொண்டு போவேன்? பொழுது விடியவும் புறப்பட்டு விடுகிறேன்."

அவளை வெளியே போகச் சொல்லச் சத்திரக்காரனுக்கு விருப்பமில்லை. ஆனால், சர்தாரின் கோபத்துக்கு அவன் பயந்தான்.

"அம்மா, சாலையோரத்தில் ஒரு குதிரை லாயம் இருக்கிறது. அங்கே போய்த் தூங்கு. நான் சொல்லுவதைக் கேள். இல்லையானால், என் பிழைப்புக்கே ஆபத்து வந்துவிடும்" என்றான் சத்திரக்காரன்.

உடனே, அவள் தன் மடியிலிருந்த குழந்தையைக் கீழே தள்ளி, "இதைக் கொண்டுபோய் அவருடைய பாதங்களில் போடு. அவர் தம்முடைய செருப்பால் இதை மிதித்து நசுக்கிக் கொல்லட்டும். அப்புறம் நான் போகிறேன்" என்றாள். இவ்விதம் சொல்லிவிட்டு, இரண்டு கைகளினாலும் தலையைப் பிடித்துக் கொண்டு, அவள் அழ ஆரம்பித்தாள். பாயின்மீது கிடந்த குழந்தை கத்திக் கொண்டிருந்தது.

சத்திரக்காரன் அதைக் கண்டு பயந்துவிட்டான். அவன் திரும்பச் சென்று, "இன்னுங் கொஞ்ச நேரந்தானே, எஜமான்! பாவம், இருந்து விட்டுப் போகட்டும். அவள் பரம ஏழையாயிருக்கிறாள்" என்று சர்தாரிடம் கூறினான்.

சிப்பாய் தன்னறையிலிருந்து கொண்டு, சத்திரக்காரனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தான். தன் ஆணை நிறைவேற்றப்படாததால், அவனுக்கு மனச் சமாதானம் ஏற்படவில்லை. ஆகையால், சத்திரக்காரன் வந்து, அவள்மீது தயைகாட்ட வேண்டும் என்று சொன்னபோது, அவனுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. "அவளை வெளியேற்ற முடியாத நீ ஓர் ஆண் மகனா? போ அப்பால்" என்று சொல்லிவிட்டு, அழுகைச் சத்தம் வந்த திக்கை நோக்கி விரைந்து சென்றான்.

அறையில் விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது. இரண்டு கைகளினாலும் நெற்றி

யைப் பிடித்துக்கொண்டு ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் குழந்தை அலறிக் கொண்டிருந்தது.

"யார் அங்கே, உள்ளே?"

பதில் இல்லை.

"உள்ளே யார் என்று கேட்கிறேன் — உனக்கென்ன காது செவிடா?" என்று சிப்பாய் இரைந்து கத்தினன்.

ஸ்திரீ மேன்மேலும் அழ ஆரம்பித்தாள். ஆனல் பதில் சொல்லவில்லை.

"இதோ பார்! குழந்தையை எடுத்துக்கொண்டு நீ இப்போதே வெளியே போய்விட வேண்டும். குழந்தையின் அழுகையை அமர்த்துவதற்கு உனக்குத் திறமையில்லை. ஏதாவது கேட்டால், பதிலும் சொல்லமாட்டேன் என்கிருய்!"

பெண் பேசாமல் எழுந்து வந்து, குழந்தையைச் சிப்பாயின் பாதங்களில் போட்டு, "நான் போகிறேன். இந்தக் குழந்தையை உதைத்து, எங்கே இஷ்டமோ அங்கே தள்ளிவிடுங்கள்" என்று சொல்லிவிட்டு வெளியேறினள்.

அந்த மனிதன், ஏனே தெரியவில்லை, திடுக்கிட்டு விழித்தான். "நில், நில்! எங்கே போகிருய்?"

"சாகப் போகிறேன்."

சிப்பாயின் மனே நிலைமையில் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. "நீ எங்கேயிருந்து வருகிருய்? இப்போது எங்கே போகிருய்?" என்று மீண்டும் அந்தப் பெண்ணைக் கேட்டான்.

"ஐந்து வருஷமாய் இந்தப் பையனின் தகப்பன் வரக்காணேம். அவர் யுத்தத்துக்குப் போயிருக்கிருர். யார் கண்டார்கள், இறந்துவிட்டாரோ என்னவோ? இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு, அவரைப் பார்ப்பதற்காகப் போகிறேன்" என்று அந்தப் பெண் அழுது கொண்டே பதில் சொன்னள்.

சிப்பாயின் கண்ணில் நீர் நிரம்பியது. அவன் தன்னுடைய மகனைத் தன் காலடியிலிருந்து தூக்கினன். தன்னை அவள் இன்னும் அடையாளங் கண்டு கொள்ளவில்லையா என்றுகூட அவன் கேட்கவில்லை. பையனைக் கட்டி அணைத்து முத்தமிடுவதிலேயே மும்முரமாயிருந்தான்.

*

## மற்ருெரு மேதை

ஹாஸ்யக் கதைகள் எழுதுவதில் இணையற்ற அமெரிக்க ஆசிரியராகிய மார்க் ட்வெயினை, ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்படியாய் அவருடைய நண்பர்கள் வற்புறுத்தினர்கள். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார். கூட்டத்தில் பேசியே அதுவரையில் அவருக்குப் பழக்கமில்லை. பேசுவதற்காக அவர் மேடையில் ஏறியதும், அவருடைய கைகால்கள் ஆடத்தொடங்கின. ஆனலும், ஆரம்பத்திலேயே சமாளித்துக்கொண்டார். பிரசங்கத்தை அவர் தொடங்கிய முறையே விநோதமாய் இருந்தது: "ஜூலியஸ் சீஸர் இறந்துவிட்டார்; ஷேக்ஸ்பியர் இறந்துவிட்டார்; நெப்போலியன், ஆப்ரஹாம் லிங்கன் எல்லோரும் இறந்துபோய்விட்டார்கள். நானும் தேக அசௌக்கியமாய் இருக்கிறேன்" என்று துவக்கினர். ஜனங்கள் சிரித்துச் சிரித்து வயிற்றைப் புண்ணாக்கிக் கொண்டார்கள்; வெளியே எழுந்து போகக்கூட அவர்களால் முடியவில்லை.

# ஆஹா ஊஹு-அ!

தி. ஜ. ர.

நாட்டிலே இப்போது ஏராளமான வேஷதாரிகள் கிளம்பியிருக்கிறார்கள். பச்சையாகச் சொல்லுகிறேன்; நிச்சயமாகச் சொல்லுகிறேன்: ஏராளமான வேஷதாரிகள்! உமக்கு அடுத்தாற்போல் பக்கத்திலே இருப்பவனை—உம்முடைய ஆப்த சினேகிதனை—கூர்ந்து எச்சரிக்கையாய்ப் பாரும். அவன் ஒரு வேஷதாரியாயிருக்கக்கூடும். ஏன்? நீரே ஒரு வேஷதாரியா யிருக்கக் கூடும். உம்மிடமே கூட நீர் ஜாக்கிரதையாய்—எச்சரிக்கையாய்—இருந்துகொள்வதுதான் உசிதம். தானறிந்து, தெரிந்து, ஊரை ஏமாற்ற வேஷம் போடுபவர் சிலர். தெரியாமலே—பிறர் பூச்சூட்டிவிட்டதால்-வேஷம் போடுபவர் பலர். நீர் இரண்டாவது ரகத்திலே சேர்ந்தவா யிருக்கலர்ம். அதுதான் அதிக அபாயமானது. உமக்கு மட்டுமல்ல; ஊருக்கே—நாட்டுக்கே—அபாயம். உமது வேஷத்தைக் களைந்துவிடும்; பிறகு, பிறர் வேஷத்தைக் குலைத்து, அவர்களுடைய உண்மைச் சொரூபத்தை வெளிக்கொண்டு வரவும் உம்மாலான முயற்சியைச் செய்யும்.

எதை எடுத்தாலும் வெறும் கூச்சல் வலுத்திருக்கிறது. யோசனை இல்லாத கூச்சல்; சிந்தனை செய்யாத கூச்சல். எந்த விஷயத்தின் தராதரத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, நல்ல வழியில் ஜனங்களின் சுவையை வளர்ப்பதுதான் நாகரிக வளர்ச்சியாகும். அதை யார் செய்யப் போகிறார்கள்?

‘ஒருவன் செத்தால் இழவு; ஊரெல்லாம் செத்தால் கலியாணம்’ என்பார்கள். ஒருவன்—வாழ்க்கையின் ஒரு துறையில்—வேஷதாரி இருந்தால் தேவலை. பலர்—வாழ்க்கையின் பல துறைகளிலே—வேஷதாரிகள் மயமாயிருந்தால், என்ன செய்வது? ‘எல்லாம் வெளிமயக்கே, இறைவா, கச்சி ஏகம்பனே!’ என்று ஏங்கி—அல்லது எக்களித்தா?—பாடவேண்டும் போல்தான் தோன்றுகிறது. அரசியலா, சமூகமா, கலையா, இலக்கியமா, வேதவேதாந்தமா—எதிலும் வேஷதாரிகள் மூக்கை நுழைத்திருக்கிறார்கள். இந்தச் ‘சூர்ப்பணகை’களுக்கு, அந்தச் சூர்ப்பணகையின் கதி வெகு சீக்கிரம் ஏற்படச் செய்தாலொழிய, நாட்டுக்கு விமோசனமில்லை.

‘கார்ல் மார்க்ஸ்’ என்பார்கள்; ‘பிரஞ்சுப் புரட்சி’ என்பார்கள்; ‘அமெரிக்க சுதந்தரப் போர்’ என்பார்கள். ‘காந்தியமா? அது சுத்த அபத்தம். காந்தியைச் சாமியாராய் வைத்துக் கும்பிட்டு மூலையிலே உட்கார்த்தி வைத்துவிட வேண்டுமேயொழிய, வேறு காரியத்துக்குப் பயன்படுத்தலாகாது. அஹிம்சையால் ஜப்பான்காரனை விரட்ட முடியுமா? ஜெர்மன்காரனை அடித்துத் துரத்த முடியுமா? அதற்குக் கத்தி வேண்டும், கேடயம் வேண்டும்’ என்றெல்லாம் கர்ஜிப்பார்கள். ஆனால், காலடியிலே

# தேயிலையின் சரிதம்—7



டார்ஜீலிங் தோட்டத்தில் ஜாக்கிரதையுடன் மூடப்பட்ட தேயிலைப் பெட்டிகள், கொழுத்த சிறு குதிரைகளின்மேல் ஏற்றப்பட்டு அருகாமையிலுள்ள ரயிலடிக்கு வருகின்றன.

## தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றம்

தொழிற்சாலையில் சரகாக்கப்பட்டு, சுருட்டப்பட்டு, புளிக்க வைத்து, உலற்றி, நோம்பப்பட்டு, ரகவாரியாய்ப் பிரிக்கப்பட்டு, தேயிலை நமது பண்படுத்தும் இடத்திற்கு வரத் தயாராகிறது.

சாதாரணமாய் காணப்படும் தேயிலைப் பெட்டிகளில் அடக்கம் செய்யப்படுமுன் தேயிலை அவசரமாய் மறுபடி உலர்த்தப்படுகிறது. இதன்மூலம் அகஸ்மாத்தாக அடைந்திருக்கக்கூடிய ஈரமும் எடுக்கப்பட்டுவிடுகின்றது.

பண்படுத்தி, பைகளில் நிறப்பப்படும் சாலையில் அனுபவசாலிகளான தொழிலில் தேர்ந்தவர்கள் ப்ரூக் பாண்டு தேயிலையின் தனிப்பட்ட உயர்ந்த ரகங்களை பொருக்கி நிரப்புகிறார்கள்.

# ப்ரூக் பாண்ட்

# சிவாஜி

## தையல் நூல்

*

நீங்கள் வாங்கும் நூல்
சிறந்ததா, உறுதி
யானதா என்று பார்த்து
வாங்குங்கள்

*

இந்தியாவில் உற்பத்தி
செய்யப்படுகிறது

ஆக்மி திரெட் கோ., லிமிடெட்,
பாங்க் ஆவ் பரோடா கட்டிடம்,
அப்பாலோ தெரு, பம்பாய்.






# டோங்ரே

பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டானிக்

பற்கள் வளர
உதவி செய்கிறது

மலேரியா நோயால் தினம்
2880 பேர்
பீடிக்கப்படுகின்றனர்....

மலேரிடால்




கடுமையான, நீடித்த
மலேரியா
தலைவலி-எல்லாவித ஜுரங்கள்
சகல வலிசுரையும்
குணப்படுத்தும்.

2, 27, 100, 500, 1000 மாத்திரை
கள் கொண்ட பாக்கெட்டுகளாக எல்லா
மருந்து வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

JAMBU & CO, T.NAGAR, MADRAS.

வந்து கடித்த எறும்பைத் திருப்பி நசுக்கக்கூட வலாமல், அவர்கள் நாட்டியமாடுவதை நம் கண்ணுரக் காணலாம். அதிக வீரம் பேசுபவன் பெரிய கோழை. உண்மை வீரன் கூச்சல் போடமாட்டான். ஆழம் மிகுந்த இடத்திலே அலை குறைவாகவே இருக்கும். செயலுக்குத்தான் விலையுண்டு. கூச்சல் காற்ருேடு காற்ருய்ப் போகும். 'சமதர்மம்; சுதந்தரம்; ராஜதந்திரம்; நாஜீயம் ஒழிக; பாஸிஸம் வீழ்க; ஜப்பான்காரன் நாசமாய்ப் போக; ஆஹா—ஊஹூ!' என்றபடி யெல்லாம் அரசியலிலே வெறும் கூச்சல் போடுபவனைக் கண்டு மயங்காதீர்கள். அவன் என்ன செய்தான், என்ன செய்யக்கூடும், என்ன சக்தி உடையவன் என்பதை யெல்லாம் கவனியுங்கள். ஒன்றிலே இரண்டு போன மிச்சமா யிருக்கக் காண்பீர்கள்; அதாவது பூஜ்யத்துக்கும் கீழே.

தத்துவ மெல்லாம் கற்பனையளவிலே தான், தூய்மையாய், கலப்பற்றதாய் இருக்கும். கிரியாம்சையிலே வரும்போது, கலப்படமாகித்தான் தீரும். காற்று இயற்கையிலே தூய்மையானது தான்; ஆனல், போகும் வழியிலே உள்ள வீச்சமும் வாசனையும் அதிலே ஆரோகணித்துக் கொள்ளும். சமதர்மத்தை, நினைத்தவன், நினைத்தவுடனே, நினைத்த ஜனங்களின்மீது, குல்லாய் போடுவது போலக் கவிழ்த்து விடமுடியாது. சுதந்தரத்துக்குக் குறுக்குப் பாதை கிடையாது. ஒரு மயிலைக் கண்டு, ஆயிரம் வான்கோழிகள் ஆடுகின்றன. அவைகளை அடித்து விரட்டுங்கள். அது போதும்; வேருென்றுமே கூடச் செய்யத் தேவையில்லை.

அரசியல் போகட்டும். இலக்கியத்திலே என் திருடர்களைக் கொண்டாடுகிறீர்கள்? காப்பி அடிப்பவர்களை என் பாராட்டுகிறீர்கள்? தர்ஜமாக்காரர்களை என் மிதமிஞ்சிப் போற்றுகிறீர்கள்? திருடர்களின் கையிலே ஒரு கன்னக்கோலைக் கொடுத்து, இலக்கிய உலகத்தை விட்டு வெளியே விரட்டிவிடுங்கள். சமூகத்துக்கு அதனல்கூட அதிகக் கேடு உண்டாகாது. காப்பி அடிப்பவர்கள், ரெஜிஸ்திரார் ஆபீஸில் ஊழியம் செய்வதை விட்டு, இங்கே வந்து தொல்லைபுரிய என் இடங் கொடுக்கிறீர்கள்? 'அவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை? அவர்களை விடச் சிறப்புடன் சுயமாய் எழுதுவோர் வந்தால், தாமாகவே ஜனங்கள் ஆதரிக்கிருர்கள்' என்று சொல்லிப் பயனில்லை. பயிரை வளரச்செய்ய, களைகளைப் பிடுங்கித்தானுக வேண்டும். பயிருக்குச் சக்தியிருந்தால், களைகளை அமுக்கிவிட்டுத் தானுய் வளர்ந்து கொள்ளட்டுமே என்று சொல்லி, எந்தக் குடியானவனுவது சும்மா இருப்பானு?

காலம் விளம்பர காலமா யிருக்கிறது. சில வேஷதாரிகள் ஒன்று சேர்ந்து கொள்ளுகிருர்கள். "அவர் பேச்சு ஆஹா அற்புதமே, அதிசயமே!" என்கிருர்கள். "இவர் எழுத்து ஊஹூ ஆனந்தமே, பரமானந்தமே!" என்று பாடுகிருர்கள். இவர்கள் ஊரைக் கழுதைப்புரளி பண்ணுகிருர்கள். அவர் பேச்சிலும் இவர் எழுத்திலும் உள்ள நயங்களை அவர்கள் விளக்கி விவரித்துச் சொல்லுவதில்லை. குற்றங் குறைகளையும் எடுத்துக் கூறுவதில்லை. 'ஆஹா—ஊஹூ' என்று, குழந்தை கொண்ட குதூகலம் மாதிரி கூப்பாடு போடுகிருர்கள்.

பேச்சையும் பிரசங்கத்தையும் மதிப்பிட இவ்வளவுதானா உரைகல் — ஆஹா ஊஹூதானா?

கலையும் இலக்கியமும் வெறும் காலித்தனத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்பதுபோல இன்னொரு கோஷ்டியும் இப்போது கிளம்பியிருக்கிறது. 'கலை கலைக்காகவே. அதிலே பிரசாரங் கூடாது; ஒழுக்கங் கிடையாது. சம்பூர்ண ஆபாசமே கலை' என்று அந்தக் கோஷ்டி நினைக்கிறது. கலை கலைக்காகவே யானாலும் சரி; கொலைக்காகவே யானாலும் சரி: இந்தக் கோஷ்டியார் ஒருவருக்கொருவர் முட்டுக் கொடுத்துக் கொண்டு, உங்கள் முன்னிலையிலே வந்து சர்க்கஸ் செய்யும்போது மட்டில், நீங்கள் ஏமாறக் கூடாது. இவர்களும் 'ஆஹா—ஊஹூ!' என்ற கோஷத்தைத்தான் மெல்லமெல்ல எழுப்பி வருகிறார்கள். இவர்கள் புரியும் ஆபாசக் குற்றங்களுக்கெல்லாம் உங்கள்மீதே — பொது ஜனங்கள்மீதே — பொறுப்பும் சுமத்துகிறார்கள். இந்த அநியாயப் பழிக்குத்தான் நீங்கள் ஏன் இடம் கொடுக்கிறீர்கள்? ஆபாசம்தான் ஜனங்களுக்குப் பிடிக்கிறதாம்; நல்லதெல்லாம் பிடிக்கவில்லையாம்! இது அடுக்காத அபாண்டமாகும்?

மனிதனுக்கு மிக உயர்ந்த உணர்ச்சிகள் இருக்கின்றன; தாழ்ந்த உணர்ச்சிகளும் இருக்கின்றன. உயர்ந்த உணர்ச்சிகளை எழுப்புவதுதான் வல்லமையான காரியம். ஆபாச இச்சைகளைத் திருப்தி செய்வதிலே மகிமை ஒன்றும் இல்லை. கள்ளின் வாகிரி, இளநீரின் சுகத்தைவிடப் பெரிதாய்த் தோன்றினாலும், அது கேவலம் கேவலம்தான். குரூபமான நிர்வாண சித்திரம், அற்புத ஓவியத்தைப் போலவே, உணர்ச்சியின் அளவில் ஒத்திருக்குமாயினும், இரண்டும் ஒன்றாகிவிடாது. கலைகளையும் இலக்கியத்தையும் எந்த முறையில் மதிப்பிடுவது என்று ஒரு நிர்ணயமும் கிடையாதா? கலையும் இலக்கியமும் காமுகர் காணும் கனவுகளா? அழகே கலை, இன்பமே இலக்கியம் என்பது உண்மைதான். ஆனால், அந்த அழகையும் இன்பத்தையும் ஊட்டுவதிலும் அனுபவிப்பதிலும் ஓர் ஒழுக்கம் வேண்டும்; நியதி வேண்டும். ஆபாசத்தினாலும் தீமையாலும் கிடைக்கும் அழகு அழகல்ல; இன்பம் இன்பமல்ல. அவைகளைப் பிற துறைகளில் வெறுத்துத் தள்ளத்தான் வேண்டும் என்றால், இலக்கியத்திலும் கலைகளிலும் மாத்திரம் அவைகளை அனுமதிப்பது எப்படி நியாயமாகும்? ஒரு வேசையின் நிலைமைக்குக் கலைகளையும் இலக்கியத்தையும் கொண்டுவந்து வைக்க விரும்பும் வேஷதாரிகளையும் நீங்கள் விரட்டி விடுங்கள்.

> **யார் குற்றம்?**
>
> ஒரு பாதிரியார் ஒரு பெரிய கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த போது பின் வருமாறு கூறினார்:
>
> "இந்தக் கூட்டத்தில் யாராவது ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தால், அவரை எழுப்பவேண்டாம்; என்னை எழுப்புங்கள்."

கலை, இலக்கியம், அரசியல் இந்த மூன்றிலும் இன்று நாம் தரகர்களையும் இச்சகம் பேசுவோரையும் காமுகர்களையும் வியாபாரிகளையுமே ஏராளமாய்க் காண்கிறோம். உயர்ந்த கருத்துள்ளவர்களையும், குணச்சிறப்புடையவர்களையும், அனுபவம் நிறைந்தவர்களையும், உன்னத லட்சியம் கொண்டவர்களையும் காணமுடிய

வில்லை. அவர்கள் அபூர்வமாயிருக்கிறார்கள். அந்தச் சிலரும், பணப் பலத்துக்கும் செல்வாக்குக்கும் முன்னே ஒடிந்துவிழுந்து அடி பணிந்து விடுகிறார்கள். பிறகு உயிர்வாழ வேண்டாமா? அதற்காக, தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் தன்மயக்க லாகிரியில் அடைக்கலமும் புகுந்துவிடுகிறார்கள்.

இதற்கெல்லாம் மாற்றுக் கிடையாதா? உண்டு. சுதந்தர சிந்தனையுள்ளவர்கள் ஒருசிலர் ஒன்று கூட வேண்டும். ஆயிரம் பேர் போகிற பாதையிலே நாமும் போவோம் என்ற எண்ணத்தை அவர்கள் விட்டொழிக்க வேண்டும். எது நல்லது, எது கெட்டது என்பதை, திட்டமாய், தெளிவாய், தீரமாய் அவர்கள் மனம்விட்டுச் சொல்லவேண்டும். பொதுஜனங்களின் ருசியை உயர்த்தவேண்டும். அதற்குப் பலமான பிரசாரம் வேண்டும். கலைக்கும் பிரசாரமா என்று கொதித்துவிழாதீர்கள். கலையே பிரசாரம்தான். ஒருவனது கற்பனை, உலகையே வியாபிக்கச் செய்வது பிரசாரமல்ல என்றால், பின் எது? பிரசாரம் மட்டிலும் போதாது; அதற்குப் பின்பலம், உயர்ந்த கலை இலக்கிய சிருஷ்டியே யாகும். அவைகளையும் சிருஷ்டிக்க வேண்டும். ஆனால், இதென்ன வேத காலமா? அல்லது, கற்பனையற்ற கிளிகள் பிதற்றிக் கொண்டிருக்கும் சமதர்ம யுகமா? அல்லது, கவிஞரும் தீர்க்கதரிசிகளும் காணும் மனோ ராஜ்ய உலகமா? பணமில்லாமல் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாதுதான். பணம் வேண்டியதுதான். ஆனால், பணம் வேசைக்கும் சூதனுக்கும்தான் என்றென்றுமே கிட்டுமென்று நாம் ஏன் நினைக்க வேண்டும்? பணத்துக்கு முன்னே நம்மிடம் இருக்க வேண்டிய திட சங்கல்பம் நமக்கு எங்கே இருக்கிறது? நாம்தான் முன்னதாகவே முதுகொடிந்து சரணாகதி செய்து விடுகிறோமே! பணம் பெருத்தவன் — அது கொள்ளையடித்துச் சேர்த்த பணமாயிருந்தாலும் கூட — பெரிய மனிதன் என்று புகழ் பாடத் தொடங்கி விடுகிறோமே! நாய் விற்ற காசு குலைக்குமா என்ற மனோபாவத்தை வளர்க்க, புத்திமான்கள் தேவையில்லை. மூடரும் சூதரும் வேசைகளும்தான், தாமாகவே அதைப் பாமர மக்களிடம் வளர்த்துக் கொண்டிருக்கிறார்களே!

பிரான்ஸ் சடசட என்று, சீட்டினால் கட்டிய காகித மாளிகை போல, சரிந்து விழுந்தது. மார்ஷல் பிடேன் அன்று கதறியது இன்னும் நம் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பிரான்ஸை ஹிட்லரின் வீரப்படை வீழ்த்தவில்லை, குடியும் கூத்தும் நிறைந்த கேளிக்கை வாழ்வுதான் அதைக் கவிழ்த்தது என்றார் பிடேன். ஏற்கெனவே செத்து விழுந்து கொண்டிருக்கும் நமக்கு, உயிரைக் குடிக்கும் சரச லீலைகளா தேவை? உயிர்தரும் அமிழ்தம் போன்ற இலக்கியமும் கலைகளும் அல்லவா வரவேண்டும். அவைகளைச் சிருஷ்டிப்போர் யார்? தவத்தைக் கெடுக்க வந்த மேனகை போல், 'ஆஹா—ஊஹூ' என்று தளுக்கித் திரியும் புல்லுருவிகளை அழித்தால் ஒழிய, அந்தச் சிருஷ்டிகர்களை நாம் எங்கே காண முடியும்? அந்த வேலையில் முதலில் நாம் ஈடுபடவேண்டும் — 'ஆஹா ஊஹூ' என்று குரலெழுப்பும் புல்லுருவிகளை அழிக்கும் வேலையில்.

✲

# சாதுர்யக் கவிஞர்

பரதன்

வெகு காலத்துக்கு முன்பு, மகத தேசத்தை விஜய குப்தன் என்ற ராஜா ஆண்டு வந்தார். அவருடைய தர்பாரில் பல கவிகளும் அறிஞர்களும் இருந்தார்கள். ஆனால், ராஜாவுக்கு மதுரகவி என்ற கவிஞரிடமே மிக்க அன்பு. மதுரகவி தெய்வ பக்தி மிக்கவர். புத்தி சாதுரியம் நிறைந்தவர். ராஜா, அவருக்கு நாள்தோறும் பல பரிசுகளை அளித்து மரியாதை செய்துவந்தார்.

இது மற்றக் கவிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் எப்படியாவது மதுர கவியை அந்த ராஜ்யத்திலிருந்து வெளியேற்ற விரும்பினார்கள். இதற்கு வழி என்ன என்று யோசித்துப் பார்த்தார்கள். ஒன்றும் தோன்றவில்லை. கடைசியில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, அரசனின் முன்பு போய் நின்று, "மகாராஜா! ஒரு விண்ணப்பம்!" என்றார்கள்.

"என்ன, சொல்லுங்கள்" என்றார் ராஜா.

"மதுரகவிக்கு ஒன்றுமே தெரியாது. அவர் பாசாங்கு செய்கிறார். அவர் மகாராஜாவை ஏமாற்றி ஏராளமான பரிசுகள் வாங்குகிறார். இந்தச் சூழ்ச்சியைத் தங்களுக்குச் சொல்லவே வந்தோம். நாங்கள் சொல்வது உண்மையா பொய்யா என்பதை அறியவேண்டுமானால், அவரை மகாராஜா சோதனை செய்து பார்க்கலாம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

மகாராஜா சற்று யோசித்தார். அவர்கள் சொல்வது உண்மையாக இருக்கலாமோ என்று அவருக்கும் கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. ஆகையால், மதுர கவியைப் பரிசோதனை செய்ய அவரும் இசைந்தார்.

"இதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டார் ராஜா.

"ஒரு கேள்வி கேளுங்கள், தெரிந்துபோகிறது. உதாரணமாக, உள்ளங்கையில் ஏன் மயிர் முளைக்கவில்லை என்று கேளுங்கள். சின்னக்

**உள்ளங் கையில் மயிர் முளைக்காததற்குக் காரணம் என்ன? அதற்கு இதோ ஒரு கவி பதில் சொல்லுகிறார். மதுரகவியை அவமதிக்க விரும்பினார்கள் மற்றக் கவிஞர்கள். அதற்கு அவர் எவ்வளவு சாதுர்யமாகப் பதில் சொல்லுகிறார்!**

கேள்வி. இதற்காவது பதில் சொல்லத் தெரிகிறதா என்று பார்க்கலாம்" என்றார்கள் கவிஞர்கள்.

மகாராஜாவுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர் மதுர கவியைக் கூப்பிட்டு, "ஒரு சிறு சந்தேகம். அதைத் தீர்க்க மற்றவர்களால் முடியவில்லை. உங்களுக்குத் தெரிந்தால், சொல்லுங்கள்: என் உள்ளங்கையில் ஏன் மயிர் முளைக்கவில்லை?" என்று கேட்டார்.

மதுரகவி சற்று நேரம் யோசித்துப்பார்த்தார். அவர் புத்தி சாதுரியம் மிக்கவர் அல்லவா? ஒரு கணத்தில் எல்லாவற்றையும் உணர்ந்து கொண்டார். பொறாமைக்காரர்கள் வெட்கப்படும்படி ஒரு வழி கண்டுபிடித்தார். அவருடைய முகம் மலர்ந்தது.

"மகாராஜா, தானங் கொடுத்துக் கொடுத்து, தங்கள் கை தேய்ந்து, மயிர் இருந்த அடையாளமே தெரியவில்லை" என்றார் மதுரகவி.

ராஜாவுக்கு அளவுகடந்த ஆனந்தம் உண்டாயிற்று. இந்த மாதிரி சாதுரியமாகப் பதில் சொல்லுவா ரென்று அவர் எதிர்பார்க்கவே யில்லை. ஆகையால், அவர் தம்முடைய முத்துமாலையை அவருக்குப் பரிசாக வழங்கிவிட்டு, "இன்னொரு கேள்வி: என் கை தான் தானங் கொடுத்துக் கொடுத்து, தேய்ந்து, வழுக்கையாகிவிட்டது என்கிறீர்கள். ஆனால், உங்கள் கையில் ஏன் மயிர் இல்லை?" என்றார்.

"அது தானம் வாங்கி வாங்கி, தேய்ந்து, வழுக்கையாகிவிட்டது" என்று சட்டென்று பதிலளித்தார் மதுரகவி.

"சபாஷ்!" என்றார் அரசர்.

மற்றக் கவிகளின் முகம் பொறாமையால் பொங்கியது. அவர்கள் தங்கள் கைகளைக் காட்டி, "எங்கள் கைகளில் மயிர் இல்லையே, அதற்கு என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார்கள்.

மதுரகவி சிரித்துக் கொண்டே, "அதற்கு நான் என்ன செய்வது? உங்கள் நடத்தையும் மனப்பான்மையும்தான் அதன் காரணம். தானம் வாங்கிக் கொண்டு போகிறவர்களைப் பார்த்துப் பார்த்து, நீங்கள் பொறாமைப் படுகிறீர்கள். மனதுக்குள்ளே வெதும்பி, கைகளைப் பிசைந்து, பெருமூச்சு விடுகிறீர்கள். கைகளைப் பிசைவதால் உஷ்ணம் உண்டாகி, உங்கள் உள்ளங்கை வழுக்கையாகிவிட்டது" என்றார் மதுரகவி.

அந்தப் புலவர்கள் வெட்கத்தால் தலை குனிந்தார்கள். ராஜா, மதுரகவியைத் தம் அருகே அழைத்து, அவரைத் தழுவிக்கொண்டார்.

*

# ஜாலக்கண்ணாடி



ஈயின் கண்கள் எல்லாம்
என்ன ஜாலக் கண்ணாடி!
இன்ப ரோஜா முள்ளை
ஈட்டி யாக்கும் கண்ணாடி.

பூவின் மொட்டை மெத்தை
போலக் காட்டும் கண்ணாடி.
தூவும் பனியின் முத்தில்
தோன்று முகம்பார் கண்ணாடி.

உண்ணும் ரொட்டித் துண்டம்
உயர்ந்து மலையாம் கண்ணாடி.
கண்ணும் மயிரும் மேகம்போல்
கவிந்து காட்டும் கண்ணாடி.

வண்டை வேங்கைப் புலியின்
வடிவில் காட்டும் கண்ணாடி.
கண்டு மகிழும் ஈயின்
கண்கள் ஜாலக் கண்ணாடி.

இடையன் மறியாட் டருகில்
இளைய குட்டி வண்ணம்போல்,
உடைய உப்புப் பொறியின்
ஒளியைக் காட்டும் கண்ணாடி.

கடுகை நெருப்புத் துண்டாய்க்
காட்டும் ஜாலக் கண்ணாடி.
கடுகை மலைபோல் ஈக்குக்
காட்டும் ஜாலக் கண்ணாடி.

—ரா. ஸ்ரீ.

# புத்தக உலகம்

**சுயம்வரம்:** ஆசிரியர்: ஆர். ஜகந்நாதன். வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2—8—0.

இது ஒரு நாடகத் தொகுதி. இதிலுள்ள நாடகங்கள் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற முறையில் அமைந் திருக்கின்றன. பெரும்பாலும் தினசரி வாழ்க்கையை ஆதாரமாக வைத்து இந்த நாடகங்கள் எழுதப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு மாதிரியில் அமைந்திருக்கிறது. அங்கங்கே நகைச்சுவை நிரவி யிருக்கிறது. சாதாரண சம்பவங்களேயானாலும், ஆசிரியர் கையாண்டிருக்கும் முறை நமக்கு இன்பமளிக்கிறது.

**எரி நட்சத்திரம்:** மூல ஆசிரியர்: வி. ஸ. காண்டேகர். மொழிபெயர்த்தவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: மலிவுப் பதிப்பு ரூ. 4—0—0; உயரிய பதிப்பு ரூ. 4—8—0.

அவள் பெயர் 'உல்கா'— எரி நட்சத்திரம். மறுமணம் செய்து கொண்ட ஏழைத் தாயின் மகள் அவள். வாழ்க்கையின் ஆரம்பத்திலே, அவள் சந்தித்த சந்திரகாந்தனிடம் அவளுக்கு ஒரு விசேஷப் பிரேமை. ஆனால், அவன் எங்கெங்கோ சுற்றிப் புரட்சிக்காரனாகி, காந்தி இயக்கத்தில் குதித்து, தொழிலாளர் சேவையில் திரிகிறான். அத்தை மகன் வசந்தனையும், அடுத்தபடி அவளை வரித்த நவநாகரிக மாணிக்க ராவையும் அவள் காதலித்து, கைவிடப்பட்டு, ஏமாந்தாள். கடைசியில், விதி அவளை, நாற்பது வயதுக்கு மேல் போன ஒரு முதிய ஜமீன்தாருடன் முடி போடுகிறது. கணவனிடம் அன்போடுதான் அவள் நடக்கிறாள். தாய்மையும் அடைகிறாள். ஆனால், அவனோ கேவலம் தேக இச்சை ஒன்றையே பெரிதாய்க் கருதினான். இறுதியில் குடி படைகளின் கோபத்தால் ஜமீன்தார் கொலை யுண்கிறான். புரட்சிக்கார சந்திரகாந்தனும் சிறைப் படுகிறான். அப்போதுதான், உல்காவிடம் சந்திரன் கொண்டிருந்த நிர்மலமான காதல், அவளுக்கு வெளிப்படுகிறது. கதை வெகு சுவாரஸ்யமாய் ஓடுகிறது. புரட்சிகரமான கருத்துக்களும் வர்ணனைகளும் மனக் கிளர்ச்சிகளும் நிறைந்து, விறுவிறுப்பான கதியில், மொழி பெயர்ப்பென்றே தோன்றாதபடி சுவையோடு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

**சிறந்த சிறு கதைகள்:** ஆசிரியர்: ஆஸ்கார் ஒயில்ட். மொழிபெயர்ப்பு: ஆ. சுப்பையா. வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், காரைக்குடி. விலை ரூ. 1—4—0.

பிரபல ஐரிஷ் கவிஞராகிய ஆஸ்கார் ஒயில்ட் எழுதிய மூன்று சிறு கதைகளின் மொழிபெயர்ப்பு இந்த நூல். ஒவ்வொரு கதையும் ஆழ்ந்த உண்மையைக் கலையழகுடன் சித்திரிக்கிறது. மற்றவர்களுடைய நன்மைக்காகத் தன்னையே தியாகம் செய்துகொள்ளும் இளவரசனைப் பற்றிய 'ஆனந்த ராஜகுமாரன்' என்னும் கதை மிக்க உருக்கமானது. மொழிபெயர்ப்பு எளிய தமிழ்நடையில் அமைந்திருக்கிறது.

**ஸ்ரீ சங்கர விஜயம்:** ஆசிரியர்: ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை அணா 5.

இந்தச் சிறு நூல் ஆதி சங்கருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது. நூலின் இறுதியில் உபதேசங்களும் அடங்கி யிருக்கின்றன. இது சங்கர ஜயந்தி வெளியீடாக வந்திருக்கிறது. புத்தகம் சிறியதாய் இருந்தபோதிலும், ஸ்ரீ சங்கரரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்

கள் ஒன்றுகூட விட்டுப்போகாமல் கோவையாக அமைந்திருக்கின்றன.

**உதயம்:** பதிப்பாசிரியர்: எஸ். ஆர். சாரங்கன். வெளியிட்டோர்: சிந்தாமணி பப்ளிகேஷன்ஸ், ராஜ வீதி, கோயமுத்தூர். விலை அணா நான்கு.

இது மாதம் ஒரு புத்தகமா, பத்திரிகையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், தோற்றத்திலிருந்து, 'மாதம் ஒரு புத்தக' வரிசையைச் சேர்ந்தது தான் என்ற முடிவுக்குத் தைரியமாக வரலாம். சுத்தானந்த பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை போன்ற பிரபல கவிஞர்களும், வேறு எழுத்தாளர்களும் இதில் எழுதியிருக்கிறார்கள். விலை மலிவு என்பது மட்டுமல்லாமல், தோற்றமும் அச்சும் மிக்க அழகாய் இருக்கிறது.

**தாகூரின் கவிதைக் கனி:** ஆசிரியர்: மணிவாசகம். வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், காரைக்குடி. விலை அணா 12.

இதை விமர்சனம் என்று பிரசுராலயத்தார் கூறியபோதிலும், மொழிபெயர்ப்பு என்று சொல்லுவதே பொருத்தமாகும். ஆசிரியர் கீதாஞ்சலியிலிருந்தும் பிறநூல்களிலிருந்தும் சில பாடல்களை வங்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். முன்னுரையில் கூறியிருப்பது போல், "வங்க மூலத்தில்தான், தாகூரின் கவிதை தங்கமின்னலாக விளையாடுகிறது" என்பதை இதன் மூலம் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

**பாசரசு:** எம். எஸ். பாசு. வெளியிட்டோர்: பாசரசு காரியாலயம், பெரம்பூர், சென்னை. விலை அணா 12.

'மாதம் ஒரு புத்தக' வரிசையிலே சேர்ந்த நூல். பல எழுத்தாளர்களுடைய கதைகளும் கட்டுரைகளும் இருக்கின்றன. காலஞ்சென்ற கு. ப. ராஜகோபாலனின் 'வயது வந்து விட்டது' என்ற கதையும் பெ. தூரன் எழுதிய 'மனமே காரணம்' என்ற கதையும் குறிப்பிடத்தக்கவையாகும். பொதுவாக, தோற்றமும் அச்சும் ஆடம்பரமில்லாமல் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கிறது.

**சிவஞான போதக் கட்டுரை:** வெளியிட்டோர்: தருமபுர ஆதீனம். விலை. ரூ. 8.

சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கில், முதல் நூலாகிய சிவஞான போதத்தைப் பற்றிய கட்டுரைத் தொகுதி. முதல் ஏழு சூத்திரங்களைப் பற்றி ஸ்ரீ முத்தையா பிள்ளையும் பிற சூத்திரங்களைப் பற்றி வெவ்வேறு அறிஞர்களும் எழுதியிருக்கிறார்கள். சைவ சித்தாந்த ஆராய்ச்சியாளருக்கு மிகவும் பயன்படக்கூடிய நூல்.

**சங்கர ஜயந்தி வெள்ளி விழா ஞாபகார்த்த மலர்:** வெளியிட்டோர்: மதுரை அத்வைத சபா. விலை அணா 12.

ஸ்ரீ சங்கராச்சாரியாருடைய ஜயந்தி ஞாபகார்த்தமாக இந்த மலரைப் பிரசுரித்திருக்கிறார்கள். ஸ்ரீ சங்கரருடைய வாழ்க்கையையும், நூல்களையும் பற்றி, திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள், தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், ராவ் பகதூர் டி. எஸ். திருமூர்த்தி முதலிய பல பெரியார்கள் எழுதியிருக்கிறார்கள்.

**மாளவிகா:** ஆசிரியை: சரோஜா ராமமூர்த்தி. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், சென்னை. விலை ரூ. 1—4—0

இந்த நாவல், லார்ட் லிட்டன் எழுதிய ஓர் ஆங்கில நூலைத் தழுவி எழுதியதாகும். கடல் கொண்ட காவிரிப்பூம் பட்டினத்தைப் பின்புலமாக வைத்துக் கதையை ஆசிரியை புனைந்திருக்கிறார். கண்ணிழந்த பிரதிமா என்ற பெண், ஒரு தனவந்தனைக் காதலிக்கிறாள். ஆனால், அந்தக் காதல் நிறைவேறவில்லை. கடைசியில் தன் காதலனின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, தன்னையே தியாகம் செய்து கொள்ளுகிறாள். எளிய இனிய நடையில் அமைந்த உருக்கமான கதை.

# பெரும் நன்றி!

*

நெ. 6, ஆலந்தூர் ரோடு
சைதாப்பேட்டை, 5-4-1944

தி வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
308 - 309, லிங்க செட்டி தெரு, சென்னை

ஐயா,

காலஞ் சென்ற எனது கணவர் முகமது குத்துப் புதீன் லைப் இன்ஷ்யூரன்ஸ் மீதுள்ள கிளைம்களை சீக்கிரமாகவும், வியாபார முறையிலும் தீர்த்து வைத்ததற்கு எனது பெரும் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். தஸ்தாவேஜிகள் உங்களுக்குக் கிடைத்த ஒரு வாரத்திற்குள்ளாகவே தாங்கள் கிளைம்களை அன்புடன் தீர்த்து வைத்ததை எனது வந்தனங்களுடன் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன், இந்த என் துக்கத்தில் இது எவ்வளவு ஆறுதலளித்தது என்பதை நான் குறிப்பிட வேண்டியதே இல்லை. எனது காலஞ் சென்ற கணவரின் ஆயுள்மீதுள்ள கிளைம்களை உங்கள் கம்பெனிதான் முதலில் தீர்த்து வைத்தது என்பதை அறிய சந்தோஷப்படுவீர்கள்.

தங்கள் உண்மையுள்ள

(ஒ-ம்.) மிஸஸ். மும்தாஜ் பீகம்

*

# தி வான்கார்டு

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

308 - 309, லிங்க செட்டி தெரு, ஜி. டி. சென்னை

பிராஞ்சுகள் :— பெங்களூர் — எர்ணாகுளம் — திருச்சி




லிப்டன் தேனீர் அருந்துகையில்

ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.




பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்

வைரம், தங்கநகை வியாபாரிகள்

கோயமுத்தூர்

# உளக்கத்துக்கு உயர்துணைவன்



எல்லோராவில் கைலாசநாதர் கோவில் மதி
களில் உள்ள சிற்ப நயங்களைக்கண்டு நீ
கள் அதிசயப்படுகிறீர்கள். அதற்கு ஊ
மளித்த சக்தி எது என்பது உங்களுக்குக்
டாயம் தெரிந்திருக்கும். பெண்மையின் எ
யம் தெய்வ களையை அங்கே பெருகிற
நமது அன்றுட வாழ்விலும் அது மாறு க
எல்லையை மீறுகிறது. பெண் அன்போ ம்
பாசத்தோடும் பணிவிடை செய்வதைப்பே ல்
அதிசயம் வேறு என்ன? நா பூ ம்
உழைத்துவிட்டு சோர்வடைந்துவரும்
வனுக்கு ஒரு கோப்பை தேயிலைபானம் த
ரித்துக் கொடுப்பதுபோல் திருப் ளிப்
வேறு என்ன? அன்பு ததும்பும் கோப்
அவனுக்கு சோர்வை அகற்றுகிறது. அ
மனமும் கலகலக்கிறது.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புது த்
திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த
நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பரு
கலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது.
இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள்
பெயர் விலாசம் முதலியவற்றுடன்
கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இ
யத்தேயிலைக் கமிஷனர், இந்தியன்
மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால்
பெட்டி நெ. 2172, கல்கத்தா.



## குடும்பத்திற்கு எற்ற ஒரே பானம் இந்தியன் டீ



இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 202


Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan